

# யாழ்ப்பாணத்தை தீயிடுதல்

## ஒரு வன்முறை அரசின் ஆரம்பம்

## 1981

ஆய்வும் எழுத்தும்

**நந்தன வீரரத்ன**

# 1981

# யாழ்ப்பாணத்தை தீயிடுதல்

## ஒரு வன்முறை அரசின் ஆரம்பம்

ஆய்வும் எழுத்தும்

நந்தன வீரரத்ன

மொழிபெயர்ப்பு

செல்லையா மனோரஞ்சன்

நாங்கள்

வெளியீடு

*‘அரசியல் போலிஸ்’ தன் "வேலையைத் தொடங்குதல்" என்பது மீண்டும் தீவிரமாக ஆரம்பித்து பரவி வருகிறது. இது சாதாரண மக்களின் பொது வாழ்க்கைக்கு பெரும் அச்சுறுத்தலாகும். இத்தகைய கொடுங்கோல் ஆட்சியில் இருந்து தம்மை விடுடுவித்துக் கொள்வதற்கான நம் நாட்டு மக்களின் உரிமை நசுக்கப்படுகிறது. சட்டத்தின் பாதுகாவலராக இருக்க வேண்டிய நாட்டின் காவல்துறை அரசியல்வாதியின் பாதுகாவலராக மாறுவது எங்கிருந்து தொடங்குகிறது? அதன் இயல்பு எத்தகையது? அதைத்தான் இந்த புலனாய்வு அறிக்கை பார்க்கிறது. எமது நாட்டின் ஆட்சியாளர்கள் தமது திவாலாகிப் போன இருண்ட ஆட்சியையும், அதனால் இந்த நாட்டில் வாழும் மக்களின் அவலமான பயணத்தையும் இந்த நூல் மிக வலிமையாக வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. இது ஏறக்குறைய மூன்று தசாப்த கால அவரது கடின உழைப்பு. 1981ல் யாழ்ப்பாணத்தை தீ வைத்தது தொடர்பாக சிங்களத்தில் எழுதப்பட்ட முதலாவது புலனாய்வு நூலும் இதுவென்பது கவனிக்கத்தக்கதாகும்.*

*நந்தன வீரரத்ன இலங்கையின் ஒரு முன்னோடி புலனாய்வு செய்தியாளர். ஒரு போர்க்கள செய்தி நிருபர். விவரணப்பட இயக்குனர். வீக்கெண்ட் அருண, மவ்பிம,, ராவய, நியமுவா, சீனுவ, கம்கரு மாவத்த, உள்ளிட்ட பல்வேறு செய்தித்தாள்களுக்கு புலனாய்வு அறிக்கைகள் மற்றும் புல்னாய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். பிபிசி உலக சேவை வானொலியில் சிங்கள மொழி சங்தேஷய நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் இருந்தார்.*



1981 யாழ்ப்பாணத்தை தீயிடுதல்
© நந்தன வீரரத்ன

முதற் பதிப்பு
2024 ஜூலை

ISBN 979-8-89496-493-5

மொழிபெயர்ப்பு
செல்லையா மனோரஞ்சன்

அட்டை வடிவமைப்பு
கா.கீதாஞ்சலி

ஒப்பு நோக்கல்
ரதிகா லோரன்ஸ்

தொடர்புகளுக்கு:
நாங்கள் வெளியீடு – டொரொன்டோ
naangal2024@gmail.com

அச்சகம்
Indesign advertising
No.02/12A, Lower King Street
Badulla
Sri Lanka
indesignbadulla@gmail.com

## அர்ப்பணம்

ஓர் அநியாயமான போருக்காக
உயிர்களைப் பலிகொடுத்த அனைவருக்கும்

# காணிக்கை

*ஆரம்பத்தில் இதனை ஒரு புத்தகமாக எழுதுவது எமது நோக்கமாக இருக்கவில்லை. இதை ஒரு ஆவணப் படமாக எடுக்கவே நாம் முயற்சி செய்து கொண்டிருந்தோம். எனவே, 1994 ஆகஸ்ட்டில் யாழ்ப்பாணத்தில், அதற்குத் தேவையான காணொளிகள் (வீடியோ), ஒலிவடிவ உரையாடல்கள் எம்மால் சேகரிக்கப்பட்டன. அதன் முதல் கட்டமாக, 'ராவய' என்னும் மாற்று சிங்களப் பத்திரிகைக்கு ஒரு நீண்ட கட்டுரை எம்மால் எழுதப்பட்டது. ஆனால், அது ஒருபோதும் பிரசுரிக்கப்படவே இல்லை.*

*அதன் பின்னர், ஏனைய பல ஊடகப் பணிகள் காரணமாகவும், நாட்டை விட்டு வெளியேறியும் இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதால், அந்த நடவடிக்கைகளை எம்மால் தொடர்ந்து மேற்கொள்ள முடியாமல் போனது. அதிலும் குறிப்பாக, யாழ்ப்பாணத்தில் ஒளிப்பதிவு செய்யப்பட்ட காணொளி நாடாக்கள் கைதவறிப்போய் விட்டதால், அது எந்த வகையிலும் செய்து முடிக்க முடியாத ஒரு பணியாக மாறியது. கடைசியாக, எதிர்காலத்திற்கென ஒரு பதிவையாவது விட்டுச்செல்ல வேண்டும் என்பதற்காகவே இதனை ஒரு புத்தகமாக எழுத ஆரம்பித்தேன்.*

*நாட்டில் இன்னும் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கும் பலம் வாய்ந்த அரசியல்வாதிகளின் குற்றவியல் வரலாறு (Criminal History) உள்ளடங்கிய புத்தகங்களை வெளியிடுவதென்பது ஒருபுறமிருக்க, அவற்றை அச்சிடவே அஞ்சும் இக்காலத்தில்,*

*நவீன தொழில்நுட்பம் ஒன்றே நமக்கு உதவும் கருவியாக இருந்து வருகிறது.*

*முன்னர் நாம் புத்தகங்களை எழுதி மக்களுக்கு வழங்க வேண்டி இருந்தாலும், தற்போது சமூக ஊடகங்கள் மற்றும் மின் நூல்கள் ( E-Books) என்பவற்றை உருவாக்க முடிந்துள்ளதால் அவ்வாறு புத்தகங்களை எழுதுவதில் நேரத்தை செலவிடுவதைப் பற்றி நான் அதிகம் கவலைப்படவில்லை. எனினும், நாட்டில் பெரும்பான்மையான மக்களால் இன்னமும் மின் நூல்களைப் படிக்க முடியாமல் இருக்கிறது என்பதும் வருத்தமளிக்காமல் இல்லை. தம்து அற்ப வருமானத்தில் வயிற்றைக் கூட நிரப்பிக்கொள்ள  முடியாத பெரும்பான்மையான மக்கள் வாழும் ஒரு நாட்டில் அரசியல் வரலாற்றைப் படிப்பதற்காவே ஸ்மார்ட் அலைபேசியிலும், டேட்டாவிலும் பணத்தைச் செலவழிக்க அவர்களைத் தூண்டுவதை ஒருவகைத் தொடர்பாடல் குற்றச் செயலாகவே நாம் எல்லோரும் பார்க்கவேண்டியுள்ளது.*

*எமது இந்தத் தேடலின் ஆரம்பம் 1994ம் ஆண்டு வரை பின்னோக்கிச் செல்கின்றது. யாழ். நூலகம் எரிக்கப்பட்ட சம்பவத்தை நேரில் கண்ட சாட்சிகளை சந்திக்க உதவியதும், அவர்களின் சகலவித உரையாடல்களையும் எமக்கு மொழி பெயர்த்து உதவியவரும் நிமலராஜன் மயில்வாகனம் ஆவார். 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அவர் கொல்லப் படும்வரை எமக்கு யாழ்ப்பாணத்தில் ஒரு துணிச்சலான செய்தியாளராக நிமலராஜன் இருந்து வந்தார். ஈழப் போரைப் பற்றிய செய்திகளை நாமும் சேகரித்து அவற்றை அறிக்கையிடும்போது அவரே எங்கள் வாழ்வில் சரிபாதியாக*

*இருந்து வந்தார் எனலாம். அக்காலத்தில் வடக்கு நோக்கிய பயணங்களின்போது எம்முடன் பலமுறை பயணித்த தென்னிலங்கையைச் சேர்ந்த சட்டத்தரணி ஹசக்க ரத்னமலலவின் உதவியும் எமக்கு எந்தவித குறைவும் இன்றிக் கிடைத்தது. எமக்கு பல்வேறு முரண்பாடுகள் இருப்பினும் 'ராவய' பத்திரிக்கை ஆசிரியர் விக்டர் ஐவன் உட்பட அதன் ஊழியர்களிடமிருந்தும், பிபிசி சிங்கள சேவையின் பல்வேறு ஊழியர்களிடமிருந்தும் அந்தத் தருணத்தில் எமக்குக் கிடைத்த ஆதரவுகளை நாம் எப்போதும் மறக்க முடியாது.*

*ரேணுகா [குணதிலக] கவிமல் [சூரியாரச்சி] ஆகியோர் நாங்கள் எழுதியதவற்றைப் பாராட்டினர். தனிமையில் இருந்து எழுதும் போது எம்மை அன்புடன் உபசரித்தனர். மஞ்சுள [பதிராஜ] சுகத் [திரிமாவிதான] ஜகத் [திரிமாவிதான] ஆகியோரின் அன்பான கடிந்துகொள்ளல்கள் மிகவும் பெறுமதியானவை. மறந்துபோன பல விஷயங்கள் எப்போதும் ரஞ்சித் [பத்மசிறி] இனால் எமக்கு நினைவுபடுத்தப்பட்டன. இலண்டனில் வசிக்கும் காமினி [முத்துகுமாரன], சுகத் [சுனில் செனவிரத்ன], அஜித் [தர்மகீர்த்தி] மற்றும் சந்தன [விதானகே] ஆகியோரின் உதவிகள் அளவிட முடியாதவை. பினு [வீரரத்ன] அடிக்கடி எமது 'ஓட்டை' விழுந்த பாக்கெட்டை நிரப்புவார். இன்னும் அந்த புத்தகம் முடிக்கப் படவில்லையா என்று கேட்கும் தினூ [வீரரத்ன] வும் இன்னும் நிறைய புத்தகங்கள் எழுதுகிறாயா என்று கேட்கும் வினு[வீரரத்ன]வும் இந்தத் தருணத்தில் அன்புடன் நினைவு கூரப்படுகிறார்கள். அவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.*

***தமிழ் மொழிபெயர்ப்புத் தொடர்பாக....***

*இப்புத்தகம் சிங்கள மொழியில் வெளிவந்ததை கேள்விப்பட்ட உடனேயே இதனை தமிழில் மொழி பெயர்த்து வெளியிட வேண்டும் என்று என்னை மனோரஞ்சன் வலியுறுத்தினார். அது மட்டுமன்றி அதற்கான பொறுப்பையும் தானே எடுத்து அதனை மொழிபெயர்த்து, அச்சிட்டு தமிழ் வாசகர்களுக்காக அவர் வெளிக்கொண்டு வந்துள்ளார். அதற்காக அவருக்கு எனது மனமார்ந்த நன்றிகள் என்றும் உரித்தாக வேண்டும்.*

*மனோரஞன் எனது நீண்டகால அரசியல் நண்பரும், ஊடகவியல் பயணியுமாவார்.  இலங்கையின் உள்நாட்டு யுத்தம் பற்றியும், அதன் ஆரம்பம்  பற்றியும், அதன் பிதாமகர்கள் பற்றியும், தென்னிலங்கை அரசியல் பற்றியும் அவருக்குத் தெளிவான பார்வை இருக்கிறது.  அந்தப் புரிதலில் இருந்தே அவர் இந்தப் புத்தகத்தை மொழிபெயர்க்க முன்வந்திருப்பார் என்பதே எனது நம்பிக்கையாகும். அவரது இதுபோன்ற பணி தொடர எனது வாழ்த்துக்கள்.*

**நந்தன வீரரத்ன** 2024 ஜூலை

# உள்ளடக்கம்

*முன்னுரை -யாழ்ப்பாணத்துக்கு தீ வைத்த ஐ.தே.க தலைவர்கள்*

01. *துரிதமாகிய திறந்த பொருளாதார அபிவிருத்தி வேகம்......................23*

02. *யாழ்ப்பாணம் வந்த 'ஜுண்டா' பொலிஸ் படை..........................................29*

03. *தேர்தலை ஒத்திவை...!...............................................................................38*

04. *யாழ்ப்பாணம் வந்த காமினி, ரணில், சிறில் ,பெஸ்டஸ்..........................46*

05. *பொதுக்கூட்டத்தில் பொலிசார் மீது துப்பாக்கிச் சூடு..............................58*

06. *வன்முறைக் கும்பலாக மாறிய பொலிஸ்...........................................................67*

07. *நூலகத்திற்குத் தீ வைத்தல்.......................................................................85*

08. *'ஈழநாடு' காரியாலயத்தையும் அச்சகத்தையும் தீயிடுடல்...............107*

09. *குருநாகல் 'ஜுண்டா படை' வடக்கு நோக்கி..................................................119*

10. *மூன்றாம் நாளாவும் பற்றியெரிந்த தீ...................................................................134*

11. *தீ வைப்புக்கள் சிங்களக் கண்களின் பார்வையில்.................................139*

12. *சர்வஜன வாக்குரிமைக் "களியாட்டத்" தயாரிப்புகள்............................145*

13. *நாடு முழுவதும் அவசரகால நிலை பிரகடனம்.......................................161*

14. *எதிர்க்கட்சி தலைவரும் எம்.பி.க்களும் கைது.............................................166*

15. *வாக்குக் கொள்ளை!...........................................................................................173*

16. *யாழ்ப்பாண அபிவிருத்தி சபைத் தேர்தலின் தலைவிதி!....................194*

17. *அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை............204*

18. *யாழ்ப்பாணத்திற்கு வழ்ங்கப்படாத நீதி?........................................................213*

19. *யாழ்ப்பாணத்தில் மூட்டிய தீ எதிர்காலத்தையும் எரித்தது...............220*

20. *புரியாப் புதிர்களின் முடிச்சவிழ்த்தல்...! .......................................................232*

## முன்னுரை

# 1981 யாழ்ப்பாணத்துக்கு தீ வைத்த ஐ. தே. க. தலைவர்கள்

1981 மே மாத இறுதியில் இருந்து ஜூன் மாதம் 8ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் கடந்த காலத்தில் நடந்த நிகழ்வுகள் ஏன் நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் மிக முக்கியமானதாக கருதப்பட வேண்டும்? இந்தப் புத்தகத்தை எழுதுவதற்கு முன்னர் எம்மையே நாம் கேட்டுக் கொள்ள வேண்டிய ஒரு கேள்வியாக அது இருந்தது.

மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கான தேர்தல்கள் நடந்தது அந்த வருடம் ஜூன் மாதம் 4ம் திகதியாகும். அப்போது ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க.) அரசாங்கத்தினுடைய வழி நடத்தலில் தேர்தல் நடந்த அன்றும், அதற்கு முன்னைய நாட்களிலும் வட மாகாணத்தில், யாழ்ப்பாண மாவட்டத்திற்குள் பரந்த அளவில் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. தீ வைப்புகள், கொள்ளையடிப்புகள் மற்றும் அநியாயமான பல மனிதப் படுகொலைகள் என்பன ஏறக்குறைய இரண்டு வார காலப் பகுதிக்குள் நிகழ்ந்தேறின. இவை அனைத்தையும் செய்து முடித்தவர்கள் அரசாங்கத்தின் பொலிசாரும், உத்தியோகபூர்வ இராணுவக் குண்டர்களுமே. இவற்றை முன்னின்று வழி நடத்தியது பொது மக்களின் வாக்குகளால் அதிகாரத்திற்கு வந்த ஒரு அரசாங்கம் என்பதே இங்கு முக்கியமாகும்.

இந்தக் குற்றச்செயல்களை வழிநடத்துவதற்கு அரசாங்கத்தின் முக்கியமான அமைச்சர்கள் நான்கு பேரும், இராஜாங்க அமைச்சர்கள் இரண்டு பேரும், மாவட்ட அமைச்சர்கள் இரண்டு பேரும் அப்போது யாழ்ப்பாணத்தில் வந்து தங்கியிருந்தார்கள். இந்த அரசியல்வாதிகளின் உதவிக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், மேலதிக செயலாளர், அமைச்சரவைச் செயலாளர், மற்றும் அப்போதைய நிறைவேற்றதிகார ஜனாதிபதியான ஜே.ஆர். ஜெயவர்தனவின் மருமகனான பிரிகேடியர் ஒருவரும் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டு இருந்தனர்.

ஒரு தமிழரான அப்போதைய பொலிஸ் மா அதிபர் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டது இவ் வன்முறைகள் நடக்கத் தொடங்கி சில நாட்கள் கழிந்த பின்பேயாகும். இங்கு அரசாங்கம் செய்தது என்னவென்றால், முழுமையாக நம்பிக்கைகளை இழந்து போயிருந்த ஓர் இளம் தலைமுறை யினரை வன்முறையை நோக்கி தள்ளுவதும், அதற்கு எதிராக அரச பயங்கரவாதத்தை அல்லது அரச வன்முறையை பதிலாகக் கொடுப்பதுமே ஆகும். இது எந்தக்காலத்திலும் மக்களின் வாக்குகளால் அதிகாரத்திற்கு வந்த எந்தவொரு அரசாங்கமும் செய்யத் தகுந்த ஒரு செயல் அல்ல.

அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் நடந்தேறிய இந்தக் குற்றச் செயல்களைப் போலவே அதற்கு பிற்பட்ட காலங்களில் தென்னிலங்கையிலும் அதே போல் அல்லது அதைவிட மிக மோசமான வன்முறைகள் அதே அரசாங்கத்தின் ஆட்சியின் கீழ் நிகழ்த்தப்பட்டன. இன்னும் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. 1982 ஆம் ஆண்டில் பொதுத் தேர்தலைப் பின்போடுவதற்காக நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பின் போதும், 1983 ஆம்

ஆண்டு கறுப்பு ஜூலையின் போதும், 1988 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தலின் போதும்,1989 பிப்ரவரி மாதத்தில் பொதுத் தேர்தலின் போதும், 1988 - 89 வன்முறைகள் நிறைந்த அந்த யுகத்தின் போதும் ஜனதா விமுக்தி பெரமுனவை (ஜே.வி.பி.) ஒடுக்குவதற்காக ஆளும் கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியானது, தான் 1981 இல் யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொண்ட அனுபவத்தை பல மடங்காக்கி மிக மோசமான முறையில் நடைமுறைப்படுத்திக் கொண்டது.

அது மட்டுமன்றி அன்று அவற்றில் ஈடுபட்ட ஒரு தலைவர் தற்போது இலங்கையின் ஜனாதிபதியாகவும், முப்படைகளின் தளபதியாகவும் இருக்கிறார் என்பதன் அடிப்படையிலேயே, தற்போது **'1981இல் யாழ்ப்பாணம் தீ வைத்துக் கொளுத்தப் பட்டது'** என்கின்ற விடயத்தை தற்கால சமூகத்தினருக்கு விலாவாரியாக எடுத்துச் சொல்வது முக்கியமானது என்பதே எமது நம்பிக்கையாக உள்ளது. ஏனெனில், எதிர்காலத் திலும் அது மீண்டும் நிகழாது என்பதற்கு எந்தவித உறுதிப்பாட் டையும் நம்மால் வழங்க முடியாது.

அது மட்டுமன்றி, இத்தகைய அநியாயமான செயல்கள் வரலாற்றில் எவ்வாறு மூடி மறைக்கப்பட்டன என்பது பற்றியும் இங்கு நாம் விளங்கிக் கொள்வதும் முக்கியம். இந்த நாசகாரச் செயல்களை வழிநடத்திய அரசியல் தலைவரும், அவரது அடிவருடிகளும் இன்றும் ‘பயங்கரவாதத் தடைச் சட்டம்’ மற்றும் ‘தகவல் பரிமாற்றத் தடைச் சட்டம்’ போன்ற சட்டங்களுக்கான வரைபுகளை புதிதாகத் தயாரித்து, அவற்றைப் பாராளுமன் றத்தில் சமர்ப்பித்து சட்டமாக்குவதற்கு தயாராகிக் கொண்டிருக் கிறார்கள் என்பதும் இங்கு கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

இத்தகைய தருணத்தில் இந்த வரலாற்றை அறிந்து வைத்திருப்பது ஒவ்வொரு குடிமகனினதும் பொறுப்பாகும். இத்தகைய சட்டங்களின் கீழ் எதிர்காலத்தில் இவ்வாட்சியாளர் செய்த குற்றச்செயல்களை மூடி மறைப்பதற்கும் அவர்களுக்கு வசதியாகப் போய்விடும் என்பதையும் நான் இங்கு கூறி வைக்க விரும்புகின்றேன்.

1981 மே மற்றும் ஜூன் மாதங்களில், வடக்கில் அன்றைய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு குற்றச் செயலையும் அறியும் வாய்ப்பு அப்போது தென்னிலங்கைக்கு இருக்கவில்லை. ஏனெனில், அப்போது நாட்டின் சிங்கள, ஆங்கில மற்றும் தமிழ் பத்திரிகைகள் எல்லாம் கடுமையான செய்திக் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. எல்லாச் செய்தித் தாள்களும் அச்சிடப்படுவதற்கு முன் செய்தி மற்றும் தகவல் அதிகாரியிடமிருந்து (Information Director) அனுமதியைப் பெற வேண்டியிருந்தது.

நாட்டின் பல தேசிய செய்தித்தாள்கள் தன்னிச்சையாகவே அரசாங்கத்தின் செய்திக் கட்டுப்பாட்டுக்கு அடங்கி தமது நாளாந்த செய்திகளை மட்டுப்படுத்திப் பிரசுரிக்க முன்வந்தன. அரசாங்கத்தால் விதிக்கப்பட்டிருந்த செய்திக் கட்டுப்பாடு முடிவடைந்து இரண்டு வாரங்கள் கடந்த பின்னரும் வடக்கில் என்ன நடந்தது என்பதை இந்த தேசிய செய்தித்தாள்கள் வெளியிடவில்லை என்பதன் மூலம் இது தெளிவாகத் தெரிந்தது. யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற குற்றச்செயல்கள் தொடர்பான விடயங்களை தென்னிலங்கையில் தாங்கள் அறிக்கையிட வேண்டியதன் முக்கியத்துவத்தை அப் பத்திரிகைகளின் உரிமையாளர்கள், ஆசிரியர்கள் அன்று சரியாக உணராமல்

இருந்திருக்கலாம். அல்லது ஜே.ஆர். ஜெயவர்தன ஆட்சியின் வெறுப்பிற்கு ஆளாகி தாம் அரச தண்டனைக்கு உள்ளாவதை விரும்பாததும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

அந்தச் செய்திகள் பிரசுரிக்கப்படாமல் கட்டுப்படுத்தப்பட்ட விதத்திலிருந்து அந்தக் குற்றச்செயல்கள் ஒரே அரசியல் கும்பலின் திட்டமிட்ட குற்றச்செயல்கள்தான் என்பது மிகத் தெளிவாக உறுதிப்படுத்தப்படுகின்றது.

ஜே.ஆர். ஜெயவர்தன அரசாங்கத்தின் அதிகாரமிக்க செய்தி மற்றும் தகவல் கட்டுப்பாட்டு அதிகாரியாக அப்போது இருந்தவர் வேறு யாருமல்ல. அப்போதைய அரசாங்க செய்திப் பணிப்பாளராக இருந்த கலாநிதி சரத் அமுனுகம என்பவர் தான். அப்போது வெகுஜன ஊடகங்களின் கட்டுப்பாடு இராஜாங்க அமைச்சராக இருந்த ஆனந்த திஸ்ஸ டி. அல்விஸிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. பின்னர் அமைச்சர் டி அல்விஸ் தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சை பொறுப்பேற்ற போது சரத் அமுனுகம அந்த அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டார். கலாநிதி அமுனுகம ஜனாதிபதி ஜெயவர்தன அரசாங்கத்தின் [1977-1988] ஆட்சிக் காலம் முழுவதும் அரசாங்கத்தின் செய்தித் தகவல் பிரிவிக்கு பொறுப்பான அதிகாரியாகவும், அதன் பிரதான ஊதுகுழலாகவும் சரத் அமுனுகம இருந்து வந்தார்.

அரச பொது நிர்வாக சேவையில் கனிஷ்ட (Junior) அதிகாரியான அவர், பொது நிர்வாக அமைச்சின் பதவி உயர்வுக்கான நடைமுறைகளுக்கு புறம்பாக அரசியல் செல்வாக்கின் காரணமாக வழங்கப்பட்ட சலுகைகளின் அடிப்படையிலேயே


அவர் அந்த உயர் பதவிகளை வகித்து வந்தார். அக்காலத்தில் அவர் நாட்டின் பத்திரிகைகளை தனது கட்டுப்பாட்டின் கீழ் எவ்வாறு வைத்திருந்த விதத்திலிருந்தே எதிர்கால அரசியலில் ஒரு தலைவராகுவதற்கான தகைமைகள் அவருக்கிருப்பதை தெளிவாகக் காணக் கூடியதாகவிருந்தது. தனது அரச சேவைத் தொழிலிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் சரத் அமுனுகம அரசியலுக்குள் நுழைந்து ஐக்கிய தேசியக் கட்சி, பொதுசன ஐக்கிய முன்னணி, மற்றும் மகிந்த இராஜபக்சவின் அரசாங்கங்களிலும் அமைச்சர் பதவிகளை வகித்தார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 'எத்த' (உண்மை) என்ற சிங்கள செய்தித்தாள் மட்டுமே வடக்கில் நடந்த அந்தக் குற்றச் செயல்களை பதிவு செய்து பிரசுரித்து வரலாற்றுக்கு நீதியையும் நியாயத்தையும் ஒருவகையில் செய்தது. அப் பத்திரிகையின் துணிச்சலான ஆசிரியர் பி.ஏ.சிறிவர்தன இன்று நம்மிடையே இல்லை. இருந்தாலும், அவர் இந்தத் தேசத்தின் மரியாதைக்கு உரியவர் என்று கருதப்பட வேண்டும். 'எத்த' என்ற அந்தப் பத்திரிகையின் ஆசிரியரான அவர், அன்று யாழ்ப்பாணத்தில் நடந்தவற்றை அறிக்கையிடுவதற்காக ஒரு நிருபர் குழுவையே அங்கு அனுப்பி வைத்தார். அது மட்டுமன்றி, செய்தித் தடையின் போது அரச நிறைவேற்று அதிகாரியின் கத்தரிக்கோலில் சிக்கி பிரசுரிக்க முடியாமல் போன அனைத்தையும் அந்தத் தடை நீக்கப்பட்டதன் பின் மீண்டும் தயக்கமின்றிஅவர் பிரசுரித்தார். அதிகாரிகளினால் கத்தரித்து அகற்றப்பட்ட முக்கிய ஆசிரியர் தலையங்கங்களைக்கூட முழுமையாக மறுபிரசுரம் செய்ய அவர் ஆவன செய்தார்.

அன்றைய காலகட்டத்தில் ஓர் உள்ளூர் பிரதேச நிருபராக இருந்த நான், யாழ்ப்பாண நூலகம் தீ வைத்து அழிக்கப்பட்டமை, ஈழநாடு அச்சகம் மற்றும் அதன் அலுவலகத்திற்கு தீ வைக்கப்பட்டமை, பா.உ. யோகேஸ்வரனின் வீடு தீ வைத்து எரிக்கப்பட்டமை, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை அலுவலகம் தீ வைத்து எரிக்கப்பட்டமை, யாழ்ப்பாணத்தில் மக்களின் வாக்குகள் சூறையாடப்பட்டமை போன்ற விடயங்களை 'எத்த' என்ற அந்தப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட செய்திகள் மூலம் மட்டுமே அறிந்து கொண்டேன். அந்தப் பத்திரிகையின் மூலம் மட்டுமே அவை அப்போது வெளிச்சத்திற்கு வந்தன.



செய்தித்
தணிக்கையாளர் சரத்



‘அத்த’ பத்திரிகையின்
ஆசிரியர்

பொது நூலகங்களின் மூலம் அறிவின் பெரும் பகுதியை வளர்த்துக் கொண்ட எம்போன்றவர்களுக்கு யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டது என்ற செய்தியே அதி மிகுந்த மன வேதனையைக் கொடுத்த சம்பவமாக அமைந்தது. அறிஞர்கள் கலாநிதி செனரத் பரணவித்தாரனவும், கலாநிதி ஆனந்த

குமாரசுவாமியும் சேர்த்து வைத்திருந்த அரும் பெரும் நூல்களும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆய்வு ஏடுகளும் அந்த நூலகத்தில்தான் வைக்கப்பட்டிருந்தன என்ற விடயத்தை நாங்கள் கேள்விப்பட்டிருந்ததே அந்த மனவேதனைக்கான முக்கிய காரணமாகும்.

ஆனால், 1993 ம் ஆண்டு வரை யாழ்ப்பாண நூலக எரிப்பு பற்றி விசாரிக்க எமக்கு வழியேதும் இருக்கவில்லை. 1993 ஆகஸ்டில், ஒரு யுத்தகள நிருபர் என்ற முறையில் அரசாங்கத்தின் அனுமதிகள் ஏதும் பெறாமலேயே அன்று விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நாங்கள் நுழைந்தோம். அங்கு நிகழ்ந்து கொண்டிருந்த யுத்தம் பற்றிய செய்திகளை அறிக்கையிட்டபடியே, யாழ்ப்பாணத்தில் நாம் மேலதிகமாக மேற்கொண்ட விசேட தேடுதலின் ஊடாக யாழ். நூலகம் தீக்கிரையாக்கப்பட்டமை தொடர்பாகவும் தகவல்களை திரட்ட ஆரம்பித்தோம். பேராசிரியர் சேனரத் பரணவித்தான, கலாநிதி ஆனந்த குமாரசுவாமி ஆகியோரின் நினைவால் எங்கள் மனதில் ஏற்படுத்தப்பட்டிருந்த **'யாழ். பொது நூலக எரிப்பு என்னும் ஆழமான காயம்'** பழுத்துப் புரையோடிக் கொதித்துக் கொண்டிருந்தத்து.

அவ்வறிஞர்கள் இருவரினதும் தனிப்பட்ட நூல் சேகரிப்புகளும், அவர்களின் ஆய்வுகளின் மூலக் கையெழுத்துப் பிரதிகளும் அன்று யாழ்ப்பாணத்தின் கலாசார பின்னணியைக் கொண்ட மேல்தட்டு சமூகத்தினரால் ஒரு ஏலத்தில் வாங்கப்பட்டன. அந்த நாகரீகமான, உயர்ந்த குணங்களைக் கொண்ட அந்த யாழ்ப்பாணத்தின் தமிழ் மேட்டுக்குடியினர், பேராசிரியர் பரணவிதான மற்றும் கலாநிதி ஆனந்த குமாரசுவாமி

ஆகியோரின் தனிப்பட்ட சேகரிப்பு நூல் தொகுப்புக்களை யாழ்ப்பாணத்தில் இருந்த பெருமைமிக்க நூலகத்திற்கு நன்கொடையாக வழங்கியிருக்கக்கூடும் என்று நாங்கள் ஊகித்தோம். அப்படி நடந்திருந்தால், இந்தத் தீவைப்புச் சம்பவத்தினால் இலங்கையின் வரலாற்றில் மீண்டும் ஒரு முறை *'ஹெலட்டுவா' மற்றும் *'அபயகிரி' போன்ற புராதன பௌத்த ஆவணங்கள், தடயங்கள் வரலாற்றில் தீயிட்டு அழிக்கப்பட்டது போல் நடந்த நிலைமையே இந்தத் தமிழ் ஆவணங்களுக்கும் ஏற்பட்டிருக்க இடமுண்டு என நாம் அஞ்சினோம்.

நாம் யாழ்ப்பாணம் சென்றதும், முதல் நாளே தீயில் எரிந்து அழிந்த நூலகத்திற்குச் செல்வதே எமக்கு முதல் வேலையாக இருந்தது. அப்போதைய விடுதலைப் புலிகளின் அரசியல் தலைவரான தமிழ்ச்செல்வத்திடம் யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டதைப் பற்றிக் கேட்டபோது, அவர் ஏளனமாகச் சிரித்தார். மேலும் எங்கள் கேள்வியை அலட்சியப்படுத்தியபடி "அது ஏற்கனவே தீ வைக்கப்பட்டு விட்டது. அதை பற்றி இப்போது பேசுவது அவசியமற்றது" என்றார். நாங்கள் தங்கியிருந்த ஞானம்ஸ் ஹோட்டலுக்கும், நூலகத்துக்கும் உள்ள தூரம் ஒரு கிலோ மீட்டருக்கும் குறைவாகவே இருந்ததால், தமிழ்ச்செல்வம் கூறியதைப் பொருட்படுத்தாமல் தீயில் அழிந்த நூலகத்தைப் போய்ப் பார்ப்பதற்கு எமக்கு எந்தத் தடையும் இருக்கவில்லை. ஆனால், போரைத் தவிர நூலகங்களைப் பற்றி எதுவும் அறிந்திராத தமிழ்ச்செல்வத்தால் நூலகம் பற்றிய எங்கள் ஆர்வத்தை அழித்து விட முடியவில்லை. ஆனாலும் அவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முக்கியமான நபர்களை சந்தித்து யாழ். நூலகத்தைப் பற்றி அறியுமாறு அவர் எம்மிடம் கூறினார்.

இதன் மூலம் பேராசிரியர் பரணவித்தான மற்றும் கலாநிதி ஆனந்த குமாரசுவாமி ஆகியோரின் சேகரிப்பு நூல்களுக்கு நடந்த கதி என்ன என்பதை எம்மால் கண்டறிய முடிந்தது. இது ஒரு புறமிருக்க, நூலகத்திற்கு தீ வைத்ததன் மூலம் ஜெயவர்தன அரசு புலிகளுக்கு மிகப் பெரும் உதவியைச் செய்திருந்தது. கல்வியில் ஆர்வம் கொண்ட தமிழ் இளைஞர்களுக்கு கற்பிக்கப்பட்ட பாடம் இதுதான்: "கற்றலால் ஒரு பயனுமில்லை. கொடூரமான ஆட்சியில் இருந்து விடுதலை பெறுவதே முதன்மையானது".

முதலாவதாக, ஈழத்துக்காகப் போராடும் 36 அமைப்புகளை உருவாக்குவதற்கான அடித்தளத்தை அந்த சம்பவம் அமைத்துக் கொடுத்தது. இரண்டாவது, புலிகள் இயக்கத்தை உலகின் மிகவும் பயங்கரமான கெரில்லா இயக்கமாக மாற்றியது. மூன்றாவது, உலகின் மிகப்பெரிய இளம் மனித வெடிகுண்டு இராணுவத்தை உருவாக்கியது.

ஆனால் வரலாற்றில் மிகப்பெரிய அவலம் என்னவென்றால் அந்த அழிவுகளுக்கு காரணமான நாயகர்களில் ஒருவர் இன்று இலங்கையின் ஜனாதிபதியாக இருக்கிறார் என்பதுதான்...!

1994 ஒக்டோபர் மாதம் நாங்கள் மீண்டும் யாழ்ப்பாணம் சென்றிருந்தபோது 'நூலகமொன்றை தீயிடுல்' என்ற ஆவணப் படத்திற்கான நாம் படப்பிடிப்பை ஆரம்பித்தோம். நிமலராஜன் மயில்வாகனம் ஆய்வாளராகவும், மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்ற சுயேச்சையாக பொறுப்பேற்றார். நாம் அந்த வேலையில் இறங்கினோம். ***[இது பற்றிய விரிவான அறிக்கை***

***'ஈழத்தில் கழிந்த நாட்கள்' என்ற எனது புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளது]***

அன்று அரச பொலிஸ் படைக்குள்ளேயே இருந்த அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ குண்டர்கள் யாழ். நூலகத்திற்கு தீ வைத்த போது, "காணி, நீர்ப்பாசனம் மற்றும் மகாவலி அமச்சர் காமினி திசாநாயக்க, கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, கைத்தொழில் அமைச்சர் சிறில் மத்தியூ மற்றும் மீன்பிடித்துறை அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா ஆகியோர் யாழ்ப்பாண வாடி வீட்டில் தங்கியிருந்தபடி அங்கு நடந்தவற்றை கண்காணித்துக் கொண்டிருந்ததை நேரடியாக கண்ணால் கண்ட பல சாட்சிகளை அங்கு நாம் சந்தித்தோம்.

குருநாகல் மாவட்ட அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா மற்றும் மாவத்தகம பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜி. பிரேமச்சந்திர ஆகியோரும் இந்தக் குற்றச்செயல் கும்பலின் ஒரு பகுதியாக அங்கு இருந்ததாக எமக்கு பல்வேறு தகவல்கள் கிடைத்தன. 1981 அபிவிருத்தி சபைத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கான தேர்தலில் எப்படியாவது வெல்ல வேண்டும் என்னும் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவின் உத்தரவை ஏற்றுக்கொண்டு அங்கு வந்திருந்த குண்டர்கள் அடங்கிய 'ஜுண்டா' பொலிஸ் படையும், குருநாகல் மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்கமான தேசிய ஊழியர் சங்க (ஜாதிக சேவக சங்கமய) உறுப்பினர்களைக் கொண்ட குண்டர் படையும் யாழ்ப்பாண புகையிரத நிலையத்தில் வந்திறங்கிய நேரத்தில் இருந்து அவர்களின் செயற்பாடுகள் பற்றிய ஆதாரங்களை நாம் கண்டறிந்து கொண்டோம்.

எமது இந்த ஆய்வின் மிக முக்கியமான விடயம் யாதெனில், குண்டர்கள் தீ வைத்த யாழ். நூலகத்தை அணைப்பதற்காக அரசாங்கக் கடற்படையினர் தண்ணீர் பவுசர்களைக் கொண்டு வந்தனர் என்கின்ற விடயமாகும்.

எவ்வாறெனினும், அரசாங்கத்தின் அந்த 'உத்தியோகபூர்வ குண்டர்கள்' 95,000 புத்தகங்களைக் கொண்ட அந்த நூலகத்தைக் காப்பாற்ற கடற்படை தீயணைப்புக் குழுவை அனுமதிக் கவில்லை. இந்த சாட்சியத்தின் மூலம் 'அரச இராணுவம்தான் யாழ்ப்பாண நூலகத்திற்கு தீ வைத்தது' என்ற குற்றச்சாட்டில் இருந்து அரச இராணுவம் தன்னை விடுவித்துக் கொள்கிறது.

யாழ்ப்பாண நூலக எரிப்பு பற்றிய பிரதான கட்டுரையை கொழும்புக்கு திரும்பியவுடன், அடுத்த வாரமே அதனை 'ராவய' என்னும் பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவனிடம் நாம் கையளித்தோம். ஆனால் அது ஒருபோதும் பிரசுரிக்கப்பட வில்லை. அதேவேளை, அந்தக் கட்டுரை எம்மிடம் திருப்பித் தரப்படவுமில்லை. இந்த விடயம் தொடர்பாக நாம் ஒளிப்பதிவு செய்த வீடியோ காட்சிகள் கொண்ட வி.எச்.எஸ் கேசட்டுகள் (VHS Cassettes) ராவய பத்திரிகை காரியாலயத்தில் எனது மேசை டிராயரில் இருந்தன.

அப்போது டி.என்.எல் (TNL) தொலைக் காட்சியில் பணியாற்றிக் கொண்டிருந்த சந்தன சூரியபண்டார என்பவர், திடீரென என்னைத் தொலைபேசியில் அழைத்து யாழ்ப்பாண நகரம் தொடர்பான சில ஒளிப்பதிவுக் காட்சிகள் கிடைக்குமா என வினவினார். எப்போதும் ஏனைய சகோதர ஊடகங்களின்

தேவைகளை பொதுநலன் எனக் கருதி எவ்வித கஞ்சத்தனமும் இன்றி நிறைவேற்றும் நாங்கள் அந்த நபர் அனுப்பியிருந்த வாகனச் சாரதியிடம் எங்களிடம் இருந்த அந்தப் பெறுமதியான ஒளிநாடாக்களை தாராளமாகக் கொடுத்து அனுப்பினோம்.

ஆனால், அவை பின்னர் எப்போதுமே எமக்குத் திருப்பிக் கிடைக்கவில்லை. அந்த அடிப்படையில் யாழ்ப்பாண நூலக எரிப்பு தொடர்பாக நாம் எழுதிய நீண்ட கட்டுரையும், அது தொடர்பாக நாம் எடுக்கவிருந்த ஆவணப் படமும் வரலாற்றின் புழுதிகளுக்குள் மறைந்து போயின.

2022 மே மாதத்தில், ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ரணில் விக்கிரமசிங்க, கொழும்பு 7, கேம்பிரிட்ஜ் பிளேஸில் அமைந்திருக்கும் தனது வீடும், தனது நூலகமும் எரிக்கப்பட்டதைப் பற்றி பெரிதாக புலம்பிய போது தான், மீண்டும் எமக்கும் யாழ்ப்பாண நூலகமும், அது எரியூட்டப்பட்டதும் நினைவுக்கு வந்தது. ஒரு தீவிர பௌத்தருக்கு, இந்த நிகழ்வானது *'தித்த தம்ம வேதனீய கர்மய'* (ஊழ் வினைப் பயன்), அல்லது ஒருவர் தான் பூமியில் வாழும் காலத்திலேயே முன்னர் செய்த தவறுக்கு தண்டிக்கப்பட்டதான 'கர்மா' வாகக் கூடத் தோன்றலாம்.

ஆனால், எம்மைப் பொறுத்தவரை இந்த நிகழ்வானது 1981 இல் யாழ்ப்பாணத்தில் நடந்தேறிய நிகழ்வுகளை மீண்டும் ஒருமுறை ஆராய வேண்டும் என்ற கட்டாயப்படுத்தலை எமக்குள் ஏற்படுத்தியது. ஆனால் எம்மால் முன்னர் எழுதப்பட்ட குறிப்புக்களோ, அறிக்கைகளோ அல்லது பதியப்பட்ட ஒளி நாடாக்களோ எங்களிடம் அப்போது இருக்கவில்லை.

பாராளுமன்ற ஹன்சாட் அறிக்கைகள் மற்றும் பத்திரிகை அறிக்கைகளிலிருந்து இந்த வரலாற்றை மீண்டும் ஒருமுறை ஆய்ந்து முன்வைப்பதே எங்களின் முன்னால் எஞ்சியிருந்த ஒரே தீர்வாக இருந்தது.

நாங்கள் மேற்குறிப்பிட்ட அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் மாவட்ட அமைச்சர்கள் ஆகியோரே இந்தக் குற்றச் செயல்களின் தலைவர்கள் என்பதை பத்திரிகை அறிக்கைகளும் ஹன்சாட் அறிக்கைகளும் உறுதிப்படுத்தின. யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற குற்றச் செயல்கள் பற்றிய விவாதம் 1981 ஜூன் 9ஆம் மற்றும் 10 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தில் நடைபெற்றன. அந்த விவாதத்திற்குப் பல இடையூறு விளைவித்தபடி அமைச்சர் சிறில் மத்தியூ, பிரதி அமைச்சர் ஜி.வி.புஞ்சிநிலமே மற்றும் பாணந்துறை பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி நெவில் டி பெர்னாண்டோ போன்றோர் மாத்திரமே உரையாற்றினர். மற்ற அமைச்சர்கள் விவாதத்தைக் குழப்பும் விதத்தில் பெரும் கூச்சலிட்டனர். யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற குற்றச் சம்பவங்களுக்காக அரசாங்கத்தின் சார்பில் உரையாற்றிய அமைச்சர் காமினி திஸாநாயக்க, "தேவைப்பட்டால்" அதற்காக தாங்கள் மன்னிப்புக் கேட்கலாம் என்றார்.

அப்போதைய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கம்பஹா மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த எஸ். டி. பண்டாரநாயக்க, யாழ்ப்பானத்தில் நடந்த குற்றச் செயல்கள் தொடர்பாக விசாரித்து அறிக்கையிட ஜூன் 8ம் திகதி யாழ்ப்பாணம் சென்றார். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் சிறிமாவோ பண்டாரநாயக்கவே தனது கம்பஹா

பாராளுமன்ற உறுப்பினரை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைத்தார். அவர் யாழ்ப்பாணம் சென்று திரும்பிய பின்னர், ஜூன் 10 ஆம் திகதியன்று பிற்பகல் 3.00 மணிக்கு பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில், யாழ்ப்பாணத்தில் இழைக்கப்பட்ட குற்றச் செயல்களுக்கு மேற்கண்ட நான்கு அமைச்சர்களும் பொறுப்பாளிகள் என குற்றஞ்சாட்டினார்.

அப்போது பாராளுமன்றத்தில் இருந்த அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உட்பட ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கம்பஹா பாராளுமன்ற உறுப்பினர் முன்வைத்த குற்றச்சாட்டுகளை மறுக்கவில்லை. அதனைத் தொடர்ந்து, தமிழர் விடுதலைக் கூட்டணியும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் இந்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்ட அமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவருவதற்கு இணக்கம் தெரிவித்தன. ஆனால் அது வெற்றி பெறவில்லை. ஜே.ஆர். ஜெயவர்தன அரசாங்கம் இந்தக் குற்றச் செயல்கள் தொடர்பாக ஒருபோதும் விசாரணைகளை நடத்தவில்லை. எனவே, வரலாற்றில் இதற்கான குற்றவாளிகள் அல்லது தண்டிக்கப்பட்டவர்கள் என்று எவரும் இல்லை.

1981ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் தீ வைத்து எரிக்கப்பட்டதன் 42 ஆவது ஆண்டு நிறைவை நினைவுகூரவும், அச்சம்பவம் நடைபெற்று 41 ஆண்டுகளின் பின்னர் கொழும்பில் ரணில் விக்கிரமசிங்கவின் வீடு உட்பட 74 அமைச்சர்களின் வீடுகள் எரிக்கப்பட்டதனை நினைவுபடுத்தவும் இந்த நூலை ஒரு நினைவுச் சின்னமாக உங்களுக்குச் சமர்ப்பிக்கிறோம்.

ஏனென்றால், 1981ம் ஆண்டில் ஏறக்குறைய இரண்டு வாரங்களாக இந்த அரசியல் குண்டர்களின் வழிநடத்தலால் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்தக் குற்றச் செயல்களின் வரலாறு இன்று தான் எங்களுக்கு மிகவும் முக்கியமானது. ஏனெனில், அன்று அதனைச் செய்த தலைவர்களில் ஒருவரான ரணில் விக்கிரமசிங்க இன்று நாட்டின் ஜனாதிபதியாக இருக்கிறார்.

அத்துடன், அன்று அந்தக் குற்றச் செயல்களுக்கு தலைமை தாங்கிய அவர் இன்று ஜனநாயகம் மற்றும் நாட்டின் வளர்ச்சி பற்றிய வாக்குறுதிகளை அள்ளி வீசிக் கொண்டிருக்கிறார். மறுபுறம், ஒரு வன்முறைக் கும்பலின் தலைவன் நாட்டின் தலைவராக இருக்கும் இத்தகைய ஒரு தருணத்தில், இந்த வரலாற்றை எழுதி வைப்பதன் மூலமும், அதனை தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினர் படிப்பதற்கு ஒரு வாய்ப்பை அளிப்பதன் மூலமும் மட்டுமே அவருக்கு நாம் சவால் விடக் கூடியதாக இருக்கும். ஒரு ஊடகவியலாளன் என்ற வகையில் எமது பொறுப்பை நாம் நிறைவேற்றி இருக்கிறோம். நீங்களும் உங்கள் பொறுப்பை நிறைவேற்றுங்கள்.

**நந்தன வீரரத்ன**

# 01

## துரிதமாகிய திறந்த பொருளாதார அபிவிருத்தி வேகம்

**1977** முதல் ஜெயவர்தன அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட அனைத்து வகையான "அபிவிருத்தி" திட்டங்களும் கடுகதி வேகத்தில் "துரிதப்படுத்தப்பட்டன". 'துரிதப்படுத்தப்பட்ட மகாவலி', 'துரிதப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரம்', துரிதப் படுத்தப்பட்ட பத்து இலட்சம் வீட்டுத் திட்டம்', துரிதப்படுத் தப்பட்ட சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் 'துரிதப்படுத் தப்பட்ட ஐந்து நட்சத்திர ஜனநாயகம்' ஆகியவை ஒரு காலத்தில் பிரபலமான அபிவிருத்தி முழக்கங்களாக இருந்தன. ஒரு சிலரே இதனை ஜனாதிபதி ஜெயவர்தனவின் அரசியல் மாயாஜால வித்தை போல் பார்த்தனர்.

அவை பற்றிய செய்திகள் அப்போது அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப் படவில்லை. நாடு முழுவதும் கண்ணைக் கவரும் களியாட்ட நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. 'மஹாபொல', 'மகாவலி உதான', 'கம் உதாவ', 'ஜனஹமு', 'யொவுன் புர' என அவை மக்கள் மயப்படுத்தப்பட்டன. இவற்றைக் கண்டு மயங்காதவர்கள் மாத்திரமே இவை எல்லாம் வெளிநாட்டில் இருந்து அரசாங்கம் பெற்றுக்கொண்ட பெருந்தொகைக் கடன்களின் ஒரு பகுதியைக்


கொண்டு நிகழ்த்தப்படுபவை என்பதை தெளிவாக புரிந்து கொண்டிருந்தனர்.

ஆனால் மறுபுறம், வடக்கில் முற்றிலும் மாறுபட்ட சூழலே காணப்பட்டது. சிங்கள மொழி அரசகரும மொழியாக இருந்து வந்ததாலும், ஆட்சி அதிகாரத்தில் அவர்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் இல்லாதிருந்ததாலும் தமிழ் இளைஞர்களுக்கு கோட்டா அடிப்படையிலான அரசாங்க வேலை வாய்ப்புகள் மறுக்கப்பட்டன. பல்கலைக்கழகத் தரப்படுத்தல் மூலம் பல்கலைக்கழக வாய்ப்புகள் அவர்களில் பலருக்கு இல்லாமல் செய்யப்பட்டன. அரசின் திறந்த பொருளாதார முறைமையின் கட்டுப்பாடற்ற இறக்குமதி காரணமாக, வளமான யாழ்ப்பாண விவசாயம் 'சனியின் பார்வையால்' ஏற்படுத்தப்பட்ட தாக்கம் போல் மோசமான பாதிப்புக்களைச் சந்திக்க நேர்ந்தது.

இந்தப் பின்னணியிலேயே நாட்டின் அபிவிருத்தியை துரிதப்படுத்தவும், நாட்டின் அபிவிருத்தி திட்டங்களுக்காகவும் அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கப் போவதாகக் கூறிக் கொண்டு ஜெயவர்தன அரசாங்கம் மாவட்ட அபிவிருத்தி சபைகள் என்னும் திட்டத்தை முன்வைத்தது. எனினும், வடக்கில் தமிழ் இளைஞர்கள் மத்தியில் அதிகரித்து வந்த எதிர்காலம் பற்றிய நம்பிக்கையீனம் மற்றும் ஏமாற்றங்கள் போன்றவை பற்றிய புரிதலும் அக்கறையும் ஏதும் அன்றைய அரசாங்கத்திற்கு இருந்ததா? அக்காலகட்டத்தில் ஒரு சில ஆயுதமேந்திய தமிழ் இளைஞர் குழுக்கள் அங்கு தமது நடவடிக்கைகளை ஏற்கனவே ஆரம்பித்திருந்தன. அரசியல் பழிவாங்கல்களின் அடிப்படையில் யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்ட சுமார் 15 பொலிஸ் உத்தியோகத்தர்கள் அரச எதிர்ப்பாக அங்கு வைத்துக் கொல்லப்பட்டனர். சுருங்கக் கூறின், இளைஞர்களின் வெறுப்பு

நேரடியாக ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியை நோக்கியதாகவே காணப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு நாட்டின் ஏனைய தொகுதிகளிலிருந்து மூன்று வருடங்களுக்கு முன்னர் (1977ல்) கிடைத்த ஆறில் ஐந்து பெரும்பான்மை (5/6) அதிகாரத்துடன், யாழ்ப்பாணத்தின் அதிகாரத்தையும் சேர்த்து தாரை வார்த்து கொடுப்பது என்பதற்கும் அப்பால், யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து அந்த அரசாங்கத்திற்கு எந்தவித பிரதிநிதித்துவத் தையும் கிடைக்க விடக்கூடாது என்ற நிலைப்பாட்டில் அந்த இளைஞர் சமூகத்தினர் மிக உறுதியாக இருந்தனர்.

ஆனால், அதிகார போதையில் இருந்த ஜனாதிபதி ஜெயவர்தன எந்தவகையிலும் ஒரு மக்கள் நலன்சார் ஆட்சியாளர் அல்ல. தான் விரும்பியதையும், தனக்குத் தேவையானதையும் செய்து முடிப்பதற்காக எந்த விலையையும் செலுத்தத் துணிவதும், அதனை மற்றவர்கள் மீது திணிப்பதுமே அவருடைய தேவையாக இருந்து வந்தது.



எனவே, இலங்கை சர்வஜன வாக்குரிமை பெற்ற 50 வது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டத்திற்கு ஒரு மாதத்திற்கும் குறைவான காலம் இருக்கும் பொழுது, எமது நாட்டில் நடத்தப்பட்ட மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலானது இலங்கையின் தேர்தல் வரலாற்றில் சர்வஜன வாக்கெடுப்பின் கீழ் நடாத்தப்பட்ட மிகவும் அவமானகரமான ஒரு தேர்தலாக பதியப்பட்டுள்ளது. சரியாக இற்றைக்கு 44 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இந்த அவமானகரமான தேர்தலை அறிக்கையிடுவதற்கு முன்னர்

இந்த 'அபிவிருத்தி சபைகளின்' வரலாற்றை நாம் சுருக்கமாக பார்க்க வேண்டும்.

இலங்கையில் என்றுமே குணப்படுத்த முடியாத நோயாக இருந்து வரும் வறுமை என்பது இன்று போலவே அன்றும் குணப்படுத்த முடியாத தீவிர நிலைமையிலேயே காணப்பட்டது. வறுமை என்னும் இந்தக் கடுமையான தலைவலிக்கு சிகிச்சையாக "தலையணைகளை மாற்றுவதுபோல்" இன்னுமொரு முன்மொழிவாகவே இந்த "மாவட்ட அபிவிருத்தி சபைகளை" 1980 களின் முற்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி எமது நாட்டின் அரசியல் வேலைத்திட்ட நிரலுக்குள் சேர்த்துக் கொண்டது.

ஜே. ஆர். ஜெயவர்தனவின் ஐக்கிய தேசியக் கட்சி, இந்த நாட்டு மக்களுக்கு அபிவிருத்தி தொடர்பான பெரும் எதிர்பார்ப்புகளை கொண்டு வரக்கூடிய ஒரு பாரிய பிரசாரத்துடன் 1980 ஆம் ஆண்டில் 35 ஆம் இலக்க மாவட்ட அபிவிருத்திச் சபை சட்டத்தை அறிமுகப்படுத்தியது. இச்சட்டத்தை நாங்கள் மேலோட்டமாகப் பார்க்கின்ற பொழுது, அவரது ஆட்சியின் கீழ் நாட்டின் வளர்ச்சியின் வேகத்தை துரிதப்படுத்துவதும், அந்தந்த மாவட்டங்களின் அபிவிருத்தியை அந்தந்த மாவட்டங்களின் மக்கள் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளிடம் ஒப்படைப்பதும் இந்தச் சட்டத்தின் நோக்கமாக இருப்பது தெரிந்தது. அதன் மூலம் வடக்கில் உள்ள தமிழ் இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த அமைதியின்மைக்கு இது ஒரு தீர்வாக அமையும் என்றும் நம்பப்பட்டது.

இந்த மாவட்ட அபிவிருத்திச் சபைகள் 'அபிவிருத்தியில் அதிகாரப் பகிர்வை' வழங்கும் என்று சட்டத்தின் பிதாமகர்கள்

கூறினர். இதற்காகவே அரசாங்கமானது ஏற்கனவே இருந்த அமைச்சரவையில், பிரதி அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கு மேலதிகமாக மேலும் 24 ‘மாவட்ட அமைச்சர்களையும்’ நியமித்தது. இந்த 'மாவட்ட அமைச்சர்கள்' என்போர் நியமிக்கப்பட்ட பின்னர் தான் இந்த அபிவிருத்திச் சபைக்கான தேர்தல்களை நடத்தவும் அது தயாரானது. ஏனெனில், அபிவிருத்தி சபையின் பிரதிநிதிகள் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டாலும் கூட, அச்சபையின் அதிகாரம் பொருந்தியவராக நாட்டின் ஆளும் கட்சியால் நியமிக்கப்பட்ட ‘மாவட்ட அபிவிருத்தி அமைச்சரே’ காணப்படுவார்...!

இலன்கையின் அபிவிருத்தி சபைகளுக்கான தேர்தல்களை ஜூன் 4, 1981 அன்று நடாத்த அரசாங்கத்தால் திட்டமிடப்பட் டிருந்தது. ஐக்கிய தேசியக் கட்சியும் (யூ.என்.பி.), மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.)யும் மட்டுமே வவுனியாவுக்கு தெற்கேயுள்ள மாவட்டங்களில் அபிவிருத்தி சபை தேர்தலில் போட்டியிட்டன. நாட்டின் இரண்டாவது பெரிய கட்சியான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஏனைய கட்சிகள் என்பன இதனை "அபிவிருத்திச் சபை மோசடி" என்று கூறி அத் தேர்தலைப் புறக்கணித்தன.

ஐக்கிய தேசியக் கட்சியும், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியும் மாத்திரமே வவுனியாவிற்கு மேல் வடக்கில் போட்டியிட்டன. சிங்கள மாகாணங்களில் அரசாங்கத்திற்கு சவால் எதுவும் இல்லை என்பதை முன்கூட்டியே அறிந்திருந்த ஜே.ஆர். ஜெயவர்தன ஆட்சியாளர்களுக்கு, இந்தத் தேர்தலில் எப்படியாவது யாழ்ப்பாண மாவட்டத்தை வென்றெடுக்க வேண்டிய தேவையிருந்தது. வடக்கு-கிழக்கு மாகாணங்களில்

அப்போது அரசியல் அதிகாரத்தில் இருந்த தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக்கு இந்தத் தேர்தலிலும் தங்களது இந்த வெற்றியை உறுதி செய்வதன் மூலம் ஒரு பாடத்தைக் கற்றுக் கொடுப்பதும், யாழ்ப்பாணத்தில் அவ்வப்போது நிகழும். அரசியல் படுகொலைகளுக்கு அரச வன்முறைகள் மூலம் பதிலளிப்பதுமே அரசாங்கத்தின் நோக்கமாக இருந்தது.







**கம் உதாவ, மஹாபொல களியாட்டங்கள்**

# 02

## யாழ்ப்பாணம் வந்த 'ஜுண்டா' பொலிஸ் படை

*"என் மனதில் எழுகின்ற, அதேவேளை புத்திசாலியான எவருக்கும் மனதில் எழ வேண்டிய கேள்வி என்னவென்றால், புதுப்பிக்கப்பட்ட யாழ்ப்பாண நூலகத்தைத், ஒரு 'கீழ்மைப் படுத்தப்பட்ட சாதி'யைச் சேர்ந்த ஒரு நபர் திறந்து வைப்பதை யாழ்ப்பாணத்தின் வலிமை வாய்ந்த வெள்ளாள சாதியால் பொறுத்துக்கொள்ள முடியாது என்றால், வெள்ளாளரல்லாத 'கீழ் சாதி'யைச் சேர்ந்த மக்கள் என்ன விதமான பொறுமையைக் கடைப்பிடிப் பார்கள்? வெள்ளாளர்களின் அறிவுசார் மற்றும் கலாசார மேன்மையை அடையாளப் படுத்திய அந்த நூலகத்தின் இருப்பை அவர்கள் பல தசாப்தங்களாக எவ்வாறு சகித்துக் கொண்டனர்? அத்தகைய இந்து மேட்டுக் குடியினரின் இந்த அடையாள சின்னத்தை அழிக்க சரியான தருணத்திற்காக அவர்கள் காத்திருந்தார்களா? பிரபாகரன் தலைமையிலான புலிகள் இயக்கம் பெரும்பாலும் யாழ்ப்பாணத்து ஒடுக்கப்பட்ட வெள்ளாளரல்லாத சாதியினரையே கொண்டிருந்தது."*

பொலிஸ் சேவையின் புலனாய்வுப் பிரிவின் அப்போதைய தலைவராக இருந்த எட்வர்ட் குணவர்தன, 1981 ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நிகழ்த்தப்பட்ட பேரழிவை ஒரு சாதிய மோதலென திசைத் திருப்பிக் காட்ட முனைந்தார்.

எட்வர்ட் குணவர்தன அப்போது தானே தலைவராக இருந்து 1981ல் அந்தப் பொலிஸாரை வழிநடத்தியதன் மூலம் அன்று அரசியல் தலைவர்கள் செய்த அக்குற்றங்களை மறைக்க 2013 இல் ஒரு புத்தகத்தையே எழுதினார். அந்தப் பொய்யை அவர் இறக்கும் வரை சாதித்துக் கொண்டே இருந்தார். பொலிஸார் பொய் சொல்வதற்கென்றே பயிற்சி பெற்றவர்கள், எனவே, நாம் இது தொடர்பான உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டும். முதலில், அன்று யாழ்ப்பாணத்திற்கு அரசாங்கம் எவ்வாறான பொலிஸ் படையை அனுப்பியது?

உத்தியோகபூர்வ அதிகாரத்தின் மூலம் நாட்டின் முப்படைகளின் தளபதியாக இருந்த ஜனாதிபதி ஜெயவர்தன, யாழ்ப்பாணத்தில் இருந்த பொலிஸ் படைக்கு மேலதிகமாக தேர்தலுக்கு "பாதுகாப்பு" வழங்குவதற்காகவென 1981 மே கடைசி வாரத்தின் தொடக்கத்தில் 500 பேர் கொண்ட ஆயுதம் தாங்கிய ஒரு பொலிஸ் படையை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பினார். இந்த பொலிஸ் படையானது தேர்தலுக்கு ஒரு வாரத்திற்கு முன்பே அங்கு அனுப்பப்பட்டது. இந்தப் படை நாட்டின் தலைமைத் தளபதியின் சிறப்பு பொலிஸ் படையாகும். அவர்களில் பெரும்பாலானோர் 'உப பொலிஸ் சேவை' (Sub-Police Service) என்று அழைக்கப்படும் இடைக்கால பொலிஸ் படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு நிரந்தர பொலிஸ் சேவையில் உள்வாங்கப்பட்டவர்களாவர். இந்தப் பொலிஸ் பிரிவைப் பற்றி ஒரே ஒரு உதாரணம் மட்டும் தர விரும்புகிறோம். தான் செய்த ஒரே ஒரு கொலைக்காக மாத்திரம் மரண தண்டனை

விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் கனேந்திர வாஸ் குணவர்தன, இந்த இடைக்கால பொலிஸ் சேவையின் ஊடாக பொலிஸ் சேவையில் இணைந்த ஒரு நபராவார். ஜெயவர்தன அரசாங்கத்தின் கீழ் மட்டுமன்றி பிரேமதாச அரசாங்கத்தின் கீழும், சட்ட விரோத படுகொலைகளை செய்வதற்கு இந்தப் பொலிஸ் படையே பயன்படுத்தப்பட்டது. அவர்களால் நாட்டில் இழைக்கப்பட்ட பல குற்றங்களைப் பற்றி ஆராய்வதற்கு முன்னர் அதன் தோற்றம் மற்றும் அதன் நோக்கங்களை நாம் ஆராய்ந்து அறிந்து கொள்ளல் வேண்டும்.

டச்சுக்காரர்கள் இலங்கை நாட்டின் கடலோர நிலங்களை ஆக்கிரமித்த பொழுது தான் நாட்டின் சொத்துக்கள், சட்டம் மற்றும் ஒழுங்கைப் பாதுகாக்கவென 'காவல்' என்ற நாமகரணத்தின் கீழ், ஒரு உத்தியோகபூர்வ படைப் பிரிவின் அமைப்பு ஆரம்பமாகியது. ஆங்கிலேய காலனித்துவ காலத்தில், இது காவல்துறை என்ற பெயரில் நிறுவப்பட்டது. காவல்துறை பொதுவாக ஒரு நாட்டின் ஆளும் கட்சியின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி, பாதுகாத்து வந்தாலும், அது எப்போதும் ஒரு சுயாதீனமான நிறுவனமாகும். குறிப்பாக, காவல்துறையில் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகளில் அது ஒரு வெளிப்படைத் தன்மையைக் கொண்டிருக்கும். எமது பொலிஸின் இந்தத் தரமானது இலங்கையில் காலனித்துவ ஆட்சிக் காலத்திலிருந்து பாதுகாக்கப்பட்டு வருகிறது.

1962 அரச எதிர்ப்பு சதிப்புரட்சியின் போதுதான் இலங்கையில் முதன் முதலில் பொலிஸ் அதிகாரிகள் நேரடியாக அரசியலில் ஈடுபடுவது ஆரம்பமாகிறது. இந்த அரச விரோத சதியை அம்பலப்படுத்தியதும் ஓர் உயர் பொலிஸ் உத்தியோகத்தர் தான். இலங்கையின் பொலிஸ் உயர் அதிகாரிகள் இந்தச் சதிப்புரட்சி முயற்சியில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. உதவி பொலிஸ் அத்தியட்சகரான ஸ்டான்லி சேனநாயக்க என்பவரே, 1960 ஜூலையில் தேர்தலில் ஆட்சிக்கு வந்த சிறிமாவோ பண்டாரநாயக்கவின் அரசாங்கத்தை தூக்கியெறியும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படவிருந்த சதிப்புரட்சி பற்றி அது தொடங்கப்படுவதற்கு முன்னதாகவே அதனை பதவியிலிருந்த அரசாங்கத்திற்கு அறிவித்தவராவார்.

1970 இல் மீண்டும் ஆட்சிக்கு வந்த சிறிமாவோ பண்டாரநாயக்க அரசாங்கத்தில் உயர் பதவிக்கு நியமிக்கப்பட்ட பொலிஸ் மா அதிபர்களில் ஒருவராக ஸ்டான்லி சேனநாயக்கவும் இருந்தார். இந்த காலகட்டத்தில்தான் அரசியல்வாதிகளின் சிபார்சுகளின் அடிப்படையில் காவல்துறைக்கு ஆட்சேர்ப்பும் தொடங்குகிறது. நாட்டின் பொலிஸில் இவ்வாறாக மறைமுகமான அரசியல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்தாலும் கூட நேரடியான அரசியல் தலையீடுகள் அக்காலங்களில் பெரும்பாலும் இருக்கவில்லை.

ஒரு அரசியல் கட்சியின் ஆதரவாளர்களை அல்லது அதன் தொண்டர்களை நேரடியாக பொலிஸில் சேர்ப்பது என்பது 1977

இல் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் கீழேயே தொடங்கியது. அக்காலத்தில் பொலிஸ் மா அதிபராக இருந்தவர் ஜி.ஏ. டி.ஈ.ஏ. [ஆனா] செனவிரத்ன என்பவராவார். இந்த வரலாறு எமக்கு ஏன் முக்கியமானது என்றால், இந்த அரசியல் பொலிஸானது தங்கள் உத்தியோகபூர்வ அதிகாரத்தை கையகப்படுத்திக் கொண்டு, ஒருபுறம் குற்றவாளியாவதற்கும், மறுபுறம் அதற்கான தண்டனையிலிருந்து தப்புவதற்குமான சிறப்புரிமையை அனுபவித்து வந்ததாலாகும். நாட்டின் வரலாற்றில், உத்தியோகபூர்வ காவல்துறையின் உறுப்பினர்கள் ஒரு ‘காடையர்கள் கும்பல்’ போல் கூட்டாக நடந்து கொள்ள ஆரம்பிப்பது 1981 இல் இருந்தே தொடங்குகின்றது.

1865 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் கீழ், நாட்டில் குழப்பங்கள் ஏற்படும்போது, அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ பொலிஸ் படையினருக்கு மேலதிகமாக அங்கு 'விசேட பொலிஸ் கான்ஸ்டபிள்களை' நியமிக்கக்கூடிய அதிகாரத்தை நாட்டின் பொலிஸ் தலைவருக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளை அப்போதைய பிரித்தானிய ஆட்சியாளர்கள் செய்திருந்தனர்.

1915 ஆம் ஆண்டு சிங்கள-முஸ்லிம் கலவரத்தின் போதுதான் இலன்கையில் காலனித்துவ காவல்துறையால் இந்த பொலிஸ் அதிகாரம் முதன் முதலில் பயன்படுத்தப்பட்டது. 1974ல், சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஐக்கிய முன்னணி அரசாங்கம், 'பகுதிநேர தன்னார்வ' பொலிஸ் படையை

உருவாக்குவதற்கு வகை செய்வதற்காக 1974ல் பிரித்தானிய பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் இலக்க கட்டளையை திருத்தியது. இது 1971 ஏப்ரல் கிளர்ச்சியின் தாக்கத்தால் ஏற்பட்டதாக நம்பப்படுகிறது.

எவ்வாறாயினும், 1975 அளவில் ஐக்கிய முன்னணியின் [ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, சமசமாஜக் கட்சி மற்றும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி] ஆகிய கட்சிகளின் கூட்டு ஆட்சி வீழ்ச்சி அடைந்ததன் காரணமாக, அவ்வரசாங்கத்தால் தனது ஆட்சிக் காலத்தில் ஒரு "பகுதி-நேர தன்னார்வ" பொலிஸ் படையை உருவாக்குவதற்கான வாய்ப்புக்கள் இல்லாமல் போயின. ஆனால், அதே பொலிஸ் கட்டளைச் சட்டத் திருத்தத்தின் உதவியுடன், நாம் மேலே விவரித்தபடி ஜெயவர்தன அரசாங்கம் ஒரு இடைக்கால பொலிஸ் படையை உருவாக்கத் தொடங்கியது.

அந்தச் சட்டத் திருத்தத்தின் தயவில் 1977 இறுதியில், ஐக்கிய தேசியக் கட்சியின் (ஐ.தே.க.) தலைவர்கள் தமது கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் தமது கூட்டாளிகள் என்போரிடமிருந்து விண்ணப்பங்களை பெற்றுக் கொண்டு, அவ்விண்ணப் பதாரர்களை நேர்காணல்களுக்காக பிரதேசத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பினர். அந்த அபத்தமான பொலிஸ் ஆட்சேர்ப்புக் கொள்கையின் காரணமாக இலங்கை பொலிஸ் தொடர்பான பல நையாண்டிக் கதைகள் பிரபலம் அடைந்திருந்தன. அந்த பொலிஸ் அதிகாரிகள் பொதுமக்களிடம் 'R. P. C' அல்லது 'R. S. I.' என்ற நாமங்களால் அறியப்பட்டனர்.

அந்தப் பொலிஸ் நேர்முகத் தேர்வின் தலைமை அதிகாரியாக சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தின் பொறுப்பதிகாரியே இருந்தார். ஆனால், அந்த தொகுதியில் இருந்த ஆளும் ஐ.தே.க.விற்கு பாராளுமன்ற உறுப்பினர் எவரும் இல்லை என்றால் (அப்போதைய ஆசன முறையின் கீழ்) அப்பகுதியின் ஐ.தே.க அமைப்பாளரே இந்த விண்ணப்பங்களை பெற்றுக் கொள்வார்.


அதாவது, ஐக்கிய தேசியக் கட்சியின் நெருங்கிய ஆதரவாளராகவும், தொண்டராகவும் இல்லாத எவரும் இந்த இடைக்காலப் படையில் சேர்க்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வதே இதன் அர்த்தமாகும். ஒரு சாதாரண பொலிஸ்காரரர் பெற வேண்டிய கட்டாய மூன்று ஆண்டு பயிற்சி அவர்களுக்கு கிடைக்கவில்லை. அதற்குப் பதிலாக, அவர்கள் மூன்று மாத 'சிறப்பு' பயிற்சியினைப் பெற்றார்கள். முப்படைகளின் தளபதி ஜெ. ஆர். ஜெயவர்தனவால் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட அபிவிருத்திச் சபை தேர்தலுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக அனுப்பப்பட்ட பொலிஸ் படையில் பெரும்பான்மையானவர்கள் அந்த 'இடைக்காலப் பொலிஸ் படையின்' உறுப்பினர் களேயாவர்.

1981 மே மாத இறுதியில், வடக்கில் சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலை நடாத்துவதற்கான பாதுகாப்பு வழங்கும் பொறுப்பானது எப்போதும் இந்தப் பொலிஸாரிடமே ஒப்படைக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் அந்தப் பொலிஸ்

படையினருக்குத் தேவையான தங்குமிட வசதிகள் இருக்கவில்லை. இதனால், அரசு பள்ளிகள் மூடப்பட்டு, அவை தற்காலிக பொலிஸ் முகாம்களாக மாற்றப்பட்டன. ஜனாதிபதி ஜெயவர்தனவின் இந்த `அரசியல் பொலிஸ்' படை சீருடையுடனோ அல்லது சீருடை இல்லாமலோ துப்பாக்கிகளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டது. அதன் விளைவாக ஐ.தே.க. கூட்டங்களிலும், அதேவேளை தமிழர் விடுதலைக் கூட்டணியின் கூட்டங்களிலும் சிவில் உடையில் துப்பாக்கிகளுடனும், அத்துடன் பொலிஸ் சீருடை தரித்து துப்பாக்கிகளுடனும் பொலிஸார் காணப்பட்டனர்.

அன்றிலிருந்து 1994ம் ஆண்டு வரை, யூ.என்.பி. அரசாங்கமானது தனது அரசியல் அபிலாஷைகளை அடைவதற்காக இந்தப் பொலிஸைப் பயன்படுத்தியது. இந்த பொலிஸாரின் பாரபட்சமான போக்கு பற்றி யூ.என்.பி. அரசாங்கங்களுக்கு எந்தவித சந்தேகங்களோ, கேள்விகளோ இருக்கவில்லை. குறிப்பாக 1988/89ன் பீதி நிறைந்த சகாப்தத்தில் தெற்கில் பெருந்தொகை இளைஞர்களைக் கொல்வதற்கு இந்த பொலிஸ் படை முன்பு போலவே பயன்படுத்தப்பட்டது. அரசியல் தலைமைத்துவத்தின் அறிவுறுத்தலின் பேரில் பொலிஸாரால் நிகழ்த்தப்படும் குற்றங்கள் விசாரிக்கப்படுவதில்லை அல்லது தண்டிக்கப்படுவதில்லை என்பதை 1981ல் யாழ்ப்பாணத்தை தீயிட்டுக் கொளுத்திய சம்பவங்களிலிருந்தே சிறப்பாக இந்த உத்தியோகபூர்வ குற்றவாளிகள் கற்றுக் கொண்டனர். இன்று இது ஒரு பாரம்பரியமாக மாறி தற்காலம் வரை தொடர்ந்து

வந்துள்ளது. அவற்றைப் பற்றி நாம் விரிவாக எழுத வேண்டியதில்லை. இன்று இலங்கையில் நீதியையும், நியாயத்தைம் கோருகின்ற மக்களுக்கு இந்த ஆட்சியில் இந்தப் பொலிஸ் படைக்கு  தற்போதைய தலைவராக இருப்பது பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் என்பதும் குறிப்பிடத்தக்கது.




புத்தகத்தின் அட்டைப்படம்



பிரதிப் பொலிஸ் மா அதிபர்
எட்வர்ட் குணவர்தன



பொலிஸ்மா அதிபர் ஆனா செனவிரத்ன



பிரதிப் பொலிஸ் மா அதிபர்
கணேந்திர வாஸ் குணவர்தன

# 03

## தேர்தலை ஒத்திவை...!

**யாழ்ப்பாணத்தில் அமைதியின்மை காரணமாக தேர்தல் ஒத்திவைப்பு?**

***"தற்போது ஏற்பட்டுள்ள அமைதியின்மை குறித்து யாழ்ப்பாண மாவட்ட அதிகாரிகள் அரசின் பொறுப்பான அதிகாரிகளிடம் முறையிட்டு, பொதுமக்களின் உயிர்களுக்கும், சொத்துக்களுக்கும் உடனடி பாதுகாப்பை வழங்குமாறும், இந்த நெருக்கடி முடிவடையும் வரை யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி சபைக்கான தேர்தலை ஒத்திவைக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்."***

***"யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையின் கீழ் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலை நடத்துவது, மற்றும் அப்பகுதிக்கு முப்படைகளின் பாதுகாப்பை வழங்குவது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட அதிகாரிகள் அரசாங்கத்தின் உடனடிக் கவனத்தைக் கோரியுள்ளனர்."***

*[ஜூன் 2, 1981 தேதியிட்ட 'எத்த' (உண்மை) பத்திரிகையின் முன் பக்கம்]*

ஆனால் அரசாங்கம் தேர்தலை பிற்போட விரும்பவில்லை. மாறாக யாழ்ப்பாண மாவட்டத்தில் எப்படியாவது தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்ற திட்டமே இருந்தது. இதைப் புரிந்து கொள்ள வேண்டுமாயின் யாழ்ப்பாண மாவட்ட அரசியலில் ஐக்கிய தேசியக் கட்சிக்குரிய இடம் என்னவாக இருந்தது என்பது பற்றி தெரிந்திருக்க வேண்டும்.

1956 பொதுத் தேர்தலின் பின்னர், ஐக்கிய தேசியக் கட்சியால் யாழ்ப்பாணத்தில் ஒரு ஆசனத்தைக் கூட வெல்ல முடியவில்லை. 1977 ஜூன் பொதுத் தேர்தலில், ஐ.தே.க. ஜே ஆர் ஜெயவர்தன ஆறில் ஐந்து பெரும்பான்மை அல்லது 141 ஆசனங்களுடன் வெற்றிபெற்று முன்னிலை வகித்தார். இலங்கை தேர்தல் வரலாற்றில் இது யாராலும் முறியடிக்கப்படாத சாதனையாகும். எனினும், அந்தப் பொதுத் தேர்தலில் ஐ.தே.க.வினால் யாழ்ப்பாணத்தில் ஒரு ஆசனத்தைக் கூட வெல்ல முடியவில்லை. 1978 பெப்ரவரியில், ஜே.ஆர் .ஜெயவர்தன அரசாங்கம் ஒரு புதிய அரசியலமைப்பை நிறுவியது. அந்தச் சட்டத்தின் பிரகாரம் அவர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவிக்கு தன்னை நியமித்துக் கொண்டார். "இப்போது ஒரு பெண்ணை ஆணாக மாற்றுவதைத் தவிர என்னால் எதையும் செய்ய முடியும்" என்று நிறைவேற்று அதிகாரம் கொண்ட தலைவர் ஜூலியஸ் ரிச்சர்ட் ஜெயவர்தன பெருமையாகக் கூறினார். ஆனாலும், அவரது கட்சிக்கு வடக்கு மாகாணத்தில் இருந்து பாராளுமன்றத்திற்கான எந்தவொரு மக்கள் பிரதிநிதித்துவம் இருக்கவில்லை. அவர் ஆட்சிக்கு வந்து 4 வருடங்களின் பின்னர்,


இலங்கையில் சர்வஜன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டு 50 வருடங்கள் நிறைவடையும் அந்த வேளையில், நேர்மையாகவோ அல்லது வஞ்சகத்தனமாகவோ வடக்கின் வாக்குப் பலத்தை வெற்றி பெற வேண்டும் என்று அவர் திட்டமிட்டிருந்தார். இதற்காக மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலை பயன்படுத்திக் கொள்ளவே ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன திட்டமிட்டிருந்தார்.

வடக்கில், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி மற்றும் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி உட்பட ஒரு சில சிறிய தமிழ் அரசியல் குழுக்கள் மட்டுமே மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தலில் போட்டியிட்டன. 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4 ஆம் திகதி நாடு முழுவதும் அத்தேர்தலை நடாத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணியே வட மாகாணத்தை முழுமையாக பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்து வந்தது. இந்தத் தேர்தலில் போட்டியிடும் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி படுதோல்வியை அடைவது உறுதியானது என்பது மட்டுமன்றி, மிகக் குறைந்த சதவீத வாக்குகளைப் பெற்று தோல்வி காணும் வரலாற்றுச் சாதனையைப் பெறும் என்றும் எதிர்பார்க்கப் பட்டது.


ஆனால், இத்தகையதொரு யதார்த்த நிலைமையே அங்கு இருந்து வநத போதிலும், ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்கள் இந்த அரசியல் யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவில்லை. அப்போதும் அவர்கள், வடக்கில்

எஞ்சியிருந்த கடைசி ஐ.தே.க ஆதரவாளர்களையும் இந்தத் தேர்தலில் களமிறக்குவதன் மூலம் எப்படியாவது தமது பலசாலித்தனத்தை காட்டத் தயாராக இருந்ததையே காணக் கூடியதாக இருந்தது. இந்தத் தலைவர்கள் தெற்கில் பாரிய சவால்களோ, சிரமங்களோ இன்றி வென்றெடுக்கப்படப் போகும் தேர்தல் வெற்றியின் மகிழ்ச்சியை அனுபவிப்பதைக் காட்டிலும், அவர்கள் வடக்கில் பலவந்தத்தாலும், வன்முறையாலும் வென்றெடுக்கப்படும் தேர்தல் வெற்றியில் ஒருவித குரூரமான மகிழ்ச்சியை அனுபவிக்கவே விரும்பினர்.

மே மாத இரண்டாவது வார இறுதியில், கொழும்பு 7, வார்ட் பிளேஸில் உள்ள த `பிரேம் ஹவுஸ்` என்னும் இடத்தில் ஒரு விசேட தேர்தல் கூட்டம் நடைபெற்றதாக செய்திகள் வெளியாகின. தனக்கு நம்பிக்கைக்குரிய அமைச்சர்களான சிறில் மெத்தியூ, காமினி திசாநாயக்க, ரணில் விக்கிரமசிங்க மற்றும் காமினி ஜயவிக்ரம பெரேரா ஆகியோரை ஜனாதிபதி ஜெயவர்தன தனது சொந்த தனிப்பட்ட இல்லத்துக்கு அழைத்திருந்தார். நடக்கப் போகும் தேர்தலின்போது யாழ்ப்பாணத்திற்கு தேர்தல் அதிகாரிகளாக அனுப்புவதற்காக குருநாகல் மாவட்டத்தில் இருந்து யூ.என்.பீ. காரர்களை சேர்த்து அனுப்புவதற்கான உத்தரவு இந்தக் கலந்துரையாடலின்போது வழங்கப்பட்டது. இக்கலந்துரையாடல் தொடர்பாக நன்கு அறிந்த ஒரு ஊடக நிருபர் எம்மிடம் கூறியதன்படி, ஜனாதிபதி ஜெயவர்தன அக்கட்டளையை இவ்வாறுதான் பிறப்பித்தார்.









# යාපනයේ කලබල නිසා මැතිවරණය කල් දමයිද?

යාපන දිස්ත්‍රික්කයේ දනට උද්ගතව ඇති අර්බුදකාරී වාතාවරණය තුළ ප්‍රදේශයේ දිස්ත්‍රික් සංවර්ධන සභා මැතිවරණය පැවැත්වීම පිළිබඳව පවතින අවිනිශ්චිත තත්ත්වය කෙරෙහිත්, ප්‍රදේශයට ත්‍රිවිධ හමුදා ආරක්ෂාව ලබාදීම කෙරෙහිත් යාපන දිස්ත්‍රික් බලධාරීහු රජයේ ක්ෂණික අවධානය යොමු කොට ඇත.

யாழ்ப்பாணத்தில் கலவர நிலைமையால் தேர்தல் பின்போடப்படுமா?

*"ஜயவிக்ரம, இந்த அலுவலுக்காக நீ குருநாகலையிலிருந்து எங்கட ஆக்களை அனுப்ப வேண்டும்."*

இந்த உத்தரவால் அமைச்சர் ஜயவிக்ரம ஒரு விதத்தில் ஆச்சரியமடைந்தார்.

*"சேர்.. நானா..."*

என்று ஆச்சரியத்துடன் கேட்கும்போது, ஜெயவர்தன தான் அமர்ந்திருந்த நாற்காலியில் இருந்து எழுந்து வீட்டுக்குள் சென்றார். அதன் அர்த்தம் என்னவெண்றால், அதாவது அமைச்சர் ஜயவிக்ரம எப்படியாவது அந்த உத்தரவை நிறைவேற்ற வேண்டும் என்பதாகும். ஒருபுறம், சர்வஜன வாக்குரிமை கிடைத்த 50 வது ஆண்டு நிறைவைக் கொண்டாடத் தயாராகிக் கொண்டிருந்த ஜெயவர்தன அரசாங்கம், மறுபுறம் அதன் பெறுமதியை அழிப்பதற்கான செயற்பாட்டையும் இப்படித்தான் தொடக்கி வைக்கத் திட்டமிட்டது.

மே 24 அன்று, ஐ.தே.க.வின் அபிவிருத்திச் சபை தேர்தல் வேட்பாளர் பட்டியலில் முதலிடத்தில் இருந்த தியாகராஜா சுட்டுக் கொல்லப்பட்டார். இச்சம்பவம், அடுத்தடுத்து யாழ்ப்பாண மாவட்டத்தில் வரவிருக்கும் பேரழிவிற்குக் கட்டியம் கூறுவதாக அமைந்திருந்தது. தனது சொந்தக் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் முதன்மை வேட்பாளாரக இருந்த தியாகராஜா சுட்டுக் கொல்லப்பட்டதை முப்படைத் தளபதியாக இருந்த ஜெயவர்தன தனக்கு நேரடியாக விடுக்கப்பட்ட ஒரு

பலமான சவாலாகக் கண்ணுற்றார். *"தனக்குக் கிடைத்த அரசியல் ஆணையை வைத்து ஒரு பெண்ணை ஆணாக மாற்றுவதைத் தவிர வேறு எதனையும் தன்னால் செய்ய முடியும்"* என மந்திர உச்சாடனம் செய்து வந்த ஜனாதிபதி ஜெயவர்தன, தனக்கிருக்கும் அதிகாரத்தைப் பாவித்து தனக்குக் கீழ்ப்படியாத தமிழர்களுக்கு ஒரு கடுமையான பாடத்தைக் கற்பிக்க தீர்மானித்ததாகத் தெரிகிறது.

அரச படையினர் யாழ்ப்பாணத்தில் யுத்தத்திற்கு தயாராவது போல் தயாராகிக் கொண்டிருந்தனர். படைகளின் சேனாதிபதியான ஜனாதிபதியின் உத்தரவின் பேரில், முப்படைத் தலைவர்கள் ஜீப் வண்டிகள் மற்றும் டிரக்குகளில் படையினரை நிரப்பி ஏற்றியதோடு, அவை ஆயுதம் தாங்கிய படையினரோடு யாழ்ப்பாண மாவட்டத்தின் வீதிகளில் சுற்றித் திரிந்தன. இதற்கும் மேலாக, மே மாத இறுதியில், 'தேர்தல் பாதுகாப்பை உறுதிப்படுத்த' என்ற போர்வையின் கீழ் 500 பேர் கொண்ட ஒரு விசேட பொலிஸ் படையும் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டது. இந்த பொலிஸ் படையில் இருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் பொலிஸ் இடைக்கால சேவையின் ஊடாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஐ.தே.கட்சியின் ஆதர்வாளர்களே. அவர்களை தங்க வைப்பதற்காக யாழ்ப்பாணத்தில் உள்ள அரச கல்லூரிகளை தற்காலிக பொலிஸ் முகாம்களாக அவர்கள் மாற்றியிருந்தனர்.

இத்தகையதோர் அமைதியின்மையான சூழலின் பின்னணியில் வடக்கிலும், தெற்கிலும் ஒரு நியாயமான தேர்தல் நடத்தப்படுமா என்ற சந்தேகங்கள் எழுந்தன. இதற்கெதிரான முதல் குரலும் யாழ்ப்பாணத்தில் இருந்துதான் எழுந்தது. அங்கு இருந்த அரசாங்க அதிகாரிகள் தேர்தலை ஒத்திவைக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தினர். *"யாழ்ப்பாண மாவட்டத்தில் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலை நடத்துவதில் ஒரு அமைதியின்மையுடனான நிச்சயமற்ற சூழல் காணப்படுகிறது, எனவே, தேர்தலை ஒத்திவையுங்கள்"* என்று அவர்கள் கோரினார்கள். ஆனால் ஜனாதிபதி ஜெயவர்தனவோ அல்லது ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களோ யாழ்ப்பாணத்தில் உள்ள அரசாங்க உயர் அதிகாரிகளின் வேண்டுகோளுக்கு செவிசாய்க்கத் தயாராக இருக்கவில்லை. *"நாங்கள் எப்படியும் தேர்தலை வைப்போம். நீங்கள் எப்படியாவது தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும்"* என்று ஐ.தே.க அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் இருந்த அரசாங்க அதிகாரிகளுக்கு கட்டளையிட்டது. அதேவேளை அத்தேர்தலை நடத்தி முடிப்பதற்காக தனது இரு மருமகன்கள் உட்பட அதிகாரம் மிக்க அமைச்சர்கள் மற்றும் பாதுகாப்புப் படைத் தலைவர்கள் அடங்கிய குழுவொன்றையும் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைத்தார்.

# 04

## யாழ்ப்பாணம் வந்த காமினி, ரணில், சிறில், பெஸ்டஸ் ...!

**சிறீ லங்கா சு.க. கம்பஹா பாரளுமன்ற உறுப்பினர் திரு எஸ்.டி. பண்டாரநாயக்க:**

***கௌரவ சபாநாயகர் அவர்களே, நேற்று எனக்கு யாழ்ப்பாணம் செல்லும் வாய்ப்பு கிடைத்தது. கட்சித் தலைவர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் பணிப்புரைக்கு அமைய என்னால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அங்கு நான் யாழ்ப்பாண நாக விகாரையின் விகாராதிபதி, யாழ். ஆயர் மற்றும் பொதுமக்கள் பலரைச் சந்தித்தேன். மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல் நடைபெற்ற போது அரசாங்க அமைச்சர்களான சிறில் மத்தியூ, காமினி திசாநாயக்க, பெஸ்டஸ் பெரேரா மற்றும் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் யாழ்ப்பாணத்தில் இருந்ததாக மதத் தலைவர்களும், மக்களும் தெரிவித்தனர். இந்த அமைச்சர்கள் தேர்தலுக்காக பயிற்சி பெற்ற நூற்று ஐம்பது அதிகாரிகளை யாழ்ப்பாண மாவட்டத்தை விட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டுள்ளதாக அறிய முடிந்தது.***

*[1981 ஜூன் 10 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு கூடிய பாராளுமன்றத்தின் ஹன்சாட் அறிக்கை]*

1977 ஆம் ஆண்டுத் தேர்தலில், வாக்காளர்களால் ஐ.தே.க.வுக்கு வழங்கப்பட்ட வரம்பற்ற அதிகாரத்தின் காரணமாக, அதன் தலைவர்கள் நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் தலைமைத்துவத்துக்காகப் போட்டிப் போட்டுக் கொண்டு கனவு கண்டனர். இதன் காரணமாகவே அவர்கள் கட்சிக்குள் பல முகாம்களாகப் பிரிந்திருந்தனர். இதற்கு முன்னர் மேலே கூறப்பட்ட ஒவ்வொரு அமைச்சரினதும் 'அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான அரசியல் நிகழ்ச்சிக் களியாட்டங்கள்' அடுத்த தலைவர் தான் தான் என்ற பிம்பத்தைப் பெருப்பித்துக் காட்டும் விதமாக நாடு முழுவதும் பரவலாக நடத்தப்பட்டன. நாட்டின் தேசிய சொத்தின் பெரும்பகுதி இதற்காக செலவிடப்பட்டது.

கிராமப்புற மற்றும் புறநகர் பகுதிகளைச் சேர்ந்த ஏழைகளை இலக்காகக் கொண்ட இந்த 'அபிவிருத்தி அரசியல் களியாட்ட நிகழ்ச்சிகளை' நடத்துவதற்காக, பணம், பொருள் மற்றும் பதவி உயர்வுகள் போன்றவை மீது பேராசை கொண்ட அரச அதிகாரிகளும், அவர்களுடனான கும்பலும் அந்தந்த அமைச்சர்களின் கீழ் அணிசேரத் தொடங்கினர். இந்த 'களியாட்டக் கண்காட்சிகளில்' கட்டமைப்பு நிர்மாணம் மற்றும் பராமரிப்பு போன்றவற்றுக்கான ஒப்பந்தங்களைப் பெற்றுக் கொள்ளும் உள்ளூர் "முதலாளிமார்" வர்க்கத்தினரும் இந்த அமைச்சர்களைச் சுற்றி அணி திரண்டனர்.

இலன்கையின் பிரதமராகவும், உள்ளூராட்சி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சராகவும் இருந்த ரணசிங்க பிரேமதாசவே அப்போதைய ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக்



ஜனாதிபதி
ஜே.ஆர். ஜயவர்தன

மகாவலி
அபிவிருத்தி
அமைச்சர்
காமினி
திசாநாயக்க




இலஞர் விவகார
அமைச்சர் ரணில்
விக்கிரம்சிங்க



பெஸ்டஸ்
பெரேரா





சிறில்
மத்தியூ



காமினி ஜயவிக்ரம் பெரேரா



எஸ்.டி. பண்டாரனாயக்க



சிறிமா பண்டாரனாயக்க

ஜெயவர்தனவுக்குப் பிறகு கட்சியின் தலைவராகவும், நாட்டின் தலைவராகவும் வருவதற்காக அவர் காத்திருந்தார். பிரதமர் பிரேமதாச அரசியல் அனுபவம் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்தோர் வரிசையில் இரண்டாம் இடத்தில் இருந்தார். ஆனாலும், அவர் நாட்டின் பெரும்பான்மை உயர் சாதியான `கொவிகம` (வெள்ளாளர்) சாதியைச் சேர்ந்தவர் அல்ல என்ற காரணத்தினால் ஜனாதிபதித் தேர்தலில் அவரால் வெற்றி பெற முடியாது என்ற நம்பிக்கையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையைக் கைப்பற்ற மோப்பம் பிடித்தபடி மேலும் இரு முகாம்கள் கட்சிக்குள் இருந்தன. அவற்றில் ஒரு முகாமின் தலைவராக காணி, காணி அபிவிருத்தி மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சராக இருந்த காமினி திசாநாயக்க செயற்பட்டார். மேல்நாட்டு வெள்ளாளச் சாதியைச் சேர்ந்த காமினி திசாநாயக்க, நாட்டின் பலம் வாய்ந்த அமைச்சராக இருந்து வந்ததுடன், ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் உத்தியோகபூர்வ வாரிசாகவும் காணப்பட்டார்.



காமினி திசாநாயக்க- பிரேமதாசா- ஜே.ஆர்.ஜயவர்தன

இரண்டாவது முகாமின் தலைவரகாக துறைமுகங்கள், கப்பல் துறை அமைச்சரும், பாதுகாப்பு துணை அமைச்சருமான லலித் அத்துலத்முதலி இருந்தார். அவரும் நாட்டின் எதிர்கால தலைவராவதற்கான தனது "சாதி" தகைமையை முழுமையாக பூர்த்தி செய்திருந்தார். 'எதிரியின் எதிரி நண்பன்' என்ற அரசியல் சித்தாந்தத்தைப் பின்பற்றி, பிரேமதாச முகாமின் எதிரியான அமைச்சர் காமினியின் முகாமுடன் முரண்பாடான ஒருவித நட்பினை ஏற்படுத்திக் கொண்டார்.

அடுத்ததாக, ஐக்கிய தேசியக் கட்சியின் நான்காவது முகாமின் தலைவராக கல்வி, இளைஞர் விவகாரம் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க காணப்பட்டார். அமைச்சர் ரணில் அரசியலில் ஒரு ஆரம்ப நிலையினராக இருந்தாலும், அவர் ஜெயவர்தன-விஜேவர்தன குடும்பத்தின் எதிர்கால அரசியல் வாரிசு என்பதை வெளிப்படுத்தி வந்தார். 1977 ஆம் ஆண்டில், அவர் முதன் முறையாக பாராளுமன்றத்துள் பிரவேசித்திருந்தாலும் கூட, மூன்று சக்தி வாய்ந்த அமைச்சர் பதவிகளை வகித்து வந்தார்.

ரணில் விக்கிரமசிங்க போன்ற அரசியலில் ஆரம்ப நிலையில் இருந்த ஒருவருக்கு அவ்வளவு பலம் வாய்ந்த அமைச்சர் பதவிகள் கொடுக்கப்பட்டதற்கு அவர் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவின் மருமகனாகவும், அவரது ‘பரம்பரை’ அரசியலின் முடிக்குரிய இளவரசராகவும், அவரது தந்தை எஸ்மண்ட் விக்ரமசிங்க ஜனாதிபதியின் தலைமை ஆலோசகராகவும் இருந்து வந்ததே காரணமாகும். `ஜெயவர்தன-விஜேவர்தன-விக்கிரமசிங்க’ என்னும் ‘குடும்பப் பாரம்பரிய’ அரசியல் வாரிசு உருத்தை, வயது முதிர்ந்த ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவின் பின்னால் நேரடியாக

அமைச்சர் ரணில் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக அப்போது ஐக்கிய தேசியக் கட்சிக்குள் அடிப்படை ஏற்பாடுகள் ஏதும் இருக்கவில்லை.

என்வே, தனது குடும்பத்திற்கு வெளியே அதாவது, பிரேமதாசா அல்லது காமினி அல்லது லலித் போன்ற எவராவது ஒருவருக்கு தலைமைத்துவம் தற்காலிகமாக கைமாறினால் மட்டுமே அது பின்னர் ரணில் வசமாக வாய்ப்பிருந்தது. எனவே, ஐ.தே.க. என்னும் கட்சியின் எதிர்கால தலைமைத்துவத்தைக் கைப்பற்றுவதற்காக அமைச்சர் ரணில் ஒரு ஒடுக்கமான அரசியல் "குறுக்குப்" பாதையினூடாக கவனமாக முன்நகர வேண்டிய கட்டாயம் இருந்தது. இதற்கான வாய்ப்பைத் தான் தனது மருமகனான ரணிலுக்கு அமைச்சுப் பதவிகள் மூலம் ஜனாதிபதி ஜெயவர்தன அமைத்துக் கொடுத்திருந்தார்.

இந்தப் பின்னணியில் தான் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலை எந்த வழியிலாவது வெற்றிக் கொள்வதற்காக ஜனாதிபதி ஜெயவர்தனவினால் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்ட நான்கு அமைச்சர்களின் வன்முறை அரசியல் திட்டங்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் யாழ்ப்பாணத்தில் தேர்தலை வழிநடத்திய அரசாங்கத்தின் நான்கு பலம் வாய்ந்த அமைச்சர்களை நாம் மீண்டும் நினைவுக்குக் கொண்டு வருவோம்.

காணி, காணி அபிவிருத்தி மற்றும் மகாவலி அமைச்சர் காமினி திசாநாயக்க, கைத்தொழில் மற்றும் விஞ்ஞானத்துறை அமைச்சர் சிறில் மத்தியூ, கல்வி, இளைஞர் அலுவல்கள் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர் ரணில் விக்ரமசிங்க மற்றும்

கடற்றொழில் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா ஆகியோர் இந்தக் குழுவில் இருந்தனர். அமைச்சர் காமினி ஜனாதிபதி ஜெயவர்தனவின் விருப்பப்படி அவரது அரசியல் வாரிசாகக் கருதப்பட்டவர். அதேவேளை, அவரது பரம்பரை அரசியலின் வாரிசு அமைச்சர் ரணில். ஆனால், அமைச்சர் சிறில் மற்றும் அமைச்சர் பெஸ்டஸ் ஆகியோர் மேற்கூறிய அதிகாரப் போராட்டத்தின் ஒரு பகுதியாக இல்லாதிருப்பவர்கள். அப்படியானால், ஜனாதிபதி ஜெயவர்தன ஏன் அந்த இருவரையும் இந்த அணியில் சேர்த்தார்?

அமைச்சர் சிறில் ஐ.தே.க.வில் இருந்த சிங்கள மக்களை நோக்கி நேரடியாக அவர்களுக்கு ஆதரவாகப் பேசக் கூடிய ஒருவராக இருந்து வந்தார். அக்காலத்தில், 'சிங்களவர்களின் கண்களுக்குப் புலப்படா எதிரி' போன்ற நூல்களை எழுதி வெளியிட்டிருந்தார். ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருந்த 'தேவ வம்ச'த்தாரின் (வஹும்புர சாதி) தலைவராக அவர் இருந்து வந்ததுடன், தனது சாதியைச் சேர்ந்த ஒரு சாதிமான்கூட ஒரு காலமும் பௌத்தத்திலிருந்து வேறொரு மதத்திற்கு மாறவில்லை என்று பெருமெடுப்பில் பீற்றித் திரியும் சாதிய அரசியலின் தலைவராகவும் இருந்தார். இந்தப் பின்னணியில், யாழ்ப்பாணத் தேர்தலை `எப்படியாவது` வெல்வது என்ற நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சியினால் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படவிருந்த தலைவர்களின் பட்டியலில் அவர் முதலிடத்தில் இருந்தார்.

அமைச்சர் சிறில் மத்தியூவின் "சிங்களத் தன்மை" நாடு முழுவதிலும் பரந்து உள்ள பௌத்த மடாலயங்களோடு மட்டும் நின்று விடவில்லை. அது காவல்துறை மற்றும் முப்படையினரிடையேயும் பரவியிருந்தது. யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்தும் வன்முறை அரசியல் நடவடிக்கைகளில்

பொலிஸாரினதும், முப்படையினரதும் உதவியை பெருமளவில் பெற்றுக் கொள்வதற்கு மிகப் பொருத்தமானவராக அமைச்சர் சிறில் மத்தியூ இருப்பார் என்பதை ஜனாதிபதி ஜெயவர்தன நன்கு அறிந்து வைத்திருந்தார்.

அப்படியானால், ஐ.தே.க கட்சிக்குள் கத்தோலிக்க சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் தலைவரான அமைச்சர் பெஸ்டஸ் பெரேராவை ஏன் இந்தக் குழுவில் ஜனாதிபதி இணைத்தார்? வடக்கில், இந்துக்களுக்கு அடுத்தபடியாக மிகவும் சக்திவாய்ந்த மதக் குழுவினராக தமிழ் கத்தோலிக்கர்களே காணப்படுகின்றனர். அங்கு பெரும்பான்மையினராக இந்துக்கள் இருந்து வந்தாலும் கூட, கத்தோலிக்கர்களுக்கே கல்வி மற்றும் கலாசார பின்பலம் அதிகமாகக் காணப்பட்டது. கடந்த 200 ஆண்டுகளாக யாழ்ப்பாணத்தை ஆசியாவின் பலம் வாய்ந்த கல்வி மையமாக மாற்றியமைத்ததன் மூலமே இந்த சக்தி அவர்களுக்குக் கிடைத்தது. மறுபுறம், யாழ்ப்பாணத்தில் இருந்த கத்தோலிக்கர்களில் பெரும்பாலானோர் வெள்ளாளர்கள் அல்லர்.

அரசினால் ஆரம்பிக்கப்படவுள்ள வன்முறை அரசியல் திட்டத்தால் வியாபித்து எரியப் போகும் பெருநெருப்பில் தமிழ் கத்தோலிக்கர்களுக்கு ஏற்படப் போகும் பாதிப்புக்களுக்கு ஆறுதல் சொல்வதற்கு அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா இலகுவாகப் பயன்படக் கூடிய ஒரு அரசியல் கருவியாக இருப்பார். வடக்கில் உள்ள ஆயர்களிடம் மட்டுமல்லாமல், அங்குள்ள கத்தோலிக்க அறிஞர்களிடமும் பேசக்கூடிய சமய ரீதியான பின்புலம் அவருக்கு இருந்து வந்தது. இதன் காரணமாகவே அவர் அந்த அணியில் சேர்க்கப்பட்டார்.

அதே நாட்களில் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவினால் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்ட அவரது இராணுவத் தளபதிகளை இப்போது அடையாளம் காண்போம். அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக கர்னல் சி. ஏ. தர்மபால இருந்தார். அதன் மேலதிக செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிகல. அப்போதைய யாழ்ப்பாணத்தின் இராணுவக் கட்டளைத் தளபதியாக இருந்து வந்தவர் பிரிகேடியர் திஸ்ஸ வீரதுங்க. அவ்ரும் அமைச்சர்களுக்கு உதவுவதற்காக அங்கு அனுப்பப்பட்டார். இந்த இராணுவத் தளபதிகள் யார்? மாத்தறையில் உள்ள ஒரு வர்த்தக - அரசியல் குடும்பத்தைச் சேர்ந்த கேர்ணல் தர்மபால, ஜனாதிபதி ஜெயவர்தனவின் தூரத்து உறவினராவார். ஜெனரல் சேப்பால ஆட்டிகல, ஜெயவர்தன குடும்பத்தின் நெருங்கிய உறவினரும், நம்பிக்கைக்கு உரியவருமானவர். பிரிகேடியர் திஸ்ஸ வீரதுங்க ஜெயவர்தனவின் மருமகன் ஆவார். இதில், அவரது குடும்ப வட்டத்தைச் சேராத வெளி நபராகக் காணப்பட்டவர், வெளிநாட்டுச் சேவை ஓய்வுநிலை அதிகாரியும், யூ.என்.பி. விசுவாசியுமாக இருந்து வந்த அமைச்சரவை செயலாளரான ஜி.வி.பி. சமரசிங்க மட்டுமே.

அப்போதைய பொலிஸ் மா அதிபராக இருந்தவர் உருத்ரா ராஜசிங்கம். எமது விசாரணைகளின் போது எமக்குக் கிடைத்த தகவல்களின்படி, பொலிஸ் மா அதிபர் உருத்திரா `ராஜசிங்கம் ஜூன் 2 ஆம் திகதி யாழ்ப்பாணம் சென்றுள்ளார். ராஜசிங்கம் ஐ.தே.க அரசாங்கத்தின் ஆதரவாளராவார். ஆனாலும், ஜனாதிபதி ஜெயவர்தன உருத்திரா ராஜசிங்கத்தை முதலில் அனுப்பிய படைத் தளபதிகளுடன் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பாததிலிருந்து, தனது வன்முறை அரசியல் திட்டத்தை

அங்கு செயற்படுத்தும் ஆரம்பப் பணிக்கு பொலிஸ் மா அதிபர் பொருத்தமானவர் அல்ல என அவர் கருதியிருக்கக்கூடும் என்பது தெளிவாகின்றது அல்லவா?

ஐ.தே.க தலைவர், ஜூன் 4 அன்று யாழ்ப்பாணத்தில் வாக்குகளை கொள்ளையடிப்பதற்காக ஜூன் 3 அன்று ஒரு புகைவண்டி நிறைய கட்சி சார்ந்த காடையர் கும்பலின் உறுப்பினர்களை ஒன்று திரட்டுவதற்கு குறிப்பாக குருநாகல் மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்தது ஏன்? மாவட்ட அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா அந்தப் பணியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டது ஏன்? இந்த இரண்டு கேள்விகளுக்கும் பல பதில்கள் உள்ளன. அக்காலத்தில் குருநாகல் மாவட்டம் ஐ.தே.க.வின் பலமான கோட்டையாகக் கருதப்பட்டு வந்தது. அபிவிருத்தி என்ற பெயரில் யூ.என்.பி. அரசாங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பல்வேறு களியாட்டங்களில் பெரும்பாலானவை அந்தப் பகுதியிலேயே நடாத்தப்பட்டன. இந்த நிகழ்வுகளின் மூலம் பெரும் பணத்தைக் குவித்து வந்த கட்சி சார்பான வணிக வர்க்கத்தினரின் இருப்பிடமாகவும் அது இருந்து வந்தது. தங்கள் தலைவர்களால் கட்டளையிடப்படும் எந்தக் குற்றச் செயல்களில் பங்கேற்கவும் அவர்கள் அஞ்சவில்லை, வெட்கப்படவில்லை. அவர்களின் ஜனரஞ்சகமான மற்றும் துணிச்சலான தலைவராக அமைச்சர் ஜயவிக்ரம பெரேரா காணப்பட்டார்.

ஜயவிக்ரம பெரேரா அரசியல் எனும் ஏணியின் உச்சியை நோக்கி உயர்ந்து செல்லத் தவிப்பது இந்தத் தரப்பினருக்கு ஒரு இரகசியமான விடயமாக இருக்கவில்லை. ஆனால், இந்தக் கட்டுரை ஆய்வாளரைப் பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் சந்தித்த இந்தக் காடையர் கும்பலில் பங்கேற்றுச் சென்ற ஓய்வுநிலை நபர் ஒருவர், தான் செய்த குற்றங்களுக்கு வருத்தம்

தெரிவித்ததோடு, "யாழ்ப்பாணத்திற்கு ரயிலில் இலவசமாக பயணிக்க இருந்த ஆசையால்" தான் தானும் அந்தப் பயணத்தில் சேர்ந்ததாகக் கூறினார்.

அமைச்சர்களான காமினி, சிறில், ரணில், பெஸ்டஸ் ஆகியோர் மே மாதம் 30ஆம் திகதி விமானப்படைக்குச் சொந்தமான விமானமொன்றில் யாழ்ப்பாணம் வந்தடைந்தனர். அவர்கள் யாழ்ப்பாண நகரின் மையப்பகுதியில் அமைந்திருந்த அரசாங்க வாடி வீட்டில் தங்கினர். யாழ்ப்பாண பொலிஸ் நிலையமும், நூலகமும் அந்த இடத்திற்கு மிகவும் அண்மையிலேயே அமைந்திருந்தன. யாழ்ப்பாண மாவட்ட அமைச்சராகவிருந்த யூ.பி.விஜேகோன் ஏற்கனவே யாழ்ப்பாணம் வந்திருந்தார். எனினும், அன்றைய தினம் மாவட்ட அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா மற்றும் மாவத்தகம பாராளுமன்ற உறுப்பினர் எச்.ஜி.பிரேமச்சந்திர போன்றவர்கள் ஏற்கனவே யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த அமைச்சர்களுக்கு உதவ அங்கு செல்லவில்லை. அவர்கள் இருவரும் விரைவில் நடைமுறைப் படுத்தப்படவிருந்த ஒரு மிகப் பலமான திட்டத்தை அமுல்ப் படுத்துவதற்காக தமது சொந்த மாவட்டமான குருநாகலிலேயே தங்கியிருந்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்தும், பாராளுமன்ற ஹன்சாட் பதிவுகளிலி ருந்தும் எம்மால் பெறப்பட்ட தகவல்களை வைத்து ஆராய்ந்து பார்க்கும் பொழுது, அப்போதைய கிராமிய அபிவிருத்தி அமைச்சராக இருந்த விமலா கன்னங்கரவும் மே 31க்கு முன்னரே யாழ்ப்பாணத்தில் இருந்திருக்கிறார் என்பது உறுதிப்படுத்தப் படுகிறது. அரசாங்கம் இந்த அமைச்சரை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பியதற்கான காரணம், அங்கு அவர் வாக்குக் கொள்ளையில் ஈடுபடாவிட்டாலும் கூட, `எப்படியாவது’

தேர்தலை வெல்வது என்கின்ற திட்டத்தை நடைமுறைப்ப டுத்தும்போது வேறுவகையான இலாபங்களை தமதாக்கிக் கொள்வதற்காக இருக்கலாம்.

ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன தனது உத்தரவை அமுல்படுத்து வதற்காக மே மாதத்தில், யாழ்ப்பாணத்தில் தேர்தல் பிரசாரக் கூட்டங்களின் "பாதுகாப்பிற்கு" என்ற பெயரில் சீருடை மற்றும் சிவில் உடையில் ஆயுதமேந்திய பொலிஸ் பிரிவொன்றை நிறுத்தியிருந்தார். ஆனால், அந்த நேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரக் கூட்டங்களை மட்டுமல்ல, அக்கட்சி சார்பாக யாழ்ப்பாணத்தில் போட்டியிடும் வேட்பாளர்களில் ஒருவரையுமகூட அங்கு காணமுடியாமல் இருந்ததே உண்மை.

அதேவேளை, இந்த விசித்திரமான பொலிஸ் படையானது தமிழர் விடுதலைக் கூட்டணியின் கூட்டங்களில் சுதந்திரமாக வலம் வந்தது. எனினும், சீருடை அணியாமலும் அதேவேளையில், தமது உத்தியோகபூர்வ ஆயுதங்களை ஏந்தியபடியும் அங்கு திரிந்ததமையானது ஒரு மோசமான ஆபத்தாகக் காணப்பட்டது. பொலிஸார் எந்த ஒரு அநியாயத்தையும், குற்றச் செயலையும் செய்துவிட்டு தமது கைகளை கழுவிக் கொள்ள வசதியாக இருக்கிறார்கள் என்பதனை இந்நிலைமை உணர்த்தியது. உண்மையில் பொலிஸாரின் இந்த நடத்தையானது, மிகப் பெரிய குற்றச் செயல்களின் தயாரிப்புக்காக ஆயத்தமாதல் அல்லது ஒருவிதமான ஆயத்தப்படுத்தலாகவே தெரிந்தது. ஆனாலும், இன்னும் 24 மணி நேரத்திற்கு மட்டுமே பொலிஸாரால் இவ்வாறு செயல்பட முடியுமாக இருந்தது. அதாவது, மே 31 மாலை வரை மட்டுமே.


# 05

## பொதுக்கூட்டத்தில் பொலிஸார் மீது துப்பாக்கிச் சூடு

*“மாவட்ட அபிவிருத்தி சபைகளை அங்கீகரிப்பதில் நாங்கள் உறுதியாக இருந்தோம். எமது பிரதேசங்களில் ஜனநாயக முறைப்படி மாவட்ட அபிவிருத்தி சபைகளை உருவாக்க நாம் ஆர்வமாக இருந்தோம், அதற்காக நாம் வேட்பாளர்களை நிறுத்தி பிரசாரம் செய்தும் வந்தோம். ஆனால், அந்தச் சம்பவத்துக்குப் பிறகு நடந்தது இதுதான். சிலர் அந்த பொலிஸ் அதிகாரிகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். சூடுபட்ட நபர்களில் ஒருவர் துப்பாக்கியுடன் மேடையில் ஏறி வானத்தை நோக்கி பல முறை சுட்டார். மேடையில் தலைமை வகித்த மாநகர முதல்வர் விஸ்வநாதன் அவரிடம், 'கனகசுந்தரம் ஐயா, என்ன செய்ய முயற்சிக்கிறீர்கள்?' என்று கேட்டார். அதற்கு அவர்: 'நான் சுடப்பட்டுள்ளேன். இவர்களைப் போகச் சொல்லுங்கள். கூட்டத்தை முடித்து விட்டு என்னை உடனடியாக ஆஸ்பத்திரிக்கு அனுப்புங்கள்’ என்று கூறினார். உடனே மாநகர முதல்வர் கூட்டத்தை முடித்துக் கொண்டார். மக்கள் கலைந்து சென்றனர். பின்னர் நான் காரில் இருந்து இறங்கி இந்த அதிகாரியை மருத்துவமனைக்கு அனுப்ப முயன்றேன்.*

***கூட்டம் கலைந்தபோது, மற்றொரு பொலிஸ் அதிகாரி உண்மையாகவே சுட்டுக் கொல்லப்பட்டிருந்தது தெரிய வந்தது. காயமடைந்த மேலும் இரண்டு பொலிஸ் அதிகாரிகள் அந்த இடத்தை விட்டுத் தனியாக வெளியேறினர். அவர்கள் அனைவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.***

*[அ. அமிர்தலிங்கம், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர். ஹன்சாட் பாராளுமன்ற அறிக்கைகள் 09 ஜூன் 1981]*



# Curfew in Sri Lanka

From Our Correspondent
Colombo, June 2

A state of emergency with a 5 pm to 5 am curfew was declared today in the Tamil-speaking Northern Province of Sri Lanka where police went on a rampage on Sunday assaulting residents, setting fire to buildings and looting after one policeman was killed and four were injured at an election rally near Jaffna.

The rally was held by the Tamil United Liberation Front in connexion with the Development Council elections due to be held on Thursday.

Last night the public library, which is one of the biggest buildings in Jaffna, the administrative capital of the province, was set on fire.



31-வது நாள் நினைவாஞ்சலி

கந்தையா கனகசுந்தரம்
(பொலிஸ் சார்ஜன்ட்)
தோற்றம்: 17-2-1932 மறைவு: 4-6-1981

ஆனால், 1994 செப்டெம்பரில், நாங்கள் யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டதை கண்ணால் கண்ட சாட்சிகளை சந்தித்து தகவல்களை சேகரித்தபோது, எமக்குக் கிடைத்த தகவல்கள் சற்று வேறுபட்டவையாக இருந்தன. 1981 மே 31ம் திகதி தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரிக்கும் வகையில், யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியில் உள்ள புகழ்பெற்ற இந்து வழிபாட்டுத் தலமான நாச்சிமார் கோவிலடியில் அன்று மாலை ஒரு மாபெரும் பிரசார கூட்டம் நடந்து கொண்டிருந்தது.

யாழ் மாநகர முதல்வர் விஸ்வநாதன் தலைமையில் அக்கூட்டம் நடைபெற்றது. பொலிஸ் சீருடையிலும், சிவில் உடையிலும் ஆயுதம் தாங்கிய ஒரு பிரிவினர் அக்கூட்டத்திற்கு "பாதுகாப்பு" வழங்கிக் கொண்டிருந்தனர். பொழுது மங்கிகொண்டிருந்த மாலை 6:00 மணியளவில், கூட்டம் நடந்து கொண்டிருந்த இடத்தில் இருந்து துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டது. சீருடையில் நின்ற பொலிஸ் சார்ஜன்ட் கனகசுந்தரம் திடீரென்று ஓடிச்சென்று கூட்ட மேடையில் ஏறினார். அவர் தனது துப்பாக்கியால் வானத்தை நோக்கிச் சுட்டார். பின்னர், தானும் சுடப்பட்டதாக கூறிய அவர், கூட்டத்தில் இருந்த மாநகர முதல்வர் விஸ்வநாதனிடம் உடனடியாக கூட்டத்தை முடிக்கும்படி கேட்டார். அப்போது, மேலும் இரண்டு பொலிஸ் அதிகாரிகள் ஏற்கனவே சுடப்பட்டிருந்தது தெரிய வந்தது. கூட்டம் கலைந்த பின்னர், சிவில் உடையில் இருந்த ஒருவரும் கூட்ட மைதானத்தில் சுட்டுக் கொல்லப்பட்டிருந்ததைக் காண முடிந்தது. அவர் கொழும்பில் இருந்து அனுப்பப்பட்ட பொலிஸ் படைப் பிரிவின் சார்ஜன்ட் லொக்கு பண்டா என்பவராவார். சுடப்பட்ட நான்கு பொலிஸ் அதிகாரிகளும் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இதில் 3 பேர் உயிரிழந்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கம், சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் பொலிஸ் சார்ஜன்ட் கனகசுந்தரத்தின் குடும்ப உறுப்பினர்களிடமும், அதே போல் யாழ்ப்பாண பொது வைத்தியசாலையின் வதிவிட வைத்தியரிடமும் இந்த சம்பவம் குறித்து தான் தகவல் கேட்டதாக ஜூன் 9 அன்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். கொழும்பில் இருந்து அனுப்பப்பட்ட அதே பொலிஸ் படையைச் சேர்ந்த ஒருவராலேயே சார்ஜன்ட் கனகசுந்தரம் சுடப்பட்டதாக வைத்தியரும், குடும்பத்தினரும் எதிர்க்கட்சித் தலைவரிடம் தெரிவித்தனர்.

இது பற்றி பொலிஸ் மா அதிபர் உருத்ரா ராஜசிங்கத்திடம் தான் வினவிய பொழுது "சார்ஜன்ட் கனகசுந்தரம் ஆயுதமேந்திய தமிழ் இளைஞர் ஒருவரால் சுடப்பட்டார்" என்று அவர் தன்னிடம் கூறியதாக எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம், பாராளுமன்றத்தில் இச்சம்பவம் குறித்து மேலும் விவரிக்கையில் தெரிவித்தார். முதலில் சுடப்பட்ட இருவரும் கொழும்பில் இருந்து அனுப்பப்பட்ட பொலிஸ் படையைச் சேர்ந்தவர்களாவர். அந்த ஊர் பற்றி அறியாத, வெளியிலிருந்து கொண்டுவரப்பட்ட இந்த இரண்டு பொலிஸாருடனும் கூட்டம் நடந்த இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டவர் தான் அதே பிரதேசத்தைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜன்ட் கனகசுந்தரம். சார்ஜன்ட் கனகசுந்தரம் மேடையில் ஏறி கூட்டத்தை நிறுத்தும்படி வானத்தை நோக்கிச் சுட்டு கட்டளையிடும்போது, அவர் தான் கடைசியாக சுடப்பட்டவர் என்பது போல் காணப்பட்டார். அப்படியானால், சார்ஜன்ட் கனகசுந்தரம் இறப்பதற்கு முன்னர் வைத்தியசாலையில் வைத்து வதிவிட

வைத்தியரிடமும், உறவினர்களிடமும் அவர் கூறியது பொய்யாக இருக்க முடியுமா?

சார்ஜன்ட் கனகசுந்தரத்தின் உறவினர்களும், வைத்தியசாலை வதிவிட வைத்தியரும் கூறியதை நாம் ஒரு கணம் நம்புவோம். அப்படியானால், கொழும்பில் இருந்து வந்த 'அரசியல் பொலிஸ்', உத்தியோகபூர்வ பொலிஸ் படையைச் சேர்ந்த ஒரு தமிழ் உறுப்பினரைச் சுட்டுக் கொல்கிறது. கொழும்பிலிருந்து வந்த பொலிஸ் படையின் இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட பின்னரே இவ்வாறு நடக்கிறது. இங்கு இருவர் என நாம் குறிப்பிடுவது, கூட்டத்தின் முடிவில் சார்ஜன்ட் லொக்கு பண்டாவின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டு, அடையாளம் காணப்பட்டு, அவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பதை உறுதி செய்த பின்னராகும்.

இங்கு நினைவில் கொள்ள வேண்டிய ஒரு முக்கியமான விடயம் என்னவென்றால், கொழும்பிலிருந்து அனுப்பப்பட்ட தேர்ந்து எடுக்கப்பட்ட சிங்கள பொலிஸ் படையினர், ஜெயவர்தன அரசாங்கத்தின் அரசியல் நலன்களைப் பூர்த்தி செய்வதற்காக, தேர்தல் "பாதுகாப்பு" என்ற பெயரில் தேர்தல் தினத்துக்காகவே அங்கு அனுப்பப்பட்டவர்கள். அப்படியாயின், சீருடை அணிந்தும், சிவில் உடையிலும் துப்பாக்கி ஏந்திய அத்தனை பொலிஸார், ஏன் 'நாச்சிமார் கோவிலடி' என்னும் அந்த கூட்டம் நடக்கும் இடத்திற்கு அனுப்பப்பட்டனர் என்பது பற்றி எங்களுக்கு எந்தத் தகவலுமில்லை. ஆனால், கொழும்பிலிருந்து வந்த இரண்டு சிங்கள பொலிஸ் உத்தியோகத்தர்கள் அங்கு சுட்டுக் கொல்லப்பட்டதன் பின்னர் சந்தேகமும், ஆத்திரமும் கொண்ட ஏனைய சிங்கள பொலிஸ் உத்தியோகத்தர்கள் தமிழ் பொலிஸ் சார்ஜன்ட் கனகசுந்தரத்தை சுட்டுக் கொன்றனர் என்பதே இங்கு எமது அவதானிப்பாகும். கொழும்பிலிருந்து அனுப்பப்பட்ட இந்த

சிங்கள பொலிஸ் படையின் இச்சம்பவத்திற்குப் பின்னரான நடத்தை இதற்கு ஒரு முக்கிய சான்றாக அமைகிறது.

மறுபுறம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் இளம் ஆதரவாளர்கள் நாச்சிமார் கோவிலடிக் கூட்டத்தைக் குழப்புவதற்காக அதன் "பாதுகாப்புக்கு" சென்ற பொலிஸார் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியிருக்கலாம் என்ற சந்தேகத்துக்குள் நாம் ஒரு கணம் நுழைவோம். அப்போது ஜே.வி.பி. தவிர்ந்த நாட்டின் ஏனைய பிரதான அரசியல் கட்சிகள் அனைத்தும் தேர்தலை பகிஷ்கரித்திருந்த நிலையில், தமிழர் விடுதலைக் கூட்டணி அத்தேர்தலில் போட்டியிட முடிவு செய்திருந்ததால், அக்கட்சி மாவட்ட அபிவிருத்தி சபை முறைமையில் பலமான நம்பிக்கையை வைத்திருந்தது என்பதை நாம் உறுதியாக நம்புகிறோம்.

ஏனைய கட்சிகள் புறக்கணித்த ஒரு தேர்தலில் குறிப்பிட்ட ஒரு கட்சி போட்டியிடுகிறது என்பதில் இருந்தே அவர்கள் தேர்தலை ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்பதைக் புரிந்து கொள்ளலாம் அல்லவா? அப்படியானால், தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவாளர்கள் எவரேனும் தமது கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களுக்கு இடையூறு விளைவிக்க முன்வந்திருக்கலாம் என நம்புவது கடினமான விடயமாகும். அந்த வகையில், இந்தச் சம்பவத்தின் பின்னர் அந்தக் கட்சியின் சொத்துக்கள், அதன் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் சொத்துக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதங்களைப் பார்க்கும் போது இது மேலும் உறுதிப்படுத்தப்படுகிறது.

சுடப்பட்ட அனைத்து பொலிஸ் அதிகாரிகளும் அன்று மாலையே வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்றனர். அவர்களை

வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றது பொலிசார் அல்ல, கூட்ட ஏற்பாட்டாளர்களே. அவர்கள் காயமடைந்தவர்களை தமது சொந்த வாகனங்களில் வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர். தேர்தலுக்கு இன்னும் 4 நாட்களே உள்ள நிலையில் அவர்கள் தாமாகவே முன்வந்து அந்தப் பொறுப்பை நிறைவேற்றுகிறார்கள்.

தாங்கள் எளிதாக வெற்றி கொள்ளக் கூடிய ஒரு தேர்தலை வன்முறை காரணமாக இழக்க வேண்டி ஏற்படுமோ என்ற அச்சம் அக்கட்சியின் தலைவர்களுக்கு ஏற்பட்டிருக்கக் கூடும். ஆனால், கொழும்பில் இருந்து அனுப்பப்பட்ட அரசியல் பொலிஸ் படைக்கு அது குறித்த எந்தவிதமான புரிந்துணர்வோ அல்லது பொறுப்புக்கூறலோ இருக்கவில்லை. தங்கள் பொலிஸ் படையைச் சேர்ந்த மூன்று பேர் (சார்ஜென்ட் கனகசுந்தரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இறந்தார், அவர் அந்த படையைச் சேர்ந்தவர் அல்ல) துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் கொல்லப்பட்ட செய்தி கிடைத்தவுடன், அவர்கள் சட்டத்தைக் காக்கும் ஒரு பொலிஸ் படையினரைப் போலல்லாது, ஒரு வன்முறைக் கும்பல் பாணியிலேயே நாச்சிமார் கோவிலுக்கு அருகில் உள்ள அப்பகுதியை நோக்கி வந்தனர்.

பொலிஸ் சார்ஜன்ட் கனகசுந்தரம் மேடையில் ஏறி தனது உத்தியோகபூர்வ துப்பாக்கியால் வானத்தை நோக்கிச் சுட்டு பிரச்சாரக் கூட்டத்தை நிறுத்துமாறு கட்டளையிட்டதை அடுத்து, கூட்டத்துக்கு தலைமை தாங்கிய யாழ்ப்பாண மாநகர முதல்வர் விஸ்வநாதன், கூட்டத்தை இடையில் நிறுத்தி மக்களை வீடுகளுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தினார். சம்பவம் நடந்த அரை மணி நேரத்தின் பின்னர், கொழும்பில் இருந்து அனுப்பப்பட்ட பொலிஸ் படை உறுப்பினர்கள் ஜீப் மற்றும் ட்ரக்

வண்டிகளில் கூட்டம் நடந்த மைதானத்திற்கு வந்தனர். நேரில் கண்ட சாட்சிகளின்படி, அந்தக் கும்பல் உத்தியோகபூர்வ துப்பாக்கிகளை வைத்திருந்தது. ஆனால், அவர்களில் பெரும்பாலானவர்கள் சீருடையில் இருக்கவில்லை. மாறாக, சிவில் உடையில் இருந்தனர்.

1980 களின் ஆரம்பத்தில் இருந்தே, முப்படைகளின் தளபதியான ஜனாதிபதி ஜெயவர்தன வடக்கிற்கு மட்டுமன்றி தெற்கிலும் தனது கட்டளைப்படி செயற்படுகின்ற பொலிஸாரை அனுப்புவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தார். அதிகாரபூர்வ பொலிஸ் படையின் உதவியுடன் தனது அரசியல் எதிரிகளை ஒடுக்கும் சந்தர்ப்பங்களில், அதற்கான பொறுப்புக் கூறலிலிருந்தும், அது தொடர்பான குற்றச்சாட்டிலிருந்தும் பொலிஸாரைக் காப்பாற்றுவதே இதன் நோக்கமேயன்றி வேறொன்றுமில்லை.


ஜனாதிபதி ஜெயவர்தனவின் இந்தக் கொள்கை எந்த அளவுக்கு அழிவுகரமானது என்றால், அவரது உத்தரவுகள் மற்றும் அறிவுறுத்தல்களின் கீழ் மனித உரிமை மீறல்களை மேற்கொண்ட பொலிஸ் அதிகாரிகள் மீது வழக்குத் தொடரப்பட்டு, அவர்கள் தண்டிக்கப்படும் சந்தர்ப்பங்களில், நீதிமன்றத்தால் உத்தரவிடப்படும் பாதிக்கப்பட்டவருக்கான இழப்பீடுகள் அரச திறைசேரியாலேயே செலுத்தப்பட்டன. அது மட்டுமன்றி, இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு தாமதமின்றி பதவி உயர்வுகளை வழங்குவதையும் ஜனாதிபதி ஜெயவர்தன தனது வழக்கமாகக் கொண்டிருந்தார்.



கர்னல் சி. ஏ. தர்மபால



ஜெனரல் சேபால ஆடிகல



பிரிகேடியர் சிரில் ரணதுங்க



பிரிகேடியர் திஸ்ஸ வீரதுங்க

# 06

## வன்முறைக் கும்பலாக மாறிய பொலிஸ்

**மே 31 ஆம் நாள் இரவு**

**"பிரதி சபாநாயகர் அவர்களே, 1977 முதல், நான் இந்த சபையில் பல விவாதங்களில் பங்கேற்றுள்ளேன். இன்று, என் குரல் மட்டுமே எனக்குச் சொந்தமானது. என் உடைகள் அனைத்தையும் இரவல் வாங்கியே நான் அணிந்து வந்திருக்கிறேன். நான் அணிந்துள்ள வேஷ்டி திருகோண மலை பாராளுமன்ற உறுப்பினருடையது. தேசிய மேலங்கி இரவல் வாங்கப்பட்டது. இதற்கு உள்ளே அணிந்திருக்கும் பனியன் என் அப்பாவினுடையது. அதனால்தான், நான் முதலில் சொன்னது போல என் குரல் மட்டுமே என்னுடையது.**

**"பிரதி சபாநாயகர் அவர்களே; கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இடம்பெற்ற சம்பவங்களை ஒரு படக் காட்சிபோல் எடுத்துரைத்தார். என் வீட்டின் மீது நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதலை மட்டும் நான் சொல்கிறேன். ஒரு நாடாளுமன்ற பிரதிநிதி தனது தொகுதியில் தனது மக்களுடன் வாழ்ந்த, தான் நேசித்த மக்களுடன் வாழ்ந்த ஒரு நபர், இன்று வீடு வீடாக ஒளிந்து வாழுகின்ற ஒரு விசித்திரமான சந்தர்ப்பமாக இது இருக்க வேண்டும். யாரிடமிருந்து? சட்டம் ஒழுங்கிற்கான காவலர்களிடம் இருந்து...!"**

[யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் வி. யோகேஸ்வரன், 1981 ஜூன் 9 ஹன்சாட் அறிக்கை]

சில குற்றவாளிகள், மூன்று பொலிஸ் அதிகாரிகளை சுட்டுக் கொன்ற போது பொலிஸார் சட்டத்தையும், நீதிமன்றத்தையும் எப்படி மறந்தார்கள்? அவர்கள் குற்றவாளிகளைத் தேடுவதை எப்படி மறந்தார்கள்? அதேசமயம், அந்த நேரத்தில் யாழ்ப்பாணத்தில் ஒரு சிறிய கிரிமினல் குழு துப்பாக்கிச் சூடு நடத்தியதைத் தொடர்ந்து பொலிஸார் சட்டத்தை தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டனர். அதைத்தான் அந்த கிரிமினல் குழுவும் விரும்பியது. கொழும்பிலிருந்து சென்றிருந்த நான்கு அமைச்சர்களுக்கு தேவைப்பட்டதும், ஏதாவதொரு அழிவை ஏற்படுத்தி, எப்படியாவது தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதே. பொலிஸார் இந்த இரு தரப்பினருக்கும் ஆதரவளித்து செயல்பட்டனர். மறுபுறம், இங்கு காணப்படுவது ஒரு `அரசியல் பொலிஸ்` படையாகும். மாவட்டம் முழுவதும் அமைதியாக வாழ்ந்த மக்களை அந்த பொலிஸ் படை தண்டிக்கத் தொடங்கியது. அது எவ்வாறு நடந்தது என்பதை நாங்கள் பார்க்கலாம்.

நாம் மீண்டும் கூட்டம் நடைபெற்ற நாச்சிமார் கோவிலடிக்குப் போவோம். இந்தப் பொலிஸ் படையானது, ஒரு பெரிய வன்முறைக் கும்பலாக கூட்டம் நடந்த அந்த மைதானத்திற்கு வந்தபோது, அவர்களால் பழிவாங்கப்படுவதற்கு அங்கு எதிரிகள் யாரும் இருக்கவில்லை. வெறிச்சோடிப் போயிருந்த ஒரு மைதானத்தைத் தண்டிக்க வகையற்றிருந்த அந்த வன்முறைக் கும்பல், அடுத்தபடியாக அருகிலிருந்த அம்மன் இந்து கோவிலுக்குள் புகுந்தது. முதலில் கோவிலின் கேற்றை உடைத்து அவர்கள் உள்ளே புகுந்தனர்.

அவர்களின் இரண்டாவது இலக்காக அமைந்தது, கோவிலின் மிகப் பெரிய கோபுரத்தின் கீழ் நிறுத்தப்பட்டிருந்த தேர் எனப்படும் தெய்வீக வாகனமாகும். இந்துக்கள் தமது மத சடங்குகளின் போது, இந்தத் தேர் எனப்படும் புனித வாகனத்தில் தமது கடவுளரை ஏற்றி வீதி வலம் வருவது வழக்கம். அந்த அதிகாரபூர்வ வன்முறைக் கும்பல் அந்த தெய்வீக வாகனத்தைத் தாக்கி உடைத்து சின்னாபின்னமாக்கி அதற்குத் தீ வைத்தது. பின்னர் அந்த வன்முறைக் கும்பல் அந்த தேர் நிறுத்தப்பட்டிருந்த 'கோபுரத்திற்கும்' தீ வைத்தது. அதன் பின்னர் கோவிலுக்குள் புகுந்து அங்கிருந்த சுவாமி சிலைகளை உடைத்து அழித்தது. இந்தப் பழிவாங்கும் தாக்குதலை முடித்த பின்பும், அவர்கள் அடையாளம் தெரியாத எதிரியைத் தேடி கோயிலைச் சுற்றிச் சுற்றி வந்தனர்.

கோவிலுக்கு அருகில் உள்ள வீடுகளுக்குள் புகுந்து எதிரிகளைத் தேடி அங்குள்ள பொருட்களை சேதப்படுத்தினர். இந்த பொலிஸ் படை கோவிலுக்குத் தீ வைத்த சந்தரப்பத்திலேயே அருகில் உள்ள வீடுகளில் வசித்து வந்த அந்தக் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் மற்றும் வயது முதிர்ந்த ஆண்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வீடுகளை விட்டு வெளியேறி விட்டனர். அந்தக் கும்பல் தாக்கிய வீடுகளில் பெண்களும் குழந்தைகளும் மட்டுமே இருந்தனர். வெறி பிடித்தது போல் நின்ற அந்த பொலிஸ் குண்டர் படை மற்றொரு பழிவாங்கும் தாக்குதல் இலக்கைத் தேடி பிரதான சாலை வழியாக அணிவகுத்துச் சென்றது.

இந்த அழிவுகள் நடந்துகொண்டிருந்த பொழுது, காயமடைந்த நான்கு பொலிஸாரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற இரண்டு கார்கள் கோயிலை அண்டிய ஊரை நோக்கித் திரும்பி வந்தன. காயப்பட்ட தமது சக பொலிஸாரை மருத்துவமனைக்கு


"சார்ஜன்ட் கனகசுந்தரத்தை ஏற்றிச்சென்ற
எனது காரை இடை வழியில்
தீயிட்டு எரித்துவிட்டனர்"
கார் உரிமையாளர் சாட்சியம்

எடுத்துச் சென்ற அந்த இரு வாகனங்களையும் தடுத்து நிறுத்திய அந்தக் கும்பல் அவற்றுக்கும் தீ வைத்தது. இந்தச் சம்பவங்கள் எதனையும் அறியாமல், அவர்களின் பின்னால் வந்த இன்னொரு வாகனத் தையும் நிறுத்தி அவர்கள் தீ வைத்தனர். இதில் திருப்தியடையாத அவர்கள் அங்கு வீதியோரமாக இருந்த நான்கு வீடுகளுக்கும் தீ வைத்தனர்.

பின்னர், அவர்கள் நாச்சிமார் கோயிலடியை அண்டியிருந்த கடைகளை நோக்கிச் சென்றனர். அங்கு நிறுத்தப்பட்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேரூந்தொன்று அதன் ஓட்டுநருடன் சேர்த்து அந்தக் கும்பலால் கடத்தப்பட்டது.

அதன் பின்னர் நாச்சிமார் கோவிலடிக்கு பதில் தாக்குதலுக்கென கொண்டு வந்த ஜீப் வண்டிகள் மற்றும் ட்ரக் வண்டிகளை அவர்கள் பயன்படுத்தவில்லை. இது எமக்கு பெருத்த சந்தேகத்தை ஏற்படுத்தும் ஒரு முக்கிய விடயமாக இருந்தது. இது, அப்போது யாழ்ப்பாண வாடிவீட்டில் தங்கியிருந்தபடி தேர்தலை வழிநடத்திய நான்கு ஐ.தே.க அமைச்சர்களின் அறிவுறுத்தலின் பேரில் நடாத்தப்பட்டதொன்றா? அல்லது அந்தப் பொலிஸ் படையை வழிநடத்திய பொலிஸின் உயரதிகாரிகளின் உத்தரவின் பேரில் செய்யப்பட்டதொன்றா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

இதிலிருந்து, அதாவது மே 31 முதல் ஜூன் 4 ம் திகதி வரை, யாழ்ப்பாணத்தில் ஐ.தே.கட்சியின் வன்முறைக் கும்பலால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் நாட்டின் உத்தியோகபூர்வ பொலிஸாரைக் கொண்டு நடத்தப்படு வதாகவே இருக்கும். ஆயினும், இது யாருமே பொறுப்பேற்காத ஒரு இனந்தெரியாத குழுவின் கைவேலை என்று உலகத்திற்குக் காட்டப்படவும் வேண்டும் என்னும் நோக்கமும் அதில் இருந்தது.

இந்தத் தொடர் குற்றங்களை உலகத்தின் கண்களில் இருந்து மறைக்கும் தொலைநோக்கு பார்வை இந்த பொலிஸ் படையின் மேலதிகாரிகளுக்கு இருந்திருக்கும் என்று நாம் நம்பவில்லை. யாழ்ப்பாண வாடிவீட்டில் தங்கியிருந்த நான்கு அமைச்சர்களின் முடிவாகத்தான் இது நடைபெற்றுள்ளது. இல்லையென்றால் அந்த சீருடை அணியாத, உத்தியோகபூர்வ ஆயுதங்களை ஏந்திய பொலிஸ் குண்டர்கள் பஸ்ஸைக் கடத்தி யாழ்ப்பாண நகருக்குச் செல்லும்போது சீருடையில் வந்த பொலிஸ் குண்டர்கள் ஜீப்புகளிலும், ட்ரக்குகளிலும் இந்துக் கல்லூரிக்குத் திரும்பிப் போயிருக்க மாட்டார்கள்.

வடக்கின் இதயமாகக் கருதப்படும் யாழ்ப்பாண நகருக்குள் நுழையும் பேரூந்து அந்த நகரத்தில் இருந்த மிகப்பெரிய வெளிநாட்டு மதுபான விற்பனைக் கடையான 'சுப்பையா அன்ட் சன்ஸ்' அருகாமையிலேயே முதலில் நிறுத்தப்பட்டது. அந்தக் கும்பல் அக்கடையின் கதவுகளை உடைத்து உள்ளே புகுந்தது. அதன் அலுமாரிகள் மதுபானங்கள் மற்றும் பிற வெளிநாட்டு குடிவகைகளால் நிரப்பப்பட்டிருந்தன. அவை அவர்களின் அடுத்தக் கட்டத் தாக்குதலுக்கு "ஊக்க சக்தியை" வழங்குபவையாக இருந்தன. இதற்குள் ஜீப் , மற்றும் ட்ரக்களில் திரும்பி வந்தவர்களும் சிவில் உடைக்கு மாறி கொள்ளை

சம்பவத்தில் கலந்து கொண்டனர். சுப்பையா மதுபானக் கடையின் உள்ளேயே ஒரு பகுதியினர் மதுபான போத்தல்களை உடைத்து மது அருந்தியபோது, மற்றொரு பகுதியினர் மது பாட்டில்களை சாக்குகளில் கட்டி எடுத்துக்கொண்டனர். அவற்றை அவர்கள் தாம் தங்கியிருந்த இந்துக் கல்லூரிக்கு எடுத்துச் சென்றனர். குடி போதை ஏறிய அந்தக் கும்பல் தனது அடுத்த தாக்குதலை தொடங்க ஒரு இடத்தைத் தேடியது.

யாழ்ப்பாண ஆஸ்பத்திரி வீதி மற்றும் பவர் ஹவுஸ் வீதியின் மத்தியில் வரிசையாக இருந்த செழிப்பான கடை வரிசைகளின் முன்னால் அரசாங்கத்தின் அமைச்சர்களாலும், பொலிஸ் உயரதிகாரிகளாலும் அவிழ்த்துவிடப்பட்ட அந்த வேட்டை நாய்கள் நின்றிருந்தன.

இதற்கிடையில், அந்தக் கொலைக்கார பொலிஸ் கும்பல் இலகுவாகத் தீ வைப்பதற்காக எரிபொருட்களைத் தேடத் தொடங்கியது. இதன் மூலம் அவர்கள் யாழ்ப்பாணம் முழுவதையும் தீக்கிரையாக்கத் தயாராகிக் கொண்டிருப்பதாகத் தோன்றியது. அவர்கள் ஒரு பெட்ரோல் ஷெட் அல்லது எண்ணெய் விற்பனை நிலையத்தைத் தேடினர். ஒரு குழுவினர் காங்கேசன்துறை வீதியில் நடந்து சென்று கொண்டிருந்தபோது, 'ஓபன் ஆட்டோஸ்' இன் எரிபொருள் நிலையத்தைக் கண்டுபிடித்தனர். அந்த நேரத்தில் அங்கிருந்த ஊழியர்கள், ஏற்கனவே குடிபோதையில் சிவில் உடையில் இருந்த பொலிஸாருக்குப் பயந்து ஒளிந்து கொண்டனர்.

ஒரு கும்பல் பெட்ரோல் பங்கை உடைத்தது. மற்றவர்கள் பெட்ரோல் நிரப்பப் பாத்திரங்களைத் தேடிக்கொண்டிருந்தனர். பின்னர் இரு குழுவினரும் சேர்ந்து தாங்கள் கண்டெடுத்த

பாத்திரங்களில் பெட்ரோலை நிரப்பிக் கொண்டு கடைகளை நோக்கிச் சென்றனர். அதன் பின் அவர்கள் மருத்துவமனை வீதியில் இருந்து பவர் ஹவுஸ் வீதி வரை யாழ். பேரூந்து நிலையத்தை ஒட்டி தொடராக இருந்த கடைகளின் மொத்த வரிசைக்கும் தீ வைத்தனர். எரியும் கடை வரிசைக்கு முன்னால் அவர்கள் `எரிபந்த நடனத்தை` *(எரிபந்தத்துடன் ஆடும் பந்தம் பாலிய-தெற்கின் ஒரு பாரம்பரிய நடனம்)* ஆடியும், பாடியும் தமது பழிவாங்கும் செயற்பாட்டின் இன்பத்தை அனுபவித்தனர்.

'தமிழர்களை' இழிவுபடுத்தும் வகையில் சிங்களப் பொலிஸாரின் அசிங்கமான தூஷண வார்த்தைகளையும் அவர்கள் அள்ளியெறிந்து அந்த நடன ஒலியுடன் சேர்த்தனர். இதற்கிடையில், இந்த "ஹீரோக்களுடன்" பொலிஸ் சீருடையுடன் ஆயுதமேந்திய பொலிஸ் அணியினரின் ஒரு குழுவும் இணைந்தது. அவர்கள் யாழ்ப்பாணத்தின் மத்தியில் உள்ள பொலிஸ் நிலையத்தில் பணியில் இருந்தவர்களாவர். அவர்களின் வருகையோடு இன்னும் உற்சாகமடைந்த கொழும்பில் இருந்து வந்த பொலிஸ் படையினர் பழைய சந்தையை நோக்கி அணிவகுத்துச் சென்றனர். அவர்கள் பழைய சந்தைப் பகுதியில் இருந்த கடைகளுக்கும் பெட்ரோல் ஊற்றித் தீ வைத்தனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் மேலதிகமாக அவர்களுடன் இணைந்து கொண்ட பின்னர், இந்த உத்தியோகபூர்வ காடையர்களுக்கு மேலும் புதிய தாக்குதல் இலக்குகள் கிடைத்தன. யாழ்ப்பாண நகரம் முழுவதும் மரண பீதியில் மூழ்கியிருந்த நிலையில், முப்படைத் தளபதி ஜெயவர்தனவின் இந்த வன்முறை படையினர் யாழ் நகரின் பவர் ஹவுஸ் வீதியால் ஆயுதங்களைத்

தாங்கியபடி ஊர்வலமாகவும், கூச்சலிட்டபடியும், வானத்தை நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்தியபடியும் அணிவகுத்துச் சென்றனர்.

அவர்கள் ராணி சினிமா அருகே சற்று நின்று, தாக்குதலுக்கான மற்றொரு இலக்கைக் கண்டுபிடித்தனர். அது ராணி சினிமா தியேட்டருக்கு முன்னால் அமைந்திருந்த யாழ்ப்பாணத்தின் புதிய சந்தைக் கட்டிடத் தொகுதியாகும். அத்தொகுதியில் மிகச் சிறப்பாகக் காட்சியளித்த சில கடைகளுக்கும் அவர்கள் தீ வைத்தனர். இந்த நேரத்தில், அவர்கள் கடத்திச் சென்ற பேரூந்து அந்த உத்தியோகபூர்வ குற்றவாளிகளுக்கு போக்குவரத்து மற்றும் பாதுகாப்பை வழங்கிய வண்ணம் அவர்களைப் பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்தது.

அவர்களில் ஒரு பகுதியினர் பேரூந்தில் ஏறி ஒரு புதிய இலக்கை நோக்கி நகர்வதாகத் தோன்றியது. அவர்களுக்கு யார் அறிவுறுத்தல்களை வழங்கிக் கொண்டிருந்தார்கள் என்பது தெளிவாகத் தெரியவில்லையாயினும், பேரூந்து நேராகச் சென்று அப்போது யாழ்ப்பாணத்தின் பாராளுமன்ற உறுப்பினராயிருந்த திரு. யோகேஸ்வரனின் விசாலமான வீட்டின் முன்னால் போய் நின்றது. அந்நேரம் வீட்டில் அவரும், அவரது மனைவியும் மட்டுமே இருந்தனர். தனது வீட்டிற்கு வெளியே முன்புறமாக நடக்கும் அல்லோலகல்லோலத்தை என்ன தான் நடக்கிறது என்று பார்க்க அவர்கள் முன் கதவைத் திறந்தனர். பொலிஸ் சீருடை மற்றும் சிவில் உடையில் ஆயுதங்களை ஏந்தியபடி குடிபோதையில் இருந்த ஒரு குழுவையே அவர்கள் அங்கு கண்டனர்.

அங்கு என்னதான் நடக்கப் போகிறதோ என்று யோசித்துக் கொண்டிருந்த பாராளுமன்ற உறுப்பினரிடம் அவரது மனைவி, தமது பாதுகாப்புக்காக பொலிஸாரை அழைக்க வேண்டும் என்று பரிந்துரைத்தார். அவர்கள் பாதுகாப்பு கோரும், அல்லது கேட்க விரும்பிய அதே பொலிஸார்தான் அப்போது அவரது வீட்டின் முன் வாசல் கேற்றில் பொருத்தப்பட்டிருந்த பூட்டை உடைக்கத் துப்பாக்கியால் சுட்டனர்.



யாழ். பா.உ. திரு.வீ.யோகேஸ்வரன்



திருமதி. சரோஜினி யோகேஸ்வரன்



தீயிட்டுக் கொழுத்தப்பட்ட எம்.பி.கேஸ்வரனின் வீடும் காரும்

யாழ்ப்பாண மக்களின் பிரதிநிதியாக இருந்த பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனை நாட்டின் சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டிய பொலிஸார் துரத்தினர் யோகேஸ்வரனை நாட்டின் சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டிய பொலிஸார் துரத்தினர்.

பாராளுமன்ற உறுப்பினர் வீட்டின் முன் கதவை அடித்துச் சாத்தினார். பின்னர், உயிர் தப்புவதற்கு வேறு வழியில்லாமல் அவரது மனைவியுடன் வீட்டின் பின்புறம் ஓடிச் சென்றார். அப்போது, ஜனாதிபதி ஜெயவர்தனவின் வன்முறைப் பொலிஸ் கும்பல் அவரது வீட்டின் முன்பக்க கதவை உடைத்துக் கொண்டிருந்தது. எம்.பி. யோகேஸ்வரன் மிகவும் சிரமப்பட்டு தனது மனைவியை பின்னால் உள்ள மதில் சுவருக்கு மேலால் பக்கத்து காணிக்குள் இறக்கிவிட்டு தானும் மதில் சுவர் ஏறிக் குதித்து அக்கம்பக்கத்தினரிடம் உயிருக்கு பாதுகாப்புத் தேடினார். அந்தக் கும்பல் செய்யும் குற்றச் செயல்களை தடுக்க அவர் முன்னால் வந்திருந்தால் அவரைக் கொலைச் செய்வதற்கும் அந்த பொலிஸார் தயாராக இருந்தனர்.

அந்தப் பொலிஸ் காடையர்கள் அவரது வீட்டு முற்றத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஜீப்பை வெளியே வீதியை நோக்கித் தள்ளிச் சென்று அதற்குத் தீ வைத்தனர். அங்கு போர்டிகோவில் நிறுத்தப்பட்டிருந்த எம்.பி.யின் நண்பர் ஒருவரின் கார் அவர்களால் தீ வைத்து எரிக்கப்பட்டது. அவரது வீட்டுத் தளபாடங்கள், உடைகள் மற்றும் புத்தகங்களும் தீயில் தூக்கிப் போடப்பட்டன. இலங்கைப் பொலிஸார் நல்ல குடிபோதையில் இருந்தாலும் கூட, யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் வீட்டில் இருந்த பெறுமதியான தங்க

ஆபரணங்கள் மற்றும் புராதன பொருட்களுக்கு என்ன நடந்தது என்ற எந்தவொரு தடயத்தையும் விட்டுச் செல்லாமல், முழு வீட்டையும் தீயிட்டு எரிப்பதை உறுதி செய்தனர்.

இந்த அழிவிலிருந்து தமது பகுதியின் பாராளுமன்ற உறுப்பினரின் வீட்டைக் காப்பாற்றுவதற்காக அவரது வீட்டில் மூட்டப்பட்ட தீயை அணைக்க வந்த பொதுமக்களை ஆயுதம் தாங்கிய அந்த பொலிஸார் விரட்டியடித்தனர். இது நடந்து ஒன்பது நாட்களுக்குப் பின்னர்தான், இந்தக் குற்றச் சம்பவத்தின் மிக அசிங்கமான காட்சி பாராளுமன்றத்தில் அரங்கேறியது. அந்த மக்கள் பிரதிநிதி ஜூன் 8 ஆம் திகதி மாலை பாராளுமன்றத்தில் தனது சகாக்களிடம் தனக்கு பொலிஸாரால் இழைக்கப்பட்ட குற்றத்தை விவரித்தபோது, குற்றத்திற்கு பொறுப்பான தலைவர்களான அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் மாவட்ட அமைச்சர்கள் பலர் அவர் பேசும்போது சிரித்தும், கேலியும் கிண்டலுமாக கூச்சலிட்டுக் கொண்டுமிருந்தனர்.

அதன் பிரதான தலைவர்களில் ஒருவர், இரத்தினபுரி பாராளுமன்ற உறுப்பினரும், பிராந்திய அபிவிருத்தி பிரதி அமைச்சருமான ஜி. எச். புஞ்சிநிலமே ஆவார். அவரது குற்றவியல் வரலாறு என்பது 1977 முதல் 1990 வரையிலான இரத்தினபுரி மாவட்டத்தின் அரசியல் வரலாற்றில் முழுமையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் வி.யோகேஸ்வரன் 1981 ஜூன் 9 அன்று பாராளுமன்றத்தில் அங்கு நடந்த அழிவுகளை இவ்வாறு விவரித்தார்.

**"நான் 31 ஆம் தேதி நடந்த சம்பவங்களைப் பற்றி இந்த சபைக்குச் சொல்கிறேன். நான் அன்று மூன்று நான்கு**

கூட்டங்களுக்குப் போனேன். தெல்லிப்பழையில் இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளரை ஆதரித்து நடந்த கூட்டத்தில் உரையாற்றிவிட்டு நான் வீடு திரும்பினேன். ஒன்பதே கால் மணிக்கு யாழ்ப்பாணத் தொகுதியில் நடந்த கூட்டத்திற்குச் சென்றிருந்தேன். கூட்டத்தில் யாரையும் காணவில்லை. அது முடிக்கப்பட்டிருந்தது. பொலிஸார் வந்து கூட்டத்தை தடுத்து நிறுத்தியதாக அங்கிருந்தவர்கள் என்னிடம் கூறினர். வீட்டுக்கு வந்து இன்னொரு கூட்டத்திற்குப் போகத் தயாராகினேன்."

" ஏதோ பிரச்சினை நடந்திருக்கிறது என்று என் மனைவி சொன்னாள். மற்றைய கூட்டமும் நிறுத்தப்பட்டுள்ளது. இனி கூட்டங்களுக்கு செல்ல வேண்டாம். எனது வீட்டுக்கு தெரியும் தொலைவில் கடைகள் தீப்பிடித்து எரிந்தன. அப்போது என் மனைவி, "எங்கள் வீடும் தாக்கப்படும் என்று நினைக்கிறேன் " என்றாள். நான் ஒரு பாராளுமன்ற உறுப்பினர். எனவே அவர்கள் வந்து கூச்சலிடுவார்கள், ஆனால் நான் மக்களின் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுடனேயே வாழ்ந்ததால் அவர்கள் வீட்டிற்குள் வர மாட்டார்கள் என்று நினைத்தேன். நான் யாழ்ப்பாண மாவட்ட அமைச்சருடன் (யூ.பி. விஜேகோன்) தொலைபேசியில் பேச முயற்சித்தேன். அவர் அங்கு இல்லாததால், அவரது அந்தரங்கச் செயலாளரை தொலைபேசியில் அழைத்து, "காவல்துறையினர் நகரத்தை எரிக்கிறார்கள்" என்று கூறினேன்.

(சபை சிரிக்கிறது)

"பிரதி சபாநாயகர் அவர்களே, அவர்கள் சிரிக்கும்போது, முழு உலகமே அவர்களைப் பார்த்துச் சிரிக்கும்! நீங்கள் ஒரு பெரிய நகரத்தின் ஒரு பகுதியை தீயிட்டுக் கொளுத்தினீர்கள். நீங்கள் வெறும் ஏளனச் சிரிப்பை மட்டுமே காட்டுகிறீர்கள்! எதிர்காலத்தில் இந்த ஹன்சாட் அறிக்கைகளை வாசிப்பவர்கள் உங்களை அவமதிப்பார்கள். அவ்வாறு நடக்க விடாதீர்கள். சிரிக்காதீர்கள், நான் இங்கு ஒரு பாரதூரமான விடயத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கின்றேன்."

"பிரதி சபாநாயகர் அவர்களே, நான் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபருடன் தொலைபேசியில் பேச முயற்சித்தேன். ஆனால் என்னால் அவருடன் பேச முடியவில்லை. நான் அவரை தொடர்பு கொள்ள முயற்சித்தேன், ஆனால் என்னால் அவரை தொடர்பு கொள்ள முடியவில்லை. சில அழைப்புகளை முன்பதிவு செய்தேன். அரச பாதுகாப்பு பிரதியமைச்சர் லலித் அத்துலத் முதலியையும், எனது கட்சித் தலைவரையும் தொடர்பு கொள்ள முயற்சித்தேன். அவர் திருகோணமலையில் இருந்தார். அந்த அழைப்புகளுக்காக நான் காத்திருந்தேன்."

"எனது வீட்டுக்கு முன்னால் மிகவும் பிரபலமான சந்தி உண்டு. அது பருத்தித்துறை வீதி - வைத்தியசாலை வீதிச் சந்தி. ‘அந்தச் சந்தியில் உரத்தச் சத்தம் கேட்கிறது. நிச்சயமாக எங்கள் வீடும் தாக்கப்படும்` என்று என் மனைவி சொன்னாள். நான் சொன்னேன், "இல்லை. அவர்கள் வந்து கூச்சல் போடலாம். நான் கௌரவ பிரதமரிடமும், பிரதி பாதுகாப்பு அமைச்சரிடமும் சொல்கிறேன்" என்று நான் சொன்னேன். "வாருங்கள் இங்கிருந்து கிளம்பலாம்" என்று

அவள் உறுதியாகச் சொன்னாள், ஆனால் நான் போகவில்லை. என் அலுவலகக் கதவைத் திறந்தேன். எனது அலுவலக ஜன்னல் வழியாக முன் கேற் தெரிந்தது. சுமார் 50 முதல் 100 பேர் காக்கி உடையிலும், சிலர் வெள்ளை பனியனுடனும், காக்கி அரைக்கால் சட்டையிலும், சிலர் சாரமும் சட்டையும் அணிந்தும், சிலர் பொல்லுகளுடனும், மற்றவர்கள் வாள்களுடனும், துப்பாக்கிகளுடனும் வாயிலில் நிற்பதைப் பார்த்தேன். உண்மையில் என்ன நடக்கிறது என்றே எனக்குத் தெரியவில்லை. அவர்கள் கேற்றை வலுக்கட்டாயமாக திறக்க முயன்றனர்."

"அந்த நேரத்தில் முன் கேற் மூடப்பட்டிருந்தது. பொலிஸார் மிகவும் குடிபோதையில் இருந்தனர், அவர்கள் என் வீட்டைக் கண்டுபிடித்து அங்கு வருவதற்கு முன்பு வெளிநாட்டு மதுபானங்கள் விற்கும் கடையைக் கொள்ளையடித்தனர். அவர்கள் "வயிட் ஹோஸ்" விஸ்கி மற்றும் "ஹென்னெசி" பிராந்தி குடித்திருந்தனர், இவை அவர்கள் குடிக்கக் கிடைக்காத பானங்கள். அவற்றைக் குடித்து மூளையைக் கெடுத்துக் கொண்டு நின்றார்கள். பொலிஸாரால் கேற்றைத் திறக்க முடியவில்லை. கேற்றைத் தள்ளினார்கள். அது திறக்கவில்லை. ஒரு அதிகாரி பூட்டை உடைக்க அதனைச் சுடுவதை நான் பார்த்தேன், பின்னர் நான் என் மனைவியிடம் இனி அங்கு இருப்பது பாதுகாப்பானது அல்ல என்று கூறினேன். இருவரும் ஓடினோம். இரண்டு மூன்று சுவர்களைத் தாண்டிக் குதித்து பாதுகாப்பான இடத்திற்கு வந்தோம். பின்னர் அவர்கள் கேற்றைத் திறந்தனர். எல்லா கதவுகளிலும் எதையோ ஊற்றித் தீ வைத்தனர். நான் சுவர் ஏறிக் குதித்து உயிர் பிழைத்தேன். என் மனைவி சுவர் ஏறிக்

குதித்தாள். அதன் பிறகு அவளை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை" என்றார்.

"நான் எனது பக்கத்து வீட்டில் 45 நிமிடங்கள் ஒளிந்திருந்தேன். என் மனைவி எங்கே இருக்கிறாள் என்று பார்க்க வீடுகளின் சுவர்களினூடே நடந்தேன். பனியனும், காக்கி அரைக் கால் சட்டையில் குடிபோதையில் ஒரு பொலிஸ் அதிகாரி நின்றிருந்தார். அவர் என் கையைப் பிடித்தார், ஆனால் அவரது மற்ற பொலிஸ் சகாக்களைப் போலவே அவரும் போதையில் இருந்ததால், அவரது கையை உதறிவிட்டு சுவர்கள் வழியாக ஓடித் தப்பிக்க என்னால் முடிந்தது. ஆனால் மறுநாள் மாலை வரை எனது மனைவி இருக்கும் இடத்தை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை, பின்னர் அக்கம் பக்கத்து வீடொன்றில் அவர் பயத்தில் ஒளிந்து கொண்டிருந்தபோது அவரை நான் கண்டுபிடித்தேன்."

"எனது கராஜில் ஜீப் பாதுகாப்பாக நிறுத்தப்பட்டு பூட்டப்பட்டிருந்தது. அவர்கள் அதன் கதவுகளை உடைத்து ஜீப்பை கராஜிலிருந்து வெளியே தள்ளினர். ஜீப்பை இரும்பு கம்பிகளால் தாக்கி சாலைக்கு தள்ளிக்கொண்டு போய் பெட்ரோல் ஊற்றி அதனைத் தீ வைத்தனர். ஜீப் எரிந்தது. அவ்விடத்தில் எனது நண்பர் ஒருவர் நிறுத்தியிருந்த பியூஜியோ 404 கார் ஒன்றும் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது. எங்கள் வீட்டில் இருந்த அனைத்து நகைகளையும் அவர்கள் கொள்ளையடித்திருக்க வேண்டும். எரிந்து போயிருந்த வீட்டுக்குள் இருந்த நகைகள் அங்கு உருகியிருந்ததை நான் காணவில்லை. வீட்டில் இருந்த விலை மதிப்புமிக்க பொருட்கள் அனைத்தும் தீ வைப்பதற்கு முன்பு

கொள்ளையடிக்கப்பட்டிருக்க வேண்டும். எனது தட்டச்சு இயந்திரம் மற்றும் அலுவலக உபகரணங்கள் அனைத்தும் முற்றிலும் எரிந்துவிட்டன. நான் ஒரு வழக்கறிஞர் மற்றும் ஒரு நோட்டரி, அனைத்து காணி உறுதிகளும், அனைத்து வழக்குப் பதிவு ஆவணங்களும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

"இந்த அநியாயக்காரர்களின் அடுத்த இலக்காக இருந்தது ஏற்கனவே பாராளுமன்றத்தில் 22 உறுப்பினர்களைக் கொண்டிருந்த நாட்டின் எதிர்க்கட்சித் தலைவரின் கட்சியான தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் கட்சித் தலைமையகமாகும். அவர்கள் எங்களது கட்சித் தலைமையகத்திற்கு தீ வைத்தபோது, அந்த கட்டடம் முழுமையாக எரிந்து அழிக்கப்படும் வரை தமது உத்தியோகபூர்வ துப்பாக்கிகளை கைகளில் ஏந்தியபடி காவலில் நின்ற அவர்கள், அந்தத் தீயை அணைக்க எவரையும் அனுமதிக்கவில்லை.

ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் வீட்டுக்குள் புகுந்து, அவரைக் கொலை செய்ய முடியாமல் போகும் பட்சத்தில் அவரது வீட்டை முழுமையாகத் தீ வைத்துக் கொளுத்தியமை, அதன் பின்னர் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் தலைமை தாங்கும் கட்சியின் தலைமையகம் தீக்கிரையாக்கப்பட்டமை என்பன அரசியல் பழிவாங்கல்களுக்காக மேற்கொள்ளப்பட்ட இரண்டு பிரதான தாக்குதல்களாகும். இந்த அரசியல் நோக்கங்களை நிறைவேற்றும் விருப்பம் காவல்துறைக்கு எப்படி வந்தது? பொலிஸாருக்கு இதற்கான உத்தரவை வழங்கியது யார்? நடந்து முடிந்த இந்தக் கடந்தகால சம்பவத்தை

**மறுபரிசீலனை செய்கின்றபோது நாம் அதிக கவனம் செலுத்த வேண்டிய இடம் இதுதான்.**

*[யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் வி. யோகேஸ்வரன், ஹன்சாட் அறிக்கை ஜூன் 9, 1981]*



The Eelanadu - ஈழநாடு - வியாழக்கிழமை

★ பாராளுமன்றத்தில் யோகேஸ்:

'என்கதை முடிந்தது என்று' நான் நினைத்தேன்...

(நமது சபை நிருபர் மாலி)

கடவுள் கிருபையால் உயிர் வாழ்கிறேன்



அமைச்சர்
லலித் அத்துலத்முதலி



பொலிஸ் மா அதிபர்
உருத்ரா ராஜசிங்கம்



விமலா கன்னங்கர

யாழ்ப்பாணத்தின் பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனும், அப்போதைய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லலித் அத்துலத்முதலியும் நண்பர்கள். அவர்கள் ஒரே நேரத்தில் பிரிட்டனில் ஒன்றாகப் படித்தவர்கள். ஆனால், அச் சூழலில் எம்.பி.யோகேஸ்வரன் தனக்கான உதவியைக் கேட்டு தனது நண்பருடன் தொலைபேசியில் பேச முயன்றபோது, அரச பாதுகாப்புத் துறை இராஜாங்க அமைச்சராக அவர் உதவுவது ஒருபுறமிருக்க, அவர் தொலைபேசி அழைப்பைக் கூட தவிர்த்தது ஏன்?

அந்தத் துறை அப்போது அவரது கட்டுப்பாட்டில் இல்லை என்ற காரணத்தாலா? அல்லது அன்று ஜனாதிபதி ஜெயவர்தன தனது சொந்தக் கும்பலுடன் சேர்ந்து யாழ்ப்பாணத்தில் இவ்வாறான ஒரு அனர்த்தத்தை நடத்தத் திட்டமிட்டிருந்தார் என்பது பற்றி அந்த அமைச்சருக்குத் தெரிந்திருந்ததாலா? அல்லது ஜனாதிபதியால் திட்டமிடப்பட்ட அந்தத் தொடர் குற்றச் செயற்பாட்டைத் தடுத்து நிறுத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய அரச கோபத்தை எதிர்கொள்ள அவர் விரும்பவில்லையா?

எவ்வாறாயினும், ஜூன் 9 ஆம் திகதி பாராளுமன்றத்தில் 'யாழ்ப்பாணம் எரிப்பு' தொடர்பான முக்கியமான விவாதத்தின் போது அமைச்சர் அத்துலத்முதலி ஒரு வார்த்தை கூட பேசவில்லை என்பதை ஹன்சாட் பதிவுகள் காட்டுகின்றன. இந்தக் குற்றச் சம்பவங்கள் நிகழ்த்தப்படப் போகின்றன என்ற திட்டத்தை அவர் அறிந்து வைத்திருந்தாலும் கூட, அதனை அவர் அங்கீகரிக்கவில்லை என்பதனையே இது எடுத்துக் காட்டுகிறது.

# 07

## நூலகத்திற்குத் தீ வைத்தல்

“யோகேந்திரா துரைசாமி அடுத்து வரும் தேர்தலுக்கான ஆயத்தப் பணிகளைச் செய்து முடித்து, மிகவும் மன அழுத்தத்துடன் கூடிய ஒரு நாளைக் கழித்துவிட்டு களைத்துப் போய் வீட்டுக்கு வந்திருந்தார். நாச்சிமார் கோவிலடியில் நடைபெற்ற கொலைகள் சம்பந்தமாக கொழும்புக்கு அறிவித்தும் இருந்தார். அதே வேளை, ஏற்கனவே அங்கு விரும்பத்தகாத பல்வேறு சம்பவங்கள் நிகழ ஆரம்பித்திருந்தன. அவற்றில் மிகவும் கனதியான செய்தியாக இருந்தது, ஆத்திரம் கொண்ட பொலிஸார் இந்து நாகரீகம் மற்றும் தமிழ்க் கலாசாரம் போன்ற உள்ளடக்கங்களை கொண்ட வரலாற்று ரீதியான ஏடுகள், கையெழுத்துப் பிரதிகள் மற்றும் அரிதிலும் அரிதான ஆதிகால மூல அச்சு ஆவணங்கள் அனைத்தும் சேர்த்து வைக்கப்பட்டிருந்த யாழ்பாணத்தின் பொது நூலகத்தை தீ வைத்துக் கொளுத்தி இருக்கிறார்கள் என்ற செய்தியாகும். யாழ்ப்பாண நூலகம் என்பது தெற்காசியாவிலேயே மிக முக்கியமான அறிவுசார் ஆவணங்களைக் கொண்ட ஒரு களஞ்சியமாக இருந்து வந்தது. தமிழர்களின் ஆயுதப் போராட்ட வரலாற்றிலேயே மிக முக்கியமான திருப்புமுனையாக யாழ்ப்பாண நூலகம் தீ வைத்துக்

கொளுத்தப்பட்ட சம்பவம் அமைந்தது. அந்தத் தீ வைப்புச் சம்பவம் அந்த இரவு முழுவதும் நடந்தேறியது.
திரு. யோகேந்திரா இரவு 10:00 மணியளவில் தீப்பற்றி எரிகின்ற யாழ். நகரத்தை நோக்கி ஓடினார். தீயை அணைப்பதற்காக காரைநகர் கடற்படை முகாமில் இருந்தும், யாழ். நகர சபையிலிருந்தும் தண்ணீர் பவுசர்களை அனுப்புமாறு அவர் கோரியிருந்தார். நகரம் முழுவதுமே வெறிச்சோடிக் கிடந்தது. யாழ். நகர சபை பூட்டப்பட்டிருந்த அதேவேளை, நீர் வழங்கிக் குழாய்த் தூண்கள் பூட்டுகள் போட்டு பூட்டப்பட்டு இருந்ததையும் அவர் கண்ணுற்றார். காரைநகர் கடற்படையினர் தண்ணீர் பவுசர்களோடு அவ்விடத்திற்கு வந்தாலும், அவர்கள் கொண்டு வந்த தண்ணீரின் கொள்ளளவு அங்கு எரிந்து கொண்டிருந்த பெரு நெருப்பை அணைப்பதற்கு போதுமானதாக இருக்கவில்லை.”

“வெறிச்சோடிய கண்களுடன் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்த யாழ் நூலகத்தை மனம் பேதலிக்கப் பார்த்துக் கொண்டிருந்த யோகேந்திராவுக்கு அருகில் தனியாக நின்றிருந்த ஒரு தமிழ் பொலிஸ் அதிகாரி வந்தார். “ஐயோ அண்ணை... இதில நிக்காதேங்கோ, பொலிஸார் உங்களை என்ன செய்வார்களோ எனக்குத் தெரியாது. தயவுசெய்து இந்த இடத்தை விட்டுப் போய்விடுங்கள்” என்று அவர் யோகேந்திராவிடம் தொடர்ச்சியாக வேண்டிக் கொண்டார். “சட்டத்தின் காவலர்களே இப்படி நடந்துகொள்ளும் பொழுது, பொதுச் சொத்துக்களுக்கு என்னதான் பாதுகாப்பு இருக்கப் போகின்றது?”

*(Ranga Chandrarathna- The Sunday Times, 13th October 2013)*



திரு. யோகந்திரா துரைச்சாமி

ஆனாலும், எங்களுக்குக் கிடைத்த சாட்சியங்களின்படி யாழ்ப்பாண நூலகம் தீ வைத்துக் கொளுத்தப்பட்ட பொழுது யாழ்ப்பாணத்தின் அரசாங்க அதிபர் யோகேந்திரா துரைசுவாமி (அக்காலத்தில் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி ஒரு மாவட்டமாக இருந்தது) அந்த இடத்திற்கு வந்திருக்கின்றார்.

அவர் தன்னுடைய அதிகாரத்தைப் பாவித்து யாழ்ப்பாண நகர சபையின் தீயணைக்கும் படை பிரிவினரை அங்கு கொண்டு வருவதற்கு முயற்சி செய்திருக்கிறார். ஆனால், நகர சபையின் தீயணைப்புப் படை பிரிவினர் தமது கட்டடப் பிரிவில் அந்த இரவு இருந்திருக்கவில்லை. அதன் பின்னர் அவர் உடனடியாக காரைநகர் கடற்படை முகாமுடன் தொடர்பு கொண்டிருக்கிறார். தீயை அணைப்பதற்காக அங்கிருந்து தண்ணீர் பவுசர்களை அவர் கொண்டு வரச் செய்தார்.


ஆனாலும், யாழ்ப்பாணத்தில் நின்ற நான்கு அமைச்சர்களின் வழிநடத்தலின் பேரில் அங்கு இயங்கிய அந்த வன்முறை படையினர் அடங்கிய குழு தீயை அணைப்பதற்கு கடற்படையினருக்கு இடமளிக்கவில்லை. அவர்கள் தங்களின் உத்தியோகபூர்வ ஆயுதங்களைக் கொண்டு மட்டுமல்ல அரசியல் அதிகாரத்தையும் தமது கைகளில் கொண்டு


ஆயுதபாணிகளாக அங்கு நின்றிருந்தனர். அங்கிருந்தபடி அவர்களுக்கு ஆணை வழங்கி அவர்களை இயக்கியவர்கள் ஜனாதிபதிக்கு மிக நெருக்கமான அமைச்சர்கள் அடங்கிய குழுவினராவர்.

யோகேந்திரா துரைசாமி யாழ்ப்பாணத்தில் தேர்ந்த அரசியல் பின்புலம் கொண்ட ஒரு குடும்பத்தில்  பிறந்தவராவார். அவர் யாழ்ப்பாணத்தில் தனது ஆரம்பக் கல்வியைக் கற்றார். அவர் இலங்கையின் வெளிவிவகாரத் துறைச் சேவையில் பல காலம் கடமையாற்றிய மிகவும் பிரபலமான ஓர் அதிகாரியுமாவார். 1979 ஆம் ஆண்டு ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவே அவரை யாழ்ப்பாணத்தின் அரசாங்க அதிபர் பதவிக்கு நியமித்தார். ஆனாலும் அந்த `அரசியல் பொலிஸ்` படையினரின் வன்முறையின் முன்னால் அவர் ஒருவகையில் கையாலாகாத நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தார்.

யாழ்ப்பாண நூலகத்தை கட்டும் செயல்திட்டமானது 1933 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. 1934 ஆம் ஆண்டில் அத்திட்டத்திற்காக ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் தனிப்பட்ட நன்கொடைகள் மூலம் நூலகத்துக்கு புத்தகங்கள் கிடைக்கப் பெற்றன.  அவ்வாறு கிடைக்கப்பெற்ற பழமையான ஏடுகள் உள்ளிட்ட அக்காலத்தில் முதன் முதலாக அச்சு பதிவு செய்யப்பட்ட பத்திரிக்கைகள், சஞ்சிகைகள், அரசியல் வரலாற்றுடன் தொடர்புடைய அச்சிடப்பட்ட ஆவணங்களின் மூலப் பிரதிகள், காலனித்துவ ஆட்சிக் காலத்துடன் தொடர்புபட்ட வரலாற்று ரீதியான ஆவணங்கள் போன்றவை ஏற்கனவே அங்கே காணப்பட்ட நூல்களுக்கு மேலதிகமாக சேமிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வந்தன.

அது மட்டுமின்றி, அங்கு காணப்பட்ட இன்னுமொரு முக்கிய நூல் தொகுப்பாக, கலாநிதி ஆனந்த குமாரசுவாமி அவர்களால் எழுதப்பபட்ட சிங்கள கலை இலக்கியங்கள் தொடர்பான நூல்களின் தொகுப்பினைக் குறிப்பிடலாம். யாழ்ப்பாண நூலகத்திற்கு இவ்வாறான பழமையான நூல்களும் ஆவணங்களும் எவ்வாறு போய்ச் சேர்ந்தன என்பதைப் பற்றி உதாரணத்திற்கு ஒரு கதையை நாங்கள் இவ்விடத்தில் உங்களுக்குச் சொல்ல வேண்டும். எங்கள் நாட்டில் மிகவும் புகழ்பெற்ற தொல்லியல் துறை ஆய்வாளராக கலாநிதி செனரத் பரணவித்தான இருந்து வந்தார். கலாநிதி பரணவித்தான தொல்லியல் துறை ஆணையாளராக இருந்தது மட்டுமன்றி, பின்வரும் காலங்களில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் துறை தொடர்பான பேராசிரியராகவும் பணியாற்றினார். 1971 ஆம் ஆண்டில் கலாநிதி பரணவித்தான அவர்கள் மறைந்ததன் பின்னர் அவருடைய தனிப்பட்ட நூலகம் ஏலத்திற்கு விடப்பட்டது.








கலாநிதி ஆனந்த குமாரவாமி     பேராசிரியர் செனரத் பரணவிதாரன

அங்கே புத்தகங்கள், ஆவணங்கள் மட்டுமன்றி, அவரால் எழுதப்பபட்ட பல்வேறு ஆவணங்களின் கையெழுத்துப் பிரதிகளின் தொகுப்புக்களும் காணப்பட்டன. அந்த ஏலத்திற்கு,

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பிரதிநிதிகள் சிலரும், தமிழ் வர்த்தகர்கள் சிலரும் மட்டுமே சமூகமளித்திருந்தனர். பேராதனைப் பல்கலைக்கழகப் பிரதிநிதிகள் பேராசிரியர் பரணவித்தானவின் தொகுப்புகளுக்கு ஏலத் தொகையாக ரூபா 12,500ஐ முன்வைத்துக் கோரிய பொழுது, அங்கு சென்றிருந்த தமிழ் வர்த்தகர்கள் சிலர் அத்தொகையை இரட்டிப்பாக்கி 25,000 ரூபாவை ஏலத் தொகையாக முன்வைத்து அவர்கள் அந்தத் தொகுப்புகளைக் கொள்வனவு செய்தனர். பின்னர் அவர்கள் அவற்றை யாழ்ப்பாண நூலகத்திற்கு நன்கொடையாக வழங்கியிருந்தார்கள். அத்தகையதொரு முறையில் தான் ஆனந்த குமாரசுவாமியின் தொகுப்புகளும் யாழ்ப்பாண நூலகத்திற்குக் கிடைக்கப் பெற்றன.

1959 இல் அல்பிரட் துரையப்பா யாழ் மாநகர முதல்வராக இருந்த சந்தர்ப்பத்தில் தான் யாழ்ப்பாண நூலகத்தின் பூர்வாங்க கட்டட நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. சர்வதேச தரத்தின் நியமங்களுக்கு அமைய நூலகத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமென்பதை நோக்காகக் கொண்டு, நூலகத்தின் கட்டட நிர்மாண திட்டமிடலுக்காக சர்வதேச ஆதரவுகளும் பெற்றுக் கொள்ளப்பட்டன. 1981 ஆண்டளவில் யாழ். நூலகத்தில் அண்ணளவாக 97,000 நூல்களும், அதற்கு மேலதிகமாக, பதினாறாம் நூற்றாண்டில் காலனித்துவ ஆட்சி காலத்துக்குரிய பல ஆவணங்கள் உட்பட 10,000 வரையான கையெழுத்துப் பிரதிகளின் தொகுப்புகளும் காணப்பட்டன.



மிகவும் கிடைத்தற்கரிய நூல் தொகுப்பாக, 19ம் நூற்றாண்டில் அமெரிக்கன் மிஷனரிமாரினால் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் அச்சிடப்பட்ட தொகுப்புகள் அனைத்துமே அங்கு இருந்தன. நாட்டிலிருந்த பல கல்விமான்கள் உட்பட வெளிநாட்டு ஆய்வாளர்களும் கூட தங்களுடைய பல்வேறு புலமைசார் ஆய்வுகளுக்காக இந்த நூலகத்தைப் பயன்படுத்துவதனை தமது வழக்கமாகக் கொண்டிருந்தனர். அதனால் தான், யாழ்ப்பாண நூலகம் என்பது சர்வதேச ரீதியில் மிகவும் புகழ்பெற்ற ஒரு பொது நூலகமாக பெயர் பெற்று விளங்கியது.

ஜூன் முதலாம் தேதி இரவு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் `அரசியல் பொலிஸ்' படையானது இரண்டாவது நாளாகவும் தனது தீ வைப்புச் செயற்பாட்டை ஆரம்பித்த பொழுது, பொலிஸ் மா அதிபர் உருத்ரா ராஜசிங்கமும் யாழ்ப்பாணத்திலேயே இருந்தார். இந்த அரசியல் பொலிஸ்


படைப் பிரிவின் அநியாயங்களை கட்டுப்படுத்துவதற்கோ அல்லது நிறுத்துவதற்கோ அவருக்குக் கூட அதிகாரம் இருக்கவில்லை. அவரும் அன்று கையாலாகாத நிலையில் இருந்திருக்கலாம். ஏனெனில், நாட்டின் முப்படைகளுக்கும் ஆணையைப் பிறப்பிக்கக் கூடிய ஜனாதிபதியின் பிரதிநிதிகளான யாழ்ப்பாணத்தின் வாடிவீட்டில் அப்போது தங்கியிருந்த நான்கு அமைச்சர்களினால் பிறப்பிக்கப்பட்ட கட்டளைகளையே அந்த `உத்தியோகபூர்வ காடையர்கள்' அங்கு செயல்படுத்திக் கொண்டிருந்தனர்.

அவர்கள் முதலில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திலிருந்து 250 மீட்டர் அளவு தூரத்திலும், யாழ்ப்பாண வாடிவீட்டில் இருந்து 60 மீட்டர் தூரத்திலுமிருந்த யாழ்ப்பாண நூலகத்தை தீ வைத்துக் கொளுத்தினர். அவ்வாறு அவர்கள் எரியூட்டும் பொழுது, நூல் ஆய்வு மற்றும் பரிசீலனைப் பிரிவு (Reference Section) பகுதியும், வெளிவாரி புத்தகங்கள் அனுப்புகின்ற (Lending Section) பகுதியும் முற்று முழுதாகத் தீக்கிரையாக வேண்டுமென்பதில் குறியாயிருந்துள்ளனர் என்பது சஞ்சிகைகள் இருந்த பகுதி மட்டும் தீக்கிரையாகாமல், ஏனைய நூல்கள் மற்றும் ஆவணத் தொகுப்புகள் இருந்த பகுதிகள் மட்டும் முழுமையாக எரிந்து சாம்பலாகி இருந்த நிலையிலிருந்து உறுதியாகிறது.

நூலகம் தீ வைத்து கொளுத்தப்பட்ட சம்பவத்தைக் கேள்விப்பட்ட அந்தக் கணமே யாழ்ப்பாணத்திலிருந்த மிக சிரேஷ்ட கல்விமான்களில் ஒருவரான வணக்கத்துக்குரிய பிதா டேவிட் அவர்கள் மாரடைப்பினால் உயிரிழந்தார். அவர் இந்த நாட்டில் மிக உயரிய மொழியியல் அறிஞரான வணக்கத்துகுரிய ஞானப்பிரகாச அடிகளாரின் மாணவர் என்பது

குறிப்பிடத்தக்கது. வணக்கத்துக்குரிய பிதா டேவிட் அவர்கள், அக்காலத்தில் வணக்கத்திற்குரிய ஞானப்பிரகாச அடிகளாரின் பல்வேறு ஆய்வு மற்றும் எழுத்து நடவடிக்கைகளுக்காக அந்த நூலகத்தை தொடர்ச்சியாக பயன்படுத்தி வந்தார். அவர் 32 மொழிகளை அறிந்து வைத்திருந்த ஒரு மொழியியல் அறிஞராவார்.



எரிந்த நூலகத்தில், வாங்குத்துண்டொன்றில் கவலையுடன் அமர்ந்திருக்கும் நூலகர் திருமதி ரூபா நடராசாவும், நூலக உதவியாளர்களும்

முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபராக இருந்த எட்வர்ட் குணவர்தன, 2013ம் ஆம் ஆண்டில் `யாழ்ப்பாண நூலகம் தொடர்பான மறக்க முடியாத குறிப்புகள்' என்னும் தலைப்பில் ஆங்கிலத்தில் ஒரு புத்தகத்தை எழுதினார். பொலிஸில் பணியாற்றி ஓய்வு பெற்றதன் பின்பு இலங்கை தேசிய லொத்தர் சபையின் தலைவராகவும், லேக் ஹவுஸ் நிறுவனத்தின் பணிப்பாளராகவும் மற்றும் அரசியல் சிபார்சுகளின் பேரில் அரை டசினுக்கு மேற்பட்ட அரசாங்கப் பதவிகளையும் வகித்த எட்வர்ட் குணவர்தன, `திருடனின் தாயாரே திருட்டை கண்டுபிடிக்க சாஸ்திரம் கூறுவதுபோல்`,

பெருந்தொகையான இட்டுக் கட்டிய பொய்களைக் கோர்த்து அந்தப் புத்தகத்தை எழுதியிருந்தார்.

அவர் யாழ்ப்பாணத்தில் நடந்த இந்த அநியாயச் செயல்களை வழிநடத்திய அரசியல் தலைவர்களான தன்னுடைய எசமானர்களுக்கு வெள்ளையடித்து, அவர்களைச் சுற்றவாளிகள் ஆக்குவதற்காக, “யாழ்ப்பாணத்தில் நிலவிய சாதிய பிரச்சினைக்கு எதிராக போராடிய புலிகள் இயக்கத்தினர், உயர்சாதியினரைப் பழிவாங்குவதற்காக இந்த யாழ்ப்பாண நூலகத்தைத் தீ வைத்துக் கொளுத்தினர்” என எழுதியிருந்தார். அவர் அப்படி எழுதி இருந்தாலும் கூட அக்காலகட்டத்தில் நாட்டின் ஜனாதிபதியாக இருந்த சந்திரிக்கா குமாரதுங்கவும், ஒரு கட்டத்தில் பிரதம மந்திரியாக இருந்த ரணில் விக்கிரமசிங்கவும் யாழ்ப்பாண நூலகம் தீ வைக்கப்பட்டது தொடர்பாக பகிரங்கமாக மன்னிப்புக் கோரியிருந்தார்கள். அதற்கு முன்னர் ஜனாதிபதியாக இருந்த ரணசிங்க பிரேமதாசவும் இந்தத் தீ வைப்புக்குப் பொறுப்பான தலைவர்கள் தன்னுடைய கட்சியைச் சேர்ந்த தலைவர்களே என்று பகிரங்கமாகக் கருத்துத் தெரிவித்திருந்தார்.



முன்னாள் பொலிஸ் அதிகாரி
டாசி செனெவிரத்ன



யாழ்ப்பாண நூல் நிலையத்தை
தீயிட்டவர் காமினியே
- ஜனாதிபதி பதில்

ஜனாதிபதி பிரேமதாசாவின்
உரையிலிருந்து

எனினும், யாழ்ப்பாண நூலகத்திற்குத் தீ வைத்த பொழுது, அதே பொலிஸில் பணியாற்றிக் கொண்டிருந்த பிரதிப் பொலிஸ் மா அதிபரான எட்வர்ட் குணவர்தன போன்ற ஒருவரால் எழுதப்படும் `விசாரணை அறிக்கையை' யார்தான் ஏற்றுக் கொள்ளப் போகிறார்கள் என்று மற்றுமொரு முன்னாள் பொலிஸ் அதிகாரியான டாசி செனெவிரத்ன என்பவர் சண்டே டைம்ஸ் பத்திரிகைக்கு இது பற்றியதொரு கட்டுரையை எழுதி கேள்வியெழுப்பியிருந்தார். டாசி செனவிரத்னவின் அந்தக் கட்டுரை பிரசுரமாகியதன் பின்பு, யாழ்ப்பாண நூலகம் தீ வைத்து கொளுத்தப்பட்ட அதே காலகட்டத்தில், யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய ஒரு தமிழ் பொலிஸ் அதிகாரியான கிறிஷ் கிருஷ்ணதாசன் கீழ்வரும் கடிதத்தை எட்வர்ட் குணவர்தனவை நோக்கி பகிரங்கமாக எழுதினார்.

**ஓய்வுபெற்ற பிரதிப் பொலிஸ் மா அதிபர் எட்வர்ட் குணவர்தன அவர்களுக்கு**

**யாழ்ப்பாண நூலகம் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது தொடர்பாக**

***கிறிஷ் கிருஷ்ணதாசன் ஆகிய நான் 1967 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 1986 ஆம் ஆண்டு டிசம்பர் வரை இலங்கை பொலிஸ் சேவையில் பணியாற்றினேன். அதன் பின்னர் ஆஸ்திரேலியாவுக்கு குடிபெயர்ந்த நானும், எனது குடும்பமும் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகின்றோம். பொலிஸில் நான் எனது பணியைச் செய்து கொண்டிருந்த காலத்தில், உங்களின் கீழ் பணியாற்றுவதற்கு எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஆனால் நான் பொலிஸ்***

*துறைக்கான பயிற்சியை எடுத்துக்கொண்ட காலகட்டத்தில் அதாவது, 1967 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் எங்களுடைய ஏ.டி.டி ஆக நீங்கள் பணியில் இருந்தீர்கள். அதன் பின்பு நான் மாத்தறை பகுதியில் எனது சேவைக் காலத்தை ஆரம்பித்தேன்.*

*பின்னர், 1983 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் 1986 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையான காலப் பகுதியில் நான் மட்டக்களப்பில் சேவையாற்றி வந்தேன். அதன் பின்பு நான் ஆஸ்திரேலியாவுக்கு வருவதற்கு முன்பு வரை, பொலிஸ் தலைமையகத்தில் பிரதி பொலிஸ் மா அதிபராக நீங்கள் பணியாற்றிய காலத்தில் நானும் அங்கு சேவை புரிந்துள்ளேன். நானும் உங்களைப் போலவே புனித ஜோசப் வித்தியாலயத்தின் முன்னாள் மாணவராவேன்.*

*அண்மையில் இலங்கையில் ஒரு பத்திரிகையில் வெளிவந்த ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி டாசி செனெவிரத்ன அவர்களுடைய கட்டுரை தொடர்பாக என்னுடைய கருத்துக்களையும் தெரிவிப்பதற்காகவே நான் இக்கடிதத்தை எழுதுகிறேன். டாசி செனெவிரத்ன என்னுடைய ஒரு நல்ல நண்பராவார். அவர் இந்த நாட்களில் சிட்னி நகரில் தன்னுடைய விடுமுறையைக் கழித்துக் கொண்டிருக்கிறார். யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்ட பொழுது நானும் அதைக் கண்ணால் கண்ட ஒரு சாட்சி என்ற அடிப்படையில், அது சம்பந்தமாக உங்களுடைய ஒரு புத்தகம் வெளிவந்து இருப்பதாகவும், அப்புத்தகத்தில் உரையாடப்படுகின்ற பல விடயங்கள் தொடர்பாக எனது கருத்தையும், பதிலையும் எழுதும்படி அவர் என்னிடம்*

*கேட்டிருந்தார். யாழ். நூலகம் தீ வைத்துக் கொளுத்தப்பட்ட பொழுது கண்ணால் கண்ட ஒரு சாட்சியாளர் என்ற அடிப்படையில் உங்கள் கருத்துக்களுக்குப் பதிலளிக்க நான் விரும்புகின்றேன்.*

*1980 ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து 1982 ஆம் ஆண்டு டிசம்பர் வரை யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் குற்றவியல் பிரிவின் பொறுப்பதிகாரியாக, யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் பணிப்பாளரின் கீழ் நான் பணியாற்றியுள்ளேன். அந்த நேரத்தில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் இரண்டாவது சிரேஷ்ட அதிகாரியாகவும் நான் பணியாற்றியுள்ளேன். எனது மேலதிகாரியாக பணியாற்றியவர் லலித் குணசேகர ஆவார்.*

*1981 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி இரவு 7.30 மணியளவில் நான் யாழ்ப்பாண பொலிஸ் மாவட்டத்துக்குப் பொறுப்பாகவிருந்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் மகேந்திரனுடன் இருந்தேன். அப்பொழுது யாழ்ப்பாண நூலகம் இருந்த திசையிலிருந்து பாரியளவிலான புகை கிளம்புவதை எங்களால் காணக் கூடியதாக இருந்தது. யாழ்ப்பாண நூலகம் தீப்பற்றி எரிகிறது என்பது எங்களுக்குத் தெளிவாகியது.*
*பொலிஸ் அதிகாரிகளுடன் அந்த இடத்துக்கு உடனடியாக செல்லும்படி பிரதிப் பொலிஸ் மா அதிபர் மகேந்திரன் எனக்குக் கட்டளையிட்டார். பொலிஸ் நிலையத்தில் இருந்து 250 யார் தூரத்திலிருந்த யாழ் நூலகத்தை நோக்கி ஒரு பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர், 10 பொலிஸ் கான்ஸ்டபிள்கள்*

*உட்பட ஒரு குழுவாக நாங்கள் அங்கு செல்லப் புறப்பட்டோம்.*

*நாங்கள் செல்லுகின்ற பொழுது இராணுவ சீருடைத் தரித்த 20 பேர் வரை அங்கு நின்றிருப்பதைக் கண்டோம். அவர்கள் எண்ணெய் ஊற்றி தீ வைப்பதையும் நாம் கண்டோம். புத்தக ராக்கைகளில் இருந்த புத்தகங்களை அள்ளி தீக்குள் அவர்கள் போட்டுக் கொண்டிருப்பதையும் நாங்கள் கண்டோம். எங்களைக் கண்ட அந்த இராணுவத்தினர் எம் அருகில் வந்து ஏ. கே. 47 வகை துப்பாக்கிகளைக் காட்டி எங்களை பொலிஸ் நிலையத்திற்குத் திரும்பிச் செல்லும்படி சிங்களத்தில் அச்சுறுத்தினார்கள். நான் எனது பொலிஸ் மேலதிகாரிக்கு நிலைமையை தெளிவுபடுத்தினேன். அவரும் எங்களை திரும்பி வரும்படி கட்டளையிட்டார். நாங்கள் பொலிஸ் நிலையத்திற்குத் திரும்பிச் செல்லும் பொழுது நூலக கட்டடத்திலிருந்து நெருப்பு மிக விசாலமாகப் பற்றி எரிவதைக் கண்டோம்.*

*பிரதிப் பொலிஸ் மா அதிபர் யாழ்ப்பாண இராணுவ தலைமையகத்தில் இருந்த மேலதிகாரிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள முயற்சித்தாலும் அதனால் பலன் ஏதும் ஏற்படவில்லை. அப்போது அங்கு நிலவிய சூழ்நிலையின் அடிப்படையில் இராணுவத்திற்கு எதிராக எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ள எமக்கு வாய்ப்புகள் இருக்கவில்லை. எல்லாவற்றையும் கண்ணால் கண்டாலும் எதுவுமே செய்ய முடியாது கையறு நிலையில் நான் இருந்ததை உணர்ந்தேன். அன்று நான் கண்ணுற்ற எதையும் இன்றுவரை என்னால் மறக்க முடியவில்லை. அது*

*என் வாழ்நாள் முழுவதும் என்னுடனேயே இருக்கும் நினைவுகளாக இருக்கும். பொலிஸ் நிலையத்திற்குத் திரும்பி வந்த நான் ஒரு குறிப்பை மட்டும் எழுதி வைத்தேன். பிரதி பொலிஸ் மா அதிபர் மகேந்திரனும் ஒரு குறிப்பை எழுதி வைத்தார்.*

*துரதிஷ்டவசமாக திரு. மகேந்திரன் அவர்கள் இன்று உயிருடன் இல்லை அவர் உயிருடன் இருந்திருந்தால் நான் இன்று சொல்லுவதை ஆமோதித்து எனக்காக அவரும் குரல் கொடுத்திருப்பார். ஆனால், திருமதி மகேந்திரன் அவர்கள் தற்போது சிட்னியில் வாழ்கிறார். வேண்டுமென்றால் திரு. மகேந்திரன் அவர்கள் இது தொடர்பாக அவரிடம் கூறியிருக்கிற விடயங்களை அவரிடம் கேட்டு தெரிந்துக் கொள்ள முடியும்.*

*நீங்கள் தயவுசெய்து டாசி செனெவிரத்னவின் கட்டுரையை வாசியுங்கள். யாழ்ப்பாண  நூலகம் தீப்பற்றி எரிந்தது தொடர்பான தகவல்களை தெரிந்து கொள்ள வேண்டுமென்றால், ஓய்வு பெற்ற பிரதிப் பொலிஸ் மா அதிபர் சீ. எல். ரத்நாயக்க என்பவரிடம் நீங்கள் கேட்டுத் தெரிந்துகொள்ள முடியும். அவரும் என்னோடு சமகாலத்தில் பயிற்சி பெற்றுக் கொண்டவராவார். அன்று நான் அங்கு எதனைக் கண்டேன்,  யாரைக் கண்டேன் என்பது தொடர்பாக ஓர் அறிக்கையை எழுதி வைத்தேன். தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கும் பொழுது நான் சகலதையும் அவதானித்துக் கொண்டிருந்தேன்.*

*அண்மையில் நீங்கள் எழுதிய `யாழ்ப்பாண நூலகத்திற்குத் தீ வைத்தலும், அது பற்றிய மறக்க முடியாத குறிப்புகளும்` என்ற  அந்த நூலை வாசிப்பதற்கான சந்தர்ப்பம் எனக்கும் கிடைத்தது. யாழ்ப்பாணத் தமிழ் சமூகத்தில் நிலவிய சாதியப் பிரச்சினையின் காரணமாக புலிகள் இயக்கத்தினர் யாழ்ப்பாண நூலகத்தைத் தீ வைத்துக் கொளுத்தியதாக நீங்கள் அதில் குறிப்பிட்டுள்ளீர்கள். யாழ்ப்பாண நூலகத்தை தீ வைத்துக் கொளுத்தி, அதற்குள் அரசாங்கத்தையும் இராணுவத்தையும் புலிகள் தொடர்புபடுத்தினார்கள் என்று சொல்லுவதற்கு எந்த விதமான ஆதாரங்களோ, காரணங்களோ இல்லை. மேலும், யாழ்ப்பாண நூலகம் என்பது தமிழ் மக்களுக்கான ஒரு நூலகம் மட்டுமல்ல, அது நாட்டில் உள்ள அனைவருக்குமான ஒரு பொது நூலகமாகும்.*

*யாழ்ப்பாண நூலகத்திற்குத் தீ வைத்தது என்பது ஒரு வரலாற்று நிகழ்வாகும். அதே போலவே அதை தீ வைத்துக் கொளுத்தியவர்கள் யார் என்பதையும் அறிவுள்ள மக்கள் புரிந்து கொண்டுள்ளார்கள். யாழ். நூலகத்தை தீ வைத்துக் கொளுத்தியவர்கள் யார், அதன் பின்னால் இருந்தவர்கள் யார், என்கின்ற உண்மையை அறிந்து கொள்வதற்காக அரசாங்கத்தினால், உயர் நீதிபதிகள் அடங்கிய விசாரணை ஆணைக்குழுவொன்றை நியமிப்பதற்கு இதுதான் மிகவும் பொருத்தமான காலம் என்று நான் கருதுகின்றேன்.*

*பக்கச் சார்பற்ற விசாரணை இன்றி உண்மைகளை அறிந்து கொள்ள முடியாது. அதில் சம்பந்தப்பட்ட சகலரினதும் வாக்குமூலங்களை பெற்றுக்கொண்டு, அவற்றை எந்தப்*

*பக்கச்சார்புமின்றி ஆய்வுக்கு உட்படுத்தி உண்மைகளை கண்டறியும் செயல்பாடு இதுவரை நடைபெறவில்லை. நீங்கள் வெளியிட்ட கருத்து தற்போது மக்களைச் சென்றடைந்து இருப்பதால், கீழ்வரும் விடயங்கள் தொடர்பாக மேலதிக தகவல்களை உங்களிடமிருந்து நான் அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தில் இருக்கிறேன்.*

1. *சம்பவம் நடந்த அந்த நாட்களில் ஜனாதிபதி ஜெயவர்தன உங்களை விசேட பொலிஸ் பணிக்காக அல்லது அரசாங்கத்தின் தேர்தல் பணிகளுக்காக அங்கு அனுப்பி வைத்தாரா?*
2. *நீங்கள் பொலிஸ் பணி சம்பந்தமாக அவ்வாறு யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தால், அந்த விசேட பணி தொடர்பாக யாழ்ப்பாணத்துக்கு பொறுப்பாக இருந்த பிரதிப் பொலிஸ் மா அதிபரையும், பொலிஸ் நிலையத்தில் இருந்த பொலிஸ் அதிகாரிகளையும் சந்திக்காமல் விட்டது ஏன்? அவர்களுக்கு அங்குள்ள நிலைமை தொடர்பாக நீங்கள் விளக்கமளிக்காதது ஏன்? அப்படி இல்லாவிட்டால் உங்களுக்கு வழங்கப்பட்ட பணி என்பது இரகசியமானதா? அங்கு நடந்தவற்றை மற்றவர்கள் கண்ணுற்றிருந்த பொழுதும் நீங்கள் அவற்றை காணாமல் போனது எவ்வாறு? யாழ்ப்பாண பொலிஸ் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் இந்நிகழ்வுகள் நடக்கின்ற பொழுது நீங்கள் அங்கு நின்றிருப்பதை நான் காணவில்லை.*
3. *நீங்கள் குறிப்பிடுகின்ற பொலிஸ் அதிகாரியான சத்யன் என்பவரைத் தவிர வேறு பொலிஸ் அதிகாரிகள் அன்று உங்களோடு பணியில்*

*இருந்தார்களா? அவ்வாறு அன்று வேறு யாரேனும் பணியில் இருந்தார்களாயின் அவர்கள் யார்?*

4. *யாழ்ப்பாண நூலகம் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது தொடர்பாக குற்றவியல் திணைக்களம் நடத்திய விசாரணையின் பொழுது, அவ்வதிகாரிகளை சந்தித்து இது தொடர்பான தகவல்களை நீங்கள் வழங்குவதற்கு உங்களுக்கு தடையாக இருந்த காரணங்கள் என்ன? அக்குழுவினர் யாழ்ப்பாணத் திற்கு அனுப்பப்பட்டது ஜனாதிபதியின் கட்டளையின் பேரில் அல்லவா?*
5. *நீங்கள் பொலிஸ் மா அதிபருக்கோ அல்லது ஜனாதிபதிக்கோ வழங்கியதாகக் கூறுகின்ற அந்த அறிக்கையில் யாழ்ப்பாணத்தில் உங்களுக்கு வழங்கப்பட்ட அந்த விசேட பணிகள் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றனவா?*

*நான் இவ்வளவு காலமும் மௌனமாக இருந்ததற் கான காரணங்களையும் இங்கே தெளிவுபடுத்தியாக வேண்டும்.*

***DIG/NR** அறிக்கையில் நான் இது வரை காலமும் வெளியிடாத அல்லது பிரசித்தப்படுத்தாத காரணங்களை நான் இங்கே தெளிவுபடுத்தியாக வேண்டும்*

*பெருமளவு இராணுவ செயற்பாடுகள் அதிகரித்து இருக்கின்ற ஒரு நாட்டில் இராணுவத்துக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை கொண்டுவரும் வகையிலான தகவல்களை வெளியிடுவது என்பது எவருக்குமே தற்கொலைக்குச் சமமான ஒரு செயற்பாடாகும்.*

***நான் ஆஸ்திரேலியாவில் குடியேறி வாழ்ந்தாலும், அடிக்கடி இலங்கைக்கு வருவதுண்டு. இறுதியாக 2014ம் ஆண்டில் இலங்கை பொலிஸாரின் 67 ஆவது அணியினரின் சந்திப்பு நிகழ்ந்த பொழுது நான் இலங்கைக்கு வந்திருந்தேன்.***

***எவ்வாறாயினும், அந்தத் தீ வைப்பு நிகழ்வு தொடர்பான தகவல்களைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்புபவர்களுடன் தனிப்பட்ட முறையில் நான் கண்ணால் கண்ட உண்மையான சம்பவங்களைப் பகிர்ந்து கொண்டிருக்கிறேன். கடந்த ஜனாதிபதி தேர்தலின் பின்பு நிலைமை சற்று மாற்றமடைந்துள்ளது. அதனாலேயே நான் இதனை உங்களுக்கு எழுதுகிறேன். அதற்குக் காரணம், இந்தச் சம்பவம் தொடர்பான சகல தகவல்களையும் அச்சமின்றி சொல்ல முடியும் என்ற ஒரு காரணத்தின் அடிப்படையிலேயே இவற்றை வலியுறுத்துகிறேன்.***

***நான் மேலே உங்களிடம் வினவியுள்ள விடயங்கள் தொடர்பான தகவல்களை உங்களால் எனக்கு தர முடிந்தால் நன்றியுடையவனாக இருப்பேன்.***

***இங்கணம்***
***கிறிஷ் கிருஷ்ணதாசன்***

*(Dbsjeyaraj.com டி.பி.எஸ். ஜெயராஜ் இணையப் பக்கத்தில் இருந்து பிரதி செய்யப்பட்டது)*

ஓய்வு பெற்ற பிரதிப் பொலிஸ் மா அதிபர் எட்வர்ட் குணவர்தன (2002)இல் தான் இயற்கை மரணம் எய்தும் வரை முன்னாள் போலிஸ் அதிகாரிகளாகிய டாசி செனெவிரத்னவிற்கோ அல்லது கிறிஷ் கிருஷ்ணதாசுக்கோ இது தொடர்பாக எந்தவித பதிலையும் வழங்கவில்லை. ஆனாலும், அந்த அறிக்கைகள் இரண்டு சிக்கல்களை எம்முன் விட்டுச் செல்கின்றது. அதில் முதலாவது, யாழ் நூலகம் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது மே 31 ஆம் தேதி இரவா? அல்லது ஜூன் முதலாம் திகதி இரவா? இந்தப் பெரும் நூலகத்தை தீ வைத்துக் கொளுத்தியது காடையர்கள் அடங்கிய பொலிஸ் படையா அல்லது அரசின் இராணுவப் படையினரா?

யாழ். நூலகம் தீ வைத்துக் கொளுத்தப்படுகின்ற சம்பவம் நிகழ்கையில் அரசாங்கத்தின் நான்கு அமைச்சர்கள் அதை மிக அண்மித்த தூரத்தில் இருந்த வாடிவீட்டில் தங்கி இருந்தார்கள் என்பது எமக்குத் தெரியும். அது மட்டுமன்றி ஜனாதிபதி ஜெயவர்தன அரசாங்கத்தின் முக்கியமான மூன்று இராணுவ உயர் அதிகாரிகளும் அந்த நாட்களில் யாழ்ப்பாணத்தில் இருந்தார்கள் என்பதையும் நாம் அறிவோம். எனவே, கிறிஷ் கிருஷ்ணதாஸினுடைய யாழ்ப்பாண பொலிஸ் தலைமை அதிகாரியாக இருந்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் மகேந்திரன், நூலகம் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்த பொழுது, யாழ்ப்பாணத்தின் இராணுவக் கட்டளை அதிகாரியாக இருந்த பிரிகேடியர் திஸ்ஸ வீரதுங்க அவர்களை அழைத்தும் அதனால் எந்த பலனும் கிடைக்கவில்லை. நூலகத்தை தீ வைத்துக் கொளுத்துதல் என்பது ஜனாதிபதி ஜெயவர்தனவும், அவருடைய அரசாங்கமும் சேர்ந்து அந்தச் சந்தர்ப்பத்தில் மிகவும்

திட்டமிடப்பட்ட விதத்தில் கூட்டாகச் செய்த தொடர் குற்றச்செயல்களில் ஒன்று மட்டுமேயாகும்.

எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கத்தின் கருத்துக்கு ஏற்ப யாழ்ப்பாண நூலகம் ஜூன் முதலாம் தேதி இரவு பொலிஸாரினாலேயே தீ வைத்துக் கொளுத்தப்பட்டது. அப்போது யாழ்ப்பாணப் பொலிஸில் சேவையாற்றிய கிருஷ்ணதாஸினுடைய கருத்தின்படி அது தீ வைத்துக் கொளுத்தப்பட்டது மே 31 ஆம் திகதி இரவு அரச இராணுவப் படையினர் அடங்கிய ஒரு குழுவினராலாகும். தீ வைத்த நாள் எதுவாக இருந்தாலும் நூலகம் தீ வைத்துக் கொளுத்தப்பட்டுள்ளது என்பது எமக்குத் தெரியும். ஆனால், தீ வைத்துக் கொளுத்தியவர்கள் யார்? இராணுவத்தினரா? பொலிஸாரா? அல்லது கொழும்பிலிருந்து அங்கு கொண்டுச் செல்லப்பட்ட விசேட வன்முறைக் கும்பலினாலா? இது தொடர்பான எமது முடிவு என்னவெனில், மே 31 ஆம் தேதி மாலை நேரத்திலிருந்து யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளை தீ வைத்துக் கொளுத்தியவர்கள் அப்போது ஜனாதிபதி ஜெயவர்தனவினால் கொழும்பிலிருந்து அனுப்பப்பட்ட காடையர்கள் அடங்கிய பொலிஸ் படையினரே.


விலை: சதம் 60

ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆனி 10 ஷஃபான் 21 இதழ் 130
யாழ்ப்பாணம் புதன்கிழமை 24-6-1981

யாழ். நூலகத்தை எரித்த பொலிசாரில் சிலர் யூனிபோம் அணிந்திருந்தனர்

மாநகரசபை காவலாளி சாட்சியம்

[யாழ்ப்பாணம்]
'யாழ். பொது நூலகத்தை எரித்த பொலிஸாரில் சிலர் யூனிபோம் அணிந்திருந்தார்கள். அவர்களில் சிலரை என்னால் அடையாளம் காட்ட முடியும்.'

யாழ். மாநகரசபை காவலாளி திரு. பி. விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார். இவர் உயர் மட்ட பொலிஸ் விசாரணைக் குழு முன் சாட்சியமளித்தார்.

பி. விக்னேஸ்வரன் இச்சம்பவம் பற்றி மேலும் கூறியதாவது:

'1-ம் தேதி இரவு 9-15 மணியளவில் யாழ். மாநகரசபை ஆணையாளர் எனக்கு போன் செய்தார். பெரியகடை மார்க்கட் கடைகள் எரிவதாகவும், 2 தண்ணீர் பௌசரைத் தயாராக வைத்திருக்கும்படியும்.

[6-ம் பக்கம் பார்க்க]

அந்தக் கும்பலோடு நான்கு அமைச்சர்களின் பாதுகாப்பிற்காக அனுப்பப்பட்டிருந்த அரசாங்க இராணுவமும் அதில் கூட்டுச் சேர்ந்து கொண்டிருக்கக் கூடும். தீப்பற்றி எரியும்போது அங்கு என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்பதற்காக வந்த கிருஷ்ணதாசன் உள்ளிட்ட யாழ்ப்பாண பொலிஸ் குழுவினரை மீண்டும் பொலிஸ் நிலையத்துக்குத் திரும்பிச் செல்லும்படி அச்சுறுத்தியவர்கள் அங்கு தீ வைத்துக் கொண்டிருந்த பொலிஸாருக்குப் `பாதுகாப்பு' கொடுத்துக் கொண்டிருந்த இராணுவத்தினராகத்தான் இருக்க வேண்டும்.

1994ல் நான் யாழ்ப்பாணத்தில் தீ வைப்புச் சம்பவத்தை கண்ணால் கண்ட பலரை சந்தித்து தகவல்களைச் சேகரித்துக் கொண்டிருந்த பொழுது, அந்த சாட்சியாளர்கள் நெருப்பை அணைப்பதற்காக இன்னொரு புறத்திலிருந்து தண்ணீர் பவுசர்களுடன் வந்த கடற்படையினரைப் பற்றிய தகவல்களை எமக்கு விளக்கினார்கள். அந்தத் தண்ணீர் பவுசர்களைத் திருப்பி அனுப்பியவர்கள் சிவில் உடையில் இருந்த சில ஆயுததாரிகளே. அதன்படி, அந்தச் சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாணத்தில் நடந்த சகல நாசகாரச் செயலுக்குப் பின்னாலும் அரசாங்கத்தின் வழிநடத்தல் இருந்து வந்துள்ளது. அந்த நாசகாரச் செயல்களைச் செய்தவர்கள் அப்பொழுது பொலிஸிலும், இராணுவத்திலும் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அதன் ஆதரவாளர்களே. இன்று போலவே அன்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஏற்பாடுகளைப் பாவித்து அரசாங்கம் இந்த எல்லா விடயங்களையும் ஒளித்து மறைத்து விட்டது.

# 08

## 'ஈழநாடு' காரியாலயத்தையும் அச்சகத்தையும் தீயிடுதல். !

### ஜூன் 01 நாள்

1993 ஆகஸ்ட் மாதம் யாழ்ப்பாணத்தில் நாம் கழித்த முதல் நாள் காலையில் நாங்கள் தங்கியிருந்த 'ஞானம்' ஹோட்டலுக்கு இரண்டு விருந்தினர்கள் வந்தனர். அன்றைய தினம் எம்மிடம் கையளிப்பதற்கு அன்றைய 'ஈழநாடு' பத்திரிகையின் பிரதி ஒன்று அவர்களிடம் இருந்தது. நாம் அதன் முக்கியத்துவத்தைக் கேட்டதும், அவர்கள் அதன் பக்கங்களைப் புரட்டி ஒரு கட்டுரையை எமக்குக் காட்டினார்கள். சில மாதங்களுக்கு முன் 'ராவய' என்னும் பத்திரிகைக்கு நான் எழுதிய ஒரு கட்டுரையின் தமிழ் மொழிபெயர்ப்பு அதில் இருந்தது. 1989 ஆம் ஆண்டு சீகிரியாவுக்கு அருகில் உள்ள கிராமம் ஒன்றில் இடம்பெற்ற கூட்டுப் படுகொலை தொடர்பாக 'இராணுவத்தினாரால் விதவையாக்கப்பட்ட ஒரு கிராமம்' என்ற தலைப்பில் நம் ஆய்வுகளின் அடிப்படையில் எழுதப்பட்ட ஒரு கட்டுரையே அது.

எம்மைக் காணவந்தவர்களில் ஒருவரான நிமலராஜன் மயில்வாகனம் என்பவரே அக்கட்டுரையை தமிழில் மொழிபெயர்த்திருந்தார். 'ஈழநாடு' பத்திரிகை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் யாழ்ப்பாணத்தில் மீளவும் தொடங்கப்பட்டிருந்தது. நிமலராஜன் அதில் ஒரு நிருபராக இருந்தார். ஆனால், புலிகளின் கீழ் புத்துயிர் பெற்ற 'ஈழநாடு' பத்திரிகையின் கதை முற்றிலும் வேறுபட்டது.

1981 மே 31ம் திகதி இரவு யாழ்ப்பாணத்தில் `அரசியல் பொலிஸ்' படையினால் ஏற்படுத்தப்பட்ட அழிவுகள் பற்றிய அறிக்கைகளையும், புகைப்படங்களையும் 'ஈழநாடு' நிருபர்கள் அப்போது சேகரித்துக் கொண்டிருந்தனர். கொழும்பில் வெளியிடப்பட்ட பத்திரிகைகள் அரசாங்கத்தினதும், செய்தி அதிகார சபையினதும் அழுத்தத்திற்கு உள்ளாகியிருந்த நிலையில், யாழ்ப்பாணத்தில் பத்திரிகை ஆசிரியர்கள் தங்களது நிருபர்கள் சேகரித்துக் கொண்டு வந்திருந்த தகவல்களை மறுநாள் செய்தித்தாளில் சேர்த்தனர். இதனால் ஏற்படவிருக்கும் ஆபத்துக்கள் குறித்து அறிந்திருந்த போதிலும், இந்த சவாலான அறிக்கையிடலை முற்றாகத் தவிர்த்துவிடுவது பற்றி அவர்கள் சிந்திக்கவில்லை. அத்துடன், இவ்வாறான அழிவுகள் குறித்த தகவல்களை எதிர்காலத்திற்காக அறிக்கையிட்டு வைப்பது தமது கடமையென அந்த ஊடகவியலாளர்கள் நினைத்து இருக்கக்கூடும். அந்த பிரதான அறிக்கையின் முக்கியமான உள்ளடக்கங்களுடன் அந்தப் பத்திரிகையின் பிரதான ஆசிரியர் முழுமையாக உடன்பட்டிருந்தார்.



ஈழநாடு ஆசிரியர்
எஸ்.எம். கோபாலரட்னம்

ஆனால், செய்தித்தாள் அச்சுக்குப் போகத் தயாரான போது, சுமார் மாலை 7 மணியளவில் முழு யாழ்ப்பாண நகரத்திற்குமான மின்சாரம் துண்டிக்கப்பட்டது. அது ஒரு ஆபத்திற்கான அறிகுறியாகும். 'ஈழநாடு' அச்சகத்தின் விளக்குகளும் அணைந்துபோயின. மின்சாரம் இல்லாத சந்தர்ப்பங்களில், செய்தித்தாளை அச்சிடுவதற்காக அங்கு ஒரு

ஜெனரேட்டர் இருந்தது. எனவே, பத்திரிகைக்கான அச்சுப் பணிகளை சரிபார்க்கும் பொறுப்பினை ஒரு துணை ஆசிரியரிடம் கொடுத்து விட்டு, ஏனைய ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவரும் தத்தமது வீடுகளுக்குச் சென்று விட்டனர். அவர்கள் சென்ற சிறிது நேரத்தில், காடையர்களைப் போல் படையினர் கும்பலாக 'ஈழநாடு' பத்திரிகையின் அலுவலகத்திற்க்கு உள்ளும், அதன் அச்சகத்திற்குள்ளும் திமுதிமுவென நுழைந்தனர். அந்த அநியாயக்காரர்கள் ஈழநாடு செய்தித்தாளின் அலுவலகத்திற்கு தீ வைக்கும் சந்தர்ப்பத்தில், அங்கு அச்சுப் பணிகளைச் சரி பார்ப்பதற்காக தங்கியிருந்த துணை ஆசிரியர் அக்கட்டடத்தின் மேல் மாடியில் இருந்தார்.

அச்சகத்தின் முகாமையாளர் உள்ளே இருக்கும் போதுதான் அந்த அச்சகத்திற்குத் காடையர்களால் தீ வைக்கப்பட்டது. அந்தக் காடையர்கள் அங்கிருந்த அச்சு இயந்திரங்களை எதிர்கால பாவனைக்கு எடுக்க முடியாதபடிக்கு பழைய



தீ வைத்துக் கொளுத்தப்பட்ட ஈழநாடு காரியாலயம்

டயர்களை அந்த இயந்திரங்களுக்கு அடியில் போட்டுத் தீ வைத்தனர்.

அச்சத்தால் அங்கிருந்து அவசர அவசரமாக வெளியேறிய பல அச்சக ஊழியர்களுக்குச் சொந்தமான சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் இதர வாகனங்கள் என்பன ஓரிடத்தில் குவிக்கப்பட்டு தீக்கிரையாக் கப்பட்டன. அந்தப் பத்திரிகையின் துணை ஆசிரியரும், அச்சக முகாமையாளரும் பலத்த தீக்காயங்களுடன் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த 'ஈழநாடு' பத்திரிகையானது, இலங்கையில் இருந்து வெளிவந்த ஒரு தனித்துவமான பத்திரிகையாகும். அந்த சமயத்தில் கொழும்புக்கு வெளியில் அச்சிடப்பட்ட ஒரேயொரு நாளிதழ் அதுவாகும். 'ஈழநாடு' பத்திரிகை 1959 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை அரசுக்குச் சொந்தமான கிழக்கு மாகாணத்தில் இருந்த கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் வி.கே.சி. தங்கராஜா என்பவர் அதன் ஸ்தாபகராவார். 22 ஆண்டுகளாக ஈழநாடு என்னும் அச்செய்தித்தாள் தொடர்ந்து வெளியிடப்பட்டு வந்தது.

ஜே.ஆர்.ஜெயவர்தன அரசாங்கம் எத்தனை குற்றங்களை இழைத்தாலும், அவற்றை வரலாற்றில் இருந்து மறைப்பதற்கான சக்தியும் அதற்கு உண்டு என்பதை 'ஈழநாடு' பத்திரிகை காரியாலயம் மற்றும் அதன் அச்சு இயந்திரம் என்பன அழிக்கப்பட்டமையினூடாக தமிழ் மக்கள் நன்றாகப் புரிந்து கொண்டிருப்பர். அன்று ஈழநாடு அச்சகம் தீக்கிரையாக்கப்பட்ட விதத்திலிருந்து அந்த உண்மை மேலும் தெளிவாக உறுதிப்படுத்தப்படுகிறது.

அன்று அந்த நாசகாரர்கள் 'ஈழநாடு' அச்சகத்தின் அச்சு இயந்திரங்களுக்குக் கீழே பழைய டயர்களை போட்டுத் தீ வைத்துள்ளனர். பழைய டயர்களைப் போட்டு தீ வைத்தால் அந்த தீ நீண்ட நேரம் நீடிக்கும். அவ்வாறு தீ வைத்ததன் மூலம் அந்த அச்சு இயந்திரங்களை முற்றாக அழிக்க வேண்டும் என்பதே அவர்களின் அவசியமாக இருந்திருக்கிறது என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. தனது குற்றங்களை மூடிமறைக்க ஒரு செய்தித்தாளையும், அதன் அச்சகத்தையும் தீக்கிரையாக்கும் "புத்திசாலித்தனம்" அக்கட்டத்தில் ஒரு `அரசியல் பொலிஸ்' படைக்கு எப்படி வந்தது? எனவே, எமது ஆய்வுக்குப் பின்னர் எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்தும் இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது.

அமைச்சர் காமினி திசாநாயக்கவைப் போலவே, இந்தக் குற்றங்களைப் புரிந்த சக அமைச்சர்களான ரணில் விக்கிரம்சிங்க, சிறில் மத்தியூ, பெஸ்டஸ் பெரேரா ஆகியோரும் அரசியலில் தம்மை விளம்பரப்படுத்திக் கொள்வதில் மிகப் பேராசை கொண்டிருந்தனர். குறிப்பாக அமைச்சர் காமினி திசாநாயக்க, ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவின் இரண்டு பதவிக்காலங்களின் முடிவில் தானும் ஜனாதிபதியாக வேண்டும் என்ற கனவில் இருந்தவராவார். அமைச்சர் ரணில் பிரதமர் பதவியினூடாக காமினிக்குப் பின்னால் பயணித்து அடுத்ததாக தானும் ஜனாதிபதி ஆசனத்தில் அமர்வதை நோக்காகக் கொண்டிருந்தார். தங்களின் இந்த எதிர்கால அரசியல் பயணத்திற்காக இவ்விரு அமைச்சர்களும் தமக்கென வெகுஜன ஊடக "பட்டாலியன்களை" வெகுஜன ஊடகங்களிலிருந்து தெரிவு செய்து பராமரித்து வந்தனர்.

இதற்காகவே, அமைச்சர் காமினி, வருடா வருடம் நடத்தும் 'செய்தித்தாள் விருந்து' என்பது அப்போது மிகப் பிரபலமானது. இந்த விருந்தானது சிறந்த விஸ்கிகள், குடிவகைகளில் தொடங்கி விலையுயர்ந்த ஹவானா [கியூபா] சுருட்டுக்களுடன் தான் எப்போதும் முடிவடையும். அவ்விருந்தின் முடிவில், தமக்காக "எழுதும் கனவான்களுக்கு" தனித்தனியாக பரிசுகளும் கூட வழங்கப்படும். அமைச்சர் ரணிலும் இவ்வாறான விருந்துகளை நடத்தாவிட்டாலும் தனது இமேஜை உயர்த்திக் கொள்வதற்காக, பல்வேறு வகையான சலுகைகளை வழங்கி ஒரு ஊடகவியலாளர் கூட்டத்தையே பராமரித்து வந்தார்.

அமைச்சர் சிறில் மற்றும் பெஸ்டஸ் ஆகியோருக்கு அமைச்சர் பதவிகளைத் தாண்டி பெரிதாக அரசியல் கனவுகள் எதுவும் இருக்கவில்லை. ஏனெனில், ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியில் (தேவ குலய) வஹும்புர சாதியைச் சேர்ந்தவர்களின் தலைவராக இருந்தவரே கலுவாதேவகே சிறில் மத்தியூ. அவரின் இந்த சற்று பிற்படுத்தப்பட்ட சாதியப் பின்னணியின் காரணமாக, மக்களின் வாக்குகளின் மூலம் தான் நாட்டின் ஜனாதிபதியாக வருவது என்பது அவ்வளவு எளிதல்ல என்பதை அவர் அறிந்திருந்தார். கத்தோலிக்கரான அமைச்சர் பெஸ்டஸ் பெரேராவும் நாட்டின் தலைவராக வருவதற்கான "தகுதிகள்" பெரிதாக இல்லாதவர். யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட அழிவுகளினால் தமது நற்பெயருக்கு களங்கம் ஏற்படாமல் தம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டிய தேவையும், ஆசையும் இவ்விரு அமைச்சர்களுக்கும் இருந்தது. ஆனால், எதிர்கால அரசியலுக்காக இதனை வரலாற்றில் இருந்து மறைக்க வேண்டிய அவசியமும் அவர்களுக்கு இருந்தது.

ஆகவே, அங்கு தீ வைப்பதற்கான ஆசை பெரியளவில் இருந்தது அமைச்சர் ரணிலுக்குத் தான். அவர் மூன்று பிரதான நோக்கங்களுடன் 'ஈழநாடு' பத்திரிகை அலுவலகம் மற்றும் அதன் அச்சகத்திற்கு தீ வைத்தார் என நாம் நம்புகிறோம். அந்த மூன்று விடயங்களையும் இங்கு நாம் பின்வருமாறு வரிசைப்படுத்துகின்றோம்.

இலங்கையில் இருந்த பிரதான பத்திரிகை உரிமையாளர் தான் டீ.ஏ.விஜேவர்தன. அவரது பத்திரிகை இராச்சியத்தின் இரண்டாவது தலைவர் அவரது மூத்த மகள் நாலினி [விஜேவர்தன-விக்கிரமசிங்க]. அவர் எஸ்மண்ட் விக்கிரமசிங்கவை மணந்தார். அமைச்சர் ரணிலின் தாய்மாமன் ரஞ்சித் [விஜேவர்தன] 'விஜய' பத்திரிகை நிறுவனத்தின் உரிமையாளராவார். விஜேவர்தன செய்தித்தாள் நிறுவனத்தின் 'அடி மரமாக' இருந்தது 'லேக் ஹவுஸ் பத்திரிகை [யுனைடெட் நியூஸ் பேப்பர் கம்பெனி] நிறுவனமாகும். அது 1973 ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்க அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்டதன் பின்னர், 'விஜய' பத்திரிகை நிறுவனத்தைத் தொடங்கியதன் மூலம் அவர்கள் மீண்டும் தங்கள் பரம்பரைத் தொழிலுக்குத் திரும்பினார்கள்.

1986 ஆம் ஆண்டில், ஜனாதிபதி ஜெயவர்தனவின் அரசாங்கம் டைம்ஸ் ஒப் சிலோன் செய்தித்தாள் நிறுவனத்தின் சொத்துக்களை விஜய நிறுவனத்திடம் ஒப்படைத்தது, ஏனெனில் இதுவும் முந்தைய அரசாங்கத்தால் கையகப்படுத்தப் பட்டிருந்தது. விஜய நிறுவனம் இன்று அதிகம் விற்பனையாகும் சிங்கள பத்திரிகைகளை அச்சிடுகிறது. 'லங்காதீப', 'இறிதா லங்காதீப', 'டெய்லி மிரர்' மற்றும் 'சண்டே டைம்ஸ்' உள்ளிட்ட பல பிரபலமான செய்தித்தாள்களுக்கு விஜேவர்தன சொந்தக்காரர்.

அன்றைய காலகட்டத்தில் நாட்டில் கொழும்புக்கு வெளியே அச்சிடப்பட்ட ஒரேயொரு செய்தித்தாள் 'ஈழநாடு' மட்டுமே. இது அந்த நேரத்தில் மீண்டும் கட்டியெழுப்பப்பட்ட விஜய பத்திரிகை நிறுவனத்திற்கு மட்டுமல்ல, விஜேவர்தன குடும்பத்தின் மற்றொரு நெருங்கிய உறவினரான உபாலி விஜேவர்தனவுக்கு சொந்தமான 'உபாலி' பத்திரிகை நிறுவனத்திற்கும் ஒரு அச்சுறுத்தலாகும்.


ஈழநாடு

சுதந்திர வார இதழ்

விலை சதம் 20.

சிறந்த உயர்தரமான ஒளிமிக்க
★ வெண் ★ நீல
வைரங்களுக்கு

நமது நோக்கம்

நாட்டிலே கலவரங்கள்
மீண்டும் ஏற்படமாட்டா?
முதலமைச்சர் உறுதிமொழி

முதல் இதழ்

1959ல் வெளிவந்த ஈழநாடு பத்திரிகை முதலாவது இதழ்

அந்த நேரத்தில், செய்தித்தாள் வைத்திருப்பது பணம் சம்பாதிப்பதற்கு மட்டுமல்லாது, அரசியலில் பொதுக் கருத்தைக் கையாளுவதற்கும் ஒரு வழியாக இருந்து வந்தது. இந்தப் பத்திரிகைகள் மற்றும் அவற்றின் அரசியலைப் புரிந்துகொள்வதற்கு ருவன் விஜேவர்தன ஒரு சிறந்த உதாரணமாவார். இவர் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர். அத்துடன் இவர் ரஞ்சித் விஜேவர்தனவின் மகனாவார். இவர் ஜனாதிபதி ரணிலின் மைத்துனர். விஜேவர்தன - விக்கிரமசிங்க குடும்பத்தின் அரசியல் அதிகாரத்துடன், வெகுஜன ஊடகங்களை நடாத்திச் செல்வதற்கான அடுத்த வாரிசாகவும் ருவன் விஜேவர்தனவே இருந்து வந்தார். வெகுஜன ஊடகங்களைப் பயன்படுத்தி அதிகாரத்தைப் பெறவும், அதனைத் தக்க வைத்துக் கொள்ளவும் இந்தக் குடும்ப உறவு அரசியல் பாதுகாக்கப்பட வேண்டும்.

என்வே, சுயாதீனமான பத்திரிகையொன்று தினந்தோறும் யாழ்ப்பாணத்தில் அச்சிடப்படுவது கொழும்பில் இருந்து அனுப்பப்படும் சித்தாந்தங்களை மீறும் அல்லது தடைபோடும் செயலாகும். எனவே, அதன் இருப்பு நிறுத்தப்பட வேண்டியதா யிருந்தது.

மே 31 இரவு, யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட அழிவை வெளி உலகிற்கு அறிவிக்க அப்போது 'ஈழநாடு' பத்திரிகையால் மட்டுமே முடியுமாக இருந்தது. ஜூன் 01 ஆம் திகதி மாலை, அதன் ஆசிரியர் குழு மறுநாள் செய்தித்தாளில் பிரசுரிப்பதற்காக அந்தக் குற்றச் செயல்கள் தொடர்பான புகைப்படங்களுடன் கூடிய பெறுமதியான ஒரு அறிக்கையின் தொகுப்பைத் தயாரித்தது.

James Baird reports on Eelanadu, Sri Lanka's persecuted provincial daily

# Prints from the Sinhalese ashes

"WE TRY to follow the traditions of the Manchester Guardian. We don't go in for yellow journalism," says Mr V. Shivanandan, director of Sri Lanka's only provincial paper Eelanadu. This laudable aim can cause problems: last month Mr Shivanandan was nearly killed by members of the country's police force.

Eelanadu is published in Jaffna, the northern town which is the stronghold of the island's Tamil-speaking minority. Since the mid-1970s the Tamils have been demanding a separate state of their own in the north, free from control by the country's Sinhalese majority — and, more importantly, free from persecution. The main separatist party the Tamil United Liberation Front (TULF), has been a consistent vote-winner in Tamil areas, to such an extent that it is now the second largest group in Sri Lanka's national State Assembly.

What the Tamils mean when they speak of persecution by the Sinhalese was amply demonstrated early last month. Island-wide elections for District Development Councils — the country's new form of local government — were due to take place on June 4, and the results seemed a foregone conclusion. The Government party, the UNP, would win control of councils in Sinhalese parts of the country, while the TULF would romp home in Tamil areas.

A week before the poll, the Government sent an extra 500 Sinhalese police to Jaffna to "maintain order" during the election campaign; troops were also put on stand-by. The campaign until then had, in fact, been perfectly orderly, but with the arrival of the Government forces it quickly became extremely violent.

On the night of May 31 a gang of over 200 police rampaged round Jaffna, burning houses and shops and looting the contents. Among the targets was the house of the local Tamil MP, Mr V. Yogeswaran, who was lucky to escape with his life. The TULF's headquarters was also reduced to rubble.

The following night the police continued with their campaign of destruction, burning the town's public library and its 95.000 books. The town's old market and 22 other shops were also set ablaze.

On June 3, the eve of the election, the leader of the TULF and three other Tamil MPs were arrested and detained overnight. While they were in custody, Government troops drove around the Jaffna area in jeeps, attacking a number of local residents. Three Tamils were shot dead during the night, while a number of others were injured. Intimidation continued on election day itself but, in spite of it all, TULF candidates won all 10 seats on the Jaffna council.

Sri Lanka's leading newspapers — based 300 miles away in Colombo, and, for the most part, Government controlled — carried only the most sketchy accounts of what had happened in Jaffna. Eelanadu, as the one paper which was on the spot and independent of Government interests, was in a unique position to give its readers a better service.

In its late edition of June 1, Eelanadu reported the events of the first night of destruction, promising "more details tomorrow." That night, however, Eelanadu itself became a target. At 9.30 am a group of police entered the paper's office and ordered workers to leave at once. Mr Shavanandan and his circulation manager, who were upstairs, came down to see what was going on.

"I don't know why, but we then went back upstairs," says Mr Shivanandan. "We heard steps coming and we ran into the bathroom. All of a sudden I heard two or three big blasts and the whole place was on fire. When I opened the bathroom door there was an inferno."

The two men managed to escape, but both were badly burnt. When I saw him three weeks after the event Mr Shivanandan's legs were still a dreadful blotchy mess, and his colleague wore gloves to hide his piebald hands.

Ironically, although Eelanadu was attacked as a symbol of Tamil culture, it had not openly supported the separatists who so irk the Government.

"We are a newspaper, not a viewspaper," Mr Shivanandan says. "We've been criticised by all the parties in Sri Lanka, especially the TULF. We've kept neutral: our aim is simply to provide hot, hot news."

The paper was founded as a bi-weekly in 1959 and became a daily the following year. Its circulation of 12,000 seems small but its actual readership is much higher than this: one or two copies in a village will be seen by all the inhabitants in the course of the day. At 60 cents (less than 2p) it is the country's cheapest newspaper.

Caxton would have recognised Eelanadu's production methods. All the type is set by hand — eight pages on weekdays and 12 on Sundays — and the paper is then printed and collated by hand too. This astonishing feat entails the employment of 20 compositors, compared with 10 sub-editors and five staff reporters.

Mr Shivanandan says that "we hope to modernise the press soon with rotary printing and linotype" — equipment which Fleet Street would nowadays deride as "old" technology. The paper is distributed by bicycle, and the freelance regional correspondents have to send in their stories by bus, post, or telegram.

There is no doubting Eelandu's resilience. It was back on the news-stands only four days after its office was razed. Its determination reflects the more general determination of the Tamil people not to be cowed by the Government's harassment.

"If they burn the press again," says Mr Shivanandan, "the compositors will be composing in their own homes. We will still come out. People came and cried when the press was burnt. They feel it's their paper."

*James Baird was recently in Sri Lanka.*

# Curfew in Sri Lanka

**From Our Correspondent**
**Colombo, June 2**

A state of emergency with a 5 pm to 5 am curfew was declared today in the Tamil-speaking Northern Province of Sri Lanka where police went on a rampage on Sunday assaulting residents, setting fire to buildings and looting after one policeman was killed and four were injured at an election rally near Jaffna.

The rally was held by the Tamil United Liberation Front in connexion with the Development Council elections due to be held on Thursday.

Last night the public library, which is one of the biggest buildings in Jaffna, the administrative capital of the province, was set on fire.

1981ல் யாழ்ப்பாணம் தீவத்து
கொளுத்தப்பட்டது தொட்ர்பாக
வெளிந்நாட்டு ஆங்கில
ஊடங்களின் பார்வையில்

## Emergency

The Government declared a state of emergency in the Jaffna District on 2-6-81 imposed censorship of all news emanating from the area and also a dusk to dawn curfew in the Municipal limits.

மறுபுறம், அன்று முதல் அரசாங்கத்தால் திட்டமிடப்பட்டு செய்யப்படவிருந்த ஏனைய குற்றச் செயல்களை மூடி மறைக்க வேண்டுமெனில் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் சுயாதீனமான பத்திரிகை முழுமையாக அழிக்கப்பட வேண்டும்.



**அப்போது யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த நான்கு அமைச்சரவை அமைச்சர்களில் மிகவும் கபடத்தனமான, அதேவேளை இந்த பிரதான நோக்கங்களுடன் எதிர்காலத்தை நோக்கி குறிவைக்கும் அமைச்சராக இருந்தவர் ரணில் விக்ரமசிங்கவே. எனவே, 'ஈழநாடு' பத்திரிகைக்கு தீ வைக்குமாறு உத்தரவிட்டது அமைச்சர் ரணில் தான் என்ற முடிவுக்கு நாம் வருகிறோம்.**



"யூ. என். பி. ஆதரவின்றி

வடக்கில் அபிவிருத்தியோ வேலைவாய்ப்போ கிடையாது"

அமைச்சர் ரணில் கூறுகிறார்

(சாவகச்சேரி)

"தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதிக்கம் ஒரு கிராமத்தில் இருக்கும்வரை அக்கிராமம் ஒருபோதும் முன்னேற முடியாது. அவர்களை ஆதரிப்பதால் கிராமமோ அப்பகுதி மக்களோ முன்னேற மாட்டார்கள் அவர்களது கற்றறிந்தவர்கள், தலைவர்கள்தான் முன்னேறுவார்கள்"

நாவலை இயற்றாலை கந்தசாமி கோவில் முன்றலில் திரு. எம். கணபதிப்பிள்ளை தலைமையில் நடந்த ஐ. தே. க. தேர்தல் பிரசார கூட்டத்தில் இளைஞர் வேலைவாய்ப்பு அமைச்சரும் கல்வி அமைச்சருமாகிய திரு. ரனில் விக்கிரமசிங்கா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், எதிர்வரும் மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி அங்கத்தவர்களை ஆதரிப்பீர்களாயிருந்தால் உங்கள் கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற வசதியாயிருக்கும். பொதுவாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவில்லாது வடபகுதி மக்கள் வேலைவாய்ப்போ பொருளாதார அபிவிருத்தியோ அடையமாட்டார்கள், என்றார்.

அது மட்டுமன்றி இந்த நாசகாரர்கள் யாழ். நகரத்தை மீண்டும் தீக்கிரையாக்கிய போது ஐந்து புத்தகக் கடைகளும் முற்றாகத் தீயில் எரிந்து போயின. அதில் மிக முக்கியமான புத்தகக் கடைகளில் ஒன்று 'பூபாலசிங்கம்' புத்தகச்சாலையாகும். அது மிகவும் அவசியமான வெளிநாட்டுப் புத்தகங்களை இறக்குமதி செய்து நாடு முழுவதும் விநியோகித்து வந்த ஒரு புத்தகச்சாலையாகும். அதுவும் அன்று எரிக்கப்பட்டது. சிங்களத்திலும், தமிழிலும் சோவியத் ரஷ்ய புத்தகங்களும், இந்திய புத்தகங்கள், சஞ்சிகைகள், பருவ இதழ்களும் அங்கு விற்பனைக்கு இருந்தன.

# 09

## குருநாகல் 'ஜுண்டா படை' வடக்கு நோக்கி

ஜூன் 02ம் திகதி மாலை குருநாகல்

*"காலை 11 மணிக்கு ரயில் பயணம் ஆரம்பமானது. மேலதிக பாதுகாப்புக்காக ரயிலுக்கு முன்னால் மற்றொரு ரயில் என்ஜின் ஓடிக்கொண்டிருந்தது. பயணத்தின் இடைநடுவில் 'வாக்குச்சாவடி சிரேஷ்ட அலுவலர்களுக்கான அறிவுறுத்தல்கள்' என்ற தலைப்பில் ஒரு சிறிய கையேடு பயணிகளுக்கு விநியோகிக்கப்பட்டது. அரை மணி நேரம் கழித்துப் பார்க்கும்போது, ரயில் பெட்டிகளின் தரையில் அக்கையேடுகள் ஆங்காங்கே போடப்பட்டுக் கிடந்தன. குருநாகல் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் உட்பட சில உதவி அரசாங்க அதிபர்களும், நிர்வாக சேவை அதிகாரிகள் சிலரும், அப்பிரதேச எம்.பி.க்களின் தொண்டர்களும், நகர சபை ஊழியர்களும், விவசாய சேவை அதிகாரிகளும் மற்றும் சில விசேட சேவை அதிகாரிகள், ஆசிரியர்கள் போன்றோரை உள்ளடக்கிய பலர் அப்புகையிரதத்தில் அன்று பயணித்தனர்.*

*அன்று யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்தில் ஏராளமான இராணுவத்தினர் துப்பாக்கிகள், ரிவோல்வர்கள் மற்றும் இயந்திரத் துப்பாக்கிகளுடன் நின்றிருந்தனர். குருநாகலில் இருந்து வந்த கூட்டத்தினரை வரவேற்க மாவட்ட அமைச்சர்*

*ஒருவரும் ஐ.தே.க எம்.பி. கள் சிலரும் அன்று புகையிரத நிலையத்திற்கு வருகை தந்திருந்தனர்."*

*"ரயிலில் வந்த அனைவரையும் ரயில் நிலையத்தின் முன் நிறுத்தப்பட்டிருந்த மத்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேரூந்துகளில் ஏறுமாறு ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டது. அவர்களை ஏற்றிச் சென்ற பேரூந்துகள் முதலில் யாழ்ப்பாணத்தில் உள்ள சிங்கள மகா வித்தியாலயத்திற்குச் சென்றன. ஆனால், அப்போது அங்கு இராணுவத்தினர் தங்கி இருந்ததால், அவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்த மத்திய மகா வித்தியாலயமான இந்துக் கல்லூரிக்கு கொண்டுச் செல்லப்பட்டனர். அக்கல்லூரிக்கு முன்னால் யுத்த தாங்கிகள் நிறுத்தப்பட்டிருந்தன, கல்லூரிக்குள் வேறு யாரும் இருக்கவில்லை. குருநாகலில் இருந்து வந்த கூட்டத்தினர் அங்கேயே தங்கினர்.*

*[ஜூன் 23, 1981 தேதியிட்ட 'எத்த' பத்திரிகை முகப்புப் பக்கம்]*

சம்பவம் நடந்து மூன்று வாரங்கள் கழித்து மேற்கண்ட செய்தியை எழுதியதற்காகவும், அதனுடன் தொடர்புடைய நபர்களின் பெயர்களை அங்கு குறிப்பிடாமல் விட்டதற்காகவும் நாங்கள் அப்பத்திரிகை மீது குற்றம் சுமத்தப்போவதில்லை. காரணம், ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க.) அரசாங்கம் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி செய்யும் காடைத்தனமான அரசியலை நேரடியாக எதிர்ப்பதற்கு அதன் விமர்சகர்கள் அன்று பயந்தனர். ஏனெனில், அன்று அரசாங்கம் அவர்களை திருப்பியடித்தது வெறும் வார்த்தைகளால் அல்ல, மாறாக ஆயுதம் தாங்கிய குண்டர்களைக் கொண்டே அது தாக்கியது.

எனவே, இன்று அந்த நிகழ்வுகளை வரலாற்றில் நாம் மீண்டும் பதிவு செய்ய முயற்சிப்போம்.

1981 ஜூன் 2 காலை, குருநாகல் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திசாநாயக்க ஒரு விசேட அவசரக் கூட்டத்தைக் கூட்டினார். ஜனாதிபதி ஜெயவர்தனவின் உத்தரவுக்கு அமையவே அந்த கலந்துரையாடல் நடத்தப்படுவதாக ஏனைய அதிகாரிகளிடம் அவர் தெரிவித்தார். அன்று மாலையில் மாவட்ட அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா முதலில் வந்தார். அரசாங்க அதிபர் அலுவலகத்தின் தொலைபேசியின் ஊடாக மாவட்டத்தின் ஏனைய உறுப்பினர்களுடன் பேசிய அவர், தமது தலைவரின் உத்தரவை நிறைவேற்ற அனைவரின் வரவும் இங்கு அவசியம் என்பதனை நினைவூட்டினார். அரசாங்க அதிபரின் அலுவலக அதிகாரிகள், பிரதி அமைச்சர் பெரேராவைப் பின்தொடர்ந்து, கூட்டத்தை வெற்றி பெறச் செய்வதற்கு அவசியமான மாவட்டத்தின் ஏனைய அதிகாரிகளை அழைக்க அமைச்சர் ஜயவிக்ரமவின் பின்னால் ஓடித் திரிந்தனர்.

மாலையில், குருநாகல் மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகத்தின் ஜுண்டாக்கள் [அப்போது யூ.என்.பி.யின் குண்டர்கள், ஜுண்டாக்கள் என்று அழைக்கப்பட்டனர்] அரசாங்க வாகனங்களில் வந்து கொண்டிருந்தனர். அவர்களில் குருநாகல் மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகத்தின் அனைத்து அதிகாரிகள், மற்றும் அந்த மாவட்டத்தின் அரசாங்கத் திணைக்களங்களின் தலைவர்கள், நகர, மாநகர ஆணையாளர் மற்றும் அவருக்குக் கீழ் உள்ளவர்கள், மாநகர முதல்வர் மற்றும் மாநகர சபையின் ஐ.தே.க. உறுப்பினர்கள், அந்த மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆளும் கட்சியின் உறுப்பினர்கள் என்போரும் அடங்குவர்.

ஒரு கலந்துரையாடல் என்று கூறப்பட்டாலும் கூட, ஒரு சிறிய கூட்டம் போல் அது தோற்றமளித்தது. மாவட்ட அமைச்சர் ஜயவிக்ரம பெரேரா தலைமையில் தான் கூட்டம் நடைபெற்றது. மேலதிக அரசாங்க அதிபர் திஸாநாயக்க கூட்டத்திற்கு இணைத் தலைமைத் தாங்கினார். மாவட்ட அமைச்சர் ஜயவிக்ரம பெரேரா அங்கு கூட்டப்பட்டு இருந்தவர்களை நோக்கி உரையாற்றியதுடன், அவர்களுக்கு வழங்கப்பட்ட பொறுப்புகள் குறித்தும் அவர் விளக்கினார்.

*"குருநாகல் மாவட்டத்தின் எமது கட்சி உறுப்பினர்களுக்கு அதி மேதகு ஜனாதிபதி அவர்கள் விசேட பொறுப்பொன்றை வழங்கியுள்ளார். அதனை நிறைவேற்றும் பொறுப்பை எங்கள் மாவட்டத்திற்கு வழங்கியதென்பது எங்களுக்குக் கிடைத்த ஒரு கௌரவமாகும். குருநாகல் மாவட்டம் மீதும், அதன் ஐ.தே.க ஆதரவாளர்கள் மீதும் அவர் எப்போதும் மிகுந்த அன்பும், மரியாதையும் கொண்டிருக்கிறார். அதனால் தான் இந்த வரலாற்றுப் பணி எங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல் ஜூன் 4 ஆம் திகதி நடைபெறும் என்பதை நாம் அனைவரும் அறிவோம். நாங்கள் குருநாகலில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் எமது கட்சிக்காரர்கள் எம்மை எங்கும் வெல்ல வைப்பார்கள். எனவேதான், இம்முறை யாழ்ப்பாணத்திலும் நாங்கள் எமது கட்சியை வெல்ல வைக்கப் போகிறோம். தமிழர் விடுதலைக் கூட்டணி எங்களை யாழ்ப்பாணத்தில் தோற்கடித்து எங்கள் கட்சியை ஒரு சில்லறைக் காசாக்க விரும்புகிறது. இந்தத் தமிழர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால் நீங்கள் எங்கு வெற்றி பெற்றாலும் யாழ்ப்பாணத்தில் வெற்றிபெற முடியாது என்கிறார்கள். ஏற்கனவே அவர்கள் எங்கள் வேட்பாளர்களில் இருவரைக்*

*கொன்றுள்ளனர். அதாவது, தேர்தலில் நாங்கள் வெற்றி பெறுவது ஒருபுறமிருக்க, அங்கு நாங்கள் தேர்தல் பிரசாரத்திலீடுபடக் கூட அனுமதிக்கப்பட மாட்டோம் என்பதுதான் அதன் அர்த்தம். இதை நாங்கள் அனுமதிக்க முடியாது. எமக்கு இந்த நாட்டில் ஆறில் ஐந்து பெரும்பான்மை அதிகாரத்தைக் கொண்ட அரசாங்கம் உள்ளது.  அவர்கள் விரும்பும் விதத்தில் ஆட்டம் போட அவர்களை நாங்கள் அனுமதிக்க முடியாது. "*

*"இம்முறை குருநாகலில் இருந்து போகும் நாங்கள் தான் அங்கு தேர்தல் பணி செய்யப் போகிறோம். வாக்குச் சாவடிகளையும் நாங்கள் தான் கட்டுப்படுத்தப் போகிறோம். நாங்கள் தான் வாக்குப் பெட்டிகளை மாவட்டச் செயலகத்துக்கு எடுத்துச் செல்லப் போகிறோம். நாங்கள் தான் வாக்குகளை எண்ணப் போகிறோம். பார்ப்போம் தேர்தலில் யார் வெற்றி பெறுகிறார்கள் என்று? உங்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தருவோம்.  எழுத வாசிக்கத் தெரிந்த எமது கட்சியைச் சேர்ந்த எவரையும் இந்தத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் தேர்தல் பணிகள் செய்யும் அலுவலர்களாகவும், தெரிவத்தாட்சி அலுவலர்களாகவும் நியமிக்குமாறு அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் பணிப்புரை விடுத்துள்ளார்.*

*ஆகவே, யாழ்ப்பாணத்தில் தேர்தலை நடத்துவதற்கு இம்முறை குருநாகலில் இருந்து 1500 `தேசிய வீரர்கள்` நாளை அதிகாலை 3 மணிக்கு யாழ்ப்பாணம் செல்ல வேண்டும். நாளைக்குள் 1500 பேரை  குருநாகல் புகையிரத நிலையத்திற்கு கொண்டு வர வேண்டும். தேவையான அனைத்து வசதிகளும் மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் ஏனைய அதிகாரிகளால் ஏற்பாடு*

*செய்துத் தரப்படும். மற்ற விஷயங்களைப் பற்றிப் பேசுவதற்கு முன் பயணத்திற்கு ஆட்களை ஒன்று திரட்டுவதற்காக இப்போது வாகனங்களை அனுப்புங்கள்"* என்றார்.

மாவட்ட அமைச்சர் ஜயவிக்ரம பெரேரா கூட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தினார். கூட்டத்தில் கலந்து கொண்ட அதிகாரிகளில் ஒரு பகுதியினர் ஆட்களைத் திரட்டுவதற்காக அனுப்பப்பட்டனர்.

இதற்கிடையில், அங்கு கிசுகிசுவொன்று பரவியது.

*"விடிவதற்குள் யாழ்ப்பாணம் செல்வதற்கு 1500 பேரை எவ்வாறு திரட்டுவது?"*

இதற்கு அங்கிருந்த மாவத்தகம பாராளுமன்ற உறுப்பினர் ஜி. எம். பிரேமச்சந்திர பொதுவான ஒரு பதிலை வழங்கினார்.

*"எங்கள் கட்சியில் யாரை வேண்டுமானாலும் இதைச் செய்வதற்காக நாம் எடுக்கலாம். தொழில் இல்லாத எவரும் வரலாம். இப்போது பிரதியமைச்சர் சொன்னார் அல்லவா...? எழுதப் படிக்கத் தெரிந்த எவரையும் வாக்குச்சாவடியில் நாம் தேர்தல் அதிகாரியாக்குவோம் என்றார். இது எல்லாக் காலத்துக்கும் அல்ல...., இந்தத் தேர்தல் நாள் மட்டும்தான். "*

*"போதுமான வாகனங்கள் இல்லையே."* இன்னொரு கிசுகிசு பரவியது.

இதற்கு மாவட்ட அமைச்சர் ஜயவிக்ரம பதிலளித்தார்.

"*போக வேண்டிய பாதைகளைப் போய்ப் பாருங்கள். மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு டிப்போக்களில் இருந்தும் அதற்கு உகந்த பேரூந்துகளை எடுத்துக் கொள்ளுங்கள்.*

*எம்.பி.க்களும் இப்போது புறப்படுங்கள். இல்லாவிட்டால் எமக்குத் தேவையானவர்களைத் திரட்டுவது கடினம். எப்படியாவது காலை 8 மணிக்கு குருநாகல் புகையிரத நிலையத்திற்கு வந்து சேருங்கள்."*

சுமார் ஒரு மணி நேரம் கழித்து, குழுவில் எஞ்சி இருந்தவர்களுடன் கூட்டம் மீண்டும் தொடங்கியது. இம்முறை மேலதிக அரசாங்க அதிபர் திஸாநாயக்க அக்கூட்டத்தை நோக்கி உரையாற்றினார்.

*"நாளை காலைக்குள் அரச பணிக்கான கடிதங்கள் தயாராக இருக்கும். அனைவருக்கும் அரசாங்க நிதியிலிருந்து உணவு மற்றும் கொடுப்பனவுகள் வழங்கப்படும். இந்தப் பயணத்தில் இணையும் ஒவ்வொருவருக்கும் அரசாங்க பாதுகாப்பும், ஆதரவும் உண்டு. தேவையான அனைத்தையும் வழங்குவதற்கான வழிமுறைகளைச் செய்யும்படிக்கு எனக்கு உத்தரவு வந்துள்ளது. இங்கு சட்டவிரோதமாக எதுவும் நடக்கவில்லை. யாழ்ப்பாணத்தில், ஒத்திவைக்கக் கோரி கூக்குரலிடும் தேர்தல் வாக்கெடுப்பை நாங்கள் நடத்தப் போகிறோம். நாங்கள் தெற்கைப் போலவே வடக்கிலும் ஜனநாயகத்தை நிலைநாட்டவே இதை செய்கின்றோம். ஜனநாயகத்தை பாதுகாப்பது ஒவ்வொரு அரச அதிகாரியினதும் பொறுப்பாகும். அந்தப் பொறுப்பை நிறைவேற்றவே நாங்கள் இதை செய்கிறோம். அதற்கான கடப்பாடும் எமக்கு உண்டு."*

அந்தக் கூட்டம் நள்ளிரவு வரை தொடர்ந்ததோடு இரவு 9 மணியளவில், அடுத்த நாள் காலையில் யாழ்ப்பாணத்திற்கு அனுப்புவதற்கான ஊழியர்களை சேகரிக்க திணைக்களத்

தலைவர்கள் ஜீப் வண்டிகளிலும், பஸ்களிலும் அனுப்பப்பட்டனர். அப்பகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் கட்சித் தொண்டர்களையும், தொழில் இல்லாதவர்களையும் சேர்த்துக் கொண்டு மறுநாள் காலை குருநாகல் ரயில் நிலையத்திற்கு வருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

ஜூன் 3 ஆம் திகதி காலை, குருநாகல் புகையிரத நிலையத்தில் உள்ள ஒரு புகையிரத மேடையில் ஒரு சிறப்பு ரயில் நிறுத்தப்பட்டிருந்தது. குருநாகல் மாவட்டத்தின் வாக்கெடுப்புத் தொகுதிகளுக்கு ஏற்ப அந்தப் புகையிரதத்தின் பெட்டிகள் பிரிக்கப்பட்டிருந்தன. குருநாகல், மாவத்தகம, பொல்கஹவெல, வாரியபொல, கல்கமுவ, ஹிரியால, தம்பதெனிய மற்றும் நாரம்மல ஆகிய தொகுதிகள் அங்கு பெயரிடப்பட்டிருந்தன. அரசாங்கத்தின் புகையிரதத் திணைக்களமும் இந்த "விசேட தேர்தல் நடவடிக்கையின்" ஒரு பகுதியாக மாறியிருந்தது.



நாட்டு ஜனாதிபதியின் கட்டளையை நிறைவேற்ற அவர்கள் தயாராக இருந்தனர். அன்று காலை 6 மணியிலிருந்து அரசு வாகனங்கள் மற்றும் பேரூந்துகளில் ஆட்கள் குருநாகல் புகையிரத நிலையத்தில் கொண்டு வந்து இறக்கப்பட்டனர். வாகனங்களில் ஆசனங்கள் நிரம்பும் அளவுக்கு கூட்டம் இல்லாதிருந்த போதிலும், கட்சியின் "ஜுண்டா" உறுப்பினர்கள் தங்கள் கட்சியின் தலைவரும், நாட்டின் தலைவருமானவரின் கட்டளைகளை நிறைவேற்ற கிடைத்த அந்த விசேட சந்தர்ப்பத்திற்கு தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியபடி புகையிரத நிலையத்தில் ஆங்காங்கே குழுக்களாக கூடி நின்று ஒருவரோடொருவர் சம்பாஷித்துக் கொண்டிருந்தனர்.

இந்த விசேட "ஜுண்டா படையணியில்" 1977ல் இருந்து ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் கீழ் அரசியல் நியமனங்களைப் பெற்றுக் கொண்ட அரசாங்க ஊழியர்கள் பலரும் உள்ளடங்கியிருந்தனர். அவர்களில் 1980 ஜூலை வேலை நிறுத்தத்தின் போது பணி நீக்கம் செய்யப்பட்ட அரச ஊழியர்களின் காலியிடங்களை நிரப்ப புதிதாக அரசால் நியமிக்கப்பட்டவர்களும் அடங்குவர். இது தவிர, விவசாய அதிகாரிகள், ஆசிரியர்கள், சிறப்பு சேவை அதிகாரிகள், கூட்டுறவு தொழிலாளர்கள், அரசின் ஓட்டுநர்கள், போக்குவரத்துச் சபை நடத்துநர்கள் மற்றும் பேரூந்து ஓட்டுநர்களும் இருந்தனர். அதேபோல் அரசாங்க வேலை தேடுகின்ற வேலையில்லாத இளைஞர்களும் இருந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் தங்கள் தொகுதி எம்.பி.க்கள் அல்லது தங்கள் காரியாலயத்தின் மேலதிகாரிகள் அங்கு வருகை தரும் போது தங்கள் முகங்களைக் காட்டி அவர்களைத்

திருப்திப்படுத்த அவர்களின் வாகனங்களை நோக்கி முண்டியடித்து ஓடினர்.

எவ்வாறாயினும், மேதகு ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தனவினால் குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்தவர் களிடம் கோரப்பட்ட 1500 பேர்கொண்ட அந்த "ஜுண்டா படையணியில்" யாழ்ப்பாணம் செல்வதற்காக சுமார் ஆயிரம் பேர் வரையில் புகையிரத நிலையத்தில் நின்றிருந்தனர். காலை 8.30 மணியளவில், அந்த மாவட்டத்தைச் சேர்ந்த பல பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவத்தகம பாராளுமன்ற உறுப்பினர் பிரேமச்சந்திரவுடன் வந்த குருநாகல் மாவட்ட அமைச்சரான ஜயவிக்கிரம பெரேரா புகையிரத நிலைய ஒலிபெருக்கிக்கான ஒலிவாங்கியை தன் கையில் எடுத்தார். அங்கு வருகை தந்த மற்றும் இந்த நடவடிக்கையில் கலந்து கொள்ளும் தமது கட்சிக்காரரர் அனைவரையும் கௌவரத்துடன் வரவேற்பதாகக் கூறி அவர் தன் உரையைத் தொடங்கினார்.

*"எங்கள் அரசாங்கம்தான் இப்போது ஆட்சியில் உள்ளது. இன்னும் 15 வருடங்களுக்கு எங்களை யாரும் அசைக்க முடியாது. எனவே யாருக்கும் பயப்படாமல், உங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளைச் செய்யுங்கள். இந்தத் தேர்தலை நாங்கள் யாருக்காகவும் நிறுத்த மாட்டோம். எப்படியாவது நடத்தியே தீருவோம். இந்த இடத்தில்தான் குருநாகலைச் சேர்ந்த நீங்கள் தேசிய பணியொன்றை நிறைவேற்றப் போகிறீர்கள். அதன் மூலம் நீங்கள் தேசிய நாயகர்களாக எமது வரலாற்றில் இடம் பெறப் போகிறீர்கள். அதுவும் சும்மா அல்ல, யாழ்ப்பாணத்தில் ஜனநாயகத்தை மீள நிலைநாட்டுவதற்காக. என்வே, அன்று போலவே இன்றும், நாளையும், அரசாங்கம்*

*உங்களுடனேயே இருக்கும். எனவே மன உறுதியுடன் செயல்படுங்கள்" என்றார்.*

"ஜூண்டா படையினரை" ஏற்றிய விசேட புகையிரதம் குருநாகலில் இருந்து புறப்பட காலை 11 மணியாகி விட்டது. குருநாகல் மாவட்டத்தின் மேலதிக அரசாங்க அதிபர் திஸாநாயக்க உட்பட மாவட்டத்தின் ஏனைய பல உதவி அரசாங்க அதிபர்களும் இந்த நடவடிக்கையில் அரச அதிகாரிகளின் பங்களிப்பினைப் பிரதிநிதித்துவப்படுத்து முகமாக அந்த விசேட ரயிலில் பயணித்தனர். அவர்களில் அந்த மாவட்டத்தின் ஏனைய அரச நிர்வாக சேவையைச் சேர்ந்த பல்வேறு உத்தியோகத்தர்கள் குழுவொன்றும் இருந்தது. ஒரு விசேட பெட்டியில் அந்த மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட ஊழியர்களும் அமர்ந்திருந்தனர். இந்த ரயிலின் பாதுகாப்பு மற்றும் அதன் செயல்பாட்டிற்கு இடையூறு ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டு அந்த இரயிலுக்கு முன்னால் மற்றொரு புகையிரத என்ஜினும் போய்க் கொண்டிருந்தது.

"ஜுண்டா படையணிப் புகையிரதம்" மாஹோ நகரை அடைந்ததும், அப்படையணியின் உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் காலை உணவாக ஒரு 'மீன் பணிஸ்' (மாலு பணிஸ்) வழங்கப்பட்டது. மேலும், கைச்செலவுக்கான கொடுப்பனவாக தலா 50 ரூபாவும் வழங்கப்பட்டது. அத்துடன், *'சிரேஷ்ட வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான அறிவுறுத்தல்கள்'* என்று தலைப்பிட்டு அச்சடிக்கப்பட்ட ஒரு சிறிய கையேடும் அந்த 'ஜுண்டா படை' உறுப்பினர்களுக்கு விநியோகிக்கப்பட்டது. அதைப் படிப்பதில் அதிக அக்கறையேதும் அவர்களுக்கு இருக்கவில்லை. அடுத்த நாள் யாழ்ப்பாணத்தில் தமிழர்களை

தோற்கடித்து தேர்தலில் வெற்றி பெறுவது எப்படி என்பதைப் பற்றியே அவர்கள் அனைவரும் வீறாப்பாகப் பேசிக் கொண்டிருந்தனர். சிறிது நேரம் கழிந்ததும், அந்த 'சிரேஷ்ட வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான அறிவுறுத்தல்கள்' என்ற கையேடுகள் 'ஜுண்டா படையினரின்' கால்களின் கீழ் மிதிபட்டு கீழே கிடப்பதைக் காண முடிந்தது.

இரவு 8 மணியளவில் அந்தப் புகையிரதம் யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்தை அடைந்தது. குருநாகலையில் இருந்து வந்த "ஜுண்டா படையணியை" வரவேற்க யாழ்ப்பாண மாவட்ட அமைச்சர் யூ.பி. விஜேகோனும் வேறு சில ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர்களும் வருகை தந்திருந்தனர். யாழ்ப்பாண ரயில் நிலையத்தில் அன்று ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் குவிக்கப்பட்டு ஏராளமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. புகையிரத நிலையத்தைச் சுற்றி ஆயுதம் தாங்கிய வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தன.

அத்துடன், யாழ்ப்பாண இ.போ.ச. டிப்போவிலிருந்தும் அதனை அண்டிய சில பேரூந்து டிப்போக்களிலிருந்தும் 39 பஸ்கள் அங்கு கொண்டுவரப்பட்டு யாழ்ப்பாண புகையிரத நிலையத்தை அண்டிய வீதிகளில் நிறுத்தப்பட்டிருந்தன. யாழ்ப்பாண புகையிரத நிலைய ஒலிபெருக்கியில் அவ்வப்போது சிங்களத்தில் அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. குருநாகலில் இருந்து வந்த "தேர்தல் அதிகாரிகளை" தங்குமிடங்களுக்கு அழைத்துச் செல்ல தங்கள் பகுதிக்குரிய பஸ்களில் ஏறுமாறு அந்த அறிவிப்புக்கள் மூலம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

"ஜூண்டா படையினர்" பஸ்களில் ஏறிய பின்னர், கவச வாகனங்களும் ஆயுதம் தரித்த இராணுவத்தினரும் முன்னும் பின்னும் பாதுகாப்பு வழங்கி அவர்களை முதலில் யாழ்ப்பாணத்தில் உள்ள சிங்கள மகா வித்தியாலயத்திற்கு அழைத்துச் சென்றனர். அப்போது சிங்கள மகா வித்தியாலயத்தில் இராணுவப் படைப் பிரிவொன்று தங்க வைக்கப்படிருந்தது. அதன் பின்னர் அந்த பஸ்கள் யாழ்ப்பாணத்திலிருந்த ஒரு மத்திய மகா வித்தியாலயமான இந்துக் கல்லூரிக்குக் கொண்டு செல்லப்பட்டன. இறுதியில், இந்த "ஜூண்டா படை"யினருக்கு அந்தக் கல்லூரியில் தங்குமிட வசதிகள் அளிக்கப்பட்டன. அங்கு தங்க வைக்கப்பட்ட அவர்களின் பாதுகாப்புக்காக அந்த வட்டாரத்தில் சில இராணுவ கவச வாகனங்களும் நிறுத்தப்பட்டன.

அன்றைய தினம் (ஜூன் 3) தேர்தலுக்காக யாழ்ப்பாணம் சென்ற அமைச்சர்கள் நாள் முழுவதும் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இருந்தனர். தேர்தல் ஆணையாளர் அதிகாரிகளுக்கு வழங்கும் உத்தரவுகளை அந்த அமைச்சர்கள் அங்கிருந்தபடியே அதிகாரிகளுக்குப் பிறப்பித்தனர். இந்த அமைச்சர்கள் தங்கள் உத்தரவுப்படிதான் அங்கு தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று அரசாங்க அதிபரை வலியுறுத்தினர்.

தேர்தலுக்கு முந்தைய நாள் மாலை வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்வதற்கான ஆயத்தத்துடன் சுமார் 150 அதிகாரிகள் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு வந்திருந்தனர். தேர்தல் ஆணையாளரால் வாக்களிப்பு நிலையங்களுக்குப் பொறுப்பாக செல்வதற்காக வழங்கப்பட்டிருந்த அனைத்து தமிழ் அதிகாரிகளின்

நியமனங்களையும் இரத்துச் செய்யுமாறு அமைச்சர் ரணில் விக்ரமசிங்க உத்தரவிட்டிருந்தார். யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இருந்த உப அரசாங்க அதிபர் ஒருவருக்கு அவர் உத்தரவிட்டு, 4 ஆம் திகதி காலை அந்த தமிழ் உத்தியோகத்தர்களின் நியமனங்களை இரத்து செய்தார். ஆனால், அன்று அவர்கள் பணிக்கு வந்திருந்தார்கள் என்பதை உறுதிப்படுத்தும் கடிதங்களை வழங்கவும் அறிவுறுத்தினார்.

குருநாகலில் இருந்து யாழ்ப்பாணம் சென்ற ஜூண்டா படையணியில் தற்செயலாக இணைந்து கொண்ட தற்போது உயிருடன் இருக்கும் இருவருடன் தனிப்பட்ட ரீதியில் இது குறித்து நாம் விரிவாகப் பேசினோம். அவர்களில் ஒருவர் காலியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அரசாங்க எழுதுவினைஞரான ஹபுகல டி.டப்ளியூ. சிறிமான்ன என்பவர்.

இரண்டாமவர், அப்போது குருநாகல் மாவட்டச் செயலகத்தில் பணியாற்றிய ரஞ்சித் நிமல்சிறி. அவர் பின்னர் எம்முடன் ஒரு பத்திரிகையாளராக பணியாற்றினார். சிறிமான்ன தனது *'யாழ்ப்பாணத் தேர்தல் அனுபவங்களை'* 1994ல் ராவய பத்திரிகைக்கு விபரித்தார். **'யாழ்ப்பாணத்தில் காமினி திசாநாயக்க எவ்வாறு தேர்தலை நடத்தினார்'** என்ற தலைப்பில் சிறப்பு எழுத்தாளர் என்ற ஒருவரின் பெயரில் அக்கட்டுரை வெளியிடப்பட்டது.

ரஞ்சித் நிமல்சிறி தனியாக உரையாடும் போது *'யாழ்ப்பாணத் தேர்தல் அனுபவம்'* பலவற்றைப் பற்றிக் கூறினாலும் ஒரு காலமும் அவர் அது குறித்து எதுவும் எழுதவில்லை.



ஸ்ரீலங்கா தபாலக அலுவலகத்தில் பதிவுபெற்றது

# தாக்கீதம் 7/8

வைகாசி/ஆனி — மாத இதழ் — விலை ரூபா 1-00

## மீண்டும் எரிந்தது யாழ். நகர்

- வீடுகள், கடைகள் எரிக்கப்பட்டன
- பொது நூலகம் தீயினால் முற்றாக சேதம் அடைந்தது
- 'ஈழநாடு' பத்திரிகை அலுவலகம் தீக்கிரை
- சந்தைக் கட்டிடங்கள் தரைமட்டம்
- மருந்துக் கடைகள் எரிக்கப்பட்டன

எரிக்கப்பட்ட நூலகம்

எரிக்கப்பட்ட கடைகளில் ஒருபகுதி



# செம்பதாகை

மலர் 2
இதழ்: 6—7
1981 ஆனி-ஆடி
விலை சதம்: 75
புரட்சிகர வெகுஜன ஏடு

## யூ. என். பி. ஆட்சி கட்டவிழ்த்து விட்ட
## தார்மீகப் பயங்கரவாதம்!

கடந்த மே மாதம் 31ம் திகதி தொடக்கம் யூன் 7ம் திகதி வரை யாழ் குடா நாட்டிற்குள் தார்மீகப் பயங்கரவாதம் தலைவிரித்தாடியது. திட்ட மிட்டே நடத்தப்பட்ட இப்பயங்கரவாதத்தால் கொலை, கொள்ளை, தீவைப்பு, தாக்குதல்கள், வழிப்பறி, சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டமை போன்ற வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றன. இச்சம்பவங்களின் பின்னணியில் அரசும், யூ. என். பியும் நின்றிருக்கின்றன என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது.

### பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்கு!
### மேலதிகப் படைகளை வாபஸ் வாங்கு!
### ஆணைக்குழு என்பது வெறும் கண்துடைப்பு

(6-ம் பக்கம் பார்க்க)

# 10

## மூன்றாம் நாளாகவும் பற்றி எரிந்த தீ

**ஜூன் 02 இரவு**

மூன்றாவது நாள், அதாவது ஜூன் 2ம் திகதியன்றும் பொழுது மங்கும் வேளை, மீண்டும் வன்முறைகள் தொடங்கின. யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் சுன்னாகம் பொலிசுக்கும் தெல்லிப்பளை சந்திக்கும் இடையில் பொலிஸார் நெடுஞ்சாலையில் சென்ற மக்கள் மீது காரணமில்லாமல் தாக்குதல் நடத்தத் தொடங்கினர். முதல் பார்வையில், இவை பழிவாங்கும் தாக்குதல்களாகத் தோன்றினாலும் கூட, காவல்துறை நபர்கள் அதிகாரத் துஷ்பிரயோகம் செய்வதனைக் காண முடிந்தது.

பொலிஸார் தமது உத்தியோகபூர்வ பொலிஸ் குண்டாந்தடிகள், பொல்லுகள் மற்றும் துப்பாக்கிகளையும் இந்தத் தாக்குதல் களின்போது பயன்படுத்தினர். மல்லாகம் சந்தியைச் சேர்ந்த நவரத்தினம் என்ற வர்த்தகர் இந்தத் தாக்குதல்களின் போது கொல்லப்பட்டார். அதற்கு அருகில் உள்ள கூட்டுறவுச் சங்க மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றுவிட்டு திரும்பி வந்து கொண்டிருந்த சிறுவனையும் பொலிஸார் தாக்கினர். இவர் மல்லாகம் நீதிமன்ற பதில் நீதவான் தம்பிராஜாவின் மகனாவார். காயமடைந்த சிறுவன் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டான்.

எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கத்தின் அறிக்கையின்படி, இந்தத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட நபர்களை ஆயுதம் தாங்கிய இளைஞர் குழுக்களே படுகொலை செய்ததாக சுன்னாகம் பொலிஸார் கொழும்புக்கு அறிவித்துள்ளனர். இந்த சம்பவங்கள் தொடர்பாக பிரதமர் பிரேமதாசவிடமும் தெரிவிக்கப்பட்டதாக அவர் கூறினார். ஒருவேளை அந்த நேரத்தில் யாழ்ப்பாணத்தில் நடந்த குற்றங்களுக்கு ஜனாதிபதியே தலைமை வகித்துக் கொண்டிருந்ததால், எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம், பிரதமர் பிரேமதாசவின் முகாமிடம் உதவி கோரியிருக்கலாம்.

அன்றிரவு குடிபோதையில் இருந்த பொலிஸார் சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் இருந்த கடைகளை முதலில் கொள்ளையடித்தனர். பின்னர் அவற்றைத் தீ வைத்துக் கொளுத்தினர். பொலிஸார் அன்று யாழ்ப்பாணக் கடைகளில் கொள்ளையடித்த பொருட்கள் பொலிஸாரின் தங்கு விடுதியில் குவிந்து கிடந்தன.

இதேவேளை, அன்றிரவு யாழ்ப்பாண நகரை நாசம் செய்து கொண்டிருந்த பொலிஸார் மானிப்பாய் வீதியில் இருந்த மொத்த வியாபார நிலையமான பிள்ளையார் ஸ்டோர்ஸுக்கும் தீ வைத்தனர். அங்கிருந்த அரிசிக் களஞ்சியம், குளிர்பானக் களஞ்சியம் ஆகியவற்றையும் அவர்கள் தீயிட்டனர். பிள்ளையார் ஸ்டோர்ஸுக்கு சொந்தமான இரண்டு லாரிகள், இரண்டு வேன்கள் மற்றும் ஒரு மோட்டார் வாகனத்திற்கும் அவர்கள் தீ வைத்தனர். அன்று இரவு, யாழ்ப்பாண மருத்துவமனை வீதியில் இருந்த மிகப் பெரும் மருந்தகம், புஷ்பா நகைக்கடை, முருகன் ஸ்டோர்ஸ், உஷா கிரீம் கேபின், ஆதம் ஜி பாய் சந்தை, ஒரு மரத் தளபாடக் கடை, மற்றும் ஏழு கடைகள் அடங்கிய கடைவரிசை

ஆகியவை அனைத்தும் அழிக்கப்பட்டன. அந்தப் பொலிஸ் காடையர் கூட்டம் இந்தக் கடைகளுக்குத் தீ வைப்பதற்கு முன்பு அவற்றைக் கொள்ளையடிக்கவும் மறக்கவில்லை.

இக்குற்றச் செயல்கள் யாழ்ப்பாணத்தை எவ்வாறு பாதித்தது? அதிலும் குறிப்பாக, அந்தச் சமூகத்தின் மேட்டுக்குடியினரை எவ்வாறு பாதித்தது? ஏனெனில், எப்போதும் யாழ்ப்பாணத்தின் மேட்டுக்குடியினர் சாதியை மிக உச்சத்தில் வைத்திருந்தனர். அவர்களுக்கு தலா இரண்டு வீடுகள் இருந்தன. யாழ்ப்பாணத்து வீடு, கொழும்பு வீடு என  தனித்தனியாக வைத்திருப்பது இந்தப் பிரபுக்களின் பாரம்பரிய வழக்கமாக இருந்து வந்தது. இவர்கள் வியாபாரம் அல்லது வேலைவாய்ப்புக்காக வார நாட்களில் கொழும்பில் வசித்து வந்தனர். வார இறுதி நாட்களிலும் விடுமுறை நாட்களிலும், இறுதிச் சடங்குகளுக்காகவும், கோவில் திருவிழாக்களுக்காகவும் யாழ்ப்பாணம் செல்வார்கள்.

இந்த உயரடுக்கில் பெரும்பான்மையானவர்கள் வெள்ளாள சாதியைச் சேர்ந்தவர்கள். இந்த 'வெள்ளாளர்கள்' பாரம்பரிய நில உரிமையாளர்கள். நன்கு படித்தவர்கள். அவர்களுக்கு குறைந்த பட்சம் தமிழும் ஆங்கிலமும் தெரியும். இதன் விளைவாக அவர்கள் மற்ற தமிழ்ச் சாதியினருடன் நெருங்கிப் புழங்கிப் பழகவில்லை. அவர்களிடையே திருமணக் கொடுக்கல் வாங்கல்கள்  செய்து கொள்ளவில்லை. சாதிய ஒடுக்குமுறைக்கு உள்ளானவர்களுக்கு தாகத்திற்காக ஒரு வீட்டிலிருந்து மட்டுமல்ல, ஒரு கிணற்றிலிருந்து கூட தண்ணீர் அள்ளுவதற்கு அவர்களால் அனுமதிக்கப்படவில்லை.

இந்த உயரடுக்குச் சமூகமானது தமது கலாசார கூறுகளையும் பழக்கவழக்கங்களையும் மிகக் கண்டிப்பாக பாதுகாத்தது.

அவர்கள் கொழும்பில் ஷேர்ட் கோட் அணிந்து வாழ்ந்தாலும் 'யாழ்தேவி'யில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் போது ரயிலில் வைத்தே வேட்டிக்கு மாறினர். இந்தியத் தமிழ் நாட்டுத் 'தமிழை' அவர்கள் ஏளனத்துடன் பார்த்தார்கள். ஆங்கிலம் கலந்து பேசும் சென்னைத் தமிழை, உலகின் பழமையான மொழிகளில் ஒன்றான திராவிட மொழி மற்றும் அதன் கலாசாரத்தை அவமதிப்பதாக அவர்கள் பார்த்தனர். 'யாழ்ப்பாணத் தமிழ் மொழியை தமிழ் நாடும் கூட உயர்வாக கௌரவமாகப் பார்த்தது. அவர்கள் கலப்பில்லாமல், சிறப்பான உச்சரிப்புடன் தமிழ் பேசும்போது உலகில் எந்தப் பகுதியில் வேண்டுமானாலும் அவர்களைத் தனியாக அடையாளம் காண முடியும். அவர்களது அந்த மொழி, அவர்களின் கலாசாரத்தை மட்டுமல்ல, சாதித்துவத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தியது..!

அதுவரை 'ஈழக் கோரிக்கை' என்பது இந்த மேட்டுக்குடியினரின் சித்தாந்தமாகவோ, முழக்கமாகவோ இருக்கவில்லை. அரசியலில் ஈடுபட்ட இந்த மேட்டுக்குடியினரில் ஒரு சிறு பிரிவினர் சமூக அதிகாரத்திற்கு மேலதிகமாக அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்காக அரசியல் அரங்குகளில் அதைப் பற்றிப் பேசினர். அவர்கள் 'புது டில்லி' யின் ஆதரவைக் கோரவுமில்லை. அப்போதைய தமிழக முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் கூட அவர்களின் அரசியல் கதாநாயகனாக இருந்து வரவில்லை. அவர்கள் கொழும்பு ஆட்சியில் நம்பிக்கைக் கொண்டிருந்தனர். அவர்கள் கொழும்பின் கட்டுப்பாட்டை விரும்பி அதற்குக் கீழ்ப்படிந்தனர்.

1958 ம் ஆண்டிலும் மற்றும் 1977ம் ஆண்டிலும் தமிழர்களுக்கு எதிரான கலவரங்கள் நடந்தன. ஆனால், மீண்டும் அவ்வாறான கலவரங்கள் நடக்கும் என்று அவர்கள் நம்பவில்லை. இதன்

காரணமாகவே, அந்தக் காலத்தில் 'ஈழப் போராட்டம்' என்பது ஒரு சில சிறிய ஆயுதக் குழுக்களுக்குள் மட்டுப்படுத்தப் பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் ஜெயவர்தனவின் ஜுண்டா படையினர் செய்த குற்றச் செயல்கள், அந்தச் சமூகத்தில் தலைமைப் பதவிகளில் இருந்து அதை வழிநடத்திய மேட்டுக்குடி சமூகத்தை அவமதிக்கும் செயலாக இருந்தது. அது அவர்களின் சமூக அதிகாரத்திற்கு ஒரு சவாலாக அமைந்தது. வடக்கின் கட்டுப்பாடு அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டு பிற சாதியினருக்கு மாற்றப்படுவ்து போன்ற ஒரு முயற்சியாக இருந்தது.

அன்று அந்த உத்தியோகபூர்வ காடையர்கள் அங்கு ஏழைகளின் வீடுகளுக்கு தீ வைக்கவில்லை. அந்த உயர் மேட்டுக்குடியினரின் வியாபார நிலையங்களையே கொளுத்தினர். அவர்களின் சொத்துக்களையே கொள்ளையடித்தனர். அவர்களின் கலாசாரத்தின் கிரீடம் போல் அமைந்திருந்த யாழ். நூலகமும் எரிக்கப்பட்டது. 'ஈழநாடு' பத்திரிகையும், அதன் அச்சகமும் அவர்கள் வாழ்வின் கழுத்தில் அணிந்திருந்த பொன் பதக்கமாகத் திகழ்ந்தன. அவையும் அழிக்கப்பட்டன. அடுத்து வரும் நாட்களில் இந்தக் குற்றச் செயல்கள் எப்படிச் செய்யப்பட்டன என்பதைத் தொடர்ந்தும் படியுங்கள்! ஏனெனில் அவை ஒரு பெரிய எதிர்கால யுத்தத்துக்கு கட்டியம் கூறுவதாக அமைந்திருக்கும்.

# 11

## தீ வைப்புகள் சிங்களக் கண்களின் பார்வையில்

நாட்டின் அப்போதைய ஆட்சியாளர்களின் வழிகாட்டல் மற்றும் அரசாங்கத்தின் பாதுகாப்பு என்பவற்றின் அனுசரணையோடு யாழ்ப்பாணத்தில் எட்டு நாட்களாக நடந்த அந்தக் குற்றச் செயல்களை 'எத்த' (உண்மை) என்ற பத்திரிகை மட்டுமே வெளியிட்டது. அவசரகாலச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டிருந்த செய்திக் கட்டுப்பாடு நீக்கப்பட்டதன் பின்னரே அவர்களுக்கும் அந்த அறிக்கைகளை வெளியிடுவதற்கான வாய்ப்புக்கள் கிடைத்தன 1981 ஜூன் 5 ஆம் திகதி யாழ்ப்பாணம் சென்ற 'எத்த' பத்திரிகையின் விசேட நிருபர்கள் அங்கு நடந்த பொலிஸ் பயங்கரவாதத்தின் பின்னரான யாழ்ப்பாண நிலைமை பற்றி பின்வருமாறு செய்திகளை வெளியிட்டனர்.

***வடக்கில் கவிந்த புகை மூட்டத்திலிருந்து...***

***`யாழ்ப்பாணத்திற்கு நாங்கள் ஐந்தாம் திகதி வந்தபொழுது, தமது தினசரி பணிகளுக்காக நடமாடித் திரியும் மக்களையும், அடிக்கடி அங்குமிங்கும் ஓடும் வாகனங்களையும் கொண்ட வழமையானதொரு நகரத்தை அங்கு நாம் காணவில்லை. மாறாக, வெறிச்சோடிய தெருக்களைக் கொண்ட ஒரு நகரத்தையே அங்கு நாம் கண்டோம். தொடர்ச்சியாக எரிந்து அழிந்து போன கடைத்***

*தெருக்கள் வழியாக நாங்கள் நடந்து சென்றபோது, அங்கு இன்னமும் நெருப்பு  எரிந்து கொண்டிருந்ததனைக் காணக் கூடியதாக இருந்தது.*

*அபிவிருத்திச் சபைத் தேர்தல் நடைபெற்ற ஜூன் 4 ஆம் திகதி இரவு, கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு ரயிலில் சென்று,  மறுநாள் காலை, அதாவது 5ஆம் திகதி காலை யாழ். புகையிரத நிலையத்தில் இருந்து நகரத்திற்குப் போக ஒரு பஸ்ஸைப் பிடிக்கும் நோக்கத்துடன் புகையிரத நிலையத்திலிருந்து வெளியே வந்த எமக்கு முழுமையாக வெறிச்சோடிப் போன ஒரு நகரத்தையே காணக் கிடைத்தது. பொதுவாக ரயில் நிலைய வாசல் முழுவதும் வாகனங்கள் நிறுத்தப்பட்டிருக்கும்.*

*ஆனால், அன்று அங்கு அந்த நேரத்தில் எந்த வாகனமும் இருக்கவில்லை. பேரூந்துகள் மற்றும் தனியார் பேரூந்துகள் என்பவற்றின் இயக்கமும் முற்றிலுமாக முடக்கப்பட்டிருந்தன. யாழ்ப்பாணத்தில் எங்கு பார்த்தாலும் காணக்கிடைக்கின்ற சைக்கிள்களில் போவோர் வருவோரையும் காணக் கிடைக்கவில்லை. எப்போதாவது தெருவில் நடந்து செல்லும் ஓரிருவரைத் தவிர பொதுமக்கள் யாரும் வீதிகளில் நடமாடவில்லை. யாழ்ப்பாண நகரின் ஒவ்வொரு வீதியிலும் ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் நிறைந்த ஜீப் வண்டிகள், ட்ரக்குகள், பேரூந்துகள் மற்றும் ஆங்காங்கே நிறுத்தப்பட்டிருந்த இராணுவப் படையினரையுமே நாங்கள் பெரும்பாலும் கண்டோம்.*

*யாழ்ப்பாண வைத்தியசாலை வீதியில் இருந்த பல கடைகள் தீயில் எரிந்து சாம்பலாகி நாசமாகியிருந்தன. யாழ்ப்பாண*

*மத்திய பஸ் தரிப்பிடத்திற்கு முன்னால் இருந்த கடைகளும் அவ்வாறே எரிந்து நாசமாகியிருந்தன. யாழ்ப்பாண நகரில் பத்திரிகைகள் விற்பனை செய்யும் பிரதான புத்தக விற்பனை நிலையங்களில் ஒன்றான பூபாலசிங்கம் புத்தகக் கடையும் இந்தக் கடைத் தொடரிலேயே அமைந்துள்ளது.*

*5 ஆம் திகதி காலை நாங்கள் அங்கு சென்றபோது, அந்தப் புத்தகக் கடையின் வியாபாரிகள் பிரதான வீதியின் ஓரத்தில் எரிந்து சாம்பலாகிப் போன தமது கடையின் முன்னால் வைத்து அன்றைய தின செய்தித்தாள்களை விற்றுக் கொண்டிருந்தனர். தங்களுடைய புத்தகக் கடை எரிக்கப்பட்டதால், அங்கிருந்த 11 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள புத்தகங்கள் மற்றும் பொருட்கள் எரிந்து நாசமாகிவிட்டதாக அந்த வியாபாரிகள் எங்களிடம் கூறினர். நாங்கள் அங்கு சென்றபோது ஆசுபத்திரி வீதியில் இருந்த பல கடைகள் தீயில் எரிந்து நாசமாகியிருந்தன.*

*அப்போது யாழ்ப்பாணத்தில் பழைய சந்தையைப் பார்த்த எவருக்கும் அநுராதபுரத்தில் உள்ள பழைய புராதன இடிபாடுகள் தான் நினைவுக்கு வரும். தீயினால் எரிந்து சாம்பலாகிப் போன யாழ். பழைய சந்தையில் மரத் தூண்களும், பழைய கல் தூண்கள் மற்றும் சில இரும்புத் தூண்கள் மட்டுமே மீதியாகக் காணப்பட்டன. யாழ்ப்பாணத்தின் புதிய சந்தை கட்டடத்திலும் அவ்வாறே பல கடைகள் தீக்கிரையாக்கப்பட்டு சேதமடைந்திருந்தன. நாங்கள் அங்கு சென்ற போதும் கூட சந்தைக்கு முன்னால் பாய் மாரின் எரிந்த கடைகளின் இடிபாடுகளிலிருந்து இன்னும் புகை எழுந்து கொண்டிருந்தது.*

*அந்தக் கடை வரிசைகளில் இருந்த பொருட்கள் உட்பட அவற்றின் பெறுமதி பல மில்லியன் ரூபாய்கள் இருக்கும் என அந்தக் கடை உரிமையாளர்கள் எம்மிடம் கூறினர்.*

*நகரின் சில தெருக்களில், பல பெரிய கடைகளின் கதவுகள் திறந்திருந்த போதிலும், அங்கு பொருட்கள் எதுவும் காணப்படவில்லை. அவை திருடர்களால் உடைக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டது போல் காட்சி தந்தன. யாழ்ப்பாண நகரில் கடைகள் எந்த அளவிற்கு அழிக்கப்பட்டன என்று சொன்னால், தீயிட்டுக் கொளுத்தப்படுவதற்கு முன்னர் அந்த இடங்களில் என்ன இருந்தன என்பதைக் கூட அனுமானிக்க முடியாத அளவிற்கு அவை எரிந்து சாம்பலாகியிருந்தன. யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் உள்ள குடிபான வகைகளின் உற்பத்தி நிலையம், ஒரு அரிசி ஆலை உள்பட ஏராளமான கடைகளும் தீயினால் எரிந்து நாசமாகியிருந்தன.*

*வட பகுதியின் செய்தித்தாளான "ஈழநாடு" பத்திரிகை நிறுவனமும் தீயினால் அழிக்கப்பட்ட இன்னொரு இடமாகும். அதன் மேல் தளம் முற்றிலும் சேதமடைந்து இருந்தது. அங்கிருந்த 4 அச்சு இயந்திரங்களும் தீயினால் எரிந்து நாசமாகியிருந்தன. அச்சுக் கோர்க்கும் எழுத்துக்கள் அனைத்தும் உருகி, அக்கட்டடத்தின் அடித்தளம் முழுவதும் சிதறி, உருகிய ஈயத் துண்டுகள் மட்டும் எஞ்சிக் கிடந்தன. அதன் ஊழியர்களின் சைக்கிள்களும் எரிக்கப்பட்டு இருந்ததுடன், அக்காரியாலயத்தின் நாற்காலிகள், மேசைகள் உட்பட அனைத்து அலுவலக ஆவணங்களும் அழிக்கப்பட்டு தீயினால் எரிந்து சாம்பலாகியிருந்தன.*

*யாழ்ப்பாணப் பொது நூலகம் தீயிட்டு எரிக்கப்பட்ட பின்னர் எரிந்த கட்டடப் பகுதிகள் மட்டும் மீதமிருந்த போதிலும், அனைத்து புத்தகங்களும், புத்தக அலமாரிகளுடன் எரித்து அழிக்கப்பட்டிருந்தன. எரிக்கப்பட்ட நூலகத்தின் காணக் கிடைத்த விசேட அம்சம் என்னவென்றால், புத்தகங்கள் இருந்த பக்கம் மட்டும் தீயினால் முற்றாக எரிந்து நாசமாகியிருந்ததுடன், புத்தகங்கள் வாசிப்பதற்கான பகுதியிலிருந்த மேசைகள் மற்றும் நாற்காலிகள் மட்டுமே மீதமாக இருந்தன. இதனால் யாழ்ப்பாண நூலகம் என்று ஒன்று அங்கு இருந்தது என்று சொல்வதற்காகவாவது பெயருக்கு ஒரு புத்தகம் கூட மீதம் இருக்கவில்லை. இந்த நூலகம் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் அமைந்துள்ளது. அதற்கு அருகில் இருந்த சனசமூக நிலையமும் எரிக்கப்பட்டிருந்தது.*

*யாழ்ப்பாண மெயின் வீதியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகமும், அதனருகில் இருந்த கடைகளும் தீக்கிரையாக்கப்பட்டிருந்தன. அதற்கு அருகிலிருந்த மருத்துவர் ஒருவரின் வீடும் தீக்கிரையாக்கப்பட்டிருந்தது.*

*யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் வீடும் போரில் அகப்பட்டு சிதைந்த கட்டடம் போல் காட்சியளித்தது. பாராளுமன்ற உறுப்பினரின் வீட்டின் அனைத்து சுவர்களும் இடிந்து தரைமட்டமாகி இருந்ததுடன், அவருடைய வீட்டின் அனைத்து உடமைகளும் தீயில் எரிந்து நாசமாகியிருந்தன. அவரது தோட்டத்தில் ஒரு மாமரத்தின் அடியில் ஒரு நாற்காலி மட்டுமே எஞ்சியிருந்தது. அவரது*

***வீட்டு முற்றத்தில் இருந்த வாகனம் ஒன்றும் எரிந்து அழிந்து போயிருந்தது.***

***சுன்னாகத்தின் பழைய சந்தையும் அவ்வாறே எரிக்கப்பட்டிருந்தது. சுன்னாகம், காங்கேசன்துறை நகரங்களில் இருந்த கடைகளும் தீயில் எரிந்து நாசமாகியிருந்தன. இந்தத் தீயிடல் சம்பவங்களையும், அழிவுகளையும் தொடர்ந்து வடக்குப் பகுதியின் எல்லா இடங்களிலும் அனைத்து கடைகளும் மூடப்பட்டிருந்தன. மக்கள் பெரும் அச்சத்துடனேயே காணப்பட்டனர்.***

*[ஜூன் 11, 1981 செவ்வாய்க்கிழமை 'எத்த' பத்திரிகையின் முதல் பக்கம்]*

# 12


## சர்வசன வாக்குரிமை தினக் "களியாட்டத்" தயாரிப்புகள்

**ஜூன் 03ம் திகதி யாழ்ப்பாண கச்சேரி**

*"யாழ்ப்பாண நூலகம் தீக்கிரையாக்கப்பட்ட அதே வாரத்தில்தான் யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலும் நடைபெற்றது. மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல்கள் ஜே.ஆர். ஜெயவர்தனவின் அதிகாரப் பகிர்வுக்கான முறைமையாகக் கூறப்பட்டது. மிகவும் அமைதியற்ற ஒரு குழப்பமான சூழலில் அந்தத் தேர்தல் நடத்தப்பட்டது. யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் முன்வைத்த நிகழ்ச்சிநிரலை அரசாங்கம் நிராகரித்தது. அரசாங்க அதிபரால் தேர்தல் பணிக்கு நியமிக்கப்பட்ட அதிகாரிகள் அதிலிருந்து நீக்கப்பட்டனர். அவர்களுக்குப் பதிலாக தெற்கிலிருந்தும், நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்தும் கொண்டு செல்லப்பட்ட முற்றிலும் அந்நியமானவர்களால் அந்த இடங்கள் நிரப்பப்பட்டன. யோகேந்திரா துரைச்சாமி அமைச்சர்களான காமினி திசாநாயக்க மற்றும் சிறில் மத்தியூ ஆகியோரின் கட்டளைகளுக்கு பணிய வைக்கப்பட்டார். தெரிவத்தாட்சி அலுவலர்களை மாற்ற வேண்டும் என்று அவர்கள்*

***கடுமையாக வலியுறுத்தினர். அரசாங்க அதிபர் அமைச்சர்களின் கோரிக்கையை நிராகரித்தபோது, ஜனாதிபதி ஜெயவர்தன அவரை அழைத்து இவ்வாறு அச்சுறுத்தினார். "துரைசாமி, நீர் நியமித்த அதிகாரிகளை மாற்றாவிட்டால், உமது தலை திருப்பப்படும்."***

*['My Diplomat', (Biography of Yogendra Duraiswamy) யோகேந்திர துரைசாமியின் வாழ்க்கை வரலாறு - சிவநந்தினி துரைசாமி, 2000]*




சட்டத்தை மீறுமாறு நாட்டின் ஜனாதிபதியினால் அறிவுறுத்தல் கொடுக்கப்பட்டபோது அதனை மறுத்த மாவட்ட அரசாங்க அதிபர் யோகேந்திரா துரைசாமியிடம் *'உமது தலை திருப்பப்படும்'* என்று ஜே.ஆர்.ஜெயவர்தன சொன்னதன் அர்த்தம் என்ன? அவர் வேலையில் இருந்து நீக்கப்படுவார் என்பதா? அல்லது 'கழுத்தைத் திருகிக் காட்டுகிறேன்' என்று சிங்களத்தில் சொல் வழக்கில் உள்ள `கொல்லப்படுவீர்' என்பதா?

இதைப் புரிந்து கொள்வதற்கு அன்றைய தினம் யாழ். மாவட்டச் செயலகத்தில் என்ன நடந்தது என்பதை நீங்கள் வாசிக்க வேண்டும்.

3ம் திகதி காலை, நான்கு அமைச்சர்களும் கச்சேரிக்குச் சென்றனர். அவர்களை அரசாங்க அதிபர் யோகேந்திர துரைசாமி அன்புடன் வரவேற்றார். ஏனெனில், அவரை யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபராக நியமித்த ஜனாதிபதி ஜெயவர்தனவினாலேயே அவர்கள் அங்கு அனுப்பப்பட்டடு இருந்தனர். ஆனாலும், அங்கு வந்திருந்த அமைச்சர்களின் நடத்தை சற்று வித்தியாசமானதாக இருந்தது. அவர்கள் அரசாங்க அதிபர் அலுவலகத்துக்குள் மட்டுமின்றி மற்றைய மூத்த அதிகாரிகளின் அலுவலகங்களுக்கு உள்ளேயும் பலாத்காரமாக நுழைந்தனர். தேர்தலை நடத்தும் தெரிவத்தாட்சி அதிகாரிகளது மட்டுமின்றி, தேர்தல் பணிக்காக பொறுப்பில் இருந்த ஏனைய இளநிலை அதிகாரிகளினது பெயர்ப் பட்டியல்களையும் அவர்கள் கோரினர்.

எனினும், தேர்தல் கடமைகளின் உத்தியோகபூர்வ தலைமைப் பொறுப்பில் இருப்பவர் தேர்தல் ஆணையாளராவார். அப்போதிருந்த தேர்தல் ஆணையாளர் எம்.ஏ. பியசேகர, மாவட்ட அரசாங்க அதிபர் யோகேந்திரா துரைசாமியால் முன்மொழியப்பட்ட தேர்தல் கடமைகளுக்கான அனைத்து அதிகாரிகளின் பெயர்களுக்கும் ஏற்கனவே ஒப்புதல் அளித்திருந்தார். தேர்தல் சட்டங்களுக்கு அமைய நாட்டின் ஜனாதிபதியால் கூட அவற்றை மாற்ற முடியாது. இதை யாழ். அரசாங்க அதிபர் துரைசாமி நான்கு அமைச்சர்களுக்கும் மிகப் பணிவாக விளக்கினார்.

1994 ஆம் ஆண்டு நாம் மேற்கொண்ட ஆய்வுகளுக்கு இணங்க யாழ்ப்பாணக் கச்சேரியைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் விவரித்ததன்படி, அங்கு வந்திருந்த அமைச்சர்கள் தேர்தல் சட்டங்களை ஒரு பொருட்டாகவே மதிக்கப் போவதில்லை என்பது மாவட்ட அரசாங்க அதிபர் யோகேந்திரா துரைசாமிக்கு தெளிவாக விளங்கியது. நன்கு பயிற்சி பெற்ற மற்றும் அனுபவம் வாய்ந்த இலங்கை வெளியுறவு சேவை அதிகாரியாக இருந்த யோகேந்திரா துரைசாமி தனது பொறுப்பை முறையாக நிறைவேற்றுவதற்கு அந்த அமைச்சர்களிடம் மன்றாட வேண்டியிருந்தது. ஜனாதிபதியின் மருமகனான அமைச்சர் ரணில்தான் எந்தவித மரியாதையும் இன்றி மிகக் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களை பாவித்தவராவார். அவர் அந்த அனுபவம் வாய்ந்த அதிகாரியிடம் மிகவும் மரியாதைக் குறைவாகப் பேசினார்.

*"உன்னை நியமித்த நபருக்கு ஒரு கோல் எடு.... ஜனாதிபதிக்கு கோல் எடு"* என்று அவர் உத்தரவிட்டார்.



மாமனார் ஜே.ஆரும் மருமகன் ரணிலும்

யாழ்ப்பாணக் கச்சேரி தொலைபேசி இணைப்பகத்தின் ஊடாக ஜனாதிபதியின் செயலாளர் W.M.P.B.மெனிக்திவெலவை தொலைபேசியில் தொடர்பு கொள்ள துரைசாமி அழைப்பைப் பதிவு செய்தார். அப்போது யாழ்ப்பாணக் கச்சேரியில் மயான அமைதி நிலவியது. என்னதான் நடக்கப் போகிறதோ என்பதை அங்கிருந்த ஊழியர்கள் திகிலுடனும், சந்தேகத்துடனும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

சில நிமிடங்களில் ஜனாதிபதியின் செயலாளர் மணிக்திவெல தொலைபேசியில் பேசினார். திரு. யோகேந்திரா துரைசாமி பதிலளித்தார். துரைசாமி, தனது அலுவலகத்தில் நான்கு அமைச்சர்கள் இருப்பதாகவும், தேர்தலை எவ்வாறு நடத்துவது என்பது குறித்து அவர்கள் தன்னை அறிவுறுத்துவதாகவும், இது சட்டவிரோதமானது என்பதால் ஜனாதிபதியின் ஆலோசனை தனக்கு தேவை என்றும் கூறினார். இதற்குப் பதிலளித்த மணிக்திவெல, ஒரு நொடியில் ஜனாதிபதியை துரைசாமியுடன் தொடர்புபடுத்துவதாக கூறினார். மேலும் அவரைத் தொடர்ந்து தொலைபேசியில் இருக்குமாறும் அவர் அறிவுறுத்தினார்.

சில நிமிடங்களில் ஜனாதிபதி ஜெயவர்தன தொலைபேசியில் வந்தார். மாவட்ட அரசாங்க அதிபர் துரைசாமி ஜனாதிபதி ஜெயவர்தனவிடம் அங்கு நிலைமையையும், அமைச்சர்களின் கோரிக்கையையும் விளக்கினார். இதைக் கேட்ட ஜனாதிபதி, தொலைபேசியை அமைச்சர் ரணிலிடம் கொடுக்குமாறு உத்தரவிட்டார். தொலைபேசி அமைச்சர் ரணிலின் கைகளுக்கு மாற்றப்பட்டது. மறுநாள் யாழ்ப்பாணத்தில் தேர்தலை எவ்வாறு தான் நடத்தப் போகிறேன் என்பதை ரணில் தன் மாமனாராகிய ஜனாதிபதிக்கு விளக்கியிருக்க வேண்டும். அப்போதுதான் துரைசாமிக்கு என்ன நடக்கப் போகிறது என்பதே புரிந்தது.

ஜனாதிபதியியான தன் மாமாவுடன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்த அமைச்சரான மருமகன் ரணில் மீண்டும் துரைசாமியிடம் தொலைபேசியை ஒப்படைத்து, ஜனாதிபதி அவருடன் மேலும் பேச விரும்புகிறார் என்பதை குறிப்பால் உணர்த்தினார்.

அந்த நேரத்தில் ஜனாதிபதி பிறப்பித்த உத்தரவுகள், மாவட்ட அரசாங்க அதிபர் துரைசாமி தேர்தல் பணிகளைச் செய்தபோது மட்டுமல்ல, தன்னுடைய அரச பணி வாழ்க்கையிலேயே ஒரு நாட்டின் அரச தலைவரிடமிருந்து மட்டுமல்ல ஒரு மோசமான தாதாவிடம் இருந்து கூட கேட்கத் தகாத கட்டளைகளாக இருந்தன. இந்த சம்பவங்களுக்கெல்லாம் பின்னர் அவர் அரச பணியிலிருந்தே விடை பெற்றுக் கொண்டார்.

1991 ஆம் ஆண்டில், யோகேந்திரா துரைசாமியின் அகால மரணத்திற்கு முந்தைய அவரது வாழ்க்கை வரலாறு, 'My Diplomat' என்ற பெயரில் சிவனந்தனி துரைசாமி அவர்களால் 2000 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. ஆங்கில மொழி மூலம் புலனாய்வு தகவல் அடிப்படைகளை வைத்து தனது ஊடக அறிக்கைகளை எழுதும் ரங்க சந்திரரத்ன, யாழ்ப்பாணக் கச்சேரியில் இருந்த பழைய அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு 2013 இல் இவ்வாறு எழுதினார்.

***`இந்த இடத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் யோகேந்திரா தன்னால் நியமிக்கப்பட்ட தேர்தல் அதிகாரிகளை மாற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தார்! அப்போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கேர்ணல் சி.ஏ. தர்மபால கச்சேரியில் இருந்த அந்த அறிக்கைப் புத்தகத்தில் பின்வருமாறு எழுதினார்.***

***"1981 ஜூன் 04 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைபெறவுள்ள அபிவிருத்தி சபைத் தேர்தலுக்கான வாக்களிப்புக்களை முறையாக நடத்துவது தொடர்பான பாதுகாப்பு நிலைமைகளை நான் ஆராய்ந்தேன். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கேர்ணல் சி.ஏ.தர்மபால ஆகிய நான், தேர்தலை முறையாக நிகழ்த்துவதற்காக, 1981ஆம் ஆண்டு அவசரகால விதிகளின்படி எனக்கு வழங்கப்பட்டு உள்ள அதிகாரங்களுக்கு இணங்க யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு இவ்வாறு உத்தரவிடுகிறேன். தெரிவத்தாட்சி அதிகாரி என்ற வகையில், நீங்கள் திட்டமிட்டபடி நியமிக்கப்பட்ட வாக்களிப்பு நிலையத்திற்குப் பொறுப்பான அலுவலர்களின் நியமனங்களை இரத்து செய்து, அந்தப் பதவிகளுக்கு புதிய உத்தியோகத்தர்களை நியமிக்க வேண்டும். இதனை உண்மை என்று இத்தால் நான் உறுதிப்படுத்துகிறேன்.***

*(File DDC Elections, Jaffna)*

*[Sunday, October 13, 2013 Burning of the Jaffna Library: Tears and toil of a district secretariat By Ranga Chandrarathne]*

அதிலிருந்து நடந்தவற்றை நாங்கள் எழுதுவதைவிட சமகால அறிகைகளை அடிப்படையாகக் கொண்டு இங்கு நாம் முன்வைப்பது வாசகர்களுக்கு அதிக நம்பகத்தன்மையை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும்.

**அ.அமிர்தலிங்கம்:**

***"பிரதி சபாநாயகர் அவர்களே, தேர்தலுடன்  தொடர்புடைய நடந்து முடிந்த நிகழ்வுகள் பற்றி பேச நான் விரும்பவில்லை. யாழ்ப்பாணத்தின் தெரிவத்தாட்சி அதிகாரி மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளரின் விவகாரங்களில் தலையிட்டு ஜனநாயகத்தை சீர்குலைத்த சில பொறுப்பு வாய்ந்த அமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையில் வாக்களிக்க நாங்கள் உத்தேசித்துள்ளோம் என்பதை உங்களுக்குச் சொல்கின்றோம்.  அந்த தேர்தல் முடிவுகள் இன்னும் அறிவிக்கப்படவில்லை என்பதால் நான் இன்று அதைப் பற்றி பேசப் போவதில்லை. அந்த வாக்குகளை எண்ணும்படி தேர்தல் அதிகாரியிடம் கூறுவதற்கு தேர்தல் ஆணையர் முடிவு செய்துள்ளதையும் நான் அறிவேன் . "***

*1981 ஜூன் 09 ஆம் திகதி ஹன்சாட் அறிக்கை*

இது தொடர்பாக "எத்த" பத்திரிகை ஜூன் 9 அன்று ஒரு ஆசிரியர் தலையங்கத்தை எழுதியது. செய்தி கட்டுப்பாட்டு அதிகாரி சரத் அமுனுகம அதை அச்சிடுவதற்கு  தடை விதித்தார். ஆனால் செய்தித் தடை நீக்கப்பட்டவுடன், அது ஜூன் 11 அன்று மீண்டும் வெளியிடப்பட்டது. இதுதான் அந்த ஆசிரியர் தலையங்கம்.

**யாழ். தேர்தல் முடிவுகளை மறைக்க அனுமதிக்காதீர்.**

***அபிவிருத்தி சபைத் தேர்தல் நடந்து ஐந்து நாட்கள் ஆகிவிட்டன. யாழ்ப்பாணத் தேர்தல் முடிவுகள் இன்னும் அறிவிக்கப்படவில்லை.  சர்வசன வாக்குரிமையின் 50 ஆண்டு நிறைவு குறித்து வீறாப்பு பேசும் இந்த வேளையில்,***

*இலங்கை உலகிற்கு காட்டக்கூடிய ஒரு பெரும் சாதனையாக இது உள்ளது. அத்துடன் யாழ்ப்பாணத்தில் தேர்தலை நடத்தியபோது நிகழ்ந்ததாக பதிவான மோசடிகளையும் அதே சாதனை பட்டியலில் சேர்க்க வேண்டும். இலங்கைத் தேர்தல் வரலாற்றில் இவ்வாறான மோசடியை நாம் ஒருபோதும் கேள்வியுற்றதில்லை.*

*தேர்தல் தொடர்பாக நிறைவேற்றப்பட வேண்டிய சட்ட ஏற்பாடுகள் சரியான முறையில் பூர்த்தி செய்யப்படாததால் யாழ்ப்பாணத்தின் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படாமல் இருக்கிறதென்று யாழ்ப்பாணத்திற்கு பொறுப்பான மாவட்ட அரசாங்க அதிபர் கூறியதாக வானொலியில் கேட்கக் கிடைத்தது. எவ்வாறான சட்ட ஏற்பாடுகள் அங்கு நிறைவேற்றப்படவில்லை என்பது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளரோ அல்லது தெரிவத்தாட்சி அதிகாரியோ எந்தவித உத்தியோகபூர்வ அறிக்கையையும் வெளியிடவில்லை. எனவே, எந்தவொரு அமைச்சருக்கும் அடிபணியாமல் பாராளுமன்றத்திற்கு மட்டும் நேரடியாக பொறுப்புக்கூற வேண்டிய நிலையிலுள்ள தேர்தல் ஆணையாளருக்கு இது ஒரு மிகப் பெரிய அவமானம் என்பதனை வருத்தத்துடன் சுட்டிக்காட்ட வேண்டும்.*

*தேர்தல் திணைக்களத்திடமிருந்து எவ்வித அறிக்கையும் கிடைக்காவிட்டாலும், யாழ்ப்பாணத்தில் நடந்தது என்ன என்பது தொடர்பாக சுயாதீன வட்டாரங்கள் மூலம் அறியக் கிடைத்துள்ளது. இது தொடர்பில் சமூக உரிமைகள் பாதுகாப்பு முன்னணியினால் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதம் நான்கு விடயங்களைச் சுட்டிக் காட்டுகிறது. அது இன்றைய நாளிதழில் வேறொரு*

*இடத்தில் பிரசுரமாகியுள்ளது. அதில் உள்ளதை விடவும் யாழ்ப்பாணத்தில் பாரதூரமான முறைகேடுகளும், ஊழல்களும் இடம்பெற்றுள்ளதாக அறியக் கிடைத்துள்ளது.*

*எமது பிரதிநிதிகள் அங்கு போய் மேற்கொண்ட தகவல் ஆய்வுகளின் அடிப்படையிலும், யாழ்ப்பாணத் தேர்தலுக்குப் பொறுப்பாக இருந்த சில தேர்தல் அதிகாரிகள் வெளிப்படுத்திய தகவல்களின் அடிப்படையிலும் அவை பற்றி மேலும் தெரிய வந்துள்ளன. அதில் முக்கிய விடயம் என்னவென்றால், யாழ்ப்பாணத்தில் தேர்தலை நடத்துவதற்கு பொறுப்பாக இருந்தது யாரென்றால், தேர்தல்கள் திணைக்களத்தின் அதிகாரிகள் அல்ல, மாறாக ஐக்கிய தேசியக் கட்சியின் சில அமைச்சர்களே. சில சந்தர்ப்பங்களில், தேர்தல் ஆணையாளரால் நியமித்து அனுப்பப்பட்ட தேர்தலுக்குப் பொறுப்பான அதிகாரிகளுக்குப் பதிலாக, குறித்த அமைச்சர்களால் வெளியிலிருந்து கொண்டு வரப்பட்ட ஐ.தே.க. கட்சிக்காரர்களுக்கு திடீர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.*

*வாக்கெடுப்பு முடிவடைந்த பின்னர், சில வாக்குப் பெட்டிகள் கச்சேரிக்குக் கொண்டுச் செல்லப்படாமல், வெளியில் இருந்து சென்ற ஐ.தே.கட்சியின் காடையர்கள் தங்கியிருந்த யாழ்ப்பாண இந்துக் கல்லூரிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் அறிக்கைகள் கிடைத்துள்ளன. அப்பெட்டிகள் வழமையான நடைமுறையான பொலிஸ் பாதுகாப்புடன் கொண்டு செல்லப்படாமல், ஐ.தே.க. குண்டர்களின் பாதுகாப்பில் கொண்டு செல்லப்பட்டுள்ளன.*

*எல்லாவற்றையும் விட மிக ஆபத்தான செய்தி என்னவெனில், இடைநடுவில் வாக்குப் பெட்டிகள் திறக்கப்பட்டு, வாக்குகள் ஐ.தே.க குண்டர்களால் அழிக்கப்பட்டு, அவர்கள் தங்கள் விருப்பப்படி புதிய வாக்குகளைப் பதிவு செய்துள்ளதுடன், வாக்குச்சாவடிக்குப் பொறுப்பாகவிருந்த தேர்தல் அதிகாரிகளால் தயாரிக்கப்பட்ட அறிக்கைகளையும் அதற்கேற்ப மாற்றியமைத்துள்ளனர் எனவும் தெரிய வருகிறது. தேர்தல் ஆணையாளர் இதுவரை பதில் சொல்ல முடியாமல் இருப்பது இதனால் தானா?*

*எவ்வாறாறிருப்பினும், இந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாணத் தேர்தல் இரத்து செய்யப்படுமா இல்லையா என்பது நீதிமன்றத்தில் எழுப்பப்பட வேண்டிய கேள்வி என்பதுடன், அதற்கான தீர்மானம் நீதிமன்றத்தால் எடுக்கப்பட வேண்டியதொன்று என `சமூக உரிமைகள் பாதுகாப்பு முன்னணி` சுட்டிக்காட்டியுள்ளது. என்வே எதையும் காரணமாகக் காட்டி தேர்தல் முடிவை அறிவிக்காமல் இருக்க தேர்தல் ஆணையருக்கு எந்த உரிமையும் இல்லை.*

*தம்மிடம் வந்து சேரும் பொழுது, சில வாக்குப் பெட்டிகளின் வாக்குகள் எண்ணப்படவில்லை என்றும், அதனால் தேர்தல் முடிவுகளை அறிவிக்க முடியவில்லை என்றும் தெரிவத்தாட்சி அலுவலர் கூறினால், `சமூக உரிமைகள் பாதுகாப்பு முன்னணி` சுட்டிக்காட்டுவது போல, அவற்றை எண்ணி, முன்னர் எண்ணப்பட்ட வாக்குகளுடன் சேர்த்து முடிவுகளை வெளியிடுமாறு தேர்தல்கள் ஆணையாளர் உத்தரவிட வேண்டும்.*

*அவ்வாறு செய்யாதிருப்பது அவர் தமது கடமையை அலட்சியம் செய்வதாகக் கருதப்படும். தேர்தல் முடிவுகளை வெளியிடுவதைத் தவிர்ப்பதற்கு தேர்தல்கள் ஆணையாளருக்கோ அல்லது தெரிவத்தாட்சி அலுவலருக்கோ சட்டப்படி எந்த அதிகாரமும் இல்லை. அவ்வாறாயின், முடிவுகளை அறிவிக்காதிருப்பது அப்பட்டமான சட்ட மீறலாகும். என்றாவது ஒரு நாள் அவர்கள் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும் என்பதை மறந்துவிடக் கூடாது.*

*தேர்தலின் சட்டபூர்வ தன்மை, மற்றும் தேர்தலை நடாத்துவதில் சட்ட ஏற்பாடுகள் ஒழுங்கு முறையாக பின்பற்றப்பட்டதா இல்லையா என்பது பற்றி நீதிமன்றங்கள் தீர்மானிக்க வேண்டும் என்பதால், `சமூக உரிமைகள் பாதுகாப்பு முன்னணி` சுட்டிக்காட்டுவது போல் தேர்தல் அதிகாரிகள் நீதிமன்றத்தின் பணிகளை தமது கைகளில் எடுத்துக்கொள்வது பற்றி எவ்வகையிலும் சிந்திக்கக் கூடாது. அவர்கள் செய்ய வேண்டியது, தேர்தலை நடத்தி, தேர்தல் நடத்தியதன் பின்னர் சட்டத்தின் விதிமுறைகளுக்கேற்ப அதன் முடிவுகளை அறிவிக்க வேண்டியது தான்.*

*யாழ்ப்பாணத்தில் அபிவிருத்தி சபைத் தேர்தல் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் பெருமையடித்துக் கொள்ளுவதைப் போலவே அவர்களின் பெருமையான பீற்றல்களை நாம் காலம் காலமாக எம் செவிப்பறைகள் வலிக்கும்வரை கேட்டுள்ளோம். மறுபுறம், இலங்கையில் சர்வசன வாக்குரிமையின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு (ஏதோ சர்வசன வாக்குரிமை ஐ.தே.க.வால் தான்*

*பெற்றுக் கொடுக்கப்பட்டது என்பது போல) அவர்கள் இப்போது பெருமெடுப்பில் கூச்சலிடுகிறார்கள். அரசாங்கங்கள் அமைக்கப்படுவதும், மாற்றப்படுவதும் புரட்சிகள் மூலம் அல்ல, ஜனநாயக தேர்தல்கள் மூலமே என்றும், அந்த வகையில் இலங்கை ஒரு இணையற்ற சாதனையை நிகழ்த்தியுள்ளது என்றும் அவர்கள் பெருமையாகப் பேசுகின்றனர்.*

*அத்துடன், தங்கள் தேர்தல் பிரசாரங்கள் ஒரு ஈ வந்து குந்தும் அளவிற்குக் கூட அழுக்குப் படாதவை என்றும் அவர்கள் கூறுகிறார்கள். இவ்வாறான அவர்களின் தற்பெருமைகளுக்கு மத்தியில், யாழ்ப்பாண அபிவிருத்தி சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி செயற்பட்ட விதம் குறித்து முழு நாடும் துர்நாற்றம் வீசுகிறது. இந்த துர்நாற்றம் உலகம் முழுவதும் பரவுவதை ஜெயவர்தனவின் செய்திப் பிரசார அதிகாரிகளால் கூட தடுக்க முடியாமல் இருக்கும்.*

*இவ்வளவு கீழ்த்தரமான வேலைகளைச் செய்த பிறகும், அபிவிருத்தி சபைத் தேர்தலில் அமோக வெற்றி பெற்றுவிட்டீர்கள் என்று உங்களை நீங்களே புகழ்ச்சிக்கு உள்ளாக்கிக் கொள்வதை விட மிகப்பெரிய வெட்கக்கேடு வேறு எதுவும் இருக்க முடியுமா?*

*எவ்வாறாயினும், ஐக்கிய தேசியக் கட்சி என்ன கூறினாலும், என்ன செய்தாலும், தேர்தல் ஆணையாளர் தனது பொறுப்பை நிறைவேற்றுவார் என நாம் நம்புகிறோம். அவர், தேர்தல் ஆணையாளர் என்ற பதவியை வகிப்பது ஐ.தே.க.வுக்காக அல்ல, நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவுமே.*

***எனவே, யாழ்ப்பாணத்தில் தேர்தலை நடத்தும் போது சில சட்ட விதிமுறைகள் உரிய முறையில் நிறைவேற்றப்படவில்லை என்று அவர் கூறினால் அவை என்ன என்பது குறித்து விரிவான அறிக்கையை நாட்டுக்கு சமர்ப்பிக்க வேண்டியது அவரது கடமையாகும். அதனை அறியும் உரிமை மக்களுக்கும் உண்டு.***

***அதேபோல், சட்ட விதிமுறைகள் பற்றிய விடயம் தொடர்பாக அதிகம் சிரமமெடுக்காமல் அந்த முடிவுகள் என்ன என்பதை அறிவிக்க வேண்டிய பொறுப்பு ஒரு தேர்தல் ஆணையருக்கு உள்ளது. முடிவுகள் எல்லாம் அறிவிக்கப்பட்டவுடன், சட்ட ரீதியாக செய்ய வேண்டியதை அந்த விடயத்தில் ஆர்வம் உள்ளவர்கள் செய்வார்கள்.***

*(9.6.1981 அவசரகாலச் சட்டத்தின் கீழ் தணிக்கை அதிகாரியால் வெட்டப்பட்ட 'எத்த' பத்திரிகை ஆசிரிய தலையங்கம்)*

**03 ஆம் திகதி இரவு**

அன்றிரவு, ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த அமைச்சர்களான காமினி திசாநாயக்க, ரணில் விக்கிரமசிங்க, சிறில் மத்தியூ மற்றும் பெஸ்டஸ் பெரேரா ஆகியோர் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில் தங்க வைக்கப்ப்ட்டிருந்த "ஜூண்டா படையினரை" நோக்கி உரையாற்றுவதற்கு அங்கு வந்தனர். ஜூண்டா படையின் அங்கத்தவர்கள் பயணக் களைப்பையும் மறந்து, பிரபல நடிகர்களைப் பார்ப்பதற்கு குழுமுகின்ற இளைஞர் குழுவைப் போல அந்த அமைச்சர்களை சூழ்ந்து கொண்டனர்.

அவர்களில் பெரும்பாலானோர் மிகவும் அந்த சக்திவாய்ந்த அமைச்சர்களிடம் தமது முகங்களைக் காட்டி தமக்கான புள்ளிகளைப் பெற விரும்பினர். அரசாங்க வேலைகள் மற்றும் ஒப்பந்தங்களைப் பெறுவதற்கு எளிதான வழி இதுதான் என்று அவர்களுக்கு நன்கு தெரியும். இதையடுத்து, நான்கு அமைச்சர்களும் அந்த ஆதரவாளர் கூட்டம் புடை சூழ இந்துக் கல்லூரியின் மண்டபமொன்றுக்குச் சென்றனர்.

அமைச்சர் காமினி திசாநாயக்க இந்த அமைச்சர்கள் குழுவின் தலைவராக இருந்தார்.அந்தத ் `தேசியக் களப்பணிக்கு' வருகை தந்த குருநாகல் மாவட்ட கட்சி ஆதரவாளர்களுக்கு அவர் முதலில் நன்றிகளைத் தெரிவித்தார். பின்னர் அவர் அவர்களுக்கு உரியதான பொறுப்பை விளக்கினார்.

***"தற்போது இங்கு நிலவும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் அதிகாரத்தை, ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றாமல் யாழ்ப்பாணத்தை அபிவிருத்தி செய்ய முடியாது. நாளையிலிருந்து யாழ்ப்பாண குடாநாட்டின் நிலைமையை நாம் மாற்றப் போகிறோம். நாம் புதிய யாழ்ப்பாணத்தை கட்டப் போகிறோம். நாளைய தேர்தலில், யாருக்கும், எதற்கும் பயப்படாமல், சகலரும் உங்களுக்கு கொடுக்கப்பட்ட வேலையை செய்யுங்கள். இது தொடர்பான எந்த பொறுப்பையும் அரசு சார்பில் நாங்கள் ஏற்றுக் கொள்வோம். அதிமேதகு ஜனாதிபதி எங்களை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பியதும், உங்களை யாழ்ப்பாணத்திற்கு வருமாறு அழைத்ததும், இங்கு நடப்பவை தொடர்பான பொறுப்பை அவர் ஏற்றுக் கொண்டுள்ளார் என்பதால்தான்.***

அவர்களுக்கு வழங்கப்பட்ட எந்தவொரு பொறுப்பையும் ஏற்று பணியை முறையாக மேற்கொள்ளும்படியும், அதன் சகல பொறுப்புக்களையும் ஏற்க அரசு தயாராக உள்ளது என்றும் காமினி திசாநாயக்க கூறினார். அவரது பேச்சின் முடிவில், ***'நாங்கள் தயார்'*** என்று ஒரே குரலில் அந்த அரசியல் ஆதரவாளர்கள் மத்தியில் இருந்து ஒரு வெற்றிக் கோஷத்துடன் பதில் கிடைத்தது.

The Eelanadu — ஈழநாடு — திங்கட்கிழமை 15-6-81

2

## வரிவிளம்பரம்

தேவை

விற்பனைக்கு

★ பாராளுமன்றத்தில்

# "தேர்தல் உத்தியோகத்தர்கள் என்ற போர்வையில் காடையர் வந்தனர்"

## 'அமிர்' சுமத்திய குற்றச்சாட்டு

கொடுமையிலும் கொடுமை

'ஈழநாடு' அலுவலகம்

மாவிப்பாய் வீதியில் நிகழ்ந்தவை

விளம்பர அறிவித்தல்

பின்னுறுகிக் கட்டளைபற்றிய அறிவித்தல்

(8-ம் பக்கம் பார்க்க)

மாவட்ட அபிவிருத்திசபை நிர்வாகத்தில்

# மாவட்ட அமைச்சரிடமே முழு அதிகாரமும் இருக்கும்

## கிராம மக்களுக்குப் 'புதுயுகம்' ஏற்படும் என்றும் கூறுகிறார் அமைச்சர் விமலா

(சித்தன்கேணி)

'மாவட்டசபை உறுப்பினர்களை அரசாங்கம் நியமிக்கமுடியாது. ஆனால் அரசாங்க எம். பி.யான மாவட்ட அமைச்சரிடம்தான் முழு அதிகாரமும் இருக்கும். அதேநேரத்தில் மக்களால் தெரிவு செய்யப்படும் மாவட்ட சபை உறுப்பினர்களும் அதிகாரம் உள்ளவர்களாக இருப்பார்கள். மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தல் முடிந்ததும் கச்சேரி அமைப்பு நீங்கிவிடும். மாவட்ட அபிவிருத்திச்சபைமூலம் கிராம மக்களுக்கு புதுயுகம் ஏற்படும்.'

இவ்வாறு கிராமஅபிவிருத்தி அமைச்சர் திருமதி விமலா கன்னங்கரா சித்தன்கேணி மாதர் கிராமமுன்னேற்றச் சங்க மண்டபத்தில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பு உபசார விழாவில் உரையாற்றுகையில் கூறினார்.

சித்தன்கேணி மாதர் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவி திருமதி பேரின்பநாயகி சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அமைச்

[8 ம் பக்கம் பார்க்க]

# 13

## நாடு முழுவதும் அவசரகால நிலை பிரகடனம்.

ஜூன் 03 ஆம் திகதி யாழ்ப்பாணம்

**காமினி திசாநாயக்க, காணி, காணி அபிவிருத்தி மற்றும் மகாவலி அமைச்சர்:**

***" எனக்கும் கைத்தொழில் அமைச்சர் சிறில் மத்தியூவுக்கும் எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் உரிய விடயங்களை முன்வைக்க நாம் தயாராக இருக்கின்றோம். யாழ்ப்பாணத்தில் எம்.பி.யின் வீட்டுக்கு என்ன நடந்தது என்பதை நாங்கள் பார்த்தோம். இதுபோன்ற சம்பவம் ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கோ அல்லது நாட்டின் குடிமகனுக்கோ நடக்கக் கூடாது. இதற்காக யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினரிடம் மன்னிப்பு கேட்க வேண்டுமாயின் அரசாங்கத்தின் சார்பில் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். எதிர்காலத்தில் இது போன்றவை மீண்டும் நடக்க நாங்கள் அனுமதிக்க மாட்டோம்.***

*[1981 ஜூன் 9ம் திகதி பி.ப. 3.00 மணிக்கு கூடிய பாராளுமன்றத்தின் ஹன்சாட் அறிக்கை]*

எவ்வாறெனினும், ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் ஒரு தேர்தலை நடத்துவத்ற்கு தயாராகி வருவதாகத் தோன்றியது. அரசாங்கம் ஜூன் 03 அன்று முழு நாட்டையும் அவசரகால நிலைமையின் கீழ் கொண்டு வந்தது. அரசாங்கம் அன்றைய தினம் யாழ்ப்பாணத்தில் மாலை 5 மணி முதல் காலை 6 மணி வரை ஊரடங்கு உத்தரவை அமுல்படுத்தியது. ஊரடங்குச் சட்டத்தின் கீழ், யாழ்ப்பாண வீதிகளில் ஆயுதம் தரித்த பொலிஸாரும், இராணுவத்தினரும் மட்டுமே இருந்தனர். அன்றிரவு அரசாங்கம் யாழ்ப்பாணத்தை ஊரடங்கு உத்தரவின் கீழ் கொண்டு வந்தது பலருக்குத் தெரியாது. என்வே, அன்றிரவு யாழ்ப்பாண வீதிகளில் சிலர் கொல்லப்பட்டனர். அவ்வாறு கொல்லப்பட்ட சிலரின் சடலங்கள் ஆங்காங்கே வீதிகளில் கிடந்தன. ஊரடங்குச் சட்ட மீறலே இந்த கொலைகளுக்குக் காரணமாக இருக்க முடியும்.

அன்றைய தினம் இரவு 8.30 மணியளவில் விவசாய அலுவலரான பரமேஸ்வரம் கோப்பாயில் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டார். சுமார் ஒரு மணி நேரம் கழித்து, பரமேஸ்வரனின் சடலம் அவர் கைது செய்யப்பட்ட இடத்திலிருந்து நூறு யார் தூரத்தில் கோப்பாய்-நீர்வேலி வீதியில் கண்டுபிடிக்கப்பட்டது. அவர் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

இதற்கு சிறிது நேரம் கழித்து ஒரு சலவைத் தொழிலாளியும் அவரது இளம் வயது மகனும் தங்கள் வேலையை முடித்துவிட்டு சைக்கிளில் வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தனர். அரசு இரவில் ஊரடங்கு உத்தரவு பிறப்பித்திருப்பது அவர்களுக்குத் தெரியாது. இதையடுத்து ஜீப்பில் வந்த பொலிஸார் அவர்களை சைக்கிளில் இருந்து இறக்கினர். பின்னர் சைக்கிளை பற்றைக்குள் தூக்கி வீசி விட்டு தந்தையும், மகனும் ஜீப்பில் ஏற்றப்பட்டனர். சிறிது

நேரத்தில், சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில் தந்தையின் உடல் சாலையோரத்திலும், இளம் மகனுடைய உடல் சில நாட்கள் கழித்து ஒரு பற்றைக்குள் வீசப்பட்டுக் கிடந்ததும் கண்டுபிடிக் கப்பட்டது.

இதே நாள் அதிகாலை 2.45 மணியளவில், நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் சிவசிதம்பரத்தின் தேர்தல் அலுவலகத்தை இராணுவக் குழுவொன்று சுற்றி வளைத்தது. அநேகமாக பாராளுமன்ற உறுப்பினரைக் கைது செய்வதே அவர்கள் நோக்கமாக இருந்திருக்கக் கூடும். அதிகாலையில் அங்கு தேர்தல் பணிக்காக வந்திருந்த மக்கள் ஓட்டம் பிடித்தனர். இராணுவ அதிகாரிகள் ஓடியவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். திருகோணமலையில் உள்ள கடற்படை பயிற்சி பாடசாலையில் பயிற்சி பெற்ற பாலஜோதி என்னும் இளைஞன் அங்கு திண்ணையில் தூங்கிக் கொண்டிருந்தார். அன்று இராணுவத்தினர் நடத்திய அந்த துப்பாக்கிச் சூட்டில் பாலஜோதி கொல்லப்பட்டார்.

அன்றைய தினம் இரவு 8 மணியளவில் காங்கேசன்துறை வீதியில் சென்ற அனைத்து மக்களையும் சுன்னாகம் மற்றும் காங்கேசன்துறை பொலிஸார் கண்மூடித்தனமாக தாக்கினர். இந்தத் தாக்குதல்களில், நவரட்ணம் என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தை கொல்லப்பட்டார். வீதியால் சென்று கொண்டிருந்த சுன்னாகம் நீதிமன்ற பதில் நீதவான் சட்டத்தரணி தம்பிரத்தினத்தின் 15 வயது மகன் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தினர். பலத்த காயமடைந்த அந்தச் சிறுவன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தான்.

காங்கேசன்துறையில் ஆயுதம் தரித்த 100 பொலிஸார் அடங்கிய குழுவொன்று 'செல்லையாவின்' கடையை கூட்டமாகக் கொள்ளையடித்தனர். பின்னர் அந்தக் கடை இருந்த வரிசையில் இருந்த அனைத்துக் கடைகளையும் தீ வைத்துக் கொளுத்தினர். செல்லையாவுக்குச் சொந்தமான அந்தக் கடை முற்றிலுமாக சூறையாடப்பட்டு பின்னர் தீயிட்டு அழிக்கப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் அபிவிருத்தி சபை வேட்பாளரான தியாகராஜாவின் கடையும் அங்கு இருந்தது. அதுவும் தீக்கிரையானது. அதே இரவில், காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக இருந்த ஸ்டுடியோவுக்கும் பொலிஸார் தீ வைத்துக் கொளுத்தினர்.

இந்தத் தேர்தலுக்கு முதல் நாள் இரவு அரசாங்கப் படைகள் மற்றும் பொலிஸார் மேற்கொண்ட குற்றச்செயல்கள் தொடர்பான அறிக்கையை ஜூன் 9 அன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த எதிர்க்கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கம், *“சர்வசன வக்குரிமையின் 50 வது பொன் விழாவை தற்போதைய அரசாங்கம் இவ்வாறுதான் கொண்டாடுகிறதா”* என்று கேள்வி எழுப்பினார். இதன் மூலம் மக்கள் மத்தியில் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கையை ஏற்படுத்த முடியுமா என்றும் அவர் மேலும் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் இந்த விபரங்களை முன்வைத்த மற்றும் அதற்கு மேலதிக தகவல்களை வழங்கிய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை, ஆளும் கட்சி எம்.பி.க்கள் அனைவரும் சாடுவதும், அவர்களை நோக்கி கூச்சலிடுவதும், அவர்களை எள்ளி நகையாடுவதுமாகவே இருந்தனர். அங்கு உரையாற்றிய,

யாழ்ப்பாணத்தில் குற்றச் செயல்களை வழிநடத்தியவர்களுள் பிரதான தலைவராக இருந்த அமைச்சர் காமினி திசாநாயக்க, நாம் இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட பத்தியில் சுட்டிக்காட்டியபடி, யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் வீடு எரிக்கப்பட்டமைக்காக மன்னிப்புக் கோரினார். ஆனால், "**எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நடக்க நாங்கள் அனுமதிக்க மாட்டோம்."** என்று அமைச்சர் வாக்களித்திருந்தாலும், சரியாக இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அதையும் விட மோசமாக நாடு முழுவதும் அதே போன்ற நிகழ்வுகள் மிகக் கொடூரமாக நடந்தேறின.

# 14

# எதிர்க்கட்சித் தலைவரும், எம்.பி.க்களும் கைது

ஜூன் 04 அதிகாலையில் யாழ்ப்பாணம்

**"பிரதி சபாநாயகர் அவர்களே, எங்களை சிறையில் அடைக்கும் முடிவை எடுத்தவர்கள் யார் என்பதை நான் உங்களுக்குச் சொல்கிறேன். இந்த முடிவு ஒரு தனி நபரால் எடுக்கப்பட்டதல்ல. இரண்டு அமைச்சர்கள், ஒரு பிரதியமைச்சர், அமைச்சரவையின் செயலாளர் மற்றும் பிரிகேடியர் வீரதுங்க ஆகியோரே கூட்டாக இந்தத் தீர்மானத்தை எடுத்தனர். இந்த முடிவு எடுக்கப்பட்ட போது இவர்கள் அனைவரும் அங்கிருந்தனர். அவர்களிடமும் கௌரவ உறுப்பினரிடமும் நான் கேட்க விரும்புகின்றேன். கௌரவ உறுப்பினர் அவர்களே, நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் கைது செய்யப்படும் போது ஆகக் குறைந்த பட்சம் அரச தலைவருக்காவது அறிவிக்க வேண்டாமா? கௌரவ சபாநாயகர் அவர்களே, தேர்தல் நாளன்று அதிகாலையில் அவர் கைது செய்யப்பட்டார்..."**

[1981 ஜூன் 09 ஆம் திகதிய பாராளுமன்றத்தின் ஹன்சாட் அறிக்கை]

இந்தக் குற்றங்கள் இழைக்கப்பட்ட போது எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவருமான

அ. அமிர்தலிங்கம் யாழ்ப்பாணத்தில் இருக்கவில்லை. இந்த விடயம் தொடர்பான பாராளுமன்ற விவாதத்தில் அவர் குறிப்பிட்டது போல, கட்சியின் தேர்தல் பிரசாரத்திற்காக அவர் திருகோணமலையில் இருந்தார். எதிர்க்கட்சித் தலைவர் ஜூன் 3 இரவு யாழ்ப்பாணத்தை வந்தடைகிறார். அதிகாலை 2:45 மணிக்கு பொலிசும், இராணுவமும் திடீரென அவரது வீட்டை முற்றுகையிட்டன. உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டொனால்ட் மென்டிஸ் தலைமையில் பொலிஸ் மற்றும் இராணுவப் பிரிவுடன் சங்கானை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் சேர்ந்து கொண்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கத்தை மட்டுமன்றி நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சிவசித்தரம், சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் வல்லிபுரம் நல்லதம்பி நவரட்ணம் மற்றும் மானிப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் விசுவநாதன் தர்மலிங்கம் ஆகியோரையும் அன்று அதிகாலையில் கைது செய்தனர். பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினர் கதிரவேற்பிள்ளை துரைரத்தினத்தை கைது செய்ய பொலிஸார் அவரது வீட்டுக்குச் சென்ற போதிலும் அவர் வீட்டில் இல்லை. பின்னர் கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் பலாலி இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

பொதுவாக, ஒரு நாட்டில் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறையில் அடைக்கப்படுவதற்காக கைது செய்யப்பட்டால் அந்த விடயம் பற்றி சபாநாயகருக்கும் அறிவிக்க வேண்டும். ஒரு நாட்டின் எதிர்க்கட்சித் தலைவரை சிறையில் அடைத்தால், அது குறித்து சபாநாயகருக்கு மட்டுமல்ல, அரச தலைவருக்கும் அறிவிக்கப்பட வேண்டும். குறிப்பாக, தேர்தல் தினத்தன்று இவ்வாறான தடுத்து வைப்புக்கள் திட்டமிடப்பட்ட வாக்குக்

கொள்ளையை நோக்கமாகக் கொண்டு செய்யப்படுவது என்பது தெளிவு. எதிர்க்கட்சித் தலைவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தது போலவே, அன்று அவர்களைக் கைது செய்து தடுத்து வைப்பதற்கான எந்தவொரு உத்தரவும் பொலிஸார் வசம் இருந்திருக்கவில்லை.

அரசாங்கம் மிகத் திட்டமிட்ட வகையில் எதிர்க்கட்சித் தலைவரையும், யாழ்ப்பாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களையும் தேர்தல் நாளான ஜூன் 4ம் திகதி காலை கைது செய்தது. ஜனாதிபதியால் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்ட நான்கு அமைச்சர்களுக்கும் ஒதுக்கப்பட்ட "கடமைகளை" அவர்கள் சரியாக நிறைவேற்றுவதை உறுதி செய்வதற்கே இந்தக் கைதுகள் நடந்தேறின. இதேவேளை, அரசாங்க செய்தி பணிப்பாளர் சரத் அமுனுகம வெளியிட்ட ஊடக அறிக்கையில் இருந்து இது மேலும் உறுதிப்படுத்தப்படுகிறது. அரசாங்கத்தின் அறிக்கையின்படி, "எதிர்க்கட்சித் தலைவரும் மேலும் மூன்று தமிழர்களும் அவர்களின் பாதுகாப்பிற்காக பொலிஸ் காவலில் வைக்கப்பட்டனர்", ஆனால் உண்மையில் நடந்தது என்னவென்றால், அவர்கள் கைது செய்யப்பட்டு பலாலி இராணுவ தளத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர். இது பற்றி பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் ஆற்றிய உரை பின்வருமாறு.

***"நான் ஜூன் 3 ஆம் திகதி இரவுதான் யாழ்ப்பாணத்திற்கு வந்தேன். திடீரென அதிகாலை 2.45 மணியளவில், அதாவது தேர்தல் நடந்த அன்று அதிகாலையில், ஒரு உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் இராணுவ அதிகாரிகள் குழுவினர், சங்கானை பொலிஸ் நிலையத்திற்குப் பொறுப்பான***

*பொலிஸ் அதிகாரி அடங்கிய பொலிஸ் குழுவொன்று எனது வீட்டிற்கு வந்தது. ஏ.எஸ்.பி.யான திரு.டொனால்ட் மென்டிஸ் என்னிடம், 'உங்களைக் கைது செய்ய எனக்கு உத்தரவு உள்ளது' என்றார்.*

*நான் அவரிடம் கேட்டேன், `என்ன குற்றச்சாட்டுக்காக?`*

*அதற்கு அவர் 'ஜனநாயக நடைமுறைகளை சீர்குலைத்த குற்றச்சாட்டில் உங்களைக் கைது செய்யுமாறு தகுதிவாய்ந்த அதிகாரி எனக்கு உத்தரவிட்டுள்ளார்' என்றார் அவர்.*

*நான் அவரிடம், 'இது என்ன? எந்தச் சட்டத்தின் கீழ், எந்தக் குற்றத்துக்காக?" எனக் கேட்டேன்.*

*அதற்கு அவர், 'எனக்குத் தெரியாது சேர். இந்த விஷயங்கள் பற்றி என்னிடம் கேட்காதீர்கள். உங்களை அழைத்து வரச் சொன்னார்கள். நான் உங்களைக் கூட்டிச் செல்ல வேண்டும். தயவு செய்து என்னுடன் வாக்குவாதம் செய்யாதீர்கள். '*

*அப்போது நான் அவரிடம், 'தடுப்புக் காவல் உத்தரவு கொண்டு வந்தீர்களா? சொல்லுங்கள்.' என்றேன். "*

*அமிர்தலிங்கம்: பின்னர் எமது நன்மைக்காகவே சிறையில் நாங்கள் அடைக்கப்பட்டுள்ளோம் என்று ஒரு செய்தி வெளியானது, உண்மையில் மதிப்பிற்குரிய தகவல்துறை அமைச்சரே, அந்தக் கூற்று முற்றிலும் பொய்யானது என்று நான் தைரியமாகக் கூறுவேன். அவர்கள் அதே புண்ணை மீண்டும் கிண்ட முயன்றதில் எனக்கு எவ்வித ஆச்சரியமும் இல்லை. என்னை, எனது பாதுகாப்புக்காகவே காவலில் வைத்துள்ளதாகக் கூறினார்கள். அப்படியாகவிருந்தால்,*

*'உங்கள் பாதுகாப்புக்காக நான் உங்களை அழைத்துச் செல்கிறேன்' என்று அந்த அதிகாரி என்னிடம் கூறியிருப்பார், ஆனால் `ஜனநாயக நடைமுறைக்கு இடையூறு விளைவித்ததற்காக நான் கைது செய்யப்பட்டேன்` என்றுதான் அவர்  கூறினார்.*

*அமிர்தலிங்கம்: பத்திரிகைகளில் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தல் எனக்கு மட்டுமன்றி பலாலி இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்ட நல்லூர், சாவகச்சேரி, மானிப்பாய் ஆகிய தொகுதிகளைச் சேர்ந்த கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களையும் அவமதிக்கும் செயலாகும். காலை 8.30 மணியளவில் என்னுடன் தொலைபேசியில் பேசிய மேதகு ஜனாதிபதி கூட எமது பாதுகாப்புக்காக நாம் கைது செய்யப்பட்டதாகக் கூறவில்லை. அதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் அதை உறுதிப்படுத்த  விரும்பினால், மேதகு ஜனாதிபதியிடம் கேளுங்கள்.*

*(இடையூறுகள்)*

*பருத்தித்துறை கௌரவ பாராளுமண்ற உறுப்பினர் அப்போது அவரது வீட்டில் இருக்கவில்லை. அவர்கள் அவரது வீட்டை சோதனையிட்டனர். ஒவ்வொரு அறையிலும் சோதனை நடத்தினர். எங்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக, நாங்கள் எங்காவது ஒளிந்துகொண்டு இருக்கிறோமா என்று ஒவ்வொரு அறை அறையாக தேட அவர்கள் விரும்பினர்.*

*(இடையூறுகள்)*

*உங்களை நீங்களே முட்டாள்களாக்கிக் கொள்ளாதீர்கள். கௌரவ உறுப்பினர்களே, இவ்வாறான கருத்துக்களை நீங்கள் வெளியிடுவதன் மூலம் உங்களையே குருடாக்கிக் கொள்கிறீர்கள். நீங்கள் இதுபோன்ற அறிக்கைகளை வெளியிடும்போது நீங்கள் செய்வது உங்கள் முட்டாள்தனத்தை வெளிப்படுத்திக் கொள்வது மட்டுமே.*

*அ.அமிர்தலிங்கம்: அந்த வகையில் நாங்கள் அங்கு இராணுவ முகாமில் இருந்தோம், காலை 8.30 மணியளவில், இராணுவ அதிகாரிகள் எம்மிடம் வந்து மேதகு ஜனாதிபதி என்னுடன் தொலைபேசியில் பேச விரும்புவதாகக் கூறினர். (இடையூறுகள்)*

*காலை உணவாக சம்பலுடன் சில கோதுமை மா ரொட்டிகளை எமக்குத் தந்தார்கள். எனது காலை உணவைப் பற்றி யாரோ ஒருவர் நினைத்ததையிட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதன் பின்னர் நான் அங்கிருந்த இரண்டு அல்லது மூன்று பங்களாக்களைக் கடந்து சென்று மேதகு ஜனாதிபதியுடன் தொலைபேசியில் பேசவேண்டி இருந்தது.*

*அப்போது அவர், 'அது தவறுதலாக நடந்து விட்டது. நீங்கள் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களை விடுதலை செய்ய நான் உத்தரவிட்டுள்ளேன். அதற்காக வருந்துகிறேன்.' அவ்வளவுதான் அவர் சொன்னார்.*

*அப்போதும் கூட மேதகு ஜனாதிபதி, எங்கள் பாதுகாப்புக்காகத்தான் நாங்கள் கைது செய்யப்பட்டோம் என்று ஒருபோதும் கூறவில்லை என்பதை இந்த அவையின் உறுப்பினர்கள் கவனத்தில் எடுக்க வேண்டும். அவர் ஒருபோதும் என்னிடம் அப்படிச் சொல்லவே இல்லை.*

***அந்த பொலிஸ் அதிகாரியை இங்கு அழைத்து வருமாறு கேட்பதற்குப் பதிலாக, இவர்கள் அது பற்றி மேதகு ஜனாதிபதியிடமே கேட்கலாம்.***

***அ.அமிர்தலிங்கம்:  அதிகாலை 3 மணி முதல் 9 மணி வரை ஆறு மணி நேரம் நாங்கள் மாண்புமிகு அரசாங்கத்தின் விருந்தினர்களாக இருந்தோம். பின்னர் எங்களை விடுவிக்க அவர்கள் அனுமதித்தனர். கௌரவ உறுப்பினரை நான் கேட்கிறேன்.  அரசு ஒரு தவறை செய்தது என்பதை ஒப்புக்கொள்கிறீர்களா இல்லையா என்பதை எங்களுக்குத் தெரிவியுங்கள். ஒரு நியாயமான எண்ணம் கொண்ட செய்தித்துறை  அமைச்சர் உலகிற்கு பொய் சொல்ல முயற்சிக்கக் கூடாது.***

*[1981 ஜூன் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தின் ஹன்சாட் அறிக்கை]*

# 15

## வாக்குக் கொள்ளை!

**யாழ்ப்பாணத்தில் நடந்தது தேர்தலே அல்ல.**

***"அங்கு நடந்தது அரச பயங்கரவாதத்தைப் பயன்படுத்தி நடத்தப்பட்ட ஒரு பெரும் மோசடி என்று தேர்தல் அதிகாரிகளே கூறுகின்றனர், கடந்த மாதம் 4 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேர்தலைப் போன்ற ஒரு ஜனநாயகமற்ற, மோசடிகள் நிறைந்த மற்றும் அநாகரீகமான வேறொரு தேர்தலை நாம் வாழ்க்கையில் ஒருபோதும் கண்டதில்லை, என்று. யாழ்ப்பாண அபிவிருத்தி சபைத் தேர்தலுக்கான கடமைகளுக்காக யாழ்ப்பாணத்திற்குச் சென்றிருந்த சிங்கள அதிகாரிகளே தெரிவித்தனர். அது ஒரு தேர்தலே அல்ல, அது பகிரங்கமாக அரச அதிகாரத்தை பயன்படுத்தி அப்பட்டமாக நடத்தப்பட்ட ஒரு பெரும் கொள்ளைச் சம்பவம், என அந்த அதிகாரிகளில் சிலர் 'எத்த' பத்திரிகைக்குத் தெரிவித்தனர்."***

*[செவ்வாய்க்கிழமை, ஜூன் 22, 1981 'எத்த' முன்பக்க அறிக்கை]*

யாழ்ப்பாணத்தில் நடந்த தேர்தல் கொள்ளை பற்றி நாம் தனியாக எழுதாமல், சமகால அறிக்கைகளினூடாக உங்களை அதனை வாசிக்க வைப்பது சிறப்பானது என நாம் நம்புகிறோம்.

பாராளுமன்றத்தின் ஹன்சாட் அறிக்கைகள் மற்றும் 'எத்த' என்ற மாற்றுப் பத்திரிகை தவிர்ந்த வேறு எந்த ஊடகமும் இது குறித்து செய்தி வெளியிட முன்வரவில்லை என்பதை நாம் முன்னர் கூறியிருந்தோம். யாழ்ப்பாணத்தில் முதல் நாள் நடந்த குற்றங்களை அறிக்கையிட முனைந்த 'ஈழநாடு' பத்திரிகைக்கு ஏற்பட்ட கதியின் காரணமாக, கொழும்பில் இருந்து அச்சிடப்பட்ட தமிழ் பத்திரிகைகளும் அந்நாட்களில் அவற்றைப் பிரசுரிக்காமல் தவிர்த்துக் கொண்டன.

உதாரணமாக, பிரபலமான 'வீரகேசரி' பத்திரிகையின் யாழ்ப்பாண நிருபர் [அவர் எடுத்த புகைப்படங்களின் ஒரு தொகுதியே இந்த நூலில் இடம்பெறுகிறது.] எடுத்த அந்த புகைப்படச் சுருள்களை அவரால் கொழும்புக்கு அனுப்ப முடியாதிருந்தது. யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறும் அனைத்து பயணிகளினதும் பயணப் பொதிகள் கடுமையான சோதனைக்குள்ளாக்கப்பட்டமையே அதற்கான காரணமாகும்.

அந்த நிருபரின் ஒரு சிங்கள நண்பரான, அப்போது யாழ்ப்பாண சிங்கள மகா வித்யாலயத்தில் ஆசிரியராக இருந்த மத்துகம என்னும் உரைச் சேர்ந்த நண்பர் ஒருவர் ஆசிரியராக இருந்தார். அவர் கொழும்பு வரும் சந்தர்ப்பத்தில் அவருடைய கரங்களில் அந்தச் சுருள்கள் ஒப்படைக்கப்பட்டன. அவர் அதை ஐக்கிய சோசலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரியவிடம் கையளித்தார். அந்த நேரத்தில் அமுலில் இருந்த கடுமையான செய்தித் தணிக்கை நடைமுறையைப் பற்றிய ஒரு புரிதலை உங்களுக்கு வழங்கவே இந்தக் கதையை நாங்கள் எழுதினோம்.

திரு. S.சிவதாசன் என்பவர் அந்தத் தேர்தல் நடந்த போது யாழ்ப்பாணக் கச்சேரியில் பணியாற்றிய நான்கு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களில் ஒருவராக இருந்தார்.

அந்தத் தேர்தல் தொடர்பான அன்றைய தனது நினைவுகளை சிவதாசன் இவ்வாறு எழுதி வைத்தார்.



திரு. S.சிவதாசன்

***"தேர்தல் சட்டத்தின்படி குறித்த நாளில் காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கி மாலை 4 மணி வரை நடைபெறும். அதன்படி ஊழியர்களுக்கான பயிற்சிகளை வழங்குதல் மற்றும் ஆயத்தப்படுத்தல் நடவடிக்கைகள் இரண்டு மாதங்களுக்கு மேற்கொள்ளப்படும். வாக்குப்பதிவு நாளுக்கு 26 மணி நேரத்திற்கு முன்னதாக வாக்குப் பெட்டிகள், வாக்குச் சீட்டுகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்கும் பணிகள் தொடங்கும். சம்பந்தப்பட்ட சிரேஷ்ட தேர்தல் தலைமை அலுவலர்கள் (SPO-Senior Presiding Officers) பொருட்களை பெற்றுக் கொள்கின்றனர். 11 தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கிய யாழ்ப்பாண மாவட்டத்தில் (கிளிநொச்சியும் அப்போது அதன் ஒரு பகுதியாக இருந்தது) 11 விநியோக அலுவலர்களுக்கான செயலகம் பழைய கச்சேரியின் மறுபுறத்தில் அமைந்துள்ளது. தேர்தல் அதிகாரிகள் பரிந்துரைக்கப்பட்ட***

*நடைமுறைகளை முற்றிலும் ஒழுங்காகவும், திறமையாகவும் நிர்வகித்தனர்."*

*"உதவித் தெரிவத்தாட்சி அலுவலராக (ARO) இருந்த இந்த எழுதுவினைஞர் அன்று காலை 6 மணி முதல் அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்கும் பணியில் இருந்தார். கடலினுள் 12 மைல் தூரத்தில் உள்ள டெல்ப் தீவுப் (நெடுந்தீவு) பகுதி வாக்குப் பெட்டிகள், வாக்குச் சீட்டுகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை விநியோகிப்ப தற்கான முதல் வலயமாக தேர்ந்தெடுக்கப்பட்டது. முன்னைய சந்தர்ப்பங்களைப் போலவே பொலிஸாரின் பாதுகாப்புடன் இந்த நடவடிக்கை சுமுகமாக முன்னெடுக்கப்பட்டது. அடுத்தது, கிளிநொச்சி பகுதியாக இருந்தது. யாழ்ப்பாண மாவட்டத்தை விட பெரிய பிரதேசத்தை கொண்டுள்ள கிளிநொச்சி, யாழ்ப்பாணக் கச்சேரியில் இருந்து 30 முதல் 50 மைல் தூரத்தில் வாக்குச்சாவடிகளைக் கொண்டுள்ளது.*

*அத்தியாவசிய பொருட்கள் பொலிஸ் பாதுகாப்புடன் எவ்வித பிரச்சினைகளும் இன்றி அங்கு அனுப்பி வைக்கப்பட்டன. ஒரு தேர்தலின்போது, அந்த குறிப்பிட்ட மாவட்டத்தின் அரசாங்க அதிபரே அங்கு முதன்மைத் தெரிவத்தாட்சி அலுவலராக இருப்பார். அவர் நேற்று முன்தினம் கொழும்புக்கு வரவழைக்கப்பட்டிருந்ததால் காலையில் அவர் கச்சேரியில் இருக்கவில்லை. எவ்வாறெனினும், மாவட்ட அரசாங்க அதிபர் இல்லாத குறை தெளிவாகத் தெரிந்தது."*

*“காலை 10 மணிக்கு கச்சேரிக்கு வந்த மாவட்ட அரசாங்க அதிபர், உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களான கச்சேரியின் சிரேஷ்ட நிலை அதிகாரிகளாக இருந்த நான் உள்ளிட்ட நால்வரையும் உடனடியாக வரவழைத்தார். வாக்களிப்பு நிலையங்களுக்குப் பொறுப்பாகவிருந்த அலுவலர்களில் மாற்றங்களைச் செய்வது தொடர்பில் கொழும்பில் எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து எமக்கு அப்போதுதான் அறிவிக்கப்பட்டது. சற்று பீதியடைந்த நாங்கள் நால்வரும் எங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தோம். ஆனால், நாங்கள் எங்கள் முதல் வாக்கியத்தை முடிக்கும் முன்னரே, ஒரு மூத்த அமைச்சரும், அவரது மேலதிக செயலாளரும் அரசாங்க அதிபரின் அலுவலகத்திற்குள் வந்தனர். சற்று நேரத்தில் யாழ்ப்பாணத் தளபதியான பிரிகேடியரும் வந்து சேர்ந்தார். சில நிமிடங்களில் அரசாங்க அதிபரின் அறை கொழும்பில் இருந்து வந்த அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், மாவட்ட அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளால் நிரம்பி வழிந்தது. அப்போது காலை 10.30 மணி இருக்கும். நாங்கள் நால்வரும் எங்கள் அறைக்குத் திரும்பி வந்து மேலதிக உத்தரவுகளுக்காகக் காத்திருந்தோம்.”*

*"நாங்கள் நால்வரும் பங்கு பற்றாத நிலையில், அங்கு எடுக்கப்பட்ட முதல் முடிவு வாக்குப் பெட்டிகள், வாக்குச் சீட்டுகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விநியோகத்தை இடைநிறுத்துவது ஆகும். இதற்குக் காரணமாகச் சொல்லப்பட்டது, பொலிஸ் அதிகாரிகள் 'பயத்தால்' பாதுகாப்பு வழங்க 'மறுக்கின்றனர்' என்பதாகும். கொழும்பில் இருந்து 'மேலிடத்து உத்தரவு'*

*வரும்வரை பொலிஸார் தைரியமாகச் செல்ல தயாராக இருந்தனர். 'விநியோகம்' நிறுத்தப்பட்டதால், கிளிநொச்சிக்கு தேர்தலுக்கான பொருட்கள் அனுப்பும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டன. இந்த விவரங்களை அறிந்து கொள்வது எளிதாக இருந்தாலும், அதன் மூலம் ஏற்பட்ட குழப்பம், விரக்தி மற்றும் மனவலி என்பவற்றை அனுபவித்திருந்தால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும்.*

*இவை அனைத்தும் யாழ். நூலகத் தீ வைப்புச் சம்பவத்துக்கும், யாழ். நகரத்தில் நடத்தப்பட்ட மேலும் சில தீ வைப்புச் சம்பவங்களுக்கும் பின்னரே நடந்தன. யாழ்ப்பாண நகரில் வாழ்க்கை மிகவும் ஸ்தம்பித்திருந்தது. கச்சேரியில் தண்ணீர் இருக்கவில்லை. அனைத்து வசதிகளும் இல்லாமல் செய்யப்பட்டிருந்தன. சகல உத்தியோகத்தர்களும் வேலைக்கு சமூகமளித்த போதிலும் நூற்றுக் கணக்கானவர்கள் கச்சேரியை விட்டு வெளியே வராமல் அந்த வளாகத்துக்கு உள்ளேயே சுற்றித் திரிந்து கொண்டிருந்தனர். அவர்களுக்கு எவ்வித உணவோ, தண்ணீரோ இருக்கவில்லை. அவர்களின் உறுதிப்பாடு தெளிவாகத் தெரிந்தது. நூற்றுக் கணக்காணவர்கள் குருநாகலில் இருந்து வரவழைக்கப்பட்டிருந்ததால் அங்கு நெரிசல் அதிகரித்திருந்தது."*

*"மாலை 5.30 மணியளவில், அங்கு ஏதோ விசித்திரமாக நடந்து கொண்டிருந்தது. அரசாங்க அதிபரின் அறையில் இருந்து புதிதாக நியமனம் செய்யப்பட்டவர்களின் பட்டியல் வந்தது. அனைத்து வாக்களிப்பு நிலையங்களுக்கும் பொறுப்பாக இருப்பதற்கு பயிற்சி அளிக்கப்பட்ட*

*பொறுப்பான பதவிகளை வகித்த அதிகாரிகள் ஒழுங்கு விதிகளுக்கு மாறாக உத்தியோகபூர்வமற்ற முறையில் நீக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்குப் பதிலாக தமிழ், ஆங்கிலம் தெரியாத, குறைந்த பட்சம் தேர்தல் பணிகள் குறித்து சரியாகத் தெரிந்திராத கடைநிலை ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.*

*உள உழைப்பை விட உடல் உழைப்பிற்குப் பழக்கப்பட்டு, பயிற்றப்பட்டிருந்த அவர்கள் ஒரே இரவில் பொருத்தமற்ற தர நிலைக்கு பதவி உயர்வு பெற்றனர். அவர்கள் தமிழ் ஊழியர்களின் உதவியைக்கூட எதிர்பார்த்து காத்திராது, எதைப் பற்றியும் கவலைப்படாமல் மிக அலட்சியமாக தங்கள் பணியிடங்களுக்கு புறப்பட்டுச் சென்றனர்."*

*"மாலை 6.30 மணியளவில், யாழ். கச்சேரியடி பழைய பூங்காவில் இருந்து பேருந்துகள் புறப்படத் தொடங்கின. பகலில் பயணிக்க பயந்திருந்த பொலிஸாருக்கு, தற்போது இரவில் பயணிக்கும் தைரியம் வந்திருந்தது. ஆனால், சில மணி நேரங்களுக்குப் பிறகு வாகனங்கள் அங்கிருந்து புறப்படுவது நிறுத்தப்பட்டது. அது காலையில் மீண்டும் தொடங்கியது. ஆனால் அதற்குள் குருநாகலைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் கச்சேரியை விட்டு புறப்பட்டுப் போயிருந்தனர். அவர்களுக்கு என்ன செய்வது, எங்கே போவது என்று எதுவுமே தெரியவில்லை. அவர்கள் தம்மைத் தாம் கவனித்துக் கொள்வதைத் தவிர வேறெதனையும் செய்யவில்லை. யாழ். மாவட்டத்தின் தேர்தல் ஊழியர்கள் கச்சேரியில் கூடி `நாட்டின் தலைவர்களால்` உருவாக்கப்பட்ட அந்த குழப்பங்களுக்கு மத்தியிலும்*

*அமைதியாக இருந்தனர். இது அவர்களின் ஒழுக்கம் மற்றும் கலாசாரத்திற்குக் கிடைத்த கௌரவமாகும்."*

*"வாக்குப்பதிவு நாளன்று கடைசி பஸ்  காலை 7.30 மணிக்கு கச்சேரியிலிருந்து புறப்பட்டது. தேர்தல் சட்டத்தின்படி வாக்களிப்பை ஆரம்பிக்கும் நேரம் காலை 7.00 மணியாக இருக்க வேண்டும். ஆனால் சில வாக்களிப்பு நிலையங்கள் காலை 7 மணிக்குப் பின்னரும், மேலும் பல வாக்குச் சாவடிகள் காலை 10.30 மணிக்குமே திறக்கப்பட்டன. குருநாகலில் இருந்து புதிதாக நியமிக்கப்பட்ட "தேர்தல் அதிகாரி" ஒருவர் உதவித்  தெரிவத்தாட்சி அலுவலரிடம் (ARO) தனக்கு `தள் ரா` (பனங் கள்ளு)  எங்கு கிடைக்கும் என்று கூறுமாறு கேட்டார்...!*

*வாக்குச்சாவடிகளை மாற்ற முயற்சிகள் நடந்ததாலும்கூட, வாக்காளர்கள் மிக அதிக அளவில் வாக்களிக்க வந்திருந்தனர். அவர்கள் ஒருவித  பழிவாங்கும் நோக்கில் வந்து வாக்களித்தனர். அந்த நேரத்தில் சில வாக்குச் சாவடிகள் மூடப்பட்டிருந்தன, ஆனாலும் அவர்கள் வேறு வாக்குச் சாவடிகளுக்குச் சென்று அங்கு தமது வாக்குகளைப் பதிவு செய்தனர்."*

*“மாலை 4 மணியுடன் உத்தியோகபூர்வமாக வாக்குப் பதிவுகள்  முடிவடையும். வாக்கெண்ணும் ஊழியர்கள் வாக்குப் பெட்டிகள் வரும்வரை, அப்பெட்டிகள் தனித்தனியாக எண்ணப்படும் நிலையமாக இருந்த பெரிய மாநாட்டு மண்டபத்தில் தங்கிக் காத்திருந்தனர்.  கடந்த காலங்களைப் போலல்லாமல்,  இந்த முறை சில வாக்குச்*

*சாவடிகளின் செயல்பாடுகள் தாமதமானதால்  தேர்தல் பெட்டிகள் மிக மெதுவாகவே வந்தன. 17 வாக்குப் பெட்டிகள் வந்து சேரவே இல்லை. சில அதிகாரிகளுடன் பேசியபோது, சில தேர்தல் மோசடிகள் குறித்து எங்களுக்குத் தகவல் கிடைத்தது. வாக்கு எண்ணுவதை  மேற்பார்வை செய்து கொண்டிருந்தபோது, கள்ள வோட்டுகள் பதியப்பட்ட தற்கான அடையாளங்கள் தெளிவாகத் தெரிந்தன. வாக்குச் சீட்டுப் புத்தகங்களுக்கிடையில் வாக்குச் சீட்டுகள் பிரித்தெடுக்கப்படாத நிலையில் ஆளும் கட்சிக்கு சாதமாக வாக்குகள் அடையாளமிடப்பட்டிருந்த ஒரு வாக்குச் சீட்டுப் புத்தகமும் கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் சில சந்தர்ப்பங்களில் வாக்குச்சீட்டுப் புத்தகத்தின் முக்கிய பகுதிகளில் மாற்றம் காணப்படாமலும், ஆனால் வாக்குகள் அடையாளமிடப்பட்டிருந்ததையும் காணக் கூடியதாகவிருந்தது. மிக அபத்தமான வாக்கு மோசடி நடவடிக்கைகள் நிறையவே காணப்பட்டன" என்றார்.*

*"நள்ளிரவுக்குப் பின்னர் வாக்கு எண்ணல் முடிவுக்கு வந்தது. வாக்காளர்கள் தமிழர்  ஐக்கிய விடுதலை  முன்னணிக்கு மகத்தான வெற்றியை பெற்றுக் கொடுத்திருப்பதைக் காண முடிந்தது. ஆனால் பல வாக்குப் பெட்டிகள் காணாமல் போனதால் தேர்தல் முடிவுகளை அறிவிக்க முடியவில்லை. காணாமல் போன வாக்குப் பெட்டிகளைத் தேடும் பணிக்கு வேறு ஒரு தேதியைக் குறிக்கும் நடவடிக்கையும்கூட மேற்கொள்ளப்பட்டது. ஆனால், அவற்றைத் தேடுவது பயனற்றது.  தேர்தல் முடிவுகளின்படி அபிவிருத்தி சபையின் 10 ஆசனங்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணி*

***கைப்பற்றியது. அதன்படி முன்னாள் செனட்டர் எஸ்.நடராஜா தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார்."***

*[உபயம்: எஸ். சிவதாசன், உதவி தெரிவத்தாட்சி அதிகாரி (ARO), யாழ்ப்பாணம் 1981 ஜூன் மாதம், கொழும்பு டெலிகிராப்*]

இதை வாசித்த உங்களுக்கு ஒரு முரண்பாடு தென்பட்டிருக்கும். தேர்தல் அதிகாரிகளை மாற்றும்படி ஜனாதிபதி உத்தரவிட்டது அரசாங்க அதிபர் யாழ்ப்பாணத்தில் இருக்கும்போதா? அல்லது அவர் கொழும்புக்கு வரவழைக்கப்பட்டு அந்த உத்தரவு கொடுக்கப்பட்டதா?

திரு. S. சிவதாசின் கூற்றுப்படி, தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாக, அரசாங்க அதிபர் யோகேந்திரா துரைசாமி கொழும்புக்கு அழைக்கப்பட்டார். அந்த அழைப்புக்கான காரணம் என்ன, யார் அழைத்தார்கள் என்ற விபரம் எமக்குத் தெரியவில்லை. ஆனால், ஜூன் 3-ம் தேதி காலை, அமைச்சர்கள், அரசாங்க அதிபரின் அலுவலகத்தை ஆக்கிரமித்திருந்த போது, சிவதாசன் மற்றும் ஏனைய மூன்று உதவி தேர்தல் அதிகாரிகள் தங்கள் அலுவலக அறைகளில் இருந்தனர். எனவே, அங்கு என்ன நடந்தது என்று அவர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. சிவதாசனின் வாழ்க்கை வரலாற்று நூலை நாம் நம்பினால், அந்த உத்தரவு தொலைபேசியின் மூலம் பிறப்பிக்கப்பட்டதாக இருக்க வேண்டும். ஆனால் நாம் சிவதாசனை நம்புவதாக இருந்தால், அரசாங்க அதிபர் துரைசாமிக்கு அந்த உத்தரவானது அவர் கொழும்புக்கு வரவழைக்கப்பட்டு அங்கு வைத்து வழங்கப்பட்டிருக்கிறது எனக் கொள்ள வேண்டும்.

ஆனால், எமது விசாரணைகள் ஆய்வுகள் மூலம் ஜனாதிபதியின் அந்த உத்தரவு அரசாங்க அதிபருக்கு தொலைபேசி ஊடாகவே வழங்கப்பட்டுள்ளது.

1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல், அதுவரை நாட்டின் தேர்தல் வரலாற்றில் நடைபெற்ற ஏனைய தேர்தல்களைப் போன்றதல்ல. யாழ்ப்பாணத் தேர்தலின் போது தெற்கில் இருந்து அங்கு கொண்டு செல்லப்பட்ட அலுவலர்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில், யாழ்ப்பாணத் தேர்தலில் நடந்த வன்முறைகள் பற்றி ஜூன் 22 திங்களன்று 'எத்த' (உண்மை) பத்திரிகை ஒரு விசேட அறிக்கையை எழுதியிருந்தது.

**வாக்குக் கொள்ளை சிங்களப் பார்வையில்**

இது தொடர்பில் விசேடமானதொரு அறிக்கையைத் தயாரிப்பதற்காக 'எத்த' பத்திரிகை விசேட நிருபர்கள் குழு ஒன்றை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பியது. 'எத்த` பத்திரிகையில் வெளியான அறிக்கையின் சில பகுதிகளையே நாம் கீழே குறிப்பிடுகிறோம். ஆனால், என்ன காரணத்தினாலோ அந்த பத்திரிகையானது, ‘அதிகாரம் மிக்கவர்கள்’, ‘தலைவர்கள்’, ‘அமைச்சர்கள்’, ‘பிரதி அமைச்சர்கள்’, ‘மாவட்ட அமைச்சர்கள்’ என்ற பதங்களை மட்டுமே பயன்படுத்தியுள்ளதே தவிர, அவர்களின் உண்மையான பெயர்களையும், பதவிகளையும் எழுதவில்லை.

**கேவலத்திலும் கேவலமாக்கப்பட்ட சர்வசன வாக்குரிமை..!**

*“அந்த இடத்தில் உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்மட்டத் தலைவர் ஒருவர், மறுநாள் நடைபெறவுள்ள யாழ்ப்பாண அபிவிருத்தி சபைத் தேர்தலுக்கான வாக்குச்சாவடி அதிகாரிகளாக இங்குள்ளவர்களில் ஒரு பிரிவினர் நியமிக்கப்படுவீர்கள் என்றும், மறுநாள் விடிவதற்குள் அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்படும் என்றும், அதன் பின்னர் கச்சேரிக்குச் சென்று வாக்குப் பெட்டிகள் மற்றும் பிற ஆவணங்கள் என்பவற்றைப் பெற்றுக்கொண்டு, வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்களிப்பு நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். அவர் மேலும் இவ்வாறு கூறினார். "மிக எளிமையாகச் சொல்வதானால் , நாளை நீங்கள் செய்ய வேண்டியது இவ்வளவுதான். வாக்குச்சாவடி பொறுப்பாளராக நியமிக்கப்படும் அதிகாரியுடன் கூடுதலாக 4 பேரை உங்களுக்கு வழங்குவோம். அவர்களுடன் கச்சேரியில் வாக்குப் பெட்டிகளையும் தேவையான ஆவணங்களையும் பெற்றுக்கொண்டு இராணுவத்தினர் மற்றும் பொலிஸாருடன் எம்மால் வழங்கப்பட்ட வாகனங்களில் ஏறி வாக்குச் சாவடிக்குச் சென்று, காலை 7 மணிக்கு வாக்களிப்பைத் தொடங்க வேண்டும். நண்பகல் 12 மணிக்கு வாக்களிப்பதை நிறுத்த வேண்டும். மீதியாக இருக்கும் வாக்குச் சீட்டுக்களில் புள்ளடியிட்டு பெட்டிகளில் போட வேண்டும் "*

*"அந்த நேரத்தில், கூட்டத்தில் இருந்த ஒருவர், 'நாங்கள் யாருக்கு புள்ளடி போடுவது?' என்று சத்தமாகக் கேட்டார். அதற்கு அந்த சக்தி வாய்ந்த நபர் " இது தெரியாதா....?*

*மிருகம்... மிருகம்? அதுக்கு முன்னால் புள்ளடியைப் போட்டு பெட்டியில போடுங்கள்" என்றார். அந்த தேசியக் கடமையச் செய்து இந்த மாவட்டத்தின் அதிகாரத்தை எமது அரசாங்கத்துக்கு பெற்றுக் கொடுக்குமாறு அவர் சபையினரைக் கேட்டுக் கொண்டார். அதிகாரமும், இராணுவமும் நம் கைகளில் இருப்பதால் அச்சமின்றி இந்த வேலையைச் செய்யுமாறு அவர் மேலும் அந்த கூட்டத்தினரைக் கேட்டுக் கொண்டார்."*

*"அரசியல் அதிகாரமிக்கவர்கள் வெளியேறிய பின்னர், கொழும்பிலிருந்து இரவு உணவாக அனுப்பப்பட்ட புளித்துப் போன சோற்றுப் பொட்டலங்களை பிரித்து உண்ட 'குருநாகல் குழுவினர்' , கல்லூரியின் வகுப்பறைகள் மற்றும் விறாந்தைகளில் தரையில் படுத்து உறங்கினர். அனைவரும் அதிகாலை 4 மணியளவில் எழுந்து தமது 'கடமைகளை' ஏற்கத் தயாராக இருந்தனர். சுமார் அதிகாலை 5 மணியளவில், முதல் நாள் இரவு கூட்டத்தை நடத்திய யூ.என்.பி. யின் அதிகாரமிக்கவர்கள் அனைவரும் அங்கு வந்தனர். அவர்களுடன் பல அரசு அதிகாரிகளும் அங்கு வந்திருந்தனர். "*

*"அவர்கள் தேர்தல் அதிகாரிகளை நியமிக்கத் தொடங்கினர். இதில் முன்னர் எந்தத் தொழிலும் செய்திராத, மற்றும் குண்டர்கள் போல் தோற்றமளித்த பலருக்கும் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களாக நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. பஸ் கண்டக்டர்கள், விவசாய அலுவலர்கள், காவல்காரர்கள் (வாட்ச்சர்கள்), கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் உள்ளிட்டோரும் கூட வாக்குச்சாவடி அலுவலர்களாக நியமிக்கப்பட்டனர்."*

*"அன்று (4ம் திகதி) காலை குருநாகலில் இருந்து சுமார் 1500 பேருடன் புகையிரதமொன்று யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது. குருநாகல் மாவட்ட அமைச்சரின் உத்தரவுக்கு இணங்கவே அவர்கள் குருநாகலில் இருந்து யாழ்ப்பாணம் வந்திருப்பதை, தேர்தல் கடமைகளுக்காக கொழும்பிலிருந்து சென்றிருந்த தேர்தல் உத்தியோகத்தர்கள் அறிந்து கொண்டனர். அவ்வாறு குருநாகலில் இருந்து வந்த கூட்டத்தினர் மத்தியில் ஏராளமான விவசாய உத்தியோகத்தர்கள், விசேட சேவை உத்தியோகத்தர்கள், கூட்டுறவுச் சங்க பிராந்திய முகாமையாளர்கள், ஆசிரியர்கள், எழுதுவினைஞர்கள் போன்றோர் இருந்ததையும் அவர்கள் அறிந்துள்ளனர்."*

*"வாக்களிப்பு ஆரம்பிக்கும் நேரமான காலை 7 மணிக்குப் பிறகு சுமார் ஒரு மணி நேரம் கழித்து, யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகத்தில் உள்ள மேலதிக அரசாங்க அதிபரின் அலுவலக அறையில் ஒரு விசித்திரமான ஏற்பாடு நடந்து கொண்டிருந்தது. அதாவது குருநாகலில் இருந்து வந்த சிலர் சிரேஷ்ட வாக்களிப்பு உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டு அவர்களுக்குக் கீழ் கொழும்பில் இருந்து வந்த உத்தியோகத்தர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பப்பட்டனர். "*

*"பொதுவாக, வாக்களிப்பு நிலையங்களுக்குப் பொறுப்பான அலுவலர்களாக அரச நிர்வாக சேவையில் அல்லது அதையொத்த உயர் பதவிகளில் உள்ள அதிகாரிகளே நியமிக்கப்படுவது வழக்கம். ஆனால், இங்கு நியமிக்கப்பட்ட எவருக்காவது அதுபோன்ற உயர் பதவிகளை வகிப்பதற்கான தகுதி இருந்ததா என்ற கேள்வி மற்ற*

*அதிகாரிகளுக்கு இருந்தது. சாதாரண தரத்திலான எழுதுவினைஞர்கள் வாக்களிப்பு நிலைய மூத்த அலுவலர்களாக நியமிக்கப்பட்டனர்.*

*"யாழ்ப்பாண மேலதிக அரசாங்க அதிபரின் அலுவலக அறையில் இருந்த ஒரு உதவித் தேர்தல் ஆணையாளரினால் அவர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. அப்போது, சபரகமுவ மாகாணம் மற்றும் வடமேல் மாகாணத்தை சேர்ந்த இரண்டு பிரதி அமைச்சர்கள் அந்த அதிகாரியின் மேசைக்கு முன்னால் நாற்காலிகளில் அமர்ந்திருந்தனர்.*

*"இது அவசரகால நிலையின் கீழ் நடத்தப்படும் தேர்தல், உங்களுக்கு தேர்தல் பணிகள் முழுமையாக செய்ய முடியாவிட்டால் பரவாயில்லை. மீதியை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்" என்று அந்த நியமனங்களைப் பெற்றவர்களிடம் அவர்கள் கூறினார்கள். தேர்தல் நடந்து முடிந்த பிறகு, வாக்குகளை எண்ணாமல் பெட்டிகளில் உள்ள வாக்குகளை மாவட்ட அரசாங்க அதிபரின் அலுவலகத்திற்கு கொண்டு வருமாறு ஒரு மாவட்ட அமைச்சர் (யாழ். மாவட்ட அமைச்சரல்ல) அந்த `புதிய` நியமனம் பெற்ற தேர்தல் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்."*

*“அதற்கமைய தேர்தல் ஆணையாளரினால் நியமிக்கப்பட்டு, கொழும்பில் இருந்து அனுப்பப்பட்ட பெருந்தொகையான உத்தியோகத்தர்கள், குருநாகலில் இருந்து வந்து நியமனம் பெற்ற அதிகாரிகளின் கீழ் தேர்தல் நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்கள் சென்று*

*வாக்குச்சாவடிகளை திறந்து, வாக்களிப்புத் தொடங்கிய போது மதியம் 12 மணியும் கடந்து விட்டது.*

*எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவரது துணைவியாருடன் 4 ஆம் திகதி காலை வாக்களிக்கச் சென்றும்கூட வாக்களிப்பு நிலையம் மூடப்பட்டிருந்த நிலையில் திரும்பி வந்து மீண்டும் பிற்பகல் 2 மணிக்குச் சென்றே வாக்களித்தனர்."*

*"மாலை 4 மணிக்கு வாக்களிப்புகள் நிறுத்தப்பட்டு குருநாகல் அதிகாரிகள் பணியாற்றிய வாக்களிப்பு நிலையங்களின் வாக்குச் சீட்டுகள் எண்ணப்படாமலும், அவ்வாக்குப்பெட்டிகள் சீல் வைக்கப்படாமலும் பஸ்களில் ஏற்றப்பட்டு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டன. அதே வேளை கொழும்பில் இருந்து சென்ற தேர்தல் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபட்டிருந்த வாக்களிப்பு நிலையங்களில் மாலை 4 மணிக்கு வாக்களிப்பு நிறுத்தப்பட்டு வாக்குச் சீட்டுகள் எண்ணப்பட்டன. வாக்குகளை எண்ணி முடிவுகளை பதிவு செய்த பின்னர், மீதமுள்ள வாக்குச் சீட்டுகள் மற்றும் எழுதுபொருட்கள் என்பன சீல் வைக்கப்பட்டன.*

*அவ்வாறு சீல் வைப்புக்கள் நடந்து கொண்டிருக்கும் போது ஒரு வாக்களிப்பு நிலையத்திற்கு வந்த ஐ.தே.கட்சியின் அரசியல் அதிகாரம் பெற்ற ஒருவரும் மற்றும் குண்டர்கள் குழுவொன்றும் அந்தத ் தேர்தல் அதிகாரிகளை அச்சுறுத்தி வாக்குப் பெட்டிகளை பலவந்தமாக பேரூந்தில் ஏற்றி கூடவே அந்த அதிகாரிகளையும் அதே பேரூந்தில் ஏற்றிக் கூட்டிச்*

*சென்றனர். அந்த பேரூந்தினுள் பொலிஸாரும், இராணுவத்தினரும் இருந்தனர். அவர்களின் முன்னிலையிலேயே, வாக்குச் சீட்டுகளை எண்ணியதற்காக அந்த அதிகாரிகளை இந்த அரசியல் அதிகாரம் கொண்டவரும், குண்டர்களும் கடுமையாகக் கடிந்து கொண்டனர்."*

*"பின்னர் சில மைல் தூரம் சென்ற அந்தப் பேரூந்து ஒரு ஆள் நடமாட்டம் இல்லாத இடத்தில் நின்றது. அதேவேளை ஏற்கனவே பல பேரூந்துகள் அங்கிருந்த மணல் சாலை அருகே வளையமான வடிவில் நிறுத்தப்பட்டிருந்தன. அங்கிருந்த தமிழர்களாகிய பேரூந்து ஓட்டுநரும், நடத்துனரும் பேரூந்தில் இருந்து இறக்கப்பட்டு அங்கிருந்து அகற்றப்பட்டனர். அதன் பின்னர் அவர்கள் வாக்குச் சாவடி அதிகாரிகளிடம் வாக்குப் பெட்டிகளின் சாவிகள் மற்றும் வாக்கு எண்ணப்பட்டு முடிவுகள் எழுதப்பட்ட பட்டியல்களை (வாக்குகள் எண்ணப்பட்ட இடங்களின் பட்டியல்) பலவந்தமாக கேட்டு பெற்றுக் கொண்டனர். தேர்தல் முடிவுகள் எழுதப்பட்ட ஒரு பட்டியலில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக்கு (TULF) 537 வாக்குகளும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு 20 வாக்குகளும் கிடைத்திருந்தன. அது தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக்கு 337 வாக்குகளாகவும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு 2020 வாக்குகளாகவும் மாற்றப்பட்டது. அந்த வாக்குப் பெட்டியில் இருந்து 50 வாக்குச் சீட்டுக்கள் கொண்ட 4 கட்டுகள் வெளியே எடுக்கப்பட்டு, அந்த வாக்குச் சீட்டுக்களில் `உதய சூரியனுக்கு` அருகே போடப்பட்டிருந்த புள்ளடி அடையாளம்*

*இரப்பர் அழிப்பானினால் அழிக்கப்பட்டு, பென்சிலால் `யானைச்` சின்னத்துக்கு அருகே புள்ளடிகள் போடப்பட்டன."*



விலை: சதம் 60

ஈழநாடு

THE EELANADU

மலர் 23 ஆனி 6 துந்துபி வருடம் ... இதழ் 126

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 20-6-1981

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை தேர்தல்

# காணமல்போன 6 பெட்டிகள்: பொலிஸ் விசாரணை ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

—கே. ஜோகநாதன்—

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச்சபை தேர்தலில் காணமல் போன 6 பெட்டிகள் தொடர்பான விசாரணையை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். இது தொடர்பாக பொலிஸார் சிலரின் வாக்கு மூலங்களையும் பதிவு செய்துள்ளனர்.

## பொலிசார்தான் தீவைத்தனர்'

### இப்படித்தாம் கருதுவதாக யாழ்.மாநகர ஆணையாளர் சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

*"தேர்தல் முடிவுகளின் பட்டியலையும், வாக்குப் பெட்டிகளின் சாவியையும் இந்த குண்டரிடம் கொடுக்க மறுத்த அதிகாரிகளில் ஒருவர், தூஷண வார்த்தைகளால் திட்டுதலுக்கு உள்ளாக்கப்பட்டதுடன், கடுமையாக அச்சுறுத்தப்பட்டு உடல் ரீதியாகவும் தாக்கப்பட்டார்.*

*பின்னர் அக்குண்டர்கள் அந்த அதிகாரியின் மார்பில் கைத்துப்பாக்கியை வைத்து, அச்சுறுத்தி வாக்கு எண்ணப்பட்ட முடிவு பட்டியல்களையும், வாக்குப் பெட்டிகளின் சாவியையும் அவரிடமிருந்து பறித்துக் கொண்டு, அவரை பேரூந்தில் இருந்து வெளியே இழுத்து*

*எங்கோ அழைத்துச் சென்றனர். இதேபோல்  ஏராளமான வாக்குப் பெட்டிகளின் வாக்குச் சீட்டுகள் மாற்றப்பட்டன."*

*“ஏனைய சில வாக்குப் பெட்டிகள் அரசாங்க அதிபர் காரியாலயத்திற்கு  எடுத்துச் செல்லப்படாமல், `குருநாகலில் இருந்து வந்தவர்கள் தங்கியிருந்த யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு எடுத்துச் செல்லப்பட்டன.  அதேவேளை இடையிடையே சில இடங்களில்  வைத்து வாக்குப் பெட்டிகள்  திறக்கப்பட்டு, மீதமுள்ள வெற்று வாக்குச் சீட்டுக்களில் யானை சின்னத்திற்கு புள்ளடி போடப்பட்டு அவை  வாக்குப் பெட்டிகளில் போடப்பட்டுள்ளன. ஆனால் அவர்கள் அந்த வாக்குச் சீட்டுகளை பஞ்ச் செய்ய – (துளை போட) மறந்துவிட்டனர்."*

*“இவ்வாறாக தேர்தல் ஆணையாளரினால் நியமிக்கப்பட்ட தேர்தல்  உத்தியோகத்தர்களின் நியமனங்களை இரத்து செய்தல், அதற்கு  தகுதியற்றவர்களை வாக்களிப்பு உத்தியோகத்தர்களாக நியமித்தல், பொலிஸ் மற்றும் இராணுவ பாதுகாப்பையும் மீறி பலவந்தமாக வாக்குப் பெட்டிகளைத் திறந்து தேர்தல் முடிவுகளை மாற்றும் வகையில் செயல்படுதல்,  காலை 7.00 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை  வாக்களிப்பு நடத்தாமல் நண்பகல் 12 மணிக்கு வாக்களிப்பு நிலையங்களைத்  திறத்தல், அமைச்சர்கள் தேர்தலில் செல்வாக்கு செலுத்துதல்,  வாக்குப் பெட்டிகள் மற்றும் வாக்குச் சீட்டுகளுக்கு உரிய பாதுகாப்பு வழங்காமை, வாக்குப் பெட்டிகளை மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு கொண்டு வருவதற்கு வாக்களிப்பு நிலையங்களுக்குப் பொறுப்பான அலுவலர்களுக்கு தனி*

***வாகனங்களை வழங்காமை, வெளியிடங்களில் இருந்து வந்த குண்டர்களை வாக்களிப்பு நிலையங்களுக்குள் நுழைய அனுமதித்தல், வாக்குப் பெட்டிகளை நேரடியாக அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு எடுத்துச் செல்லாமல் யாழ்ப்பாண இந்துக் கல்லூரிக்கு எடுத்துச் செல்லுதல் போன்ற காரணங்களினால் யாழ்ப்பாண மாவட்டத்தில் நடத்தப்பட்ட தேர்தல் முறையாக நடத்தப்படவில்லை என்றும், இவ்வாறான முறைகேடுகள் நிறைந்த தேர்தல் ஒன்றை தாம் தமது வாழ்க்கையிலேயே கண்டதில்லை எனவும் யாழ்ப்பாணத்தில் தேர்தல் கடமைக்குச் சென்று திரும்பிய பல சிங்கள அதிகாரிகள்கூட `எத்த` பத்திரிகைக்குத் தெரிவித்தார்கள்."***

[செவ்வாய்க்கிழமை, ஜூன் 22, 1981 அன்று 'எத்த']

இந்த அறிக்கையில் பெயர்கள் வெளியிடப்படாத அரசியல் அதிகாரம் பெற்ற நபர்கள் யார்? அந்த அரசியல் அதிகாரம் பெற்ற நபர்களில் அமைச்சர் காமினி திசாநாயக்க பிரதானமானவர். அமைச்சர் ரணில் விக்ரமசிங்க, அமைச்சர் சிறில் மத்தியூ மற்றும் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா ஆகியோர் மற்றைய மூன்று அமைச்சர்களாவர். குருநாகல் மாவட்ட அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா மற்றும் யாழ் மாவட்ட அமைச்சர் யூ.பீ.விஜேகோன் என்போர் ஏனையவர்கள் ஆவர். மற்றைய பிரதி அமைச்சரை அடையாளம் காண்பது கடினமாக உள்ளது. அக்காலத்தில் வடக்கு மாகாணத்திற்கு நியமிக்கப்பட்ட மாவட்ட அமைச்சர்கள் அனைவரும் குறிப்பாக, ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

16-6-81 The Eelanadu

மணி வாக்கு

[illegible]

# நமது நோக்கு

## பாபத்தின் சம்பளம்

மாவட்டசபைத் தேர்தல் முடிவு [illegible] அரசியல்கட்சிகளை [illegible] எதிர்பார்க்கப்பட்டதொன்றும் [illegible]

[illegible]

நாடு முழுவதிலும் [illegible] பின் எந்த நிலையில் [illegible] பாராட்ட [illegible] இடித்துரைக்கின்றன.

வாக்குரிமை பெற்ற [illegible]

[illegible] தமிழ் அமைச்சர்கள், மாவட்ட அமைச்சர்கள், [illegible] பாராளுமன்ற உறுப்பினர்கள் [illegible] பிரசார [illegible] கட்டவிழ்த்து விட்டனர்; [illegible] இந்த படுதோல்வி [illegible] அதிசயமல்ல; [illegible] தமிழ்மக்களைப் [illegible] வேண்டுமென்ற அரசியல் [illegible] அரசாங்கத்திற்கு உதவமாவதற்கு இப்படிப்பிலை உதவவேண்டும்.

வடமாகாணத்தின் [illegible] இன்று நாட்டின் [illegible] மாவட்டமும் [illegible] விவகாரமாய்விட்டது.

தேர்தல் ஒழுங்கீனங்களின் உச்சக் கட்டத்தை அடைந்தயும். மாவட்டத்தின் தேர்தல் முடிவு இரு வாரங்களுக்குப் பின்னரே வெளிவந்திருக்கிறது!

நாட்டின் சரித்திரத்தில் [illegible]

[illegible]

அனலை நிவு-3

# 16

## யாழ்ப்பாண "அபிவிருத்தி சபைத்" தேர்தலின்  தலைவிதி!

*“வாக்குகள் அனைத்தையும் எண்ணி, ஏற்கனவே எண்ணி முடிக்கப்பட்ட வாக்குகளுடன் சேர்த்து அதன் முடிவுகளை வெளியிட உத்தரவிட வேண்டியது தேர்தல் ஆணையாளரின் பொறுப்பாகும். அவ்வாறு செய்யாதிருப்பின், அது அவர் தனது பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் ஒரு செயற்பாடாகக் கருதப்படும்.*

*தேர்தல் முடிவுகளை வெளியிடாமல் இருப்பதற்கு தேர்தல் ஆணையருக்கோ அல்லது தெரிவத்தாட்சி அதிகாரிக்கோ எந்த அதிகாரமும் இல்லை என்பது சட்டத்தில் மிகத் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அப்படியானால், முடிவை அறிவிக்காதது வெளிப்படையான ஒரு சட்ட மீறலாகும். இது தொடர்பாக ஏதாவது ஒரு கட்டத்தில் அவர்கள் அதற்கு பொறுப்பேற்க வேண்டும் என்பதை மறந்துவிடக் கூடாது.  தேர்தலின் சட்டபூர்வ தன்மை மற்றும் தேர்தலை நடத்துவதில் சட்ட ஏற்பாடுகள் ஒழுங்கு முறையாக மேற்கொள்ளப்பட்டதா இல்லையா என்பதை நீதிமன்றங்களே தீர்மானிக்க வேண்டும்`*

*எனவே, சமூக உரிமைகள் பாதுகாப்பு முன்னணி சுட்டிக்காட்டுவது போல் தேர்தல் அதிகாரிகள் அந்தப்*

***பணியை தாங்கள் மேற்கொள்வது பற்றி எந்த வகையிலும் சிந்திக்கக் கூடாது. அவர்கள் செய்ய வேண்டியது தேர்தலை நடத்துவதும்,  தேர்தலை நடத்திய பின்னர் சட்டத்தின் விதிகளின்படி அதன் முடிவுகளை அறிவிப்பதுமேயாகும்."***

*[சமூக உரிமைகள் பாதுகாப்பு முன்னணி அறிவிப்பு, ஜூன் 1981]*

நாடு முழுவதும் கடந்த 4-ம் தேதி மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல் நடைபெற்றது. ஆனால், யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைபெற்ற தேர்தல் முடிவுகள் 16 நாட்கள் ஆகியும் அறிவிக்கப்படவில்லை. இது இலங்கை வரலாற்றில் மட்டுமன்றி உலகத் தேர்தல் வரலாற்றிலும் ஒரு சாதனையாகும். அதில் இன்னும் நகைப்பிற்கிடமானது யாதெனில், இலங்கை சர்வசன வாக்குரிமையின் 50 ஆவது ஆண்டு நிறைவைப் பெருமெடுப்பில் கொண்டாடும் வேளை இந்த அற்புதமான உதாரணத்தை ஜனநாயக உலகிற்கு வழங்கியிருக்கிறது என்பதாகும். மறுபுறத்தில், இத்தகைய ஒரு தேர்தல் மோசடி இலங்கை தேர்தல் வரலாற்றில் ஒருபோதும் நடந்ததில்லை. தேர்தல் முடிவுகள் வெளியிடப்படுவது தாமதமாகியும் அந்தத் தாமதத்துக்கான காரணத்தை தேர்தல் ஆணையாளர் எம். ஏ. பியசேகரவோ அல்லது யாழ்ப்பாண தேர்தல் பொறுப்பதிகாரி யோகேந்திரா துரைசாமியோ இதுவரை உத்தியோகபூர்வ அறிவிப்பாக வெளியிடவில்லை.

தேர்தல் ஆணையாளர் என்பவர் ஒரு அமைச்சருக்கு கீழ்பட்டவர் அல்ல என்பது மட்டுமன்றி  ஜனாதிபதிக்கும் கீழ்பட்டவர் அல்ல. அவர் நேரடியாக பாராளுமன்றத்திற்கு பதில் சொல்லும் பொறுப்புடையவர். இருந்த போதிலும், யாழ்ப்பாணத்தில்

தேர்தல் முடிவுகள் ஏன் இன்னும் அறிவிக்கப்படவில்லை என்பதை நாட்டுக்கு சொல்ல வேண்டிய கடமையும் அது தொடர்பில் பொறுப்பு கூறுதலும் தேர்தல் ஆணையாளர் எம்.ஏ. பியசேகரவுக்கு உண்டு. இந்நிலையில், அப்போதைய கட்டத்தில் ஒரு பிரபல மனித உரிமை அமைப்பாக இருந்த சமூக உரிமைகள் பாதுகாப்பு முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

*"யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல் அதிகாரியாக இருந்த அரசாங்க அதிபரான யோகேந்திரா துரைசாமிதான் அந்தத் தேர்தல் முடிவுகளை வெளியிடும் பொறுப்பில் இருந்தார். இது தொடர்பாக அவருக்கு கட்டளை பிறப்பிக்க வேண்டியவர் தேர்தல் ஆணையாளர் எம். ஏ. பியசேகர, ஆனால் அது தொடர்பாக மௌனமே நிலவியது."*

இவை பற்றி எதுவுமே அறிந்திராத அப்பாவி போல் ஜனாதிபதி ஜெயவர்தன நடந்து கொண்டார். ஊடக அறிக்கைகளின்படி, ஜூன் இரண்டாவது வார இறுதியில், ஜெயவர்தன தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர்களைச் சந்தித்தார். அதன்படி, எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ.அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் வாக்குகளை மீள எண்ணுவதற்கு இணங்கியதுடன், தமிழ் காங்கிரசும் ஒரு சுயேச்சைக் குழுவும் அதை எதிர்த்ததாக ஜனாதிபதி தெரிவித்தார். யாழ்ப்பாண அபிவிருத்தி சபைத் தேர்தலில் மக்கள் அளித்த வாக்குகளை எண்ணி, அதன் முடிவுகளை அறிவிக்க வேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளர் எம்.ஏ.பியசேகர தீர்மானித்துள்ளார். அதேவேளை, ஆணையாளரின் இந்தத் தீர்மானத்தை தானும்

ஏற்றுக்கொள்வதாக ஜனாதிபதி நேற்று ஆளும் கட்சிக்கு அறிவித்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தனது அதிகாரத்துக்காக அரசியல் கபடத்தனங்களை செய்த ஜனாதிபதி ஜெயவர்தன தான் எந்தத் தவறும் செய்யாதது போல் அப்போது நடந்து கொண்டதை ஊடகங்கள் பின்வருமாறு அறிக்கையிட்டன.

*"இந்த விடயம் தொடர்பில் தேர்தல் ஆணையாளருடன் நேற்று கலந்துரையாடியதாகவும், தேர்தல் நடவடிக்கைகள் உரிய முறையில் முன்னெடுக்கப்படவில்லை எனத் தேர்தல் பொறுப்பதிகாரி யோகேந்திரா துரைசாமி அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளதாகவும் ஜனாதிபதி அந்தக் கலந்துரையாடலில் தெரிவித்தார். சில வாக்குப் பெட்டிகள் பிந்திக் கிடைக்கப் பெற்றதாலும், சில பெட்டிகள் கிடைக்காமலே போய்விட்டதாலும், இன்னும் சில ஒரு ஹோட்டலுக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் தேர்தல் பொறுப்பதிகாரி அறிவித்து இருப்பதாக ஜனாதிபதி கூறினார். இந்த நிலைமைகளின் கீழ் என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளரிடம் கேட்கப்பட்ட போது, வாக்குகளை எண்ணி முடிவுகளை அறிவிப்பதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாது என்று சட்டமா அதிபர் கருதுவதாக ஆணையாளர் சுட்டிக் காட்டினார். யாழ்ப்பாணத்தில் மீளத் தேர்தல் நடத்த வேண்டுமாயின் தற்போதைய சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்றும், அதற்கு தான் தயாராக இல்லை என்றும் ஜனாதிபதி ஆளும் கட்சி உறுப்பினர்களிடம் கூறியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. `"*

[ 'எத்த' பத்திரிகை, 1981. ஜூன் 11 அன்று]



ஈழநாடு

EELANADU

விலை சதம். 60

மலர் 23 வைகாசி 24 ஷஃபான் 3 இதழ் 112 6-6-1981 சனிக்கிழமை யாழ்ப்பாணம்

யாழ்: முடிவுகள் வெளியாகவில்லை

[யாழ்ப்பாணம்] யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படவில்லை.

இம்மாவட்ட தேர்தல் முடிவுகள் சில சட்டப்பிரச்னைகள் காரணமாக வெளியிடப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதுபற்றி தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் இது குறித்து தேர்தல் ஆணையாளரே இறுதி முடிவெடுப்பார் என்றும் யாழ். அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி தெரிவித்துள்ளார்.



හදිසි නීතිය යටතේ බලධරයා විසින් කපන ලද 1981 ජූනි 9 දා අත්තකතුවැකිය

යාපනයේ ප්‍රතිඵල හංගන්න දෙන්න එපා

**யாழ். தேர்தல் முடிவுகளை ஒளிக்க இடமளியாதீர்!**

**‘அத்த` பத்திரிகை தலைப்புச் செய்தி**

அதே செய்தித்தாள் பின்னர் அதைப் பற்றியதொரு ஆசிரியர் தலையங்கத்தையும் எழுதியது.

**யாழ்ப்பாணத்தின் தேர்தல் முடிவுகளை ஒளிக்க முடியாது!**

**தேர்தல் ஆணையாளருக்கு சமூக உரிமைகள் பாதுகாப்பு முன்னணி கடிதம்.**

***யாழ்ப்பாணம் மாவட்ட சபைத் தேர்தல் முடிவுகளை வெளியிடாமல் இருப்பதற்கு தேர்தல் ஆணையாளருக்கு சட்டரீதியான உரிமை இல்லை என்றும், தேர்தல் முடிவுகளை***

வெளியிடும்படியும் கோரி  இலங்கை சமூக உரிமைகள் பாதுகாப்பு முன்னணியினால் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளரின் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைய யாழ்ப்பாணத்தில் அபிவிருத்தி சபைத் தேர்தலில் இடம் பெற்ற முறைகேடுகள் குறித்து விரிவான விபரங்களை பொதுமக்களுக்கு சமர்ப்பிக்குமாறு தேர்தல் ஆணையாளரிடம் அந்தக் கடிதத்தில் மேலும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.  இது தொடர்பாக பொதுமக்கள் – குறிப்பாக தேர்தலின் சட்டபூர்வமான தன்மை குறித்து நீதிமன்றத்தின் முன்னால் கேள்வி கேட்க விரும்பும் எவருக்கும் – இதைப் பற்றி அறிய உரிமை உண்டு என்பதையும் கட்டுரை வலியுறுத்துகிறது.

இந்தக் கடிதத்தை தாம் எழுதுவதற்குக் காரணம், ஜனநாயகத் தேர்தல்கள் மூலமாகவும், வேறு வழிமுறைகள் மூலமாகவும் ஆட்சி நிர்வாகத்தில் முடிவெடுக்கும் செயல்முறையில் பங்கேற்பதற்கான மக்களின் உரிமை தொடர்பாக தமது அமைப்பு கொண்டுள்ள அக்கறை  தமது முதன்மை நோக்கமாக இருப்பதே ஆகும் என சமூக உரிமைகள் பாதுகாப்பு முன்னணி அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

"எங்கள் அமைப்பு ஆர்வம் காட்டும் மற்றொரு விடயம் என்னவென்றால், அரசாங்கத்தின் பல்வேறு துறைகள், பிற துறைகளின் பணிகளை கையகப்படுத்தாது உரிய

*முறையில் செயற்பட வேண்டும் என்பதாகும். எனவே, கலவான (கலவான தேர்தல் பிரச்சினை) விவகாரத்தில், ஒருவர் பாராளுமன்ற உறுப்பினரா இல்லையா என்பதை தீர்மானிக்க வேண்டியது நீதிமன்றத்தின் பொறுப்பு என்றும், அரசியலமைப்பிற்கு அர்த்தம் கற்பிப்பது உயர் நீதிமன்றத்தின் கடமை என்றும் நாம் நீதிமன்றத்தில் வாதிட்டோம்.*

*இன்று, யாழ்ப்பாண அபிவிருத்தி சபைத் தேர்தல் தொடர்பாக நீதித்துறை மற்றும் தேர்தல் ஆணையர் மற்றும் / அல்லது அவரது தேர்தல் அதிகாரி ஆகியோரின் அதிகார எல்லைகள் எவை என விளக்குவது குறித்து ஒரு கேள்வி எழுந்துள்ளது. எங்களுக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில், ஏராளமான வழக்கறிஞர் உறுப்பினர்களை உள்ளடக்கிய எங்கள் செயற்குழு இந்த பிரச்சினையைப் பரிசீலித்துள்ளது. எனவே, உங்களதும், உங்கள் தேர்தல் அதிகாரியினதும் சட்டபூர்வ கடமை குறித்த எங்கள் கருத்துக்களை உங்களுக்குத் தெரிவிப்பதற்காக நாங்கள் இதை எழுதுகிறோம்.*

*யாழ்ப்பாண அபிவிருத்திச் சபை பிரதேசத்துக்குப் பொறுப்பான தேர்தல் அதிகாரி, அந்தத் தேர்தல் முடிவுகளை இன்னும் அறிவிக்கவில்லை. அதற்குக் காரணம், சட்டத்தின் சில விதிகள் இன்னும் சரியாக நிறைவேற்றப்படாமையே என்பதை நாங்கள் அறிந்துள்ளோம். எனவே, தெரிவத்தாட்சி அதிகாரி இந்த விவகாரத்தை தேர்தல் ஆணையருக்கு அனுப்பி வைத்துள்ளார். ஒரு தேர்தலில் ஏதேனும் விசேடமான அல்லது எதிர்பாராத சூழ்நிலை ஏற்பட்டால் எவ்வாறு செயல்பட வேண்டும் என்று உத்தரவிடுவதற்கு*

*அபிவிருத்திச் சபை தேர்தல் சட்டம் தேர்தல் ஆணையருக்கு அதிகாரம் அளிக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டும் சமூக உரிமைகள் பாதுகாப்பு முன்னணி, யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட நிலைமை பற்றி பின்வருமாறு கூறுகிறது.*

*அங்கு ஏற்பட்ட இடர்பாடுகளின் சரியான தன்மை குறித்து உத்தியோகபூர்வ அறிக்கை எதுவும் வெளியிடப்படவில்லை. ஆனால், சமூக உரிமைகள் பாதுகாப்பு முன்னணிக்கு தெரிந்த வரையில் அந்த இடர்பாடுகள் பின்வருமாறு .*

1. சில வாக்குச்சாவடிகள் திறக்க முடியாமல் போனமை.
2. சில வாக்குச்சாவடிகளை திறப்பதில் ஏற்பட்ட தாமதம்.
3. சில வாக்குப் பெட்டிகளை தெரிவத்தாட்சி அலுவலருக்கு அனுப்ப முடியாமல் போனமை.
4. சில வாக்களிப்பு மையங்களில் வாக்குகள் எண்ண முடியாமல் போனதும், வாக்குகள் எண்ணப்படாமல் வாக்குப் பெட்டிகள் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அனுப்பப்பட்டதும்.

*1, 2, 3 ஆகிய விடயங்கள் தொடர்பாக தேர்தல் ஆணையர் இப்போது எதுவும் செய்ய முடியாது. ஆனால் 4 வது விடயத்தில் அவர் ஏதாவது செய்ய முடியும். அதாவது, அந்த வாக்குப் பெட்டிகளில் உள்ள வாக்குகளை எண்ணிய பின்னர் (சம்பந்தப்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில்), அந்த வாக்குகளை எண்ணப்பட்ட முந்தைய வாக்குகளுடன் சேர்த்து, முடிவை வெளியிடுமாறு*

*வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உத்தரவின் மூலம் தெரிவத்தாட்சி அதிகாரிக்கு அறிவிக்க வேண்டும்.*

*சட்டத்தின் சில விதிகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதற்காக தேர்தல் முடிவை அறிவிக்கும் பொறுப்பில் இருந்து தெரிவத்தாட்சி அதிகாரி விடுவிக்கப்பட மாட்டார். முடிவை அறிவிப்பதைத் தவிர்க்க அவருக்கு அதிகாரம் அளிக்கும் எந்த விதியும் சட்டத்தில் இல்லை. இருப்பினும், சில விதிகள் முறையாக பூர்த்தி செய்யப்படாமல் போனது தான் தேர்தல் ரத்து செய்யப்படுவதற்கான காரணம் என்று நீதிமன்றம் முடிவு செய்தால், அதன்படி தேர்தல் முடிவுகள் ரத்து செய்யப்படுவது என்பது வேறு விடயம்.*

*சமூக உரிமைகள் பாதுகாப்பு முன்னணியால் அனுப்பப்பட்ட கடிதத்தில் மேலும் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:*

*"தேர்தல்களை முறையான வகையில் நடத்துவதன் முக்கியத்துவத்தை சமூக உரிமைகள் பாதுகாப்பு முன்னணி பலமாக வலியுறுத்துகிறது. ஒரு பகுதியினர் வாக்களிப்பதிலிருந்து தடுக்கப்பட்டால் அது மிகவும் பாரதூரமான விடயமாகும். மறுபுறம், தெளிவாக வெளிப்படுத்தப்பட்ட பொதுமக்களின் கருத்தானது, அந்த முடிவைப் பாதிக்க வாய்ப்பில்லாத சில காரணிகளால் நசுக்கப்பட்டால், அதுவும் ஒரு பாரதூரமான விடயமாகும். இது குறித்து ஆராய்ந்து, சீர் தூக்கிப் பார்த்து, முடிவெடுக்க வேண்டியது நீதிமன்றம் தான். அதனை தேர்தல் ஆணையரோ, தெரிவத்தாட்சி அதிகாரியோ முடிவு செய்ய முடியாது. அவர்களில் யாராவது ஒருவர் அவ்வாறு செய்ய*

***முனைந்தால், அது நீதிமன்றத்துக்கு உரிய பணியை தாம் கையகப்படுத்துவதாகும்.***

*(9.6.1981 அவசரகாலச் சட்டத்தின் கீழ் தணிக்கை அதிகாரியால் வெட்டப்பட்ட 'எத்த' பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் )*


අත්ත

අයථා පාලනයට විශ්වාස භංගයක්!

முறையற்ற ஆட்சிக்கு எதிராக நம்பிகை இல்லாத் தீர்மானம் - ‘அத்த’ பத்திரிகை செய்தி

ஆனால், ஏனைய பத்திரிகைகளும், இலத்திரனியல் ஊடகங்களும் இந்தக் குற்றங்களைச் செய்த அரசாங்கத்தை விமர்சிக்கவோ, அது பற்றிய செய்திகளை வெளியிடவோ முன்வரவில்லை. அந்த நாட்களில் அமுலில் இருந்த செய்தித் தணிக்கை அவர்களுக்கு ஒரு வாய்ப்பாகக் கூட இருந்திருக்கலாம்.

# 17

## அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை

*"யாழ்ப்பாணம் எமது நாட்டின் ஒரு பகுதியாகும். ஆனால் அரசாங்கம் யாழ்ப்பாணத்தை ஒரு எதிரி நாட்டைப் போலவே பார்த்திருக்கிறது. ஈராக் மீதான இஸ்ரேலின் வான்வழித் தாக்குதலுக்கும், யாழ்ப்பாணம் மீதான யூ.என்.பி. அரசாங்கத்தின் தாக்குதலுக்கும் இடையே என்ன வேறுபாடு? இஸ்ரேலிய குண்டுகளால் அழிக்கப்பட்ட அணு மின் நிலையம் ஈராக்கிற்கு எவ்வளவு பெறுமதியானதோ, அதேபோல யூ.என்.பி. அரசாங்கத்தால் அழிக்கப்பட்ட யாழ்ப்பாண நூலகமும், பொதுச் சொத்துக்களும் எமது நாட்டுக்கு பெறுமதி வாய்ந்தவை. இந்த அழிவை யூ.என்.பி. அரசாங்கமே செய்தது என்று நாம் வேண்டுமென்றே தான் கூறிக்கொண்டிருக்கின்றோம். அதற்குக் காரணம், இந்த மாபெரும் குற்றத்திற்கான பழியை நாங்கள் அப்போது யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்ட ஓரிரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது மட்டும் சுமத்திவிட முடியாது. அங்கு செய்யப்பட்ட குற்றங்களுக்கு ஜனாதிபதியின் முழு பொலிசுமே பொறுப்பேற்க வேண்டும். ஆனாலும், பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைத் தாக்குதல்களுக்கு யூ.என்.பி. காடையர்களினதும், வழிப்பறிக்*

*கொள்ளைக்காரர்களினதும், ஒவ்வொரு பிரதேசத்துக்குப் பொறுப்பான அரசியல் முகவர்களின் சண்டியர்களினது உதவியும், ஊக்குவிப்பும் கிடைத்தன என்பதை உறுதிப்படுத்தும் கண்ணால் கண்ட சாட்சிகள் உள்ளன.*

*யூ.என்.பி. குண்டர் தலைவர்களை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பியது யார்? எதற்காக?*

*யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தையும், மாவட்ட அரசாங்க அதிபரையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் அளவுக்கு இந்தக் காட்டுமிராண்டிகளிடம் யாருடைய அதிகாரம் இருந்தது?*

*அவர்கள் அங்கு செல்லும்போது ரயில்களில் நிரம்ப காடையர்களை அழைத்துச் செல்ல வேண்டும் என்று சொல்லப்பட்டதா?*

*இவையெல்லாம் ஒரே கேள்வியின் பகுதிகளாகும். இந்தக் கேள்விகளை மறந்துவிட்டு பொலிஸாரை மட்டும் தனிமைப்படுத்தி இதில் பிரதிவாதியாக்க முடியாது."*

*"இவை அனைத்துமே புலிகள் இயக்கத்தினாலும், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் 'ஈழப்' போராட்ட ஆர்ப்பாட்டத்தினாலுமே தொடங்கின என்று ஐ.தே.க காட்ட முயற்சிக்கிறது என்பது சிறில் மத்தியூக்களின் உரைகளில் இருந்து தெளிவாகிறது. ஆனால், ஈழப் போராட்டம் ஏன் நடந்தது என்பது தனியாக பரிசீலிக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும் "*

*[சுரத் அம்பலாங்கொட, ஜூன் 12, 1981 இன் `எத்த' பத்திரிகை ]*

1981 ஜூன் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கூடிய எதிர்க்கட்சி பாராளுமன்றக் குழு, யாழ்ப்பாண மாவட்டத்தில் அபிவிருத்திச் சபைத் தேர்தலின் போது மே 31 முதல் ஜூன் 8 வரையான காலப்பகுதியில் அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் நடந்து கொண்ட விதம் தொடர்பாக அரசாங்கத்திற்கு எதிராக ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவரத் தீர்மானித்தது. இத்தீர்மானத்தை எடுக்கும் கூட்டத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

அபிவிருத்திச் சபைத் தேர்தலின் போது அரசாங்கம் யாழ்ப்பாண மாவட்டத்தில் குற்றச் செயல்களை நிகழ்த்தியமை, நாடளாவிய ரீதியில் அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியமை, யாழ்ப்பாண மாவட்டத்தில் மாத்திரம் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தியமை என்பவையே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கான அடிப்படைகளாக இருந்தன. மே 31 முதல் ஜூன் 8 வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெற்ற வீடுகள் மற்றும் கடை எரிப்புகள், கொள்ளை மற்றும் படுகொலைகள், ஊழல் மற்றும் ஜனநாயக விரோத நடவடிக்கைகள் அனைத்துக்கும் அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என எதிர்க்கட்சியின் பாராளுமன்றக் குழு ஏகமனதாக அறிவித்தது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் அபிவிருத்தி சபை தேர்தலின் போது நான்கு அரசாங்க அமைச்சர்கள் தேர்தல் ஆணையாளரின் கடமைகளை தம் கையகப்படுத்தி செயற்பட்டுள்ளனர் என்பதை எதிர்க்கட்சி பாராளுமன்றக் குழு தெளிவாக அறிந்து வைத்திருந்தது. இதுபற்றிய விவகாரங்கள் அனைத்தும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் அதேவேளை, அரசாங்கத்துக்கும், அவ்வமைச்சர்களின் நடவடிக்கைகளுக்கும்

எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படும் என எதிர்க்கட்சியின் பேச்சாளர் ஒருவர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார். பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் யாழ்ப்பாணத்தில் நடந்த சம்பவங்கள் குறித்த விவாதத்தை ஆரம்பித்து அதை உத்தியோகபூர்வமாக அறிவித்தார். ஜூன் 22 அன்று எதிர்க்கட்சியினரால் அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை சபாநாயகரிடம் கையளிக்கப்படது.

**நம்பிக்கையில்லாப் பிரேரணை**

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் அபிவிருத்திச் சபைத் தேர்தலுக்கு முன்னரும், பின்னரும் மேற்கொள்ளப்பட்ட தேர்தல் சட்டங்களை மீறும் நடவடிக்கைகள் குறிப்பாக, யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல் நடத்தப்பட்ட விதம் மற்றும் தேர்தலுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் நடந்த நிகழ்வுகள் ஆகியவை அடங்கும்.

தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியும், ஶ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை வருமாறு:

**மூன்றரை வருட கால ஐ.தே.க அரசாங்கத்தின் முறையற்ற ஆட்சியின் மூலம்**

***(அ) இந்நாட்டு மக்கள் மீது தாங்கொணா சுமையைத் திணிப்பது.***

***(ஆ) ஜனநாயகத்தைப் பற்றி உபதேசித்துக் கொண்டே மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பறிப்பது.***

*(இ) அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்கும், சிறந்த வாழ்க்கைத் தரத்தைப் பெற்றுக்கொள்வதற்குமான அரசியல் போராட்டங்கள் மற்றும் தொழிலாளர் வர்க்கத்தின் போராட்டங்கள் என்பவற்றை அதிகாரத்தைக் கொண்டு ஒடுக்குதல்.*

*(ஈ) அண்மையில் நடைபெற்ற அபிவிருத்தி சபைத் தேர்தலில் இழைக்கப்பட்ட பின்வரும் முறைகேடுகள்*

*(1) வேட்புமனு தாக்கல் செய்யும் நேரத்தில் வேலை அற்றோருக்கு நிவாரணம் வழங்கும் பணிகளைத் தொடங்க உத்தரவிடுவது.*

*(2) ஐக்கிய தேசியக் கட்சிக்கு அதிக வாக்குகள் கிடைக்காத பகுதிகளில் உணவு முத்திரைகளை வழங்க வேண்டாம் எனவும், வேலை இல்லாதோருக்கான நிவாரணப் பணிகளை இடைநிறுத்தும்படியும், காணி மாற்றங்களை இரத்து செய்யும்படியும் பிரசாரம் செய்வதன் மூலம் வாக்காளர்களை அச்சுறுத்தியமையும், வாக்காளர்களைத் தூண்டி விட்டமையும்.*

*(3) ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான தேர்தல் பிரசாரத்திலும், தேர்தலைப் புறக்கணிக்கும் பிரசாரத்திலும் ஈடுபட்டவர்களை ஆளும் கட்சியின் ஆதரவாளர்களைக் கொண்டு அச்சுறுத்தியமை மற்றும் துன்புறுத்தல்களை மேற்கொண்டமை.*

*(4) ஐ.தே.க. வுக்கு வாக்களிக்காவிட்டால் ஆபத்தான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று சில அதிகாரிகள் பிரசாரம் செய்தமை.*

*(5) கள்ள வாக்குப் பதிவு மோசடி நடவடிக்கையை ஊக்குவிக்குமுகமாக -*

*(அ) அதிக எண்ணிக்கையிலான வாக்குச் சாவடிகளில் கள்ள வாக்குப்பதிவு நடைபெறுவதைத் தடுக்க போதிய நடவடிக்கை எடுக்காமை.*

*(ஆ) கள்ள வாக்குகளை அளிக்கும் போது பிடிபட்டவர்களை ஐக்கியக் தேசியக் கட்சி அரசியல்வாதிகளின் தலையீட்டின் மூலம் பொலிஸ் காவலில் இருந்து விடுவித்தமை.*

*(6) யாழ்ப்பாண மாவட்டத்தில் சுதந்திரமாக தமது வாக்குகளை வழங்குவதற்காக வந்த ஆயிரக்கணக்கான வாக்காளர்களுக்கு அரசாங்கம் உரிய வசதிகளைச் செய்து கொடுக்காமை.*

*(7) வாக்களிப்பு நிலையங்களில் உள்ள இந்த பலவீனங்களைப் பயன்படுத்தி கௌரவ தொழிற்துறை மற்றும் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் மற்றும் கௌரவ காணி, காணி அபிவிருத்தி மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சர் ஆகியோரினது வழிகாட்டலின் கீழ் யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களில் தேர்தல் மோசடிகள் மேற்கொள்ளப்பட்டமை.*

*(8) தேர்தல் ஆணையாளர் மற்றும் அவரது உத்தியோகத்தர்களின் சுயாதீனம் மற்றும் பக்கசார்பற்ற தன்மையை கீழ்மைப்படுத்தி, கைத்தொழில் மற்றும் விஞ்ஞானத்துறை அலுவல்கள் அமைச்சரும், காணி, காணி அபிவிருத்தி மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சர் எனும் அரசியல்வாதிகள் இருவரும் தேர்தல் தெரிவத்தாட்சி*

*அதிகாரிகளின் அதிகாரங்களைத் தம்வசப்படுத்திக் கொண்டமை.*

*(9) தெரிவத்தாட்சி அதிகாரிகளால் நியமிக்கப்பட்ட சிரேஷ்ட தேர்தல் உத்தியோகத்தர்களை நீக்கி, ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய ஊழியர் சங்கம் மற்றும் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் ஆகியவற்றின் உறுப்பினர்களை சிரேஷ்ட தேர்தல் உத்தியோகத்தர்களாக நியமித்தமை. தமிழ் தெரியாத பெருமளவிலான சிங்கள உத்தியோகத்தர்களை சிரேஷ்ட தேர்தல் உத்தியோகத்தர்களாக நியமித்தமை.*

*(10) அரசியல் நியமனங்களாக தேர்தல் அதிகாரிகள் நியமிக்கப்பட்டதன் காரணமாக பின்வரும் சட்டவிரோத முறைகேடுகள் நிகழ்த்தப்பட்டமை.*

*(1) சில வாக்குச் சாவடிகளுக்கு தமிழர் ஐக்கிய விடுதலைக் முன்னணியின் வாக்குச்சாவடி முகவர்களை அணுகவிடாது செய்தமை.*

*(2) தேர்தல் நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் சில வாக்களிப்பு நிலையங்களில் ஐக்கிய தேசியக் கட்சி தவிர்ந்த ஏனைய அரசியல் கட்சிகளினதும், குழுக்களினதும் பிரதிநிதிகளை வெளியேற்றியமை.*

*(3) சில வாக்குச் சாவடிகளில் வாக்குப்பதிவின் போது தேவையற்ற நபர்கள் (அவர்களில் சிலர் ஆயுதம் ஏந்தியவர்கள்) இருந்தமை.*

*(4) சில வாக்களிப்பு நிலையங்களில், வாக்குப்பதிவு நேரத்தில் வாக்காளர்கள் வாக்களிக்க வரிசையில் நிற்கும்*

***போதே, வாக்குப் பெட்டிகளும், அளிக்கப்பட்ட வாக்குச் சீட்டுகளும் வாக்குச் சாவடி அலுவலர்களால் கார்களில் வாக்களிப்பு நிலையங்களை விட்டு வெளியே எடுத்துச் செல்லப்பட்டு, பல மணி நேரம் கழிந்த பின் அவ்வாக்குப் பெட்டிகளும் வாக்குச் சீட்டுகளும் மீண்டும் வாக்குச் சாவடிக்குக் கொண்டு வரப்பட்டமை. இதனால், வாக்களிப்பதற்கு வரிசையில் நின்ற மக்களுக்கு வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்காமல் போனமை.***

***(5) சிரேஷ்ட தேர்தல் அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்ட வாக்குப் பெட்டியொன்று மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு அமைச்சர்கள் தங்கியிருந்த ஹோட்டல் ஒன்றில் வைத்து கண்டெடுக்கப்பட்டமை.***

***(6) யாழ்ப்பாண நகராட்சி எல்லையை அண்டிய தமிழர் விடுதலை கூட்டணிக்கு அதிக ஆதரவு இருக்கும் பகுதியில் அமைந்துள்ள ஒரு வாக்குச்சாவடியின் வாக்குகள் எண்ணப்படாமை.***

என்பன உட்பட மேலும் பல விடயங்கள் மேற்சொன்ன அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

எவ்வாறெனினும், அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையானது அப்போது பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஏனெனில், அன்று முதல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர்கள் பாராளுமன்றத்தைப் புறக்கணித்ததே அதற்கான காரணமாகும். பின்னர் அரசாங்கம், அரசியலமைப்பில் 6 வது திருத்தத்தைக் கொண்டு வந்தது. அந்த திருத்தத்தின்படி, இலங்கையில் ஒரு தனி அரசை உருவாக்க ஆலோசனை வழங்குவதும், ஆதரவளிப்பதும் குற்றவியல்

குற்றமாக ஆக்கப்பட்டது. அதன் கீழ், பராளுமன்றப் பதவிகளை வகித்த அனைவரும் இலங்கைக் குடியரசுக்கு விசுவாசமாக இருக்க வேண்டுமென நிர்ப்பந்திக்கப்பட்டனர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்றப் புறக்கணிப்பு மேலும் சில ஆண்டுகள் தொடர்ந்தது. ஆனால், மேற்படி நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்க்கட்சியின் ஏனைய கட்சிகளும் முன்னெடுத்துச் செல்லவில்லை.



விலை: சதம் 60

உறுதியான பொலித்தீன் பாக்
100 மில்க் வைற் நில சோப் அல்லது 10 பார் சோப் அல்லது 10 சலவைப் பவுடர் மேலுறைகளை அனுப்பி நல்லரகமான உறுதியுள்ள பொலித்தீன் பாக்கை பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்

# ஈழநாடு
THE EELANADU

உற்சாகமும் புத்துணர்வும்பெற பாவியுங்கள்!
அண்ணா கோப்பி
மின்சார ரோஸ்டரில் உங்கள் முன்னிலையில் வறுத்து அரைத்த
அண்ணா கோப்பியை வேண்டிய அளவில் பெற்றுக்கொள்ள விஜயஞ்செய்யுங்கள்.
அண்ணா கோப்பிக் கடை
யாழ்ப்பாணம் - சுன்னாகம்

மலர் 23 வைகாசி 32 ஷஃபான் 11 இதழ் 120
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 14-6-1981

யாழ். நகரில் இடம்பெற்ற வன்செயல்களின் போது (1) 31-05-1 இரவு தீக்கிரையான யாழ். எம். பி. யின் வீட்டின் மேல் தோற்றம். (2) 1-06-81 இரவு முழுவதுமாக எரிந்துபோன யாழ் பழைய மார்க்கட். (3) 1-06-81 இரவு தீக்கிரையான "ஈழநாடு" பத்திரிகை அலுவலக கட்டிடத்தின் தோற்றம். கூரை இழந்த நிலையில் பின்பகுதியிலிருந்து எடுக்கப்பட்ட படம் இது. (படங்கள் ஏ வி எம்.)

யாழ்ப்பாணத்தில் உயர்மட்டப் பொலிஸ் குழுவினர்:

## முழு அளவில் விசாரணை; இன்று இடங்களை குழு பார்வையிடும்

### சேதவிபரங்களும் மதிப்பீடு செய்யப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த மாதம் 31-ம் திகதி முதல் தொடர்ச்சியாக சில தினங்கள் நடைபெற்ற வன்செயல்கள் தொடர்பாக உயர்மட்டப் பொலிஸ் குழு விசாரணை இன்று ஆரம்பமாகிறது.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தலைமையில நேற்று மாலை யாழ்ப்பாணம வந்துள்ள பதினறு பேர் கொண்ட இப்பொலிஸ் குழு; யாழ்ப்பாணத்தில் மே 31 ம் திகதி முதல் சில தினங்கள் வரை நடைபெற்ற கொலை, கொள்ளை, தீவைப்பு, தாககுதல் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்தும்.

இவ் விசாரணையின் முதற்கட்டமாக உயர் மட்டப் பொலிஸ் குழு, சம்பவம் நடைபெற்ற இடங்களை இன்று நேரில் பார்வையிடும்.

உயர்மட்டக்குழு
பதினறு பேர் கொண்ட ...

... விக்கிரமசூரிய, 3. ... பொலிஸ் அதிபர் திரு. ஜி பி. ... கனகரத்தினம், 5. உதவிப் பொலிஸ் அதிபர் திரு. சி. ... கனகசிங்கம், 6. உதவிப் ...

## தமிழர் கூட்டணி எம். பிக்கள் உண்ணாவிரதம்!

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. க்கள் இம்மாதம் இருபத்தோராம் திகதி ஞாயிற்றுக்கிழமை முழுநாள் உண்ணாவிரதம் மேற்கொள்வார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், யாழ்ப்... யும் வென்றெடுக்கும் நோக்கத்துடன் இந்த உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்படுவதாக கூட்டணித்தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

உண்ணாவிரதம், 21ம் திகதி காலை தந்தை செல்வா ...

# 18

## யாழ்ப்பாணத்திற்கு வழங்கப்படாத நீதி

அ. அமிர்தலிங்கம்: *“பிரதி சபாநாயகர் அவர்களே, இந்த நாட்டுத் தமிழ் மக்கள் தொடர்ந்தும் இப்படி நடத்தப்படுவதற்குத் தயாராக இல்லை. தமிழ் மக்கள் சார்பில் நாம் கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும். இந்த அழிவுகளுக்குக் காரணமான பொலிஸ் மற்றும் இராணுவத்தினரை கண்டுபிடித்து தவறு செய்தவர்களைத் தண்டியுங்கள். தமிழ் பேசும் பகுதிகளில் 75 சதவீத தமிழ் பேசும் பொலிஸ் உத்தியோகத்தர்களை நியமியுங்கள்.*

*யாழ்ப்பாணத்தில் நடந்த சம்பவங்கள் தொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற உலக நிறுவனங்கள் விசாரணை நடத்த வேண்டும். அத்தகைய பணிகள் செய்யப்படாவிட்டால், எங்கள் கட்சி உறுப்பினர்கள் இந்த நாட்டின் சட்டவாக்க நடவடிக்கைகளில் பங்கேற்பதை நிறுத்திவிடுவார்கள். எதிர்காலத்தில் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரும் செயற்பாட்டுக்கு மாத்திரமே அவர்கள் பங்கேற்பார்கள். எங்கள் கட்சியினர் ஏதேனும் தவறு செய்திருந்தால், அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கும்படி நான்*

*அரசுக்கு அறிவிக்கிறேன். ஆனால் இனிமேலும் தமிழ் மக்களை இந்த வகையில் துன்புறுத்தக் கூடாது.*

*கடந்த சில நாட்களில் மே 31 முதல் ஜூன் 8 வரை நடந்த சம்பவங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து முழுமையான விசாரணை நடத்த சர்வதேச மன்னிப்புச் சபை அல்லது சர்வதேச சட்டத்தரணிகள் ஆணைக்குழு போன்றதொரு பொருத்தமான சர்வதேச அமைப்பை அரசாங்கம் அனுமதிக்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறிக்கை சமர்ப்பிப்பதுடன், அத்தகைய சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கு குற்றவாளிகளை அடையாளம் கண்டு தண்டிக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு போதிய நிவாரணம் உடனடியாக வழங்கப்பட வேண்டும்.*

*நாங்கள் இந்தக் கோரிக்கைகளை அரசாங்கத்தின் கவனத்திற்காகவும், கௌரவ உறுப்பினர்களின் தகவலுக்காகவும் முன்வைக்கிறோம் என்பதை தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன். பல ஆண்டுகளாக இருந்துவரும் தெரிவுக் குழுக்கள் மற்றும் விசாரணை ஆணைக்குழுக்கள் என்பன விடயங்களை மூடி மறைப்பதைத் தவிர வேறெதனையும் செய்யாததால் அவற்றின் மீது நாம் நம்பிக்கை இழந்து விட்டோம். எனவே சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற ஒரு அமைப்பு அல்லது சர்வதேச சட்டத்தரணிகள் ஆணைக்குழு இந்த சம்பவங்களை விசாரிக்க வேண்டும் என்று நாங்கள் கோருகிறோம்.*

***கௌரவ பிரதி சபாநாயகர் அவர்களே, இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்குப் போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படாவிடில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர்கள் பாராளுமன்றக் கூட்டங்களில் கலந்து கொள்ளப் போவதில்லை. அத்துடன், மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தல் செயற்பாடுகள் தொடர்பாக அரசாங்கத்தின் தணிக்கைகளையும் மீறி அதை அம்பலப்படுத்துவதைத் தவிர எமது உறுப்பினர்கள் சட்டவாக்க நடவடிக்கைகள் எதிலும் பங்கேற்க மாட்டார்கள். யாழ்ப்பாண மாவட்டத்தில் அபிவிருத்தி சபைத் தேர்தலின் போது நடந்த விடயங்கள் தொடர்பாக ஏனைய எதிர்க்கட்சிகளுடன் இணைந்து அறிவிக்கவும் உத்தேசித்துள்ளோம். "***

*[1981 ஜூன் 09 ஆம் திகதிய ஹன்சாட் அறிக்கை ]*



விலை: சதம் 60

ஈழநாடு

THE EELANADU

மலர் 23 ஆனி 17 ஷஃபான் 28 இதழ் 137

யாழ்ப்பாணம் புதன்கிழமை 1-7-1981

நியூ கேம்பிறிட்ஜ்
திருநெல்வேலிச் சந்தி
(தூய பிரயோக) கணிதம்
A. பத்மநாதன் (பத்தர்)
ஆரம்பம்: 5-8-1981

லண்டனில் 'அமிர்'

லண்டன், ஜூன் 30 இலங்கை எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் இன்று எதிர்பாராத விதமாக லண்டன் வந்து சேர்ந்தார்.

திரு. அமிர்தலிங்கம் வியாழக்கிழமை இலங்கை திரும்புவார் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டபோதிலும் அடுத்த வெள்ளிக்கிழமை தான் தாயகம் திரும்புவார் என்று லண்டனில் தெரிவிக்கப்பட்டது.

★ யாழ். மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தல்:

சர்வதேச ஆணைக்குழு விசாரணை வேண்டும்!

யாழ் மாநகரசபை கோரிக்கை

(யாழ்ப்பாணம்) யாழ்ப்பாணத்தில் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் நடாத்தப்பட்ட முறைபற்றி ஒரு சர்வதேச ஆணைக் குழுவின் மூலம், பக்க சார்பற்ற விசாரணை ஒன்றினை நடத்துவிக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் நேற்று யாழ். மாநகரசபைமாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. யாழ். மாநகர சபைத் தலைவர் திரு. இராஜா விசுவநாதன் [6-ம் பக்கம் பார்க்க]

மற்றுமொரு படுகொலை!

தெஹ்ரான், ஜூன் 30 தெஹ்ரானின் பிரதான சிறைச்சாலை ஆளுநர் ஜனப் மொகமட் நேற்று படுகொலை செய்யப்பட்டதாக தெஹ்ரான் வானொலி இன்று அறிவித்தது.

பதவிநீக்கம்செய்யப்பட்ட ஜனாதிபதி பனிசதரின் ஆதரவாளர் ஒருவர் இவரைக் கொலைசெய்ததாக அறிவிக்கப்பட்டது.

சீன உதவிப் பிரதமர் இலங்கை வந்தார்

[கொழும்பு] சீன வெளிநாட்டமைச்சரும் உதவிப் பிரதமருமான திரு. [6-ம் பக்கம் பார்க்க]

குண்டு வெடிப்புச் சம்பவம்:

இஸ்லாமிய இடதுசாரி இயக்கம்மீது குற்றச்சாட்டு

பலியானவர்கள் 75 ஆக அதிகரிப்பு

பிற்காலத்தில் யாழ்ப்பாணத்தில் நடந்த இந்தத் தொடர் சம்பவங்களால் இலங்கையின் உள்விவகாரங்களில் சர்வதேச அமைப்புகள் தலையிடத் தொடங்கின. யூ.என்.பி. அரசாங்கம் இந்தத் தொடர் குற்ற அலை பற்றி எந்தவொரு விசாரணையையும் நடத்தவில்லை. குறைந்த பட்சம் பொலிஸாரோ அல்லது இராணுவமோ தமக்கான உள்ளக விசாரணைகளைக் கூட நடத்தி குற்றவாளிகளை தண்டிக்கவில்லை. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மட்டுமே யாழ்ப்பாணத்தில் நடந்த குற்றச் செயல்கள் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று கோரியது. யாழ்ப்பாணத்தில் நடந்த குற்றங்களை விசாரிக்க ஒரு விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டும் என்று கம்யூனிஸ்ட் கட்சி விடுத்த கோரிக்கை பின்வருமாறு.

**யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த குற்றச் செயல்களை விசாரிக்க ஒரு ஆணைக்குழு வேண்டும்**

**இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி அரசாங்கத்தைக் கோருகின்றது.**

***அண்மையை நாட்களில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தாக்குதல்கள், தீவைப்புகள், படுகொலைகள் 1977 தேர்தலுக்குப் பின்னரான நிகழ்வுகளையும் விஞ்சிவிட்டன என அனுதாபத்துடனும், ஆத்திரத்துடனும் அறிக்கை வெளியிடும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, இது 1983 இல் எமது நாட்டுக்கு நடக்கப் போவதற்கான ஒத்திகை என்று ஊகிக்கின்றது. அங்கு இடம்பெற்றுள்ள அனைத்து சட்டவிரோத நடவடிக்கைகள் மற்றும் முறைகேடுகள்***

*குறித்து விசாரிக்க அரசாங்கத்தாலும், அனைத்து எதிர்க்கட்சிகளாலும் கூட்டாக அங்கீகரிக்கப்பட்ட ஆணைக்குழுவொன்றை உடனடியாக நியமிக்குமாறு எமது கட்சி அரசாங்கத்தை கேட்டுக் கொண்டுள்ளது.*

*யாழ்ப்பாண நிலைமையை ஆராய்வதற்காக 05.06.1981 அன்று யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்ட திரு.பீற்றர் கெனமன் மற்றும் கட்சியின் யாழ். மாவட்ட கவுன்சில் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட அறிக்கைகளை பரிசீலித்த பின்னர் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியால் இந்தக் கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன.*

*யாழ்ப்பாண நிலைமை குறித்து நேற்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி வெளியிட்ட முழு அறிக்கை பின்வருமாறு.*

*"யாழ்ப்பாண நிலைமையை மதிப்பிடுவதற்காக 05.06.1981 அன்று கட்சியால் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்ட தோழர் பீற்றர் கெனமன் சமர்ப்பித்த அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்ட தற்போதைய நிலைமையை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் நிறைவேற்றுக் குழு மிகுந்த கோபத்துடன் பரிசீலித்தது.*

*யாழ்ப்பாண மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கை உறுதிப்படுத்துதல் மற்றும் அமைதியான முறையில் அபிவிருத்தி சபை தேர்தலை நடத்துதல் என்ற காரணத்தைச் சாட்டாகக் கூறி யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்ட பெருந்தொகையான பொலிஸ் படையின் ஒரு பகுதியினரால் நடத்தப்பட்ட பரந்தளவிலான தீ வைப்புக்களை கட்சி மிக வன்மையாகக் கண்டனம் செய்கின்றது. தனிநபர்கள் மீதான தாக்குதல்கள் மற்றும்*

*சித்திரவதைகளையும், சொத்துக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதத்தையும் அது வன்மையாகக் கண்டிக்கிறது.*

*பொதுச் சொத்துக்கள் மற்றும் தனியார் சொத்துக்களை எரித்தல் மற்றும் பிற வழிகளில் ஏற்படுத்தப்பட்ட சேதம் 1977 இல் நாம் அனுபவித்ததை விட அதிகமாக உள்ளது.*

***26,000** புத்தகங்களைக் கொண்ட யாழ்ப்பாணம் பொது நூலகம், (* அத்த பத்திரிகை செய்தியில் எண்ணிக்கை இப்படிதான் இருந்தது) தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் கட்சியின் காரியாலயம், யாழ்ப்பாண மக்கள் பிரதிநிதியின் இல்லம், ஈழநாடு நாளாந்த செய்தித்தாள் அலுவலகம் மற்றும் அதன் அச்சகம், சுன்னாகம் மற்றும் யாழ்ப்பாண நகரில் இருந்த பொதுச் சந்தைகள் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட கடைகள் அழிக்கப்பட்டுள்ளன.*

*இந்த மோசமான அழிவுகரமான சம்பவங்கள் எல்லாம் பொலிஸ் காவல் நிலையங்களில் இருந்து சில யார் தூரங்களுக்குள்ளேயே நடந்துள்ளன.*

*பாதுகாப்புப் படையினரால் பல கொலைகளும் நடந்துள்ளதாக அறிய வந்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ஒருவரும், பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும் இனந்தெரியாத நபரால் அல்லது நபர்களால் கொல்லப்பட்டதை மொத்த யாழ்ப்பாண மக்கள் மீதும் சுமத்தி மேற்கொள்ளப்பட்டதே இந்தப் பேரழிவு என்று கூறி இதனை புறந்தள்ள மேற்கொள்ளும் முயற்சியை நாங்கள் முற்றாக நிராகரிக்கிறோம். அதேவேளை, சில தனிநபர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத*

***செயல்களையும் நாங்கள் நிராகரிப்பதோடு, அரசாங்கமோ அல்லது அதன் பாதுகாப்புப் படையினரோ கூட்டாக மேற்கொள்ளும் பயங்கரவாதம் அதற்கு தீர்வாகாது என்றும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உறுதியாக நம்புகிறது.***

ஆனால், இந்தக் குற்றங்கள் குறித்து விசாரிக்க விசாரணைக் கமிஷன் அமைப்பதை விடுத்து, சாதாரண விசாரணைகள் கூட அர்சாங்கத்தால் நடத்தப்படவில்லை. பின்னர் அந்தச் சம்பவங்களின் வரலாறு பெருமெடுப்பில் நிகழ்ந்த ஈழப்போரின் புகைமூட்டத்தால் மூடப்பட்டுப் போனது.

# 19

## யாழ்ப்பாணத்தில் மூட்டிய தீ எதிர்காலத்திலும் பற்றியெரிந்தது

"யாழ்ப்பாணத்தில் அரசாங்கமும் ஐ.தே.க குண்டர்களும் செய்த பாரிய குற்றங்களால் முழு நாடுமே அதிர்ந்து போயுள்ளது. ஆனால், அரசாங்கத்தின் பெயரோ ஜனநாயக சோஷலிஸமாகும். ஜனாதிபதி அதி உத்தமராவார். கட்சியின் பெயர் `ஐக்கிய தேசியம்’ ஆகும். இலங்கைச் சமூகம் `தர்மிஷ்ட’ சமூகமாகும். இறை வேண்டுதல்கள் ஒருபுறம். போதி பூஜைகள் மறுபுறம். கோபுரக் கலசங்கள் ஏற்றுதல் மற்றொருபுறம். எமது நாகரீகம், கலாசாரம் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு மேல் பழமையானது என்ற பெருமைகள் வேறு. ஆனால் அரசாங்கத்தின் ஆதரவுடன் யாழ்ப்பாணத்தில் அப்பாவி மக்கள் எவ்வாறு நசுக்கப்பட்டு கொல்லப்பட்டனர். 95,000 புத்தகங்களைக் கொண்ட நூலகம் எவ்வாறு அழிக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான கடைகள் எவ்வாறு அழிக்கப்பட்டன. மக்களின் கைக்கடிகாரங்கள் உட்பட பெறுமதியான பொருட்கள் எவ்வாறு கொள்ளையிடப்பட்டன. மேலும் அரசாங்கத்தின் காட்டுமிராண்டிப் பேர்வழிகள், தாம் தங்கியிருந்த பொது இடங்களில் இருந்த யன்னல், கதவுகளில் இருந்த பொருத்துக்களைக் கூட எவ்வாறு கழற்றி வந்தார்கள்

**என்பதை கேட்க உங்களுக்கு காதுகளும், பார்க்க கண்களும் இருந்தால், சிங்கள மொழியில் இருந்து `தர்மிஷ்டம்' என்ற சொற்பதமே இல்லாமல் மறைந்து போவதை நீங்கள் உணர்வீர்கள். "**

*[`அத்த' பத்திரிகை ஆசிரியர் தலையங்கம், ஜூன் 1981]*

அண்மைக்கால இலங்கை வரலாற்றில், ஒரு அரசாங்கம் அரச படைகளையும், காவல்துறையையும் பயன்படுத்தி யாழ்ப்பாணத்திற்கு தீ வைத்து அரசின் பழிவாங்கும் தாக்குதல்களை நடத்த ஆரம்பித்துள்ளது. இலங்கை வரலாற்றில் அரச அதிகாரத்தைப் பயன்படுத்தி வாக்குகளை கொள்ளையடிப்பது என்பது அன்று யாழ்ப்பாணத்திலிருந்தே ஆர்ம்பிக்கப்பட்டது. அது எதிர்காலத்திற்கும் எவ்வாறு எடுத்துச் செல்லப்பட்டது?

இனிமேல் நாம் அதன் அரசியல் வரலாற்றை ஆராய்வோம்.

1982ம் ஆண்டு அக்டோபரில் நடாத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தலின் போது, ஜனாதிபதி ஜயவர்தன தனக்கு எதிரான பிரதான போட்டியாளராக இருந்த முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் சிவில் உரிமைகளை ஏற்கனவே ஏழு ஆண்டுகளுக்கு இல்லாமல் செய்திருந்தார். இதன் காரணமாக, அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக முன்னாள் அமைச்சர் ஹெக்டர் கொப்பேகடுவ தெரிவு செய்யப்பட்டார். பிரபல நடிகர் விஜய குமாரதுங்க அவரது தேர்தல் பிரசாரத்தின் தலைவராக இருந்தார். ஜே.ஆர்.ஜெயவர்தன ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற உடனேயே, விஜய குமாரதுங்க உட்பட ஸ்ரீ.ல.சு.க. ஆதர்வாளர்கள், அதன் பல தலைவர்கள் மற்றும் நூற்றுக் கணக்காணவர்களை "அரச விரோத சதித்திட்டத்தில்"

தொடர்புள்ளவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்து "நக்சலைட்டுகள்" என சிறையில் அடைத்தார். சில மாதங்களுக்குப் பிறகு, அவர்கள் எந்தவித குற்றச்சாட்டும் முன்வைக்கப்படாமல் விடுவிக்கப்பட்டனர்.

1982 ஆம் ஆண்டில், ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் பொதுத் தேர்தலுக்காக நாடு தயாராகிக் கொண்டிருந்தது. ஆனால், ஜனாதிபதி ஜெயவர்தன "ஐந்து ஆண்டுகளுக்கு தேர்தல் வரைபடத்தை முடக்கப் போவதாக" முன்கூட்டியே எச்சரித்தார். தானே அறிமுகப்படுத்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் அதற்கான ஏற்பாடுகளை முன்கூட்டியே தயாரித்திருந்தார். அரசியல் அமைப்புச் சட்டத்தில் 4வது உறுப்புரையின் கீழ் சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கும், ஒரு பொதுத் தேர்தலை ஒத்திவைப்பதற்கும் பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது.

அதன்படி, ஜெயவர்தன அரசாங்கம் 1982 டிசம்பர் 22 ஆம் திகதியை சர்வஜன வாக்கெடுப்புக்கான திகதியாக நிர்ணயித்தது. 'விளக்கு–குடம்' கபட விளையாட்டு என்று பிரபலமாக அறியப்படும் இந்த வாக்கெடுப்பில், ஒரு பொதுத் தேர்தல் தேவையற்றது என்று நினைக்கும் வாக்காளர் 'விளக்கு' சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும், ஒரு தேர்தல் அவசியம் என்று நினைக்கும் வாக்காளர் 'குடம்' சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும்.

இந்தக் கருத்துக் கணிப்பின் போது, அரசாங்கம் 1981ல் தாங்கள் யாழ்ப்பாண தேர்தல் மோசடி நடவடிக்கையில் பெற்ற "பயிற்சியை" நன்கு பயன்படுத்தியது. இதற்கு சிறந்த உதாரணம் அந்த சர்வசன வாக்கெடுப்பின்போது ஜனாதிபதி வேட்பாளர்

ஹெக்டர் கொப்பேகடுவவின் வாக்குக்கூட கள்ள வோட்டாகப் போடப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் எதிர்க்கட்சித் தலைவர் வாக்களிக்கவிருந்த வாக்களிப்பு நிலையத்தை அவர்கள் ஏழு மணித்தியாலங்களாக மூடி வைத்தனர். ஆனால் இரண்டு மாதங்களுக்கு முன்னர், ஒக்டோபர் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ஜெயவர்தனவின் பிரதான போட்டியாளரான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் ஹெக்டர் கொப்பேகடுவ, கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள மகளிர் கல்லூரியில் இருந்த வாக்குச் சாவடிக்கு வாக்களிப்பதற்காகச் சென்றிருந்தார். ஆனால் அவரால் வாக்களிக்க முடியவில்லை. ஏனென்றால், அவரது வாக்கை வேறு யாரோ கள்ளத்தன்மாகப் போட்டிருந்தனர். சர்வஜன வாக்கெடுப்பின் போது இந்த வாக்களிப்பு நிலையம் உள்ளடக்கப்படும் கொழும்பு மேற்கு தேர்தல் தொகுதியின் ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் தலைவராக அமைச்சர் ரணில் விக்ரமசிங்க இருந்தார் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

இந்த சர்வஜன வாக்கெடுப்பின் போது நடைபெற்ற மோசடிகளைச் சரிவர புரிந்து கொள்வதற்கு, அப்போதைய தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வாவால் தயாரிக்கப்பட்ட ***'இலங்கையின் முதலாவது சர்வஜன வாக்கெடுப்பு அறிக்கை: செப்டம்பர் 1987: அரசாங்க அச்சகம்'*** என்ற புத்தகத்தை நீங்கள் படிக்க வேண்டும்.

முன்னாள் தேர்தல் ஆணையாளரின் அறிக்கையின்படி, இலங்கை வரலாற்றில் மிகவும் மோசடிகள் நிறைந்த தேர்தல் அதுவாகும். இப்படித்தான் ஜே.ஆர்.ஜெயவர்தனவின் ஆட்சி யாழ்ப்பாணத் தேர்தல் கொள்ளை முறைமையை முழு நாட்டுக்கும் அறிமுகப்படுத்தத் தொடங்கியது. 1983 மே மாதம்

நடைபெற்ற 18 இடைத்தேர்தல்களில் ஐ.தே.க அரசாங்கத்தின் இதே குற்றவியல் அரசியலை நாம் மீண்டும் காண்போம். அத்ற்காக ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் நான் இங்கு சொல்கிறேன்.

அந்த இடைத்தேர்தல் குழுமத்தில் பிரபல நடிகர் விஜய குமாரதுங்க 'மஹர' தேர்தல் தொகுதியின் வேட்பாளராக இருந்தார். விஜய குமாரதுங்க பாராளுமன்றத்திற்கு வருவதை தடுக்க ஜனாதிபதி ஜே.ஆர். மாமாவும் அவரது மருமகனான அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் வலுவான விருப்பம் கொண்டிருந்தனர். தங்கள் குடும்ப அரசியலுக்கு விஜய குமாரதுங்க எதிர்காலத்தில் சவாலாக இருப்பானோ என்ற அச்சத்திலேயே அவர்கள் இருவரும் இருந்தனர்.

'மஹர' இடைத்தேர்தலின் போது, அமைச்சர் ரணிலின் அடியாட்களால் விஜயவை சுட்டுக் கொல்ல துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்ட போது அவர் அதிலிருந்து உயிர் தப்பினார். ஆனாலும், அவருக்கு அருகில் இருந்த ஒரு தொண்டர் கொல்லப்பட்டார். தேர்தல் முடிந்து வாக்கு எண்ணிக்கை இடம்பெற்ற அன்றிரவு கம்பஹா கச்சேரியில் மின்வெட்டு ஏற்பட்டது. முதல் அனைத்து வாக்கு எண்ணிக்கையிலும் விஜய வெற்றி பெற்றிருந்தாலும், மின் தடைக்குப் பிறகு மீண்டும் வாக்குகள் எண்ணப்பட்டபோது விஜயவின் போட்டியாளரான ஐ.தே.க வேட்பாளர் கமலவர்ண ஜெயக்கொடி 45 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார் ...!

1983 யூலை 22 இல் யாழ்ப்பாணத்தில் கண்ணிவெடி வெடித்ததில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பொதுவாக இராணுவ வீரர்கள் இந்த வகையில் கொல்லப்படுவதும், அவர்களின்

உடல்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுவதும், இறுதிச் சடங்குகள் அவர்களது கிராமப் பகுதியில் இராணுவ மரியாதையுடன் நடத்தப்படுவதும் வழக்கம். ஆனால், ஜெயவர்த்தன அரசு இந்த 13 வீரர்களின் உடல்களையும் அவர்களது உறவினர்களிடம் அன்று ஒப்படைக்கவில்லை. முன்னெப்போதும் இல்லாத வகையில் தகனம் செய்வதற்காக கொழும்பு நகரின் மையப்பகுதியில் உள்ள பொரளை மயானத்திற்கு அவை கொண்டு வரப்பட்டன. அங்கு இறுதிச் சடங்குகள் முடிந்தவுடன், அன்று பொரளை நகரில் தமிழினப் படுகொலையின் ஆரம்பம் வெடித்தது. அது கொழும்பு நகரம் முழுவதிலும், பின்னர் நாடு முழுவதும் என ஒரு வாரத்திற்கும் மேலாக பரவியது.



நாட்டின் முப்படைகளின் தலைமைத் தளபதியான ஜனாதிபதி ஜெயவர்தன, நாடு முழுவதும் பரவியிருந்த வன்முறைகளை நிறுத்துமாறு தனது கட்டளையின் கீழ் உள்ள பொலிஸ் மற்றும் இராணுவத்திற்கு கட்டளையிடவில்லை. அதற்குப் பதிலாக, அந்த அழிவுகளுக்கு ஜே.வி.பி உட்பட ஐந்து இடதுசாரிக் கட்சிகள் மீது குற்றஞ்சாட்டிய அவர், அவற்றை தடை செய்தார்.

பின்னாளில் கறுப்பு ஜூலை என்று அழைக்கப்பட்ட இந்த நாசகரமான தேசிய குற்றச் செயல்களினால் சுமார் 3,000 தமிழர்கள் கொல்லப்பட்டனர். பல நூறு கோடி ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் சேதமடைந்தன. இலங்கைக்கு வந்து கொண்டிருந்த வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டை விட்டு வெளியேறினர். வீடுகளை இழந்த சுமார் இரண்டு இலட்சம் தமிழர்கள் அநாதைகளாக இந்தியாவுக்குத் தப்பி ஓடினர். அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி ஒரு விசேட அரச பிரதிநிதியை அனுப்பி, இந்தக் குற்றங்கள் நடப்பதை நிறுத்தாது இருந்ததற்காக ஜெயவர்தன அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்தார்.

நாம் முன்னர் விவரித்த யாழ்ப்பாண எரிப்புகளுக்கும் கொள்ளைகளுக்கும், கறுப்பு ஜூலை தீ மற்றும் கொள்ளைகளுக்கும் இடையிலான ஒற்றுமைகளை நீங்கள் காணவில்லையா?

யாழ்ப்பாணத்தில், அந்தக் குற்றச் செயல்களை இராணுவமும், பொலிஸாரும், குருநாகலில் இருந்து அனுப்பப்பட்ட யூ.என்.பி. காடையர் கும்பலுமே செய்தன. கறுப்பு ஜூலையில் நாடு முழுவதிலுமிருந்த ஐ.தே.கட்சியின் காடை உறுப்பினர்கள் இந்தக் குற்றச் செயல்களுக்குக் தலைமை தாங்கினர். பொலிஸாரும்,

இராணுவத்தினரும் கைகளைக் கட்டிக் கொண்டு அழிவுகளை சிரித்து, இரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தனர். அவற்றின் பின்னால் ஒளிந்திருந்த வெற்றி எக்காளம் யாதெனில் `எங்களில் 13 பேர் என்றால் உங்களில் 3000 பேர்' என்னும் பழிவாங்கும் முழக்கமாகும்.

யாழ்ப்பாண நாச்சிமார் அம்மன் கோயிலுக்கு அருகில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் பிரசாரக் கூட்டத்தில் மூன்று பொலிஸ் அதிகாரிகள் அன்று சுடப்பட்டனர். யாழ்ப்பாணத்தில் கடைகள் எரிக்கப்படுவதற்கு இந்த துப்பாக்கிச் சூடு காரணமாக இருந்தது. கறுப்பு ஜூலையில் நாடு பூராவும் தமிழர்களுக்கு சொந்தமான கடைகள், சொத்துக்கள் சூறையாடப்பட்டு தீக்கிரையாக்கப்படுவதற்கு 13 படையினர் கொல்லப்பட்டதே காரணமாகக் கொள்ளப்பட்டது. அதாவது பயங்கரவாத நடவடிக்கைகள் தோற்றம் பெறும்போது அரசாங்கம் அதைவிடவும் மோசமான பயங்கரவாதியாக மாறியிருக்கிறது என்பதே இதிலிருந்து தெளிவாகின்றது அல்லவா?

ஜெயவர்தன அரசாங்கத்தின் இந்த பயங்கரவாத நடத்தை இறுதியில் 1987 ஜூலையில் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் கையெழுத்திட இந்தியா இலங்கை அரசாங்கத்தை கட்டாயப் படுத்திய நிலைமையில் வந்து முடிந்தது. இரண்டு இலட்சம் இந்தியப் படைகளை இலங்கைக்கு கொண்டுவர ஜெயவர்தன அரசாங்கத்தை ஒப்புக் கொள்ள வைக்கப்பட்டது. இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதிலிருந்து இலங்கை வரலாற்றின் இருண்ட காலம் தொடங்குகிறது.

அரசாங்கம் மக்கள் எதிர்ப்பில் இருந்து தப்புவதற்காக யாழ்ப்பாணத்தில் செய்தது போலவே நாடு முழுவதும்

அவசரகாலச் சட்டத்தையும் ஊரடங்குச் சட்டத்தையும் பயன்படுத்தியது. யாழ்ப்பாணத்தைப் போலவே ஊரடங்குச் சட்டத்தை மீறியவர்கள் மீது சுட்டது. இந்திய இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்து ஊர்வலம்போன ஆர்ப்பாட்டக்



விலை: சதம் 60

ஈழநாடு

THE EELANADU

மலர் 23 · வைகாசி 30 ஷஃபான் 9 இதழ் 118

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 12-6-1981

"ஐ. நா.வில் இந்திய அரசு கூறவேண்டும்"

சென்னை கூட்டத்தில் தீர்மானம்

"ரோகிணி -2" விண்வெளியில் எரிந்தது

[4-ம் பக்கம் பார்க்க]

★ யாழ். மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி:

# "இலங்கையுடன் இந்திய அரசு தொடர்பு கொள்ள வேண்டும்"

## சென்னைக் கூட்டத்தில் தமிழக சபாநாயகர்

"ஐ.நா. சாஸனப்படி வெளிநாடு தலையிட உரிமையுண்டு"

சென்னை, ஜூன் 11

"யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் அமைதியுடனும் சுதந்திரத்துடனும் வாழக்கூடிய விதத்தில் நடவடிக்கை எடுக்கும்பொருட்டு மத்திய அரசு இலங்கை அரசுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ள வேண்டும்."

இவ்வாறு தமிழக சபாநாயகர் திரு. ராஜாராம் சென்னையில், யாழ் மக்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பொருட்டு நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு அமைதியான தீர்வு ஒன்றைக்காணுமாறு இலங்கை அரசை மத்தியஅரசு வலியுறுத்தவேண்டும் என்றும் திரு. ராஜாராம் கூறினார்.

பேரணி நடத்துவோம்

ம. பொ. சி. பேச்சு

## யாழ்ப்பாண அசம்பாவிதங்கள்

இந்திராகாந்திக்கு எம். ஜி. ஆர். கடிதம்

"இராணுவ உடைதரித்த நால்வர் மதிலால் ஏறிக் குதித்தனர்"

பாலசோதி மரண விசாரணையில் சாட்சியம்

[4ம் பக்கம் பார்க்க]

## "யாழ்ப்பாண சம்பவங்கள்: விசாரணைக்குழு நியமிக்கப்படும்!"

பிரதமர் அறிவிப்பு

(கொழும்பு)

"யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த வன்செயல் தொடர்பாக ஆராய விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது. யாழ். சட்டம் அமுலிலிருந்த காலப்பகுதி நீங்கலான காலத்தில் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த வன்செயல்கள் பற்றி இக்குழு விசாரணை செய்யவுள்ளது".

காரர்களை சுட்டுக் கொல்லுமாறு ஜனாதிபதி ஜெயவர்த்தன உத்தரவிட்டார்.

நிராயுதபாணியான போராட்டக்காரர்கள் மீது பொலிஸாரும் இராணுவமும் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இந்த துப்பாக்கிச் சூட்டில் அன்று ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் கொல்லப்பட்டனர். அவர்களின் உடல்கள் பிரேத பரிசோதனை செய்யப்படாமலேயே அழிக்கப்பட்டன. அப்போது தடை செய்யப்பட்டிருந்த ஜே.வி.பி., ***'தேசப்பற்றுள்ள மக்கள் இயக்கம்'*** என்ற பெயரில் ஆயுத அரசியல் இயக்கமாக மாற்றம் பெற்றிருந்தது. அந்த இயக்கம் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபை முறைக்கு எதிராகச் செயற்பட்டது. இதன் விளைவாக அதிலிருந்து 1990ம் ஆண்டு வரை நடைபெற்ற தேர்தல்கள் வன்முறைத் தேர்தல்களாக மாறின.

குறிப்பாக, 1988 டிசம்பரில் நடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், 1989 மார்ச்சில் நடந்த பொதுத் தேர்தலிலும் வன்முறைகளும் தேர்தல் மோசடிகளும் நிறைந்திருந்தன. ஜெயவர்தனவின் வாரிசான ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச, ஜே.ஆர்.ஜெயவர்தனவின் ஆட்சியையும் விட மிகவும் வன்முறையான ஆட்சியை நடத்தினார். 1988/89ல் ஐ.தே.க அரசாங்கமும் ஜே.வி.பி தலைமையிலான "தேசப்பற்றுள்ள மக்கள் இயக்கமும்" நேருக்கு நேர் ஆயுத மோதலுக்குள் சென்றன. இந்த மோதல்களினால் நாட்டின் தென் பகுதிகளில் சுமார் 60,000 இளைஞர்கள் கொல்லப்பட்டனர்.

இங்கு ஜனாதிபதி பிரேமதாச ஜெயவர்தன செயற்படுத்திய 'யாழ்ப்பாணக் கொள்கையையே' பயன்படுத்தினார். இதன் கீழ்

அரச படையினர் *`எங்களில் ஒருவர் என்றால் உங்களில் 10 பேர்'* என்ற கொள்கைக்கேற்ப ஜே.வி.பி உறுப்பினர்களை படுகொலை செய்தனர். அவ்வாறு கொல்லப்பட்டவர்களின் உடல்கள் நெடுஞ்சாலைகளில் பழைய டயர்கள் மீது போட்டு "தகனம்" செய்யப்பட்டன.

நாடே சுடுகாடாகிக் கிடந்தது.

தனது ஆட்சியின் கீழ் `ஐந்து நட்சத்திர ஜனநாயகத்தை' செயற்படுத்தப்படுவதாக ஜனாதிபதி ஜெயவர்தன எப்போதும் பெருமையாகக் கூறிவந்துள்ளார். அவருக்குப் பின் வந்த ஜனாதிபதி பிரேமதாசவும் இதே கருத்தையே எதிரொலித்தார். ஆனால் 1981ம் ஆண்டிலேயே, அதாவது முதலாம் ஈழப் போர் தொடங்குவதற்கு சில ஆண்டுகளுக்கு முன்னரே, ஐ.தே.க அரசாங்கத்தில் இருந்த நான்கு அமைச்சர்கள், ஒரு மாவட்ட அமைச்சர், ஒரு பிரதி அமைச்சர் மற்றும் நாட்டின் பிரதான படைத் தலைவர்கள் ஆகியோரால் வடக்கில் ஜனநாயகம் எவ்வாறு செயற்படுத்தப்பட்டது என்பதை நீங்கள் இப்போது நன்கு அறிந்திருப்பீர்கள். அந்த அற்புதமான ஜனநாயகம் கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்களாக நாட்டில் ஒரு உள்நாட்டுப் போரை உருவாக்கியதில் வந்து முடிந்தது. அதன் முடிவில், ஜனாதிபதி ஜெயவர்தன மற்றும் அவரது மருமகன் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் மட்டுமே எஞ்சியிருந்தனர். ஐக்கிய தேசியக் கட்சியின் ஏனைய பல தலைவர்கள் அதற்குப் பலியாகினர்.

தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் "ஐந்து நட்சத்திர" ஜனநாயகத்திற்காக காத்திருக்கும் நபர்களால்

எதிர்காலத்தில் அது மீண்டும் நடக்காது என்பதற்கு என்ன உத்தரவாதத்தை தரமுடியும்?

இன்று நாடு வங்குரோத்தாகிவிட்டது. இந்த வங்குரோத்து நிலை ஒரே இரவில் அல்லது ஒரு தசாப்தத்தில் நடக்கவில்லை. முப்பதாண்டுப் போரின் செலவு 200 பில்லியன் டாலர் என்று நம்பப்படுகிறது. அது நாட்டில் இறந்த இரண்டு தலைமுறை இளைஞர்களின் உயிர்களின் மதிப்புக்கு மேலதிகமானதாகும். ஜனத்தொகையில் இரண்டு தலைமுறை சிங்கள மற்றும் தமிழ் இளைஞர்களில் கிட்டத்தட்ட 2 வீதமானவர்கள் யுத்தத்தின் போது கொல்லப்பட்டனர். ஒரு நாடு என்ற வகையில் இலங்கை மிகுந்த கஷ்டங்களை அனுபவித்து வந்துள்ளது. நாட்டின் பிள்ளைகளும், சொத்துக்களும் இந்த கடைகெட்ட ஆட்சியாளர்களால் அழிக்கப்பட்டனர். சர்வதேச அளவில் இந்த நாடு தனது புகழை இழந்து போனது. இந்த நாட்டைக் குணப்படுத்தி ஆறுதல்படுத்துவது வருங்கால சந்ததியினர் கைகளில் தான் இருக்கிறது. இந்தக் கட்டுரைகளின் நோக்கம் எதிர்கால சந்ததியினருக்காக வரலாற்றை எழுதி வைப்பதே அன்றி வேறொன்றுமல்ல.

# 20

## புரியாப் புதிர்களின் முடிச்சவிழ...!

### ஜூனியஸ் ரிச்சட் (ஜே.ஆர்) ஜயவர்தன

அவரது ஆட்சிக் காலத்தில், அமைச்சரவைக்கு மேலே அவருக்கு மட்டும் விசுவாசமான ஒரு நண்பர்கள் குழு இருந்தது. ஜயவர்தன ஆட்சியின் கீழ் சக்திவாய்ந்த அரசாங்க அதிகாரியாக இருந்த சரத் அமுனுகம தனது சுய சரிதை நூலில் இந்தக் கும்பலை இப்படித்தான் வரிசைப்படுத்தினார். அதன் தலைவர்கள் ஜி.வி.பி. சமரசிங்க, செபால அட்டிகல மற்றும் W.W. N. P. G. மணிக்திவெல என்ற மூவரும, அவர்களின் உதவியாளர்கள் ஹரி ஜெயவர்தன, சி. ஏ. தர்மபால, எஸ்மண்ட் விக்ரமசிங்க, ரொலி ஜயவர்தன, ரஞ்சன் விஜேரத்ன மற்றும் என். G. P. பண்டிதரத்ன என்போர் இந்தக் குழுவில் நிரந்தர உறுப்பினர்களாக இருந்தார்கள். சரத் அமுனுகமவின் சுயசரிதையின்படி, அந்தக் குழுவினர் ஜே. ஆர். ஜயவர்தன தனிப்பட்ட இல்லத்தில் அல்லது ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வழமையாக சந்தித்துக் கொண்டனர். பல மாலைநேரங்களில் அவர்கள், பிரெஞ்சு பிராந்தி குடித்து, நாட்டின் எத்ர்காலத்தைப்பற்றி விவாதித்து பல முடிவுகளை எடுத்தனர். செய்தார். இரவில் ஒயின் குடித்துவிட்டு ஐரோப்பிய உணவை உண்டு கலைந்து சென்றனர்.

அவர்கள் வகித்த பதவிகளை அறிவதற்கு முன்னர், ஜனாதிபதி ஜயவர்தன புறவயமான உலகத்தோடு எவ்வாறு விடயங்களைக் கையாண்டார் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். சரத் அமுனுகமவின் கூற்றுப்படி, ஜயவர்தனவின் வாயிற்காவலராக இருந்தவர் மணிக்திவெல ஆவார். அவர் ஜனாதிபதியின் செயலாளரும்கூட. மேற்படி குழுவைச் சேராத வேறு எவரும் "மணிக்"இன் அனுமதியின்றி ஜனாதிபதியை சந்திக்க முடியாது. இந்த உட்கட்சிப் பிரிவினருக்கு மாத்திரமே நேரம் ஒதுக்காமல் ஜனாதிபதியை சந்திக்கும் பாக்கியம் இருந்தது. சமரசிங்க மற்றும் மணிக்திவெல ஆகியோர் பொது நிர்வாக சேவையில் இருந்த மிகச் சக்திவாய்ந்த ஐ.தே.க ஆதரவாளர்களாவர். ஹரி ஜயவர்தன ஜனாதிபதியின் சகோதரர் ஆவார். எஸ்மண்ட் அவரது மைத்துனர் ஆவார். பண்டிதரத்ன ஒரு பட்டயக் கணக்காளர்.

இதில் சமரசிங்கவும், ஆட்டிகல, தர்மபால ஆகியோர்தான் எமக்கு மிகவும் முக்கியமானவர்கள். ஜனாதிபதி ஜெயவர்த்தன இந்த உள்ளக கும்பலுடன்தான் "யாழ்ப்பாணத்தின் தேர்தல் கொள்ளை மற்றும் தீ வைத்தல்" என்பவற்றைத் திட்டமிட்டிருக்க வேண்டும். இல்லையென்றால் ஜூன் 01 ஆம் திகதி தனது இந்த மூன்று உறுப்பினர்களையும் அவர் யாழ்ப்பாணத்திற்கு அனுப்ப மாட்டார். அன்றைய அந்த ஐ.தே.க. ஆட்சியில் [1977-1994] நாடு பூராகவும் கட்டவிழ்த்து விடப்பட்ட அந்த அச்சம் தரும் வன்முறைகள் அனைத்தும் இந்த உள் கும்பலால் முன்கூட்டியே திட்டமிடப்பட்டன. அதில் மூவர் முன்னாள் உயர் இராணுவ அதிகாரிகளாவர். இதில் ஜெனரல் ரஞ்சன் விஜேரத்ன, சேபால ஆடிகல மற்றும் கேர்னல் சி. ஏ. தர்மபால ஆகிய மூவரும் ஜெயவர்த்தனே குடும்பத்தின் தூரத்து உறவினர்கள்.

யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட தேர்தல் கொள்ளை, தீ வைப்பு சம்பவங்கள் எவ்வாறு பின்னர் எதிர்காலத்திற்கும் பயன்படுத் தப்பட்டன என்பதை நாம் பார்த்தோம். நீண்ட காலம் ஆட்சியில் தான்களே இருக்க வேண்டும் என்பது ஜெயவர்த்தன மற்றும் அவரது உட்பிரிவின் திட்டமாகவும் இருந்தது. அதற்காகவே யாழ்ப்பாணத்தில் அந்த திட்டமிட்ட நடவடிக்கைகள் மிகக் கச்சிதமாக ஆரம்பிக்கப்பட்டன. அது முதலில் சிங்கள பிரேதேசமொன்றில் பரீட்சித்துப் பார்க்கப்பட்டால், அது தமக்கான சிங்கள வாக்குகளை கடுமையாக பாதிக்கும். அக்காலத்தில் பொதுத் தேர்தலில் கொழும்பை தளமாகக் கொண்ட கட்சிகளுக்கு வடக்கு கிழக்கில் பெருமளவில் தமிழ் வாக்குகள் கிடைக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட அந்தப் "பரிசோதனையின்" முடிவுகளையும் விளைவுகளையும் பெரிதாகப் பொருட்படுத்தாமல், இந்த ஆளும் குழுவானது தனது அந்த `மாதிரியை` தென்னிலங்கைத் தனது தேர்தல் அரசியல் தேவைகளுக்கு சிங்களப் பிரதேசங்களில் அவற்றுக்கு ஏற்ற வகையில் மாற்றி நடைமுறைப்படுத்த அந்தக் குழுவால் முடிந்தது. 1982 ஜனாதிபதித் தேர்தலில் ஜெயவர்த்தன வெற்றி பெற்று மக்களின் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட இலங்கையின் முதல் ஜனாதிபதியானார். இதையடுத்து அந்த ஆண்டு நடைபெறவிருந்த பொதுத் தேர்தல் ஒத்திவைக் கப்பட்டது. அத்துடன் `சர்வஜன வாக்கெடுப்பு' என்று ஒன்றை நடத்தி அவர் தன் அதிகாரத்தை பலப்படுத்தினார். இலங்கைத் தேர்தல் வரலாற்றில் ஊழல் நிறைந்த இரண்டாவது தேர்தல் அந்த ` சர்வஜன வாக்கெடுப்பாகும்'.

'தந்திரமான கிழட்டு நரி', `கூர்மையான அரசியல் தலைவர்' மற்றும் 'வரலாற்றின் சாம்பியன்` 'தேசபக்தர்` என்பன போன்ற

அடைமொழிகள் அவரது பெயரின் தொடக்கத்திலும் முடிவிலும் தொடர்ந்து சேர்க்கப்படுகின்றன. ஆனால் அவரது 11 ஆண்டு ஆட்சியின் ஆரம்ப ஆண்டுகளில்தான் நம் நாட்டில் உள்நாட்டுப் போர் என்பது ஏற்பட்டது. அண்டை நாடுகளிலேயே பலம் வாய்ந்த அரசான இந்தியாவுடன் ஒரு அடி முட்டாளைப்போல் மோதினார். அதன் மூலம் ஈழ விடுதலைப் போராட்டத்தின் 'தலைமையகத்தை' தென்னிந்தியாவுக்கு மாற்றப்பட்டது. இறுதியாக, 1987 ஜூலை இறுதியில் அவர் இந்தியாவின் உத்தரவுகளுக்கு அடிபணிந்து மண்டியிட்டு இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். இந்திய இராணுவத்தை அனுப்புமாறு கோரி கடிதங்கள் எழுதி அவரால் கையெழுத்திடப்பட்டு புதுடெல்லிக்கு அனுப்பப்பட்டன. உலக வரலாற்றில் எங்கும் தமது நாட்டின் மீது படையெடுத்து வரும்படி ஒரு அழைப்பைவிடுப்பதை நாம் கேள்விப்படுவதில்லை. அந்நிய இராணுவத்தை கொண்டு வந்து அதனிடம் நாட்டை ஒப்படைத்த தலைவர்கள் நாம் கான்பது அரிது. J.N. டிக்சிட் இன் கூற்றுப்படி [கொழும்புக்கான முன்னாள் இந்திய உயர்ஸ்தானிகர்] ஜே.வி.பி.யை நசுக்குவதற்காக தென் மாகாணங்களுக்கு இந்திய துருப்புக்களை அனுப்புமாறு ஜனாதிபதி ஜெயவர்தன எழுத்துமூலமாக வேண்டுகோள் விடுத்தார். ஆனால் இதை இந்திய அரசு மறுத்துள்ளது. ஆனால் இறுதியில், அவர் முழு நாட்டையும் இரத்தம் சிந்த வைத்தார்.

நாட்டின் தலைவிதி ஒருபுறம் இருக்க, இந்த கிழட்டு ஜயவர்தன மூன்றாவது தடவையாகவும் நாட்டின் ஜனாதிபதி நாற்காலியில் ஒட்டிக்கொண்டு இருக்க விரும்பினார். அதற்காக, அவர் கட்சிக்குள் தனது ஆதரவுக் கும்பலை இலாவகமாக நகர்த்தினார் ஆனால் அவருக்கு எந்த வகையிலும் சளைக்காத அர்சியல்

தலைவரான பிரதமர் ரணசிங்க பிரேமதாசாவின் கடுமையான எதிர்ப்பை முகம்கொடுக்க நேர்ந்ததால், அவர் மிகவும் தயக்கத்துடன் தனது அந்தக் கனவை கைவிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தனது 90 வருட வாழ்வின் பின்னர் 1996 இல் அவர் இறந்தபோது, அவர் ஆரம்பித்து வைத்த அழிவுகளுக்கு உதவியவர்களாக அவரரது இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பாலான தலைவர்கள் அதற்கே பலியாகி கொல்லப்பட்டனர். "அதி உத்தமர்" (ஹிட்லரின் சீடர்கள் அவரை Da Fuhrer அந்தப் பெயரால்தான் அழைத்தார்கள்) என்ற அற்புதமான புகழ்ச் சொல்லால் தனக்கென ஒரு விசித்திரமான கௌரவத்தைப் பெற்ற அந்த மனிதன், தான் ஒரு நவீன அரசன் என்று நம்பியதாகவே தோன்றியது. ஆனால் கட்சியின் முதல் மற்றும் இரண்டாம் வரிசைத்தலைவர்கள் அவருக்கு முன்னரே கொல்லப்பட்டதை எண்னியபடி என்னவித மனோநிலையில் அவர் தனது மரணப்படுக்கைக்குப் போயிருப்பார் என்பது அவருக்கு மட்டுமே தெரிந்த விடயமாக இருந்திருக்கும்.

## தமிழ் எம்.பி.க்கள்

'யாழ்ப்பாணத் தேர்தல் கொள்ளை மற்றும் தீ வைப்பு' சம்பவத் தொடரில் அதை நேரடியாக எதிர்கொண்ட தமிழ் அரசியல்வாதிகளின் தலைவிதி இங்கு எமக்கு மிகவும் முக்கியமானது. யாழ்ப்பாணத்தில் தமிழர்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகள சரியாக இரண்டு வருடங்கள் கடந்து சென்ற பின்னர், அதே யூ.என்.பி. அரசாங்கமானது யாழ்ப்பாணத்தில் நிகழ்த்திய கொடூரங்களை நாடு முழுவத்றகும் `விநியோகம்` செய்தது. அதுதான் இன்றுவரை 'கறுப்பு ஜூலை' என்ற பெயரில் உலகப் புகழ் பெற்று இருக்கிறது. 1983 கறுப்பு ஜூலையில் நாடு முழுவதும் தமிழர்களுக்கு எதிரான இனத் தாக்குதலில் சுமார் 3,000 தமிழர்கள் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்த நேரத்தில், தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் தலைவர் உட்பட பெரும்பாலான எம்.பி.க்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள இந்தியாவுக்கு தப்பிச் சென்றனர். அவர்கள் இந்தியாவில் நீண்ட காலம் வாழ்ந்தனர். 1987 ஆம் ஆண்டு இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் அவர்கள் இலங்கைக்குத் திரும்பினர். ஆனால் அப்போது ஈழப் போரின் தலைமைப் பொறுப்பை புலிகள் இயக்கம் ஏற்றுக்கொண்டிருந்தது. அதுவரை, தேர்தல் அரசியல் மேடைகளில் பேஅச்ப்பட்ட ஈழ விடுதலை என்ற கதைகள் அப்போது செல்லுபடியற்றவையாகி இருந்தன. ஜெயவர்த்தனபுரவில் அமைந்திருந்த சிறீ லங்கா நாடாளுமன்றத்தில் தமிழ்ர் ஐக்கிய விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள் பிரசன்னமானிருப்பது விடுதலைப் புலிகளுக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை. இருந்தபோதிலும், அந்தக் கட்சி பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை விட்டுக்கொடுக்கவில்லை.

படிப்படியாக வலுப்பெற்று வந்த ஈழ ஆயுதக் குழுக்கள் ஒருபுறம் இலங்கையின் இராணுவத்துடனும் காவல்துறையுடனும் ஆயுத ரீதியாக போரிட்டுக் கொண்டும், மறுபுறம் தமது ஈழத்தின் அதிகாரத்திற்காக ஒருவரோடொருவர் மோதி பலர் கொல்லப் பட்டுக்கொண்டும் இருந்தனர்.

மாணிப்பாய் நாடாளுமன்ற உறுப்பினர் விஸ்வநாதன் தர்மலிங்கம் 1985 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 02 ஆம் திகதி இரவு கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். அதே இரவில் கோபாய் நாடாளுமன்ற உறுப்பினர் ஆறுமுகம் முருகேசு ஆலாலசுந்தரமும் கடத்தப்பட்டு கொல்லப்பட்டார். இருவரும் 'டெலோ' என்ற ஈழத் தீவிரவாத அமைப்பினரால் கொல்லப்பட் டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. ஆனால் சிலர் இதுவும் புலிகளின் படுகொலை என்று நம்புகிறார்கள். 1987 ஜூலை இறுதியில் இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஆனால் சுமார் 200,000 இந்திய துருப்புக்கள் நாட்டின் வடகிழக்கை ஆக்கிரமித்தன. மாகாண சபை முறைமையின் ஊடாக புலிகளையும் நிராயுதபாணியான அரசியலுக்குள் கொண்டு வருவதே இந்த ஒப்பந்தத்தின் நோக்கம் என்று கூறப்பட்டாலும், சில மாதங்களுக்குள் புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் இடையில் கடும் யுத்தம் மூண்டது. இந்தியக் கொள்கைக்கு ஆதரவான அனைத்து தமிழ் அரசியல்வாதி களையும் கொல்வது அப்போது புலிகளின் பொதுவான கொள்கையாக இருந்தது.

அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் பெரும்பாலான உறுப்பினர்கள் புலிகளின் கொலை மிரட்டல் காரணமாக கொழும்பில் வசித்து வந்தனர். அ. அமிர்தலிங்கம், வி. யோகேஸ்வரன் மற்றும் எம். சிவசித்தாம்பரம் கொழும்பு 07,

புலஸ் லேனில் உள்ள ஒரு வீட்டில் வசித்து வந்தனர். 1989 யூலை 13 அன்று, உரையாடுவதற்கு என்ற போர்வையில் வீட்டிற்கு வந்த விடுதலைப் புலிகளைச் சேர்ந்தவர்கள் அந்த மூன்று பேர் மூவர் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அமிர்தலிங்கமும் யோகேஸ்வரனும் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர். இதில் சிவசிதாம்பரம் படுகாயம் அடைந்தார். 1981 ஆம் ஆண்டில், யாழ்ப்பாணத் தீ வைப்பு மற்றும் அரச வன்முறையில் இருந்து தங்கள் உயிரைக் காப்பாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் மனைவி சரோஜினி தனது கணவர் கொல்லப் பட்ட பின்னர் அரசியலுக்குள் நுளைந்தார். 1997 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தின் முதலாவதாக வெண்று மேயராக தெரிவு செய்யப்பட்டார். எந்தவித பாதுகாப்பும் இன்றி தனது பொறுப்புகளை நிறைவேற்றி வந்தார். ஆனால் 1998 மே 17 அன்று புலிகளால் அவரும் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தனது உயிரைக் காப்பாற்றிய சிவசிததம்பரம் பின்னாளில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரானார். 2001 ஆம் ஆண்டில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு (TNA) என்ற அமைப்பை உருவாக்கி அதன் தலவராக இருந்தார். 2002-ல் அவர் இயற்கை மரணம் அடைந்தார்.

## காமினி திசாநாயக்க

எமது முடிவின் பிரகாரம் அமைச்சர் காமினி திசநாயக்க தானே ஜனாதிபதி ஜயவர்தனவின் உண்மையான கீழ்ப்படிதலுள்ள சீடன் என்பதைக் காண்பிக்கவே யாழ்ப்பாணம் செல்கிறார். ஜெயவர்த்தனே எதைச் செய்ய வேண்டுமானாலும் அத்னைச் செய்யத் தயாராக இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்வே அவ்ர் விரும்பினார். அது அவரது எதிர்கால அரசியல் அபிலாஷை களுக்கானது. நாம் முன்னர் விளக்கியது போன்று ஜனாதிபதி ஜயவர்தனவுக்குப் பின்னர் நாட்டின் ஜனாதிபதியாக தான் வரவேண்டும் என்ற அமைச்சர் காமினியின் கனவை ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் விரும்பினார். ஆனால், பிரதமர் ரணசிங்க பிரேமதாச இது விடயத்தில் மிகவும் சூட்சுமமாக நடந்து கொண்டார். அது மிகவும் திட்டமிடப்பட்டதாவும் இருந்தது. ஜயவர்தனவின் பெயரை மீண்டும் ஒருமுறை ஜனாதிபதித் தேர்தலில் நியமிப்பதற்கான முன்மொழிவையும் – வழி மொழிவையும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவில் செய்தவர்கள் அமைச்சர் லயனல் ஜயதிலக்க மற்றும் அகலவத்த பாராளுமன்ற உறுப்பினர் மெரில் காரியவசம் ஆகியோராவர். அவ்ர்கள் இருவருமே மிக விரைவில் சுட்டுக் கொல்லப்பட் டதிலிருந்து ரணசிங்க பிரேமதாசாவின் திட்டமிடலை ஓரளவு நாம் புரிந்துகொள்ள முடியுமாக இருக்கும். ஜயவர்தனவின் அரசியல் பாரம்பரியத்தை கைப்பற்ற இதற்கு முன்னர் தயாராக இருந்த முன்னர் ஒரு சக்திவாய்ந்த பிரபல வர்த்தகரான உபாலி விஜேவர்தன, விமானத்துடன் காணாமல் போனார், இது பிரதமர் பிரேமதாசவின் அரசியல் இலக்கை நோக்கிய பயணத்தின் பயங்கரத்தன்மையை எமக்கு உறுதிப்படுத்துகிறது. அதன்படி ரணசிங்க பிரேமதாச தனது அனைத்து அதிகாரங்களையும்

பயன்படுத்தி ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரானார்.

1988 டிசம்பரில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றார். அவருக்கு அரசியல் சவால்விட்ட காமினி திஸாநாயக்க மட்டுமல்லாது லலித் அத்துலத்முதலியும் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டனர். ஆரம்பத்தில் காமினி, லலித் என்ற இரு அரசியல் எதிரிகள் அதிபர் பிரேமதாசாவுக்கு எதிராக ஒரு முனைக்கு வந்தனர். பிரேமதாச ஆட்சிக்கு எதிராக அவர்கள் ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணையை தயாரித்தனர், ஆனால் அது தோல்வியடைந்தது. இந்த அரசியல் போட்டி 1993 ஏப்ரலின் கடைசியில் முடிவுக்கு வந்தது, முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும் வர்த்தக மற்றும் கப்பல் துறை அமைச்சருமான லலித் அத்துலத்முதலி சுட்டுக் கொல்லப்பட்டார். இந்த கொலை தொடர்பாக ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா மீது குற்றம் சுமத்தப்பட்டது. லலித் கொல்லப்பட்டு ஒரு வாரத்தின் பின்னர் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச மனித குண்டு தாக்குதலில் கொல்லப்பட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவப் போட்டியிலும் ஜனாதிபதி வேட்பாளரிலும் காமினி திஸாநாயக்க மாத்திரமே எஞ்சியிருக்கிறார். அவர் 1994 ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரானார். அவரது ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் மனித குண்டு ஒன்று வெடித்ததில் அவர் மட்டுமல்ல, ஐ.தே.க.வின் எதிர்காலத் தலைவர்கள் பலரும் கொல்லப்பட்டனர்.

# சிரில் மத்தேயுவின் தலைவிதி

கலாநிதி சரத் அமுனுகமவின் சுயசரிதை நூலின் இரண்டாம் பாகத்தில் சொல்லப்பட்டுள்ளபடி, ஜனாதிபதி ஜயவர்தனவின் வலது கரமாக அப்போது விளங்கியவர் எஸ்மண்ட் விக்கிரமசிங்க. அதேவேளை அவரது இடது கரமாக சிறில் மதியூவே விளங்கினார். முன்னர் நாம் குறிப்பிட்டபடி, அவர் ஐ.தே.க.வில் நாட்டின் இரண்டாவது பெரிய சாதியை [தேவ வம்சம்] பிரதிநிதித்துவப்படுத்திய தலைவராக இருந்தார். இதன் விளைவாக, அவர் 1956 முதல் 1967 வரை ஐ.தே.க.வின் இணைச் செயலாளர் பதவியையும் வகித்தார். 1977 முதல் 1984 வரை, அமைச்சர் மத்தியூ ஜெயவர்தன அரசாங்கத்தில் கைத்தொழில் மற்றும் விஞ்ஞானத்துறை அமைச்சராக இருந்தார்.

அமைச்சர் சிறிலின் சாதிச் சமூக வாக்குகள் ஜெயவர்த்தனவின் தேர்தல் பிரசார வெற்றியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தின. சிறில் மத்தியூ அந்த நேரத்தில் நாட்டில் மிக முக்கியமான சிங்கள பௌத்த தேசியவாதிகளில் ஒருவராகவும் இருந்தார். அதற்காக புத்தகங்களையும் துண்டுப் பிரசுரங்களையும்கூட எழுதினார். பல சொற்பொழிவுகளையும் ஆற்றினார். அவற்றில் மிகவும் பிரபலமானவை "சிங்களத்தின் புலப்படாத எதிரி", "பௌத்தத்தைக் காப்பாற்ற சிங்களவர்களே எழுக" மற்றும் "யார் புலி" என்பனவாகும். அத்துடன் அவர் அவற்றை அச்சிட்டு நாடெங்கும் விநியோகித்தார்.

யாழ்ப்பாண நூலகத்திற்கு தீ வைக்க பொலிஸாருக்கு ஊக்கமும் உத்வேகமும் கொடுத்தவர் அமைச்சர் சிறில் எனவும் நாங்கள் நம்புகின்றோம். இதற்கு முக்கிய காரணம் நாட்டில் கல்விக்கான போட்டித் தேர்வுகள் நடைபெறும் போது, தமிழில் பதில்

அளிக்கும் மாணவர்களுக்கு விடைத்தாள் தேர்வாளர்கள் அதிக மதிப்பெண்கள் வழங்குவதாகா அவ்ர் தொடர்ந்து குற்றம் சாட்டினார். அது ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட விதத்தில் மிகவும் திட்டமிடப்பட்டு நடத்தப்படுகிறது என்றும் அவர் கூறினார். இதன் விளைவாக சிங்கள பிள்ளைகள் பல்கலைக்கழகங்களைத் தெரிவு செய்வதிலும் வேலைக்கான ஆட்சேர்ப்புப் போட்டிகளிலும் பாதிப்புக்கு உள்ளாக்கப்படுவதாவும் அவர் கூறினார். யாழ்ப்பாணத்தில் இருந்த கல்விகற்றலுக்கான ஊக்கம் மைச்சர் சிறில் மத்தியூவிற்கு ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கவில்லை. யாழ்ப்பாண நூலகம் அந்த கல்வி ஆர்வத்தின் ஓர் அடையாளமாக திகழ்ந்தது. கொழும்பில் இருந்து அனுப்பப்பட்ட ‘ஜுண்டா` பொலிஸ் படைக்கு அங்கிருந்த கல்வி எழுச்சிக்கும் நூலகத்துக்குமான தொடர்பு பற்றி அதிகம் தெரிந்திருக்கும் என நாம் நம்பவில்லை. தீ வைப்பு நடந்த நேரத்தில் நூலகத்திற்கு அருகில் இருந்த வாடி வீட்டில் தங்கி இருந்த நான்கு அமைச்சர்களிடம் இருந்துதான் போலீசார் நேரடியாக உத்தரவுகளைப் பெற்றுள்ளனர். அதன் தலைமை ஆலோசகராக அமைச்சர் சிறில் மத்தியூ இருந்திருக்க வேண்டும்.

எனினும் யாழ்ப்பாணம் தீ விபத்தின் பின்னர் அவர் இரண்டு வருடங்கள் மாத்திரமே அரசில் அமைச்சராக இருக்க அனுமதிக்கப்பட்டார். 1984 இல் அரசாங்கம் "தமிழ் மக்களின் குறைகளை ஆராயும்" ஒரு மாநாட்டைக் கூட்டியது. அமைச்சர் மத்தியூ அதை பகிரங்கமாக விமர்சித்தார். ஜனாதிபதி ஜயவர்தன அமைச்சர் சிறிலை பதவி நீக்கியது மட்டுமன்றி அவரை கட்சி உறுப்புரிமையிலிருந்தும் வெளியேற்றினார். சிறில் மத்தியூ வசமிருந்த கைத்தொழில் மற்றும் விஞ்ஞானத் துறை அமைச்சை ரணில் விக்ரமசிங்க அவரது அமைச்சுடன்

இணைத்துக் கொண்டார். ஆனால் இதில் நாங்கள் நம்புகின்ற விடயம் வேறானது. 1983 இறுதியில், ஜயவர்தன அரசாங்கம் "தமிழர்-விரோத வன்முறையை" கட்டவிழ்த்து விட்டதற்காக மிகவும் பலமான சர்வதேச கண்டனத்தை எதிர்கொண்டது. இந்த அவமானத்தில் இருந்து தப்பிக்க ஜனாதிபதி ஜெயவர்த்தன 'பலி ஆடொன்றத்' தேடினார். அவர் தனது சொந்த இடது கையான சிறில் மத்தியூவைத் 'தியாகம்' செய்ய முடிவு செய்தார். அமைச்சர் சிறிலின் அரசியல் வாழ்க்கை அத்துடன் முடிந்தது. சிங்கள கிராமப்புற மொழியில் சொல்வதானால், 'பன்றியின் இறைச்சியை அதன் மேலேயே வைத்து வெட்டுவது` போல் ஜே. ஆர். அதை அரசியல் தந்திரோபாயமாக பாவித்தாடர்எனலாம்.

## பெஸ்டஸ் பெரேரா

மைக்கல் பெஸ்டஸ் பெரேரா 1965 இல் வென்புவ தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற உறுப்பினரானார். 1970 தேர்தலில் தோல்வியடைந்தார். 1977 பொதுத் தேர்தலில் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், 2001 வரை அந்த மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்தார். இவர் ஜயவர்தன அரசாங்கத்தில் மீன்பிடித்துறை அமைச்சராக இருந்தார். இந்தப் `பெரேராக்கள்' புத்தளம் மாவட்டத்தில் மிகவும் பலமான ஐ.தே.க அரசியல் குடும்பமாக இருந்தனர். 2001 ஆம் ஆண்டில் பெஸ்டஸ் அரசியலில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர், அவரது மனைவி லெரின் பெரேரா 2010 வரை புத்தளம் மாவட்டத்தை பாராளுமன்ற உறுப்பினராக பிரதிநிதித்துவப்படுத்தினார். அதன்படி பெரேரா குடும்பத்தின் அரசியல் பாரம்பரியம் 2010 முதல் புத்தளம் மாவட்டத்தை

பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த இருவரின் மகனான நிரோஷன் பெரேராவுக்கு செல்கிறது.

1981 யாழ்ப்பாணத் தேர்தல் கொள்ளை மற்றும் தீ வைப்பு சம்பவத்தின் போது அங்கு தங்கியிருந்த நான்கு அமைச்சர்களில் பெஸ்டசும் ஒருவர். பின்னர் அவர் தனது தேர்தல் மாவட்டத்திலும் யாழ்ப்பாணத்தில் செய்யப்பட்ட அந்தப் "பரிசோதனையை" மேற்கொண்டார். அது 1988/89ம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட கொடூரங்களின்போது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக பலரால் அறிக்கையிடப்பட்டது.

1988/89 காலப்பகுதியில், அமைச்சர் பெஸ்டஸ் புத்தளம் மாவட்டத்தில் ஒரு சித்திரவதை நிலையத்தை நடத்தியது மட்டுமின்றி, அப்பகுதியில் பொலிசாரைக் கொண்டு பல சித்திரவதை மையங்களையும் பராமரித்தார். அவர் தனக்குச் சொந்தமான சிலாபத்தில் அமைந்திருந்த ஒரு பெரிய தென்னந்தோட்டத்தில் முகாமொன்றை நடத்தி சித்திரவதை செய்து வந்தார். விடுதலைப் புலிகளின் மரண பிடியாணையைப் பெற்று தெற்கிற்கு வந்த பல ஈ.பி.ஆர்.எல்.எப் உறுப்பினர்களை அவர் சித்திரவதைக் காரர்களாகவும் பயன்படுத்தினார். மேலும், போலிசாரினால் வென்னப்புவப் பகுதியில் அமைந்த தங்கு விடுதியில் நடத்தப்பட்ட சித்திரவதை முகாமை செயற்படுத்துவதற்கு தேவையான வாகனங்கள் மற்றும் நிதிகளையும் வழங்கினார். அத்துடன், புத்தளம் மாவட்டத்தின் பொலிஸ் நிலையங்களில் இருந்த வன்முறை தடுப்புப் பிரிவுகளுக்கு தேவையான வாகனங்களை தனது அமைச்சிலிருந்து ஒதுக்கிக் கொடுத்தார்.

## யோகேந்திர துரைசாமி

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரான திரு. யோகேந்திரா துரைச்சாமி 1979 ஆம் ஆண்டு ஜனாதிபதி ஜெயவர்த்தனாவால் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டு யாழ்ப்பாணம் சென்றார். அந்த பதவி நியமனம் அரசியல் விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டது என்று நாங்கள் சந்தேகிக்கிறோம். அவர் இலங்கை `வெளிநாட்டு சேவையில்` இருந்த ஒரு புகழ்பெற்ற அதிகாரியாவார். அமெரிக்கா, இந்தியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் தூதராகவும் அவர் பணியாற்றினார். அவர் அரசாங்க சேவையில் இருந்து ஓய்வுபெற்று இருந்த நிலையிலேயே ஜனாதிபதி ஜெயவர்தன அவரை யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் பதவிக்கு நியமித்தார். 1981ல் யாழ்ப்பானத் தேர்தல் நடந்து முடிந்து 16 நாட்களுக்குப் பின் அதன் முடிவுகளை வெளியிட்ட அரசாங்க அதிபர் துரைச்சாமி அத்துடன் பதவியை ராஜினாமா செய்தார்.

அவரது மகளினால் எழுதப்பட்ட அவரது சரித விவரணமான 'எனது உயர்ஸ்தானிகர்' [My Diplomat] நூலில், அன்று யாழ்ப்பாணத்தில் என்ன நடந்தது என்பது விரிவாக விவரிக்கப்படுகிறது. யாழ். நூலகத்தில் ஏற்பட்ட தீயை அணைக்க உதவி தேடி அருகில் சென்றபோது, அங்கு வந்த தமிழ் காவல்துறை அதிகாரி ஒருவர், "அண்ணை, இவர்கள் உங்களையும் கொன்று விடுவார்கள். உடனேயே வீட்டுக்குப் போய்விடுங்கள்" என்றார்.

யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்படுவதைக் கண்ணால் கண்ட மிக உயர்ந்த அரசு அதிகாரியும் அவரே. அர்சாங்க அதிபரான துரைச்சாமி அந்தத் தீயை அணைப்பதற்கு கடற்படையினரின்

தண்ணீர் பவுசர்களுக்கு அழைப்பு விடுத்திருந்ததை நாம் முன்னர் குறிப்பிட்டிருந்தோம். ஆனால் அன்று அவரால் தீயை அணைக்க முடியவில்லை என்றாலும், அவர் தன்னுடைய வாழ்க்கையின் பெரும்பகுதியை யாழ்ப்பாண நூலகத்தை மீண்டும் கட்டியெழுப்புவதிலும் அதன் புத்தக சேகரிப்பை மீட்டெடுப்பதிலும் செலவிட்டார். தேசிய மற்றும் சர்வதேச உதவிகளுடன் நிதி மற்றும் புத்தகங்களை சேகரித்தார். எனினும் பழைய யாழ்ப்பாண நூலக சேகரிப்பு, பழைய ஒல்லாந்தர் இசைத்தட்டு சேகரிப்பு, ஆனந்த குமாரசுவாமி சேகரிப்பு மற்றும் ஏனைய அரிய நூல்களை மீண்டும் புதிய நூலகத்திற்குள் கொண்டுவந்து சேர்பதற்கு யோகேந்திரா துரைச்சாமியால் முடியவில்லை. அதேவேளை, புதுப்பிக்கப்பட்ட யாழ்ப்பாண நூலகத்தை அவரால் பார்க்கவும் முடியவில்லை. 1991 இல் அவர் இறந்தபோது, அவர் தன் அதிர்ச்சி கலந்த அந்த நினைவுகளை தன்னுடன் கூடவே தன் கல்லறைக்குள் எடுத்துச் சென்றிருப்பார்.

## புலிகள் இயக்கத்தின் கதி

நாச்சிமார்கோயிலடிக் கூட்டத்தில் இரண்டு சிங்கள பொலிஸ் அதிகாரிகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியது புலிகளா அல்லது உமா மகேஸ்வரனின் குழுவா என்பது எமக்குத் தெளிவாகத் தெரியவில்லை. அப்போது ஈழப் போராட்ட ஆயுதம் தாங்கிய இளைஞர்கள் மத்தியில் சில பிளவுகள் ஏற்பட்டும் இருந்தன. எனினும், அந்த ஆத்திரமூட்டும் துப்பாக்கிச் சூட்டைத் தொடர்ந்து நடந்த அரசின் பதிலடித் தாக்குதல்களின் பாதிப்பை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளும் தந்திர வியூகத்தில் புலிகள் தேர்ச்சி

பெற்றிருந்தனர். அந்த சம்பவத்தைத் தொடர்ந்து நடந்த அந்த தீ வைப்புகள் மற்றும் சட்டவிரோத படுகொலைகளின் பின்னர் யாழ்ப்பாணம் ஒருவகையில் சர்வதேச கவனத்தை ஈர்த்தது. இந்த நிகழ்வுகளின் பின்னர், சர்வதேச வெகுஜன ஊடகங்கள் அடிக்கடி யாழ்ப்பாணத்திற்கு நிருபர்களை அனுப்புவதை வழக்கமாக்கிக் கொண்டன. அதைத் தொடர்ந்து நடந்த ஈழப்போர் சர்வதேசத்தின் கவனத்தை மிகவும் ஈர்த்திருந்தது.

யாழ்ப்பாணப் பொருளாதாரத்துடன் தொடர்புடைய ஒரு பெயர் 'மணியோடர் பொருளாதாரம்' என்பதாகும். அதற்குக் காரணம், யாழ்ப்பாணத்திற்கு வெளியே வேலைசெய்து, அனுப்பப்படும் பணம் மணியோடர்கள் மூலம் அங்கு சென்று பராமரிக்கப் பட்டதாகும். ஆசியாவின் முதலாவது ஒழுங்கமைக்கப்பட்ட நவீன கல்விமுறை யாழ்ப்பாணத்திலேயே ஆரம்பமானது. அது அமெரிக்க மிஷனரிகளின் தலையீட்டுடன் ஆரம்பமானது. இதன் விளைவாக, அதன் மேம்பட்ட பள்ளிக்கூட முறை பல்வேறு அறிஞர்களை உருவாக்கியது. இந்த படித்த பெருமக்கள் நாட்டின் பிற பகுதிகளுக்கு மட்டுமன்றி உலகின் பல பாகங்களுக்கும் சென்று தொழில் செய்து சம்பாதித்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினர். யாழ். நூலகம் எரிக்கப்பட்டது அதன் கல்வியில் அக்கறை கொண்டிருந்த அச்சமூகத்தின் இளைய தலைமுறையினருக்கு எதிரான ஒரு போர்ப் பிரகடனமாகும். அங்குள்ள சிறிய ஆயுதக் குழுக்கள் இதனால் பயனடைந்தன. அதன் பின்னர் வடக்கில் இரண்டு தலைமுறை இளைஞர்கள் தமது கல்வியைக் கைவிட்டு பெரும் விரக்தியில் ஈழப்போரில் இணைந்துகொண்டனர். மறுபுறம், யூ.என்.பி. அரசாங்கத்தின் தலைவர்கள், அப்போது யாழ்ப்பாணத்தில் ஜனநாயக அரசியலில் முன்னணியில் இருந்த தமிழர் விடுதலைக்

கூட்டணியின் கட்சித் தலைமையகத்துக்கு தீ வைத்தனர். ஒரு பிரபலமான பாராளுமன்ற உறுப்பினரின் வீட்டுக்கும் தீ வைத்தனர். பின்னர் அன்கிருந்த ஒரே ஒரு நாளிதழுக்கும் அதன் அச்சகத்திற்கும் தீ வைத்தனர்.

இந்த நிகழ்வுகளின் மூலமே புலிகளால் கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்களாக ஈழப்போரை தக்க வைத்துக் கொள்ள முடிந்தது. சரியாக 28 வருடங்களின் முடிவில், அதாவது 2009 மே மாதம், முல்லைத்தீவில் முள்ளிவாய்க்காலில், அந்தத் தமிழ் இளைஞர்கள் தங்கள் வாழ்க்கை ஒரு சில சதுர கிலோ மீட்டர்களுக்குள் சிக்கியிருந்தபோதும் இறுதிவரை மற்றவர்களையும் கொன்று தாமும் கொல்லப்படுவதற்கான மனத் தைரியத்தையும் நம்பிக்கையையும் இந்த யாழ்ப்பாண தீவைப்போடு எடுத்துக் கொடுத்த ஆரம்பே என்றும் கூறலாம்.

## பிரிகேடியர் திஸ்ஸ இந்திக வீரதுங்க

தீ வைப்பு சம்பவம் இடம்பெற்ற போது அவர் யாழ்ப்பாணத்தின் இராணுவத் தளபதியாக இருந்தார். தேர்தல் தினத்தன்று எதிர்க்கட்சித் தலைர் அமிர்தலிங்கமும் இன்னும் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் அவரது உத்தரவின் பேரில் கைது செய்யப்பட்டு பலாலி இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். நாட்டின் சட்டத்தை மட்டுமல்ல, பாராளுமன்ற மரபுகளையும் மீறியதன் மூலம் அவர் இந்தக் குற்றத்தில் ஈடுபட்டார். ஜனாதிபதியின் உறவு மற்றும் அவரது சட்டவிரோத உத்தரவுகளிலிருந்து பிரிகேடியர் வீரதுங்க பெரிதும் பயனடைந்தார். அக்டோபர் 1981 காலகட்டத்தில், மேஜர் ஜெனரல் ஜஸ்டின் விக்ரமநாயக்க இராணுவ மூத்த தளபதிகளின்

பட்டியலில் முதலிடத்தில் இருந்தார். ஆனால் ஜனாதிபதி ஜயவர்தன அவருக்கு அந்த தளபதி பதவியை வழங்கவில்லை. மாறாக, யாழ்ப்பாணம் எரிப்புக்கு பொறுப்பான தனது மருமகன் முறயான மேஜர் ஜெனரல் திஸ்ஸ இந்திக்க வீரதுங்கவை இராணுவத் தளபதியாக நியமித்தார். அவர் 1985 நவம்பர் வரை இராணுவத் தளபதி பதவியில் இருந்து பின்னர் ஓய்வு பெற்றார். இதன் பின்னர், ஜெயவர்த்தன அரசாங்கம் அவரை கனடாவுக்கான இலங்கையின் உயர் ஸ்தானிகராக நியமித்தது.

யாழ்ப்பாண எரிப்பு சம்பவம் தொடர்பில் தமிழ் தலைவர்கள் மாத்திரமல்ல சிங்கள தலைவர்களும் கோரிக்கை விடுத்த அந்த விசாரணை ஆணைக்குழுவை ஜனாதிபதி ஜயவர்தன ஒருபோதும் நியமிக்கவில்லை. அவரின் வழிவந்தவர்களும் அது நியமிக்கப்படாமல் இருப்பதைப் கொண்டனர். இதற்கு முக்கிய காரணம் நாட்டின் உயர் அரசியல் குடும்பங்களுக்கிடையிலான உறவுமுறைதான். ஜனாதிபதி ஜயவர்தன இந்த தீ வைப்பு சம்பவம் குறித்து விசாரணை ஆணைக்குழுவொன்றை நியமிக்காததற்கான காரணங்களில் முக்கியமான ஒன்று, அவரது கட்டளையின் பேரில் வடக்கிற்கு சென்ற அரசாங்கத்தின் இராணுவத் தலைவர்களை தண்டிக்க அவர் விரும்பவில்லை.

## கர்னல் சி. ஏ. தர்மபால

கந்த உட ஆராச்சிகே தர்மபால 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மாத்தறை பகுதியில் தொழிலதிபராக இருந்த ஒதிரிஸ் சில்வாவின் மகனாவார். அவரது சகோதரர்களில் ஒருவரே அக்காலத்தில் புகழ்பெற்ற அரிச்சந்திரா இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தை வைத்திருந்தார். இலங்கையில் பிரித்தானிய ஆட்சியின் கீழ் இருந்த இலங்கை பாதுகாப்பு படையில் ஒரு தன்னார்வ இராணுவ அதிகாரியாக இருந்தது. 1949 இல் இலங்கை இராணுவம் உருவாக்கப்பட்டபோது அந்தப்பிரிவு அத்னுடன் இணைக்கப்பட்டது. கேணல் தர்மபால ஐக்கிய தேசியக் கட்சியின் ஸ்தாபக உறுப்பினர் ஆவார். 1947 ஆம் ஆண்டில், அவர் ஹக்மன தொகுதியில் போட்டியிட்டார். அவர் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் பிரேமலால் குமாரசிறிக்கு எதிராக போட்டியிட்டார். கேணல் தர்மபால ஹக்மனவில் தோற்கடிக்கப்பட்டார். கேணல் தர்மபால மூன்று தடவைகள் (1952, 1956, 1960) மாத்தறை மாவட்டத்தைப் பிரதிநிதித்து வப்படுத்தி பாராளுமன்றத்திற்கு வந்துள்ளார். 1960 ஜூலை மற்றும் 1965 மார்ச்சில் நடைபெற்ற தேர்தல்களில் மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வியடைந்தார்.

ஜே.ஆர்.ஜெயவர்தனவின் தூரத்து உறவினரான அவர், 1971ல் ஐ.தே.கட்சியினுள் டட்லி [சேனநாயக்க] மற்றும் ஜெயவர்தன ஆகியோருக்கு இடையே நடந்த தலைமைத்துவத்துகான அதிகாரப் போட்டியில் ஜெயவர்தன தரப்போடு சேர்ந்தார். 1977-1983 காலப்பகுதியில் ஜயவர்தன அரசாங்கத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்தவர் கேணல் தர்மபால. 1981

யாழ்ப்பாணத் தேர்தல் கொள்ளைக்கு அவசரகால நிலை என்ற போர்வையில் இராணுவ ஆதரவை வழங்கினார். அங்கு சட்டவிரோத படுகொலைகளும் அநியாயத் தீவைப்புக்களும் நடக்கும்போது அவர் அங்கு அதற்கு ஆலோசனைகளை வங்குபவர்ர இருந்தார். 1983ல் முழு நாடே தீயிட்டுக் கொழுத்தப்பட்டு எரிந்தபோது பாதுகாப்புச் செயலாளராக இருந்ததும் அவரே. அதே ஆண்டு ஆகஸ்டில் அவர் ஓய்வு பெற்ற பின்னர், ஜனாதிபதி ஜயவர்தன அவரை தனது சொந்த பாதுகாப்பு ஆலோசகராக நியமித்தார். ஜனவரி 1989 வரை அப்பதவியில் அவர் இருந்தார். 1981 இல் யாழ்ப்பாணம் அழிக்கப்பட்டதைப் போன்றேதான், பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும் ஜனாதிபதியின் ஆலோசகராகவும் அவர் பதவி வகித்தபோது நாடு முழுவதிலும் நடந்தது.

## ஜெனரல் செபால ஆட்டிகல

நவீன இலங்கையின் வரலாற்றில் மிக நீண்ட காலம் இராணுவத் தளபதியின் தரத்தை ஜெனரல் செபால அட்டிகல வகித்துள்ளார். அவர் 1967 முதல் 1977 வரை இராணுவத் தளபதியாக பணியாற்றினார். அத்துடன் வரலாற்றில் முழு அளவிலான ஜெனரல் என்னும் தகுதியைப் பெற்றவரும் அவர்தான். இவர் காலனித்துவ காலத்தில் 'சிலோன் டிபென்ஸ் போஸ்' என்ற பெயரிலான பிரித்தானிய இராணுவத்திலும் ஒரு அதிகாரியாக இருந்தார். 1949 இல் 'சிலோன் இராணுவம்' உருவாக்கப் பட்டபோது அவர் அதில் உள்வாங்கப்பட்டார்.

ஜெனரல் ஆட்டிகல ஓய்வு பெற்ற பின்னர், ஜயவர்தன அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளராக

நியமிக்கப்பட்டார். 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் அறிவுறுத்தலின் பேரில் யாழ்ப்பாணம் சென்ற மிக உயர்ந்த இராணுவ அதிகாரியாக அவர் இருந்தார். எவ்வாறாயினும், பாராளுமன்ற மரபுகளை மீறி, எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் தினத்தன்று சிறையில் அடைக்கப்பட்டனர். அந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டபோது அப்போது அந்த எடுக்கும் இராணுவ தளத்தில் அவரும் இருந்தார். ஜெனரல் சேபால ஆடிகல தனது இராணுவப் பயிற்சியின் பெரும்பகுதியை பிரிட்டிஷ் இராணுவப் பள்ளிகளில் பெற்றார். ஆனால் அவர் ஜயவர்தனவின் கட்டளைககள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கு முன்னால் ஒரு உத்தியோகபூர்வ குண்டரைப் போலவே செயல்பட்டார்.

1983 ஆம் ஆண்டு கறுப்பு ஜூலையில் மொத்த நாடும் தீக்கிரை யாக்கப்பட்டபோது, அவர் பாதுகாப்பு அமைச்சகத்தில் மேலதிக செயலாளராக இருந்தார். அதே ஆண்டு ஆகஸ்ட் மாதம், கேணல் தர்மபால ஜனாதிபதியின் பாதுகாப்பு ஆலோசகராக இருந்தபோது, ஆர்டிகல பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டார். 1971 ஏப்ரலில் நடந்த கிளர்ச்சியை இரண்டு மாதங்களில் அடக்கியதற்காக கௌரவப் பதக்கங்களை வென்ற ஜெனரல் ஆட்டிகல, ஈழப்போர் உக்கிரமடைந்த போது வீரதீரச் செயல்களைக் காட்ட முடியவில்லை. 1987 ஆம் ஆண்டில், நடத்தப்பட்ட 'ஆபரேஷன் லிபரேஷன்' அல்லது 'ஆபரேஷன் வடமரச்சி' போர் திட்டமிடல் இந்த ஓய்வுபெற்ற தளபதியினால் மேற்கொள்ளப்பட்டது என்றும் நம்பப்படுகிறது. ஆனால் ஆபரேஷன் வடமரச்சி நடவடிக்கையின் இடை நடுவில் இந்தியப் படைகள் புகுந்தபொழுது, நன்கு பயிற்சிபெற்ற இந்த இராணுவ

அதிகாரிக்கு பூகோள அர்சியல் புரிந்திருக்கவில்லை என்பது தெளிவாகியது. இவர் ஐக்கிய இராச்சியத்திற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றவர். அவர் இறக்கும் போதும் ஈழப்போர் நாட்டை முழுமையாக அச்சுறுத்திக் கொண்டேயிருந்தது.

## ஜீ.வி.பி. சமரசிங்க

**இவர் காலனித்துவகால நிர்வாக சேவை (CAS)** மற்றும் இலங்கை பொது நிர்வாக சேவையின் அதிகாரியுமாவார். 1977 ஆம் ஆண்டளவில் பொது நிர்வாக சேவையிலிருந்து ஓய்வு பெற்றிருந்தார். ஆனால் ஜனாதிபதி ஜெயவர்தன இந்த பழைய அரசியல் நண்பரை ஒரு ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் அரச சேவையில் இணைத்துக் கொண்டார். சமரசிங்கவுக்கு இரண்டு பதவிகள் வழங்கப்பட்டன. அதில் முதலாவது அமைச்சரவைச் செயலாளர். இரண்டாவது ஐ.தே.கட்சியின் தலைமையகமான 'சிறிகொத்த'வின் பிரதம நிர்வாக அதிகாரி. சமரசிங்க வெளிநாட்டு சேவை அதிகாரியாக நீண்ட காலமாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பதவியை வகித்த போதிலும், அந்த அரச பதவியையும், ஒரு அரசியல் கட்சியின் பதவியையும் ஒரே நேரத்தில் எவ்வித அருவருப்புமின்றி வகித்தார்.

அரச நிர்வாக சேவையில் ஏற்பட்டிருந்த சில குழப்பங்களைத் தீர்ப்பதற்காகவே ஜயவர்தன சமரசிங்கவை அரச சேவைக்குள் கொண்டுவந்ததாக முன்னாள் அமைச்சர் கலாநிதி சரத்

அமுனுகம தெரிவித்தார். அதேவேளை ஜயவர்தனவின் ஆட்சியென்னும் கப்பலின் `கண்ட்ரோல் அறையாகவும்' ஜயசிங்கவே இருந்தார். ஜெயவர்த்தனவால் திட்டமிடப்பட்ட "மிஷன் யாழ்ப்பாண" என்பது சமரசிங்கவுக்கு தெரிந்திருக்கவே வேண்டும். அப்படி இல்லையென்றால் ஜயவர்த்தன ஆட்சியின் இராணுவத் தலைவர்களை அழித்துக்கொண்டு அவர் ஜூன் 1-ம் தேதி யாழ்ப்பாணம் சென்றிருக்க மாட்டார். பொலிஸ், இராணுவம், அரசியல் கும்பல்கள், அரசியல்வாதிகள் கூட்டாக நடத்தும் குற்றங்களில் அரச நிர்வாகத்தின் உயர் அதிகாரி ஒருவரும் எவ்வாறு சம்பந்தப்பட்டுள்ளார் என்பதை இங்கு நாம் காணமுடியும். நிர்வாக அதிகாரிகள் அரசியல்வாதிகளுக்கு அடிபணிய மறுத்த சம்பவங்கள் பலதுக்கான ஆதாரங்களை நாம் 1977க்கு முன்னர் பொதுவாக காண்கிறோம். ஆனால் ஜெயவர்த்தனவின் கட்டளையின் கீழ் பதவிக்கு வந்த சமரசிங்க அந்த மரபை தலைகீழாக மாற்றுகிறார்.

இந்தச் சீரழிவு பின்னர் அரச நிர்வாக சேவையின் அதிகாரிகளை அரசியல் அதிகாரத்தின் கைக்கூலிகளாகவும், கையூட்டுகளைப் பரிமாறிக்கொள்ளும் அரசியல்வாதிகளின் தோழர்களாகவும் மாற்றியது. ஆனால் ஜி.வி.பி. சமரசிங்கவின் நிர்வாக அதிகாரம் ஜெயவர்த்தனாவின் ஆட்சியுடன் முடிவுக்கு வந்தது. அந்த அழிவுகளின் விளைவுகளை அவர் தனது எஞ்சிய வாழ்நாளில் பார்த்திருப்பார்.

## ரணில் விக்கிரமசிங்க

1977 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் நுழைந்த ரணில் விக்கிரமசிங்க, 1978 இல் இளைஞர் விவகார மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டபோது இலங்கை வரலாற்றில் மிக இளைய கெபினட் அமைச்சராக இருந்தார். 1981 ஆம் ஆண்டில், அவர் தனது மாமாவின் "யாழ்ப்பாண மிஷனுக்கு" சென்றபோது அவருக்கு 32 வயது. பின்னர், தனது ஜனாதிபதி மாமாவிடமிருந்து சன்மானம் பெற்று கல்வி மற்றும் தொழில்துறை அமைச்சரானார்.

கொடூரமான ஈழப்போரின் திருப்புமுனையாகக் கருதப்பட்ட '1981 யாழ்ப்பாண எரிப்பு' வரலாற்றில் மறைக்கப்பட்டபோனது. 1933 ஆம் ஆண்டில் அமைச்சர் ரணில் முதன் முறையாக பிரதமரானார். அன்றிலிருந்து இதுவரை 5 முறை எதிர்க்கட்சித் தலைவராகவும், பிரதமர் பதவியையும் வகித்துள்ளார். 2021 பொதுத் தேர்தலில், அவர் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஒரே ஒரு போனஸ் இடத்தை மட்டுமே வென்றது. ஆனால் 2022இல், நாடாளுமன்றத்தில் இருந்த பெரும்பான்மை உறுப்பினர்கள் அவரை ஜனாதிபதியாக தேர்ந்தெடுத்தனர்.

யாழ்ப்பாணம் தீக்கிரையாக்கப்பட்டபோது அங்கிருந்த நான்கு அமைச்சரவை அமைச்சர்களின் பெயர்களை கம்பஹா பாராளுமன்ற உறுப்பினராக இருந்த எஸ்.டி.பண்டாரனாயக்க பாராளுமன்றத்தில் குறிப்பிட்டபோது, அமைச்சர் ரணிலின் பெயரும் அவரால் சபையில் முன்வைக்கப்பட்டது. ஆனால் ரணில் விக்கிரமசிங்க இந்தக் குற்றத்தை ஒருபோதும் ஒப்புக்கொள்ளவோ அல்லது மறுக்கவோ இல்லை.

ஆனால் 2016 ஆம் ஆண்டில், அவர் நாட்டின் பிரதமராக இருக்கும்போது யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டதற்கு மன்னிப்பு கோரினார்.

அந்த மாபெரும் குற்றங்களுக்கு தலைமை வகித்த நான்கு அமைச்சரவை அமைச்சர்களில் ரணில் விக்கிரமசிங்க மட்டுமே இன்று உயிருடன் உள்ளார். அவரது கடந்தகால அரசியல் வன்முறைகளை வைத்துப் பார்க்கும்போது, எதிர்காலத்தில் இதுபோன்ற விடயங்கள் நடக்காமல் இருக்கும் என்பதை எவரும் எதிர்வுகூற முடியாது.

அப்போது பாராளுமன்றத்தில் இருந்த அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உட்பட ஐ.தே.க உறுப்பினர்கள் எவரும் எதிர்க்கட்சி தலைவர் உட்பட ஏனைய எதிர்க்கட்சிகள் வைத்த குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கவில்லை. அதேவேளை. ஜே. ஆர். ஜெயவர்தன அரசாங்கம் இந்தக் குற்றச்செயல்கள் தொடர்பாக எந்த விசாரணையையும் நடத்தவில்லை. அதற்கான குற்றவாளிகள் எவரும் தண்டிக்கப்படவும் இல்லை.

1981ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் தீ வைத்து எரிக்கப்பட்டு 43 ஆண்டுகளாகின்றன. அது நடந்து 41 ஆண்டுகளின் பின்னர் ரணில் விக்கிரமசிங்கவின் வீடும் அவரது ஆயிரக்கணக்கான புத்தகங்களும் தீவைத்து எரிக்கப்பட்டன. இதையெல்லாம் நினைவுகூர இந்த நூலை ஒரு நினைவுச் சின்னமாக உங்களுக்குச் சமர்ப்பிக்கிறோம்.

1981ம் ஆண்டில் ஏறக்குறைய இரண்டு வாரங்களாக இந்த அரசியல் குண்டர்களின் வழிநடத்தலில் யாழ்ப்பாணத்தில் நடந்த அந்தக் குற்றச் செயல்களின் வரலாறு இன்றுதான் எங்களுக்கு மிகவும் முக்கியமானது. ஏனென்றால், ஒருபுறம் அதைச் செய்த தலைவர்களில் ஒருவரான ரணில் விக்கிரமசிங்க இன்று நாட்டின் ஜனாதிபதியாக இருக்கிறார். மறுபுறம், அன்று அந்த குற்றச் செயல்களுக்கு தலைமை தாங்கிய வன்முறைக் கும்பலின் தலைவன் நாட்டின் தலைவராகவும் இருக்கிறார். அவர் இன்று ஜனநாயகம் மற்றும் நாட்டின் வளர்ச்சி பற்றிய வாக்குறுதிகளை அள்ளி வீசிக்கொண்டும் இருக்கின்றார்.

வெளியீடு
நாங்கள்



ISBN 979-8-89496-493-5
9 798894 964935